2013, July 01 - 15

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/News/72/2013

தமிழர் பிரச்சினையில் தெரிவுகளும் சாத்தியங்களும்

இன்றைய ஆட்சியின் நெறிகெட்ட தன்மை

தெரிவுக்குழுவும் தெரியாத முடிவுகளும்

ஆளும் கட்சிகளை அடித்துப்போடும் தெற்காசிய தேர்தல் களம்

எம்.ஜி.ஆர். வாக்குகளுக்கு குறிவைத்த விஜயகாந்த்

கல்லறைக்குப்போன காதல்

## அபிவிருத்தி மனித மேம்பாட்டின் பாதையா அல்லது அடக்குமுறையின் கருவியா?

19 JUL 2013




## ‘இலங்கையில் இந்தியா செல்வாக்கை இழந்துவிடவில்லை’

சமகாலம் முதலாவது ஆண்டு மலர்

| | | |
|---|---|---|
| INDIA..............IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA..........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |


NEW CITY MOTORS
Link Lanka
Hotline:
0724 990 990
0722 909 909
Budget Taxi
தவணைக் கொடுப்பனவு முறையிலும்
Link Meterஐ கொள்வனவு செய்யலாம்.
(வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மாத்திரம்)
இலவசம்
மீட்டர் டெக்சி
Board, Sticker
உலகில் உற்பத்தியான
சிறந்த முச்சக்கர வண்டி மீட்டர்
LINK LANKA
New City Motors
Head Office
# 181, Araamiya Place, Dematagoda,
Colombo - 09, Sri Lanka.
Office : 0112 690 744
Galle : 0114 345 960 - 4, 0114 345 962


Dia Star
#11
2nd Cross Street, Colombo-11
Tel: 011 2324066
DIASTAR
Wholesale & Retail Dealers in Rice Cookers, Fans ,Wall Clocks, Flasks, Emergency Lights, Iron, Gas Cookers & Cattles Etc...
#11, 2nd Cross Street, Colombo 11. Tel : 011 2324066, 0777 391052

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு
சமகாலம்
2013, ஜூலை 01 - 15
பக்கங்கள் - 84





எம்.ஜி.ஆர். வாக்குகளுக்கு விஜயகாந்த் வைத்த குறி
- எம்.காசிநாதன்




புதிய வாசிப்புச்சூழலும் சமகாலம் இதழின் பரிமாணங்களும்
- பேராசிரியர் சபா ஜெயராசா


**38** 13வது திருத்தத்தின் அரசியலும் வடமாகாண சபைத் தேர்தலும்
- அஜித் ரூபசிங்க

**50** இலங்கைத் தமிழர் பிரச்சினையும் இந்தியாவும்
- குமார் டேவிட்





ஜூலியா கில்லர்ட் தோல்வியும் அவுஸ்திரேலிய தலைமை மாற்றமும்
- சந்திரிகா சுப்பிரமணியன்

**71** தம் அடிப்போம் 'ஈ' தம் அடிப்போம்
- டாக்டர் எம்.கே.முருகானந்தன்




நூற்றாண்டு காணும் இந்திய சினிமாவில் தமிழ் சினிமாவின் பங்கு
- பிலிம் நியூஸ் ஆனந்தனுடன் நேர்காணல்





அபிவிருத்தி மனித மேம்பாட்டின் பாதையா அல்லது அடக்குமுறையின் கருவியா?
- பேராசிரியர் என்.சண்முகரத்தினம்

**22** தமிழர் பிரச்சினையில் தெரிவுகளும் சாத்தியங்களும்
-கே.ஆர்.டேவிட்

**26** இன்றைய ஆட்சியின் நெறிகெட்ட தன்மை
- பேராசிரியர் சுமணசிறி லியனகே

**63** பொருளாதார நெருக்கடிக்குள் புதிய செல்வாக்கை அனுபவிக்கும் மார்க்சியம்




இலங்கையில் இந்தியா செல்வாக்கை இழந்து விடவில்லை
-முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் எம்.கே.ராஸ்கோத்ராவுடன் நேர்காணல்
- எம்.பி.வித்தியாதரன்

**42** கல்லறைக்குப்போன காதல்

**45** தெரிவுக்குழுவும் தெரியாத முடியும்
- என்.சத்தியமூர்த்தி




கடைசிப் பக்கம்
சட்டத்தரணி நட.காண்டீபன்

ஆசிரியபீடத்திலிருந்து...

# பாராளுமன்றத் தெரிவுக்குழுவும் தமிழர்களும்

அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்துக்கு எதிரான பிரசாரங்கள் தீவிரமாக முடுக்கி விடப்பட்டதன் பின்னரான சூழ்நிலையில் வடமாகாண சபைக்கான தேர்தல் பற்றிய அறிவிப்பு உத்தியோகபூர்வமாக அரசாங்கத்திடமிருந்து வந்திருக்கிறது. 13வது திருத்தத்தின் குறிப்பிட்ட சில ஏற்பாடுகளை அகற்றுவதற்கான முயற்சிகளை அரசாங்கம் தற்போதைக்கு தொடர்ந்து முன்னெடுக்குமா என்ற கேள்வியும் எழுகிறது. குறிப்பாக ஜனாதிபதியின் இளைய சகோதரரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ புதுடில்லிக்கு மேற்கொண்ட அண்மைய விஜயத்திற்கு பிறகு இந்தக்கேள்வி கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது. மாகாணசபைகளுக்கு எதிராகக் கிளம்பிய தென்னிலங்கைச் சக்திகள் கடந்த பல வாரங்களாக முன்னெடுத்த பிரசாரங்கள் காரணமாக ஒட்டுமொத்தத்தில் அதிகாரப்பரவலாக்கத்துக்கு எதிரான உணர்வலைகள் மேலோங்கி நிற்பதையே காணக்கூடியதாக இருக்கிறது.

13வது திருத்தத்தைத் தளர்வுறச் செய்வதற்கான முயற்சிகளுக்கு எதிராகக்குரல் கொடுத்த (அரசாங்கத்திற்குள் இருக்கும்) இடதுசாரிக்கட்சிகள் மற்றும் சிறுபான்மை தேசிய இனக்கட்சிகளின் தலைவர்கள் முன்னரைவிட தற்போது சற்று 'அடக்கிவாசிக்க' ஆரம்பித்திருப்பதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. மாகாண சபைகளுக்கு எதிரானது என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட பிரசாரங்கள் மறுபக்கத்தில் சிறுபான்மைத் தேசிய இனங்களின் நலன்களுக்கும் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளுக்கும் எதிரான உணர்வுகளையே தென்னிலங்கையில் அதிகரிக்கச் செய்திருக்கின்றன. மாகாண சபைகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்த சக்திகள் இந்த உணர்வலைகளை கொஞ்சமேனும் மழுங்கக்கூடியவல்லமை கொண்டவையாக இல்லை என்பது துரதிர்ஷ்டவசமானது.

இதனிடையே இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து தீர்மானமொன்றுக்கு வரக்கூடிய ஒரேயொரு அரங்கு என்று அரசாங்கம் கூறி வந்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அரசாங்கத்தரப்பு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளில் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலான பிரதிநிதி தெரிவுக்குழுவுக்கு நியமிக்கப்படவில்லை. அதேவேளை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியும் தமிழ் மக்களின் பிரதான அரசியல் பிரதிநிதித்துவ அமைப்பான தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் ஜனதாவிமுக்தி பெரமுனையும் (ஜே.வி.பி.)யும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்கப்போவதில்லை என்று அறிவித்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. தங்களது இந்த முடிவுக்கு மூன்று தரப்பினரும் முன்வைத்திருக்கும் காரணங்கள் வேறுபட்டவையாகும்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பைப் பொறுத்தவரை, இந்தப்பாராளுமன்றத் தெரிவுக்குழு யோசனை முதலில் முன்வைக்கப்பட்ட தருணத்தில் இருந்தே அதில் பங்கேற்பதற்கு அது மறுப்புத் தெரிவித்து வந்திருக்கிறது. தங்களுக்கும் அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் இறுதியில் காணப்படக்கூடிய கருத்தொருமிப்பை தெரிவுக்குழுவின் ஆராய்வுக்கான அடிப்படை ஆவணமாக முன்வைப்பதாக அரசாங்கம் உறுதியளித்ததாகக்கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் தங்களுடனான பேச்சுவார்த்தைகளைத் தொடருவதில் அரசாங்கம் அக்கறை காட்டாமல் விட்டதையடுத்து இருதரப்பினருக்கும் இடையே கருத்தொருமிப்பைக் காண்பதற்கான வாய்ப்பு இல்லையென்பதால் தெரிவுக்குழுவில் பங்கேற்பதில் அர்த்தமேதுமில்லை என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள்.

அரசாங்கம் அண்மையில் மேற்கொண்ட நடவடிக்கையைப் பார்க்கும்போது தெரிவுக்குழு அரசாங்கப் பாராளுமன்றக்குழுவின் ஒரு உபகுழு போன்றே தென்படுவதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அண்மையில் அறிக்கையொன்றில் தெரிவித்திருந்ததும் கவனிக்கத்தக்கது. 13வது திருத்தத்தில் செய்யப்பட வேண்டிய மாற்றங்களாக இருந்தாலென்ன, இனநெருக்கடிக்கு அரசியல் இணக்கத் தீர்வைக் காண்பதற்கான வழிவகைகளாக இருந்தாலென்ன சகலதுக்குமான சர்வரோக நிவாரணியாக பாராளுமன்றத் தெரிவுக் குழுவை அரசாங்கம் முன்னிறுத்துகிறது. ஆனால், அத்தெரிவுக்குழுவினால் எந்தவிதமான உருப்படியான விளைபயனும் ஏற்படப் போவதில்லை என்று எதிரணிக்கட்சிகள் நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றன. இந்தியாவின் ஊடாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு நெருக்குதல்களைக் கொடுத்து தெரிவுக்குழுவில் பங்கேற்க வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படக்கூடிய சாத்தியங்களை மறுப்பதற்கில்லை. தெரிவுக்குழுக்கள், வட்டமேசை மகாநாடுகள், சர்வகட்சி மகாநாடுகள் தொடர்பில் தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய அனுபவங்கள் கசப்பானவை மட்டுமல்ல, கனதியானவையும்கூட என்பதை இச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த விரும்புகிறோம். ■













# கடிதங்கள்

## மானெலிடம் ஒரு கேள்வி

வானளாவ உயரும் செலவினங்கள் மத்தியில் மூத்த பிரஜைகளால் கண்ணியமாக வாழ முடிகிறதா என்று முன்னாள் தகவல் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. மானெல் அபேரத்ன கேட்கிறார். இளைய தலைமுறையினரால் என்ன கண்ணியமாகவா வாழ முடிகிறது?

பாரதி ஜெபனேசன், காரைதீவு.

## தயான் ஜெயதிலகவின் தவறான அளவுகோல்

தேசியவாதிகள் கற்க வேண்டிய நடுப்பாதை என்ற தலைப்பிலான தனது கட்டுரையில் கலாநிதி தயான் ஜெயதிலக தேசிய இனப்பிரச்சினையில் கடும்போக்கான நிலைப்பாடுகளை எடுத்திருக்கக்கூடிய சிங்கள, தமிழ்த்தரப்பினர் என்று தான் கருதுகிறவர்களுக்கு ஆலோசனை கூறியிருக்கிறார். தமிழ்த்தேசியவாதிகளைப் பொறுத்தவரை, கடந்த காலத்தில் அவர்கள் கடைப்பிடித்திருக்கக்கூடிய அணுகுமுறைகளில் குறைபாடுகள் இருக்கின்ற போதிலும், அவர்கள் உரிமைகள் மறுக்கப்படுகின்ற, ஒடுக்கப்படுகின்ற ஒரு தேசிய இனத்தின் சார்பிலேயே குரல் கொடுத்துப் போராடி வந்திருக்கிறார்கள்.

ஆனால், தென்னிலங்கையில் இருக்கின்ற சிங்களத் தேசியவாதிகளைப் பொறுத்தவரை, குறிப்பாக சிங்கள - பௌத்த கடும் போக்குச் சக்திகளைப் பொறுத்தவரை, அவர்கள் இலங்கையில் இருக்கக்கூடிய தேசிய சிறுபான்மை இனங்களில் எந்தவொன்றினதும் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளில் குறைந்தபட்சமானவற்றைக் கூட ஏற்றுக்கொள்ளத் தயாரில்லாதவையாகவே இருந்துவருகின்றன.

அந்த அடிப்படையில் நோக்குகையில், சிங்களத் தேசியவாதிகள் என்றும் தமிழ்த்தேசியவாதிகள் என்றும் கலாநிதி ஜெயதிலக வகைப்படுத்துபவர்களுக்கிடையே அவர்களின் சிந்தனைப்போக்கு, அணுகுமுறைகளில் பாரியவேறு பாடு இருக்கிறது. இருதரப்பினருக்கும் இடையே ஒரே அளவுகோலைப் பிரயோகித்து நடுப்பாதைக்கு அவர்கள் வரவேண்டுமென்று கேட்பதில் ஒரு பொருத்தப்பாடு இருப்பதாகக் கருத முடியவில்லை.

இன்று இருக்கக்கூடிய தமிழ்த்தேசியவாதிகளைப் பொறுத்தவரை, குறிப்பாக மிதவாத அரசியல் செய்கின்ற தமிழ்ச் சக்திகளைப் பொறுத்தவரை, பலவிதமான விட்டுக்கொடுப்புகளைச் செய்யத் தயாராயிருப்பதாக பகிரங்கமாக உலகிற்கு அறிவித்திருக்கிறார்கள். ஆனால், சிங்கள தேசியவாத சக்திகளைப் பொறுத்தவரை ஏற்கனவே தேசிய சிறுபான்மை இனத்தவர்களுக்கு இருக்கக்கூடிய உரிமைகளைக் கூட பொறுத்துக் கொள்ள முடியாதவர்களாகக் காணப்படுகிறார்கள். எனவே, தமிழ்த்தேசியவாத சக்திகளையும் சிங்களத் தேசியவாதச் சக்திகளையும் ஒரேவிதமான கடும்போக்குடன் விவ

## அ.மார்க்ஸ்

சமகாலம் 2013, ஜூன் 1-15 இதழில் இந்திய-சீன உறவில் முன்னேற்றம் எந்த அளவுக்கு சாத்தியம் என்ற தலைப்பிலான கட்டுரையில் சென்னை பேராசிரியர் அ.மார்க்ஸ் வெளிப்படுத்திய கருத்துக்கள் சீனாவின் மீதான அவரின் பழைய விசுவாசம் இன்னமும் அற்று போகாமல் இருப்பதை தெளிவாக உணர்த்துகின்றன.1962 போரில் அடைந்த வெற்றியை சீனா பெரிது படுத்துவதில்லை என்று கூறுகிற அளவிற்கு அவரின் விசுவாசம் சென்றிருக்கிறது.

எஸ்.சதீஸ்வரன், பட்டிருப்பு.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

காரங்களை அணுகுபவர் என்ற தொனியில் கருத்துகளை வெளியிடுவது எந்தவிதத்திலும் இன்றைய பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு உதவாது என்பதை நன்கு கற்றறிந்தவரான கலாநிதி ஜெயதிலகவுக்கு தெரியப்படுத்திக் கொள்ளவிரும்புகின்றேன்.

வீரகத்தி லெட்சுமணன், கோப்பாய்.

### சத்தியமூர்த்தி திருந்த வேண்டும்

'திருத்தம், திருத்தத்திற்கு திருத்தம்...... அப்புறம்' என்ற என்.சத்தியமூர்த்தியின் கட்டுரையில் எடுத்தியம்பப்பட்டிருக்கும் விடயங்களையும் விளக்கங்களையும் நோக்கும்போது இலங்கை தேசிய இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை, போரின் முடிவுக்குப் பின்னரான சூழ்நிலையில் விட்டுக்கொடுப்புகளைச் செய்ய வேண்டியவர்களாக அவர் தமிழ்த் தரப்பினரையே அடையாளம் காண்பதில் குறியாக இருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

சத்தியமூர்த்தியின் கருத்துகளைப் பொறுத்தவரை, அவர் தென்னிலங்கை அரசியல் சமுதாயம் செய்ய வேண்டிய விட்டுக்கொடுப்புகளைப் பற்றி பெரிதாக அக்கறைப்படுவதில்லை என்பது பிரகாசமாகத் தெரிகிறது. ஏன் இந்த ஆரோக்கியமற்ற அணுகுமுறை? இந்த அணுகுமுறையை மாற்றாத பட்சத்தில், இலங்கைத் தமிழர் பிரச்சினையை சமநிலையான நோக்கில் பார்ப்பதற்கான அருகதை சத்தியமூர்த்திக்கு இல்லை என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது.

நீலகண்டன் விஜிதா, வட்டுக்கோட்டை.

### சாந்தியின் கருத்துக்கள்

வன்முறையற்ற அரசியலுக்கான புகழுரைகளுடன் தமிழரசுக்கட்சி அரசியல் என்ற தலைப்பில் சாந்தி சச்சிதானந்தம் எழுதிய கட்டுரையில் அவர் வெளிப்படுத்திய கருத்துக்கள் சிந்தனையை தூண்டுபவையாக இருக்கின்ற போதிலும் இன்றைய சூழ்நிலையில் இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர்கள் மீது தவறு கண்டு பிடிக்க முயற்சிப்பது காலப்பொருத்தான ஒரு காரியமல்ல. 30 வருட கால அகிம்சை போராட்டத்திலும் 30 வருட கால ஆயுத போராட்டத்திலும் தோல்வி கண்ட தமிழர்கள் தங்கள் மத்தியில் இன்று உருப்படியான ஒரு அரசியல் சமுதாயத்தைக் கொண்டவர்களாக இல்லை.

பயனுறுதியுடைய அரசியல் சமுதாயம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கான பணியில் பங்களிப்பை செய்ய வேண்டிய சாந்தி போன்றவர்கள் ஆக்க பூர்வமான ஆலோசனைகளை முன்வைக்க வேண்டுமேயன்றி தற்போது பெரும் இடர்பாடுகளுக்கு மத்தியில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை உலகுக்கு எடுத்தியம்பும் பணியை முன்னெடுப்பவர்களை அதைரியப்படுத்தக்கூடிய வகையிலான கருத்துக்களைத் தவிர்ப்பதே முறையான தந்திரமாகும்.

எம்.வசீகரன், கந்தர்மடம்.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 02 இதழ் 01
2013, ஜுலை 01 - 15

A Fortnigtly Tamil News Magazine


எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

ஆசிரியர்
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

உதவி ஆசிரியர்
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

பக்க வடிவமைப்பு
எம்.ஸ்ரீதரகுமார்

ஒப்பு நோக்கல்
என்.லெப்ரின் ராஜ்



மற்றைய மனிதனின் விருப்பமின்றி அவனை நிர்வகிப்பதற்கு எந்தவொரு மனிதனுக்கும் தகுதி கிடையாது.
- ஏப்ரஹாம் லிங்கன்

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
சமகாலம்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்: 011 7778752, 011-7767704, 011-2327827,

# வாக்குமூலம்....

ஏனைய நாடுகளில் டெங்கு கட்டுப் பாட்டு நடவடிக்கைகள் உள்ளூராட்சிக ளின் கீழேயே வருகின்றன. சுகாதார அமைச்சு நோய்களைக் குணப்படுத்தும் வேலையையே செய்கிறது. இலங்கை யில் உள்ளூராட்சி அமைச்சுக்கோ அல் லது அமைச்சருக்கோ டெங்கு கட்டுப் பாட்டுச் செயற்திட்டம் பற்றி எதுவும் தெரியாது. உள்ளூராட்சி அமைச்சருக்கு இந்நாட்டில் டெங்கு இருக்கிறது என்பது கூட தெரியாது.



சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது சொந்தத்தில் தீர்மானத்தை எடுப்பதா னால், அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்துக்கு எதிராகச் செயற்படுவார் என்று நான் நினைக்க வில்லை. கோதாபய ராஜபக்ஷ தலை மையிலான தீவிரவாதக் குழுக்கள் ஜனாதிபதியை பணயக்கைதி போன்று பிடித்து வைத்திருக்கின்றன. செய்ய வேண்டிய காரியம் 13 ஆவது திருத்தத்தை ஒழிப்பதல்ல, அதற்குப் பதிலாக அத்திருத்தத்துக்கு அப்பால் சென்று 13++ அடிப்படையில் அரசி யல் தீர்வைக்காண வேண்டும்.



ஐக்கியதேசியக் கட்சி எம்.பி. மங்கள சமரவீர

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை ஒரு அர சியல் கட்சியாக பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாகவே முன்வைக்கப்பட்டுவருகிறது. ஆனால், இன்றுவரை பதிவுசெய்யப்படவில்லை. கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகள் இக்கோரிக்கையை தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றன. இதுவே தமிழரசுக் கட்சிக்கும் கூட்ட மைப்பின் ஏனைய அங்கத்துவக் கட்சிக ளுக்கும் இடையேயான பிரச்சினை. கூட் டமைப்பில் கட்டளையிடும் கட்சியாக இருப்பதற்கு தமிழரசுக்கட்சி விரும்புகி றது. இது தான் உண்மை.



தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவர் த.சித்தார்த்தன்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்த முன்னாள் விடுதலைப் புலிகள் மாத்திரமே தேசபக்தர்கள் என்றும் புனர்வாழ்வைப் பெற் றவர்கள் என்றும் கருதப்படுகிறது. அரசாங் கத்தைக் கண்டிப்பவர்கள் அநீதியான முறை யில் துரோகிகள் என்று வர்ணிக்கப்படுகிறார் கள். புனர்வாழ்வு முகாமில் இருந்து விடுவிக் கப்பட்ட விடுதலைப் புலிகளின் பெண்கள் பிரிவின் முன்னாள் தலைவி தமிழினி உண் மையான தேசபக்தர் என்று புகழப்பட்டு வட மாகாண சபைத்தேர்தலில் சுதந்திரக்கட்சி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு நியமன மும் கொடுக்கப்பட்டிருக்கிறார்.



ஐக்கியதேசியக்கட்சி எம்.பி. ரவி கருணாநாயக்க

மாகாணசபைகளை ஒழித்துக்கட்ட வேண்டுமென்ப தற்காக நான் பிரசாரம் செய்யவில்லை. நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக மாகாண சபைக ளுக்கு இருக்கிற அதிகாரங்களை ரத்துச் செய்ய வேண்டுமென்பதற்காகவே நான் குரல் கொடுக்கி றேன்.




வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஏகாதி பத்திய விரோதமானது. வெளிநாட்டு செல்வாக்கிற்கு அது ஒரு போதும் அடி பணியவில்லை. அதனால், இந்த அர சாங்கத்தில் அங்கம் வகிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். மாகாண சபைமுறை பற்றி மக் கள் மத்தியில் பல்வேறு அபிப்பிராயங்கள், வாக்குவா தங்கள் இருக்கின்றன. ஆனால், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது மாகாண சபைமுறைகளில் எந்தப் பிரச் சினையுமே இல்லை. இந்த முறைக்கு சில மாற்றங்கள் தேவைப்படுகின்றன. இலங்கையில் மாகாண சபை முறையின் செயற்பாடுகள் மீது இந்தியா எந்தச் செல் வாக்கையும் செலுத்தவில்லை.



தேசியமொழிகள், சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒற்றையாட் சியைப் பேணும் வரை நாம் அவரை ஆத ரிப்போம். பாதுகாப்போம். இலங்கை ஒரு ஒற்றையாட்சி நாடாக இருக்கும் வரை ராஜபக்ஷ எவ்வளவு நீண்ட காலத் துக்கு நாட்டை ஆண்டாலும் எமக்குப் பிரச்சினையில்லை.



பொதுபல சேனா பொதுச் செயலாளர் வண கலகொடத்த ஞானசாரதேரர்

செய்தி ஆய்வு

# முதற்தடவையாக வடக்கில் மாகாண சபைத் தேர்தல்

வடமாகாணத்தில் முதற்தடவையாக மாகாணசபைத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. அந்த தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்ததையடுத்து ஏற்பாடுகளில் இறங்கியிருக்கும் தேர்தல் திணைக்களம் அனேகமாக எதிர்வரும் செப்டெம்பர் 21 அல்லது 28ஆம் திகதியில் வாக்களிப்பு இடம் பெறலாம் என்று தெரிவித்திருக்கிறது.

வடமாகாண சபைத் தேர்தலுடன் சேர்த்து வடமேல் மாகாணத்துக்கும் (வயம்ப) மத்திய மாகாணத்துக்குமான தேர்தல்களும் நடத்தப்படவிருக்கின்றன. இவ்விருமாகாண சபைகளினதும் பதவிக்காலம் முடிவதற்கு இன்னமும் ஒருவருடம் இருக்கும் நிலையில் அவை கலைக்கப்பட்டிருக்கின்றன. கட்டங்கட்டமாக ஏனைய மாகாண சபைகளுக்கும் தேர்தல்களை நடத்திவிட்டு அவற்றின் முடிவில் தேசியத் தேர்தலொன்றை நடத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது போலத் தெரிகிறது. அது அனேகமாக ஜனாதிபதித் தேர்தலாகத்தான் இருக்கும் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு நான்கு வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துவிட்ட நிலையில் மிகவும் தாமதித்தே வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்த அரசாங்கம் முன்வந்திருக்கிறது. அதுவும் கூட சர்வதேச சமூகத்தின் நெருக்குதலுக்குப் பிறகே இத் தேர்தலை நடத்த அது இணங்கியது.

தற்போது ஏனைய மாகாணசபைகளுக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களுடன் ஒரு வடமாகாண சபை மக்களினால் தெரிவுசெய்யப்படுவதை அரசாங்கம் விரும்பவில்லை.

அதனால், மாகாணசபைகள் உருவாக்கத்துக்கு வழிவகுத்த அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் குறிப்பிட்ட சில ஏற்பாடுகளை ரத்துச் செய்யும் கைங்கரியங்களில் அது இறங்கியிருக்கிறது.

அரசாங்கத்துக்குள்ளிருந்தே கிளம்புகின்ற சில எதிர்ப்புகள் காரணமாகவும் இந்தியாவிடமிருந்து வருகின்ற வலியுறுத்தல்கள் காரணமாகவும் 13 ஆவது திருத்தத்தில் திருத்தங்களைச் செய்யும் முயற்சிகள் சற்று தாமதமடைந்துகொண்டிருக்கின்றன போலத் தோன்றுகிறது. ■



செய்தி ஆய்வு

# பாரிய வன்முறைகளுக்குள் சிக்கும் ஆபத்தில் எகிப்து

நீண்டகால சர்வாதிகாரியை ஆட்சியதிகாரத்திலிருந்து விரட்டிய வெற்றிகரமான 'அரபுவசந்தத்தினால்' பெருமையடைந்த எகிப்து இப்போது நம்பிக்கையிழந்த ஒரு 'குளிர்காலத்திற்குள்' பிரவேசித்திருக்கிறது. சுதந்திரமான தேர்தல் மூலம் மக்களினால் முதன் முதலாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியை இராணுவம் தூங்கியெறிந்திருக்கிறது.

விசித்திரம் என்னவென்றால் ஜனாதிபதி முஹமட் முர்சியின் அரசாங்கம் தூக்கியெறியப்பட்டதை ஒரு இராணுவச் சதிப்புரட்சி என்று அமெரிக்கா அழைக்கவில்லை. எகிப்தின் நிகழ்வுப் போக்குகள் தொடர்பில் அமெரிக்கா மிகுந்த ஜாக்கிரதையாக செயற்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

உலகில் ஜனநாயகத்தைப் பேணிக் காப்பதற்குப் பாடுபடுவதாக உரிமை கோருகிற அமெரிக்கா எகிப்திய இராணுவம் சதிப்புரட்சியொன்றைச் செய்திருப்பதாகக் குற்றஞ்சாட்டுமேயானால், அந்த இராணுவத்துக்கு வருடாந்தம் 130 கோடி டொலர்கள் உதவி வழங்கிவருவதை மேலும் நியாயப்படுத்த முடியாமற் போய்விடும். அதனால், முர்சி பதவிகவிழ்க்கப்பட்டதை வேறு என்ன பெயர் கொண்டு வாஷிங்டன் அழைக்கப்போகிறதோ?

இடைக்கால அரசாங்கத்தின் தலைவராக அரசியலமைப்பு நீதிமன்றத்தின் தலைவரான அட்லி மன்சூரை எகிப்திய இராணுவம் பதவியில் அமர்த்தியிருக்கிறது. அவரது அரசாங்கம் வாஷிங்டனுடன் தொடர்பு கொள்ள ஆரம்பித்திருக்கிறது.

மக்களின் விருப்பத்துக்கு மதிப்பளித்தே முர்சியின் அரசாங்கத்தை பதவியில் இருந்து அகற்றியதாக இராணுவம் பாசாங்கு செய்கிறது. ஆனால், ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசாங்கத்தை (நிதியுதவிக்கு அமெரிக்கா மீது தங்கியிருக்கும்) இராணுவம் வெள்ளை மாளிகைக்குத் தெரியாமல் தூக்கியெறிந்திருக்க முடியுமா?

முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் வளர்ச்சியினால் விசனமடைந்த மேற்குலகின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரமே எகிப்திய இராணுவம் செயற்பட்டிருக்கிறது என்று நம்புவதற்குக் காரணம் இருக்கிறது. ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கை ஆட்சியதிகாரத்திலிருந்து விரட்டுவதற்கு உதவிய அரபு வசந்தம் மக்கள் கிளர்ச்சியின் நினையாப்பிரகாரமான பயனாளியாக முஸ்லிம் சகோதரத்துவ இயக்கம் மாறிவிட்டதை மேற்குலகத்தினால் சகித்துக்கொள்ள முடியாமல் இருந்தது ஒன்றும் இரகசியமான தல்ல. முர்சியையும் முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தையும் அகற்றுவதற்கு அமெரிக்காவும் மேற்குலகமும் விரும்பியிருக்கக்கூடும். ஆனால் எகிப்தில் இன்னொரு கிளர்ச்சியைத் தூண்டிவிடுவதற்கு அவை தயாராயில்லை. இதற்கு சிரியாவில் படித்த பாடமே காரணம் எனலாம். சிரியாவில் மேற்குலகு ஆதரவுடனான கிளர்ச்சியாளர்கள் அசாத் அரசாங்கத்தின் படைகளை தோற்கடிக்க முடியாமல் பெரும் பின்னடைவைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, எகிப்தில் இரத்தம் சிந்தாமல் குறுக்குவழியூடாக இராணுவ ஜெனரல்கள் முர்சியைக் கவிழ்ப்பதற்கு மேற்குலகு உதவியிருக்கிறது.

முர்சி ஒன்றும் தேவ தூதர் அல்ல. தனது செல்வாக்கை வளர்த்து அதிகாரங்கள் தனது சகலதையும் தனது கைக்குள் போட்டுக் கொள்வதற்காக அவர் நீதித்துறை உட்பட சகல நிறுவனங்களையும் தனது பிடிக்குள் கொண்டுவந்ததன் விளைவாகவே மக்களின் விரக்தியைச் சம்பாதித்துக் கொண்டார். முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்துக்கும் மறைமுக நிகழ்ச்சித் திட்டங்கள் இருந்தன என்பதிலும் சந்தேகமில்லை. எது எவ்வாறிருந்தாலும் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்களை பதவியிலிருந்து அகற்றும் பொறுப்பை இராணுவத்தின் கையில் விட்டு விடுவது பேராபத்தானது.



முஸ்லிம் சகோதரத்துவ இயக்கமும் முர்சி ஆதரவுச் சக்திகளும் இப்போது வீதிக்கு இறங்கியிருப்பதால் வன்முறைகள் வெடித்திருக்கின்றன. பலர் பலியாகியிருக்கிறார்கள். பாரிய வன்முறைகளுக்குள் எகிப்து சிக்கும் ஆபத்து தோன்றியிருக்கிறது. ■

# ஆண்மை குறைப்பாட்டினை நீக்கி புதுத்தெம்புடன் புத்துணர்ச்சியூட்டுகின்றது

## Vigomax FORTE

## சந்தோசமான தாம்பத்திய உறவிற்கு...

விகோமெக்ஸ் போர்டே

- ஆண்மை குறைபாடு
- தாம்பத்திய உறவில் ஆர்வமின்மை
- உளவியல் ரீதியான ஆண்மை குறைபாடு
- தாம்பத்திய உறவில் பலவீனம்
- நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆண்மை குறைபாட்டிற்கும் உகந்தது




ஒரு வில்லையின் விலை 20/- ரூ.



## Vigomax FORTE

விநியோகிப்போர்
Harcourts (Pvt) Ltd.,
14, Station Road, Dehiwala.
0773 936 068, 0773 833 450

நாடு பூராகவுமுள்ள சகல மருந்தகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்










































































**இரண்டாவது அடியெடுத்து**



# புதிய வாசிப்புச் சூழலும் 'சமகாலம்' இதழின் பரிமாணங்களும்

எமது வாசிப்புச் சூழலில் சமகாலத்தின் வருகை ஒரு முக்கியமான நிகழ்ச்சி யாகும். உலகச் சூழலில் நிகழ்ந்து வரும் நவீன வாசிப்பு வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கக்கூடிய தர மான தமிழ் இதழ் ஒன்றின் தேவையை அது நிறைவு செய்துள்ளது. இன்றைய அரசியலுக்குரிய ஒரு கன தியான சஞ்சிகை தமிழ் சூழலில் தடையின்றி தொடர்ந்து வெளிவருதல் முக்கியமான ஓர் ஆக்க நிகழ்ச்சி

## அகவையில் வைக்கும் சமகாலம்

பேராசிரியர்
சபா ஜெயராசா



கல்வி விரிவாக்க நடவடிக்கைக ளும் சமூகநலனை மேம்படுத் தும் செயற்பாடுகளும் ஒன்றிணைந்து எழுத, வாசிக்கத் தெரிந்தோரின் எண் ணிக்கையை அதிகரிக்கச் செய்து வரு கின்றது. வாசகர் பெருக்கம் ஏதோ ஒரு வகையில் நிகழ்ந்த வண்ணமுள் ளது.

வாசிப்பின் வளர்ச்சி இரண்டு தளங்களைக் கொண்டது. ஒன்று ஆரம்பநிலை வாசிப்பு இது முதலாம் நிலை வாசிப்பு எனப்படும். மற்றை யது வளர்ச்சியடைந்த நிலை வாசி ப்பு. இது உயர்நிலை வாசிப்பு எனப் படும்.

இரண்டு செயற்பாடுகளும் முரண் பாடுகொண்டவையன்று. சமூகம் வளர்ச்சியடையும் பொழுதும் ஒரு நாட்டின் அறிவுத்தரம் உயர்ந்து செல் லும் பொழுதும் உயர்நிலையான வாசிப்பு வளர்ச்சியடைந்து முகிழ்ப் புக்கொள்ளும்.

ஆரம்ப நிலை வாசிப்புக்குரிய எழுத்தாக்கங்கள் எளிமையானவை, புனைகதைப்பாங்கானவை. அறிவுத் தளத்தின் ஆரம்பநிலையோடு நிற் பவை. உயர்நிலை வாசிப்புக்குரி யவை அறிவுத்தளத்தில் மேம்பட்டு நிற்பவை, கனதியானவை. அதிக தருக்கப்பாடுகளுக்கு உட்பட்டவை. ஊன்றிய கவனமெடுத்து வாசிக்கப் படவேண்டியவை.

வளர்ச்சியடைந்த நாடுகளின் பெரும்பாலான நாளிதழ்களும், பருவ இதழ்களும், உயர்நிலை வாசிப்பைக் குவியப்படுத்தித் தமது எழுத்தாக்கங்களை முன்வைக்கின் றன. கனங்காத்திரமான கட்டுரை களும் திறனாய்வுகளும் வெளியிடப் படுகின்றன. புனைகதைகள் மற்றும்

நகைச்சுவையாக்கங்களிலும் தரமேம்பாட்டுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. அதாவது உயர்நிலை வாசிப்பை நோக்கிய ஊக்கலே உந்திவிடப்படுகின்றது.

எமது வாசிப்புச் சூழலில் 'சமகாலத்தின்' வருகை ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். உலகச் சூழலில் நிகழ்ந்து வரும் நவீன வாசிப்பு வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கக்கூடிய தரமான தமிழ் இதழ் ஒன்றின் தேவையை அது நிறைவு செய்துள்ளது. இன்றைய அரசியலுக்குரிய ஒரு கனதியான சஞ்சிகை தமிழ்ச் சூழலிலே தடையின்றித் தொடர்ந்து வெளிவருதல் முக்கியமான ஓர் ஆக்க நிகழ்ச்சி.

அரசியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் சார்ந்த கருத்தாடல்களும் அறிவுக் கையளிப்பும், புறவய (OBJECTIVE)த் திறனாய்வுகளும் சமகாலத் தமிழ்ச் சூழலிலே அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. உணர்ச்சிக் கவிப்பிலிருந்து விடுபட்டு அறிவு சார்ந்த தருக்கம் மேலோங்கிய நிலைகளிலே அரசியல் நிகழ்ச்சிகளைப் பகுத்தாராய வேண்டிய தேவைக்கு ஈடுகொடுக்கக்கூடிய கருத்துத்தளத்தைச் 'சமகாலம்' உருவாக்கி வருகின்றது.

அறிவுப் பரப்பிலே இயற்கை விஞ்ஞானங்கள் போன்று சமூக விஞ்ஞானங்களும் தீவிர வளர்ச்சியைப் பெற்று வருகின்றது. உயர்கல்விச் சுவர்களை இடித்துத்தள்ளி அறிவை வெளிக்கொண்டுவரும் முயற்சியில் காத்திரமான இதழ்களின் வகிபாகம் முக்கியத்துவம் பெறுகின்றது. அறிவுப் பொருளாதாரம் மற்றும் அறிவுச் சமூகச் சூழலில் உயர்கல்வி நிறுவனங்களுக்குரிய சில பணிகளை உயர்நிலையான இதழ்கள் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளன. 'விடுதலையாக்கப்படும் அறிவில்' (LIBRE KNOWLEDGE) இதழ்கள் சிறப்பார்ந்த பணிகளை ஆற்றத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒவ்வோர் இதழும் தத்தமக்குரிய தனித்துவ ஆளுமையை உருவாக்கிக் கொள்வதுண்டு. உள்ளடக்கம், பொருள் தெரிவு, தர ஏற்பாடு, அமைப்பு முறை, தளக்கோலம் (LAYOUT) இதழாசிரியரின் தனித்துவம் முதலியவற்றின் அடிப்படைகளில் இதழுக்குரிய தனித்துவ ஆளுமை உருவாக்கம் நிகழும். உள்ளடக்க நிலையில் சமகாலத்தில் பின்வரும் அலகுகள் இடம்பெற்றுள்ளன. ஆசிரியர் எடுத்துரைப்பு, கடிதங்கள், வாக்குமூலம், செய்தி ஆய்வு, உள்நாட்டு அரசியல், பிராந்திய அரசியல், டில்லி டயறி, சென்னைமெயில், அறிவியற் களரி, கடைசிப்பக்கம் என்றவாறு இடம் பெற்றுள்ளன.

ஓர் அரசியல் இதழுக்குரிய தரமுதன்மைப்பாடு மேலெழுந்துள்ளது. உள்நாட்டு அரசியலுக்கு மேலும் முக்கியத்துவமும் அதிக பக்க ஒதுக்கீடுகளும் வழங்கப்பட்டிருத்தல் தேசிய அரசியல் ஆய்வின் தேவையை முக்கியத்துவப்படுத்தியுள்ளது

ஓர் அரசியல் இதழுக்குரிய தரமுதன்மைப்பாடு மேலெழுந்துள்ளது. உள்நாட்டு அரசியலுக்கு மேலும் முக்கியத்துவமும் அதிக பக்க ஒதுக்கீடுகளும் வழங்கப்பட்டிருத்தல் தேசிய அரசியல் ஆய்வின் தேவையை முக்கியத்துவப்படுத்தியுள்ளது.

அரசியல் ஆய்வுகளில் குவிமைய நிலையும் (CENTRE) விளிம்பு (PERIPHERY) நிலைகளும் கருத்திலே கொள்ளப்பட்டுள்ளன. நிலைபேறுகொண்ட அதிகாரங்கள் பற்றிய திறனாய்வுகளை உள்ளடக்கிய கட்டுரைகள் பரவலாக இடம்பெற்றுள்ளன. அவற்றினூடே கருத்தியற் பன்மை நிலைகள் வெளிக் கொண்டுவரப்பட்டுள்ளன. பன்மைநிலைக் கருத்தியல்களின் அளிக்கை, அறிவு நிலையில் முக்கியமானது. நேர்க்கருத்துகளையும் விசாலமான எதிர்க்கருத்துகளையும் ஆராய்வதிலிருந்துதான் வினைத்திறன் மிக்க தொகுப்புக்கருத்துக்கு வாசகர் நகர முடியும்.

ஒரு முகமாகச் சிந்திக்காது பன்முகமாகப் பல கோணங்களிலே சிந்தித்தல் 'விரிசிந்தனை' என்று உளவியலிலே குறிப்பிடப்படும். விரிசிந்தனை என்பது ஆக்க மலர்ச்சிச் சிந்தனையாகும். அதாவது புத்தாக்கங்களை உருவாக்கும் சிந்தனையாகும், அத்தகைய சிந்தனைகளை வளர்த்தெடுத்தலின் முக்கியத்துவம் நவீன கல்வியிலும் உளவியலிலும், இதழியலிலும் வலியுறுத்தப்படுகின்றது.

இதழ்கள் வழியாகக் கையளிக்கப்படும் அறிவை அச்சுப் பிரதி போன்று வாசகர் தமது மனத்திலே உள்வாங்கிக் கொள்வதில்லை. 'கட்டுமையியல்' (CONSTRUCTIVISM) என்ற உளவியற்புலத்தில் இவ்விடயம் விரிவாகப் பேசப்படுகின்றது. அதாவது மனித மனம் ஒவ்வொன்றும் தெறித்துச் செயற்பட வல்லது. ஒவ்வொருவரும் தமக்குரிய அறிகை இருப்புக்கு ஏற்றவாறு தமக்கு வழங்கப்படும் அறிவை மனத்திலே கட்டமைப்புச் செய்து கொள்வர். அந்நிலையில் பல கருத்துகள், பன்மை நிலை அணுகு முறைகள், பன்மை நடைகள் என்றவாறு விரிநிலை ஆக்கங்கள் வழங்குதல் முக்கியத்துவம் பெறுகின்றன. இத்துறையிலும் 'சமகாலம்' கவனம் செலுத்துதல் குறிப்பிடத்தக்கது.

நவீன அரசியலில் மேலாதிக்கத்தினால் ஒதுக்கி வைக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட கருத்துகளும் மக்களின் குரல்களும் அவை தொடர்பான கருத்தாடல்களும் கூடுதலான கவனக்குவிப்பைப் பெற்றுள்ளன. அத்தகைய கருத்து வினைப்பாடுகளை முன்வைத்தல் இந்திய இதழியற் சூழலில் விரைந்து வளர்ச்சியடைந்து வருகின்றது. இந்நாட்டிலே மிகுந்த கூர்ப்படைந்து வரும் இனத்துவச் சூழலில் ஆழ்ந்து விரிந்த கருத்துப் பரிமாற்றங்களை முன்னெடுக்கும்

பொதுசன நூலகம்



இதழியற் செயற்பாடுகள் முக்கியமானவை. அவை நலன்தரும் தேசியப் பணியாகவும் அமையும். அத்தகைய செயற்பாடுகளிலே 'சமகாலம்' பங்காளியாக நிற்கின்றது.

மூன்றாம் உலக நாடுகள் அல்லது வளர்முக நாடுகளின் அரசியல் இதழ்களிலே முரண்படும் இருநிலைக் கோலங்கள் காணப்படுகின்றன. ஒன்று ஆட்சியில் உள்ள அரசியற் செயற்பாடுகளை விமர்சிக்காது நயந்துரைக்கும் இதழ்கள், அவை பெரும்பாலும் ஏகவகையான அல்லது ஒரே வகையான கருத்துகளையே முதன்மைப்படுத்தி நிற்கும். மற்றையது மாற்றுக்கருத்துகளையும் பன்மைக் கருத்துகளையும், முதன்மைப் படுத்தும் இதழ் மரபு. கருத்துகளைப் பரிசீலித்து நேர்முடிவுகளுக்கு வருவதற்கு ஏகவகையும் எதிர்வகைகளும் முக்கியமானவை.

நவீன நுகர்ச்சிச் சமூகம் பன்மை நிலைகளை நோக்கியே நகர்ந்து செல்கின்றது. உணவிலே பன்மை, உடையிலே பன்மை, பொருட்களிலே பல்வகைமை போன்று அறிவிலும் கருத்துகளிலும் பன்மை நோக்கிய நகர்ச்சியே ஏற்பட்டு வருகின்றது. அத்தகைய வளர்ச்சியைச் 'சமகாலம்' உள்வாங்கிக் கொள்கின்றது.

அரசியல் அறிவை முதன்மையாகக் கொண்ட ஆய்வு இதழ்கள் தனித்துச் 'செய்தி தெரிவித்தலோடு' (REPORTING) மட்டும் நின்றுவிடுதல் இல்லை. அதன் அடுத்த கட்டத்துக்கும் நீட்சி கொண்டு செல்லும். அதாவது தகவல் என்பது அறிவு நிரலமைப்பின் ஆரம்ப நிலையைச் சார்ந்தது. அதிலிருந்து மேலடுக்குகளை நோக்கிய நகர்ச்சி முக்கியமானது.

தகவலைத் தகவலாக மட்டும் நோக்காது அதன் பின்புலத்தையும், காரண காரியத் தொடர்புகளையும், விளைவுகளையும், அவற்றுக்குரிய கருத்தியல் ஆழங்களையும் ஊடுருவி நோக்குதல் வேண்டும். அந்நிலைகளினூடாக அறிவின் மேலடுக்குகளை நோக்கித் தகவல் நிலைமாற்றம் பெறும். தகவலும் அறிவை நோக்கிய நிலைமாற்றமும் தொடர்பான ஆற்றல்மிகு அரசியற் கட்டுரைத் தெரிவுகள் சமகாலத்தில் இடம்பெற்றுள்ளன.

உலக மயமாக்கற்சூழலிலே, உலக அரசியல், பிராந்திய அரசியல், உள்ளூர் அரசியல் ஆகியவற்றுக்கிடையே பெரும்பாக நிலையிலும் நுண்பாக நிலையிலும் தொடர்புகள் காணப்படுகின்றன. வெளித்துலங்கும் தொடர்புகளும் காணப்படுகின்றன. வெளிப்புலப்படாத ஊடுதலையீடுகளும் மாற்றுப் பிரயோகங்களும் காணப்படுகின்றன. அந்த வளர்ச்சியில் முன்னைய அரச அறிவில் எண்ணக்கருக்கள் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படுகின்றன. கோட்பாடுகளுக்கும் நடைமுறைகளுக்குமிடையே யுள்ள இடைவெளிகள் பல நிலைகளிலும் துலங்கத் தொடங்கியுள்ளன. அவைபற்றிய ஊடுருவிய காட்சிகள் நவீன வாசகரால் எதிர்பார்க்கப்படுகின்றன. அவற்றுக்கு ஈடு கொடுக்கும் இதழாக 'சமகாலம்' மேலெழுதலைக் குறிப்பிடவேண்டியுள்ளது.

> இலங்கையில் மிகுந்த கூர்ப்படைந்துவரும் இனத்துவச்சூழலில் ஆழ்ந்து விரிந்த கருத்துப் பரிமாற்றங்களை முன்னெடுக்கும் இதழியற் செயற்பாடுகள் முக்கியமானவை. அவை நலன்தரும் தேசிய பணியாகவும் அமையும். அத்தகைய செயற்பாடுகளிலேயே சமகாலம் பங்காளியாக நிற்கிறது


அத்தகைய, எதிர்பார்ப்புக்குரிய கட்டுரைகள் மட்டுமன்றி, இதழ் ஆசிரியரது தலையங்க எழுத்தாக்கங்களும் முக்கியமானவை. ஓர் இதழின் கனதியையும் பெறுமானத்தையும், கருத்தியலையும் தாங்கி நிற்பது ஆசிரியரின் எடுத்துரைப்பு. அது ஒரு தனித்த இலக்கிய வடிவமாகவும் நவீன திறனாய்வுகளிலே கொள்ளப்படுகின்றது.

நடப்பு நிலைவரங்களை அடியொற்றிய கருத்தூன்றிய எடுத்துரைப்பாக அது அமையும். ஆசிரியரின் ஆளுமை மற்றும் இதழின் ஆளுமை ஆகிய இரண்டையும் ஒரு பங்கு சேர எடுத்தியம்பும் குறியீடாக அமைவது, ஆசிரியர் தலையங்கம். சமகாலத்தின் ஆசிரியர் எடுத்துரைப்பு பலதரங்களையும் பலநிலைகளையும் கொண்ட வாசகரின் இயல்புகளுக்கு ஏற்றவாறு ஈடுகொடுக்கக் கூடிய 'இயம்பல் தளத்தை'க் கொண்டுள்ளது. கருத்தையும் அதனைச் செப்பமாகக் கையளிக்கக் கூடிய வினைத்திறன் மிக்க மொழியையும் கொண்ட இயம்பல் தளத்தின் உருவாக்கம் சமகாலத்தின் வாசிப்பு ஈடுபாட்டுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

கட்டுரை, பத்தியெழுத்து அல்லது இதழ்க்கீலம், ஆசிரியர் தலையங்கம் என்பவற்றுக்கிடையே வேறுபாடுகள் உண்டு. ஆசிரியர் தலையங்கம் குறித்த ஆசிரியருக்குரிய பரந்து ஆழ்ந்த வாசிப்பின் வீச்சு, தொலைநோக்கு, இதழின் வழியாகக் கையளிக்கப்பட வேண்டிய ஆற்றுப்படுதல், குறித்த விடயங்களோடு தொடர்புடையோருக்கு அறிவூட்டல், கருத்தியல் வலிமை முதலிய பல பரிமாணங்களுடன் தொடர்புடையது. 'சமகாலம்' ஆசிரிய தலையங்கங்கள் மேற்குறித்த பண்புகளோடு தொடர்புகொண்டு மேலெழுகின்றன.

அரசியல் என்பது அனைத்துத் துறைகளிலும் ஊடுருவி நிற்பது. தனித்துச் செயற்படும் 'தூய அரசியல்' என்று ஒன்றில்லை. சமயம், கலை, பண்பாடு, இலக்கியம், சமூகம், பொருளாதாரம், மருத்துவம், தொழில்நுட்பம், கல்வி என்ற அனைத்துத் துறைகளிலும் அரசியல் ஊடுருவி நிற்பதைக் காணலாம். அந்த அகல் விரி பண்பை நோக்கி. 'சமகாலம்' மேலும் விரிவுபடுத்தலை மேற்கொள்வதற்குரிய வாய்ப்புகள் உள்ளன. தற்போதைய அதன் உள்ளடக்கமே பன்மைநிலைகளை

(21ஆம் பக்கம் பார்க்க...)



பேராசிரியர் என். சண்முகரத்தினம்

# அபிவிருத்தி

## மனித மேம்பாட்டின் பாதையா அல்லது அடக்குமுறையின் கருவியா?

> அரசியல் தீர்வின் தவிர்க்க முடியாத அவசியத்தையும் அவசரத்தையும் ஏற்க மறுக்கும் ஒரு அரசாங்கத்தினால் மக்களின் ஒரு தொடர்ச்சியான மனித மேம்பாட்டிற்கு உதவும் ஒரு அபிவிருத்திப் போக்கினை ஏற்படுத்த முடியுமா?

2009ஆம் ஆண்டு ஐந்தாம் மாதம் விடுதலைப்புலிகளை இராணுவரீதியில் தோற்கடித்து உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வந்த பின்னர் 'அபிவிருத்தியே' இன்றைய உடனடித்தேவை என ஆட்சியாளர் பிரகடனப்படுத்தினார். இறுதிக்கட்ட இராணுவ நடவடிக்கையை ஒரு 'மனிதாபிமான' நடவடிக்கை எனக் குறிப்பிட்ட அரசாங்கம் மக்கள் வேண்டி நிற்பது அவர்களின் வாழ்வாதாரத் தேவைகளின் பூர்த்தியே எனக்கூறியபடி 'மீள்குடியேற்றம்' 'அபிவிருத்தி' எனும் பதாகைகளுடன் திட்டங்களை ஆரம்பித்தது. இத்திட்டங்கள் வெளிநாட்டு நன்கொடை உதவியுடனும் கடனாகப்பெற்ற பெருமளவு நிதியுடனும் அமுலாக்கப்பட்டன, படுகின்றன. இவ்வாறு பெறப்பட்ட பெருமளவு நிதிவளங்களில் பெரும்பகுதியினை பௌதீக உட்கட்டுமானத் திட்டங்களே உறிஞ்சுகின்றன.

ஏறக்குறைய மூன்று தசாப்தங்களாகப் போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களின் வாழ்வாதாரங்களை மீள்நிர்மாணித்தல் ஒரு அவசியத் தேவை என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். அதேபோன்று அழிவுக்குள்ளான அவர்களின் உட்கட்டுமானங்களின் புனரமைப்பும் விருத்தியும் அவசியம் என்பதையும் மறுப்பதற்கில்லை. வடக்கு, கிழக்கில் வாழும் மக்கள் போரினால் மட்டுமன்றி சுனாமியினாலும் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களின் அடிப்படைத் தேவைகள் எண்ணிலடங்கா.

ஆனால், அரசாங்கத்தின் கொள்கை தொடர்பான இரண்டு விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. முதலாவது உள்நாட்டுப் போருக்கு அடிப்படைக் காரணமாக இருந்த தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வின் அவசியத்தை ஒதுக்கிவிட்டு 'அபிவிருத்தியை' முன்வைப்பதும் அதையே அரசியல் தீர்விற்கு பிரதியீடாகக் காட்ட முயற்சிப்பதுமாகும். அபிவிருத்திக்கும் அரசியல் தீர்வுக்

கும் இடையே நெருக்கமான உற வுண்டு. ஆனால் முன்னையது பின் னையதின் பிரதியீடாக இருக்க முடியாது. அரசியல் தீர்வின் தவிர்க்க முடியாத அவசியத்தினையும் அவ சரத்தினையும் ஏற்க மறுக்கும் ஒரு அரசாங்கத்தினால் மக்களின் தொட ர்ச்சியான மனித மேம்பாட்டிற்கு உத வும் ஒரு அபிவிருத்திப் போக்கினை ஏற்படுத்த முடியுமா எனும் கேள்வி நியாயமானதே.

> பொருளாதாரக் கொள் கையின் நடைமுறை, ஒரு குடும்பத்தை மையமாகக் கொண்ட அதிகாரக்குழுவின் போக்கு, எதேச்சாதி கார இராணுவ மயமாக் கல், பேரினவாத கருத் தியலின் பயன்பாடு எல்லாம் எப்படி அட க்குமுறைக்கு உதவும் வகையில் இணைக் கப்பட்டு 'அபிவிருத்தி' 'தேசிய இறைமை' எனும் போர்வைகளால் நியாயப்படுத்தப்படு கின்றன என்பதைப் பார்த்தல் அவசியம்

இது இரண்டாவது விடயத்திற்கு இட்டுச் செல்கிறது. அரசாங்கமும் அதன் கொள்கைகளுக்கு வக்காலத்து வாங்கும் அறிவாளர்களும் பிரசாரர் களும் மிகைப்படக் கூறும் 'அபிவி ருத்தி' என்பதன் உள்ளடக்கம் தான் என்ன? வடக்கு, கிழக்கில் இடம் பெறும் 'அபிவிருத்தி' மக்கள் விரோதப் போக்குகளுடன் பின்னிப் பிணைந்திருப்பதால் அது பெரும்பா லானோரின் நீடித்த மனித மேம்பாட் டிற்கு உதவவல்லதா என்ற கேள்வி எழுகிறது. இப்படிச் சொல்வது இலங் கையின் மற்றைய பகுதிகளில் பெரும்பாலானமக்களின் நலன் சார்ந்த அபிவிருத்தி ஏற்படுகிறது என்பதாகாது. வடக்கு, கிழக்கில் அமுலில் இருக்கும் அபிவிருத்திக் கொள்கையை முழு நாட்டிலிருந்தும் முற்றிலும் தனிமைப்பட்ட ஒன்றெ னக்கொள்ளமுடியாது. அதேவேளை, பலகாரணங்களால் வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்குச் சில குறிப்பான சவால்களும் தன்மைகளும் உண்டு. இவை முழு நாட்டையும் பாதிக்க வல்லன என்பதும் உண்மை.

1977இலிருந்து இலங்கையில் நவதாராளவாத பொருளாதாரக் கொள்கை நடைமுறையிலிருக்கிறது. 1970களிலிருந்து பல நாடுகள் மீது திணிக்கப்பட்ட இந்த கொள்கை மக் கள் நலன் சார்ந்ததல்ல எனப் பல ஆய்வுகள் தெளிவாகக் காட்டியுள் ளன. அதேவேளை, இலங்கையில் இந்தக் கொள்கையின் நடைமுறை யும் நாட்டின் பொருளாதாரமும் கட ந்த பல ஆண்டுகளாக அரசியல் அதி காரத்தைக் கைப்பற்றியுள்ள ஒரு குடும்பத்தின் செல்வாக்குக்கும் ஆதி க்கத்துக்கும் உள்ளாகியிருப்பதும் உலகறிந்ததே. ஆளும் கூட்டினர் நவ தாராளவாத விதிகளை தமது நலன்க ளுக்கேற்ப மாற்றிக் கொள்வதையும் மீறுவதையும் காண்கிறோம். இதன் விளைவான 'அபிவிருத்திப் போக்கு' தீர்வு காணப்படாத தேசிய இனப் பிரச்சினையின் இராணுவமயமாக் கல், பேரினத்துவ மேலாதிக்கம், அதி காரவாதமயமாக்கல், பெருமளவி லான நாடளாவிய மனிதஉரிமை மீறல்கள் மற்றும் ஊழல் ஆகியவற்று டன் இணைந்துள்ளது. இந்தச் சிக்க லான பின்னிப்பிணைப்புடன் உள் நாட்டுப் போரினதும் உலகமயமாக்க லினதும் விளைவான காசாதாரப் பொருளாதாரத்தின் (remittance economy) நல்ல தீய தாக்கங்களும் இணைகின்றன.

அரசியல் தீர்வின் முக்கியத்து வத்தை நிராகரிக்கப் பயன்படுத்தப் படும் இந்த அபிவிருத்தியின் அரசி யல் பொருளாதாரத்தை ஆழப் பார்த் தல் அவசியம். இது வடக்குக் கிழக் கில் சில குறிப்பான அடக்குமுறைத் தன்மைகளைக் கொண்டிருக்கும் அதேவேளை, முழு இலங்கையை யும் பாதிக்கும் ஒன்றாகும். பொருளா தாரக் கொள்கையின் நடைமுறை, ஒரு குடும்பத்தை மையமாகக் கொண்ட அதிகாரக்குழுவின் போக்கு, எதேச்சாதிகார இராணுவ மயமாக்கல், பேரினவாதக் கருத்திய லின் பயன்பாடு ஆகியன எப்படி அடக்குமுறைக்கு உதவும் வகையில் இணைக்கப்பட்டு 'அபிவிருத்தி' 'தேசிய இறைமை' எனும் போர்வை களால் நியாயப்படுத்தப்படுகின்றன என்பதைப் பார்த்தல் அவசியம். இவற்றைப் பார்ப்பதற்கு முன் அபி விருத்திக்கும் மனித மேம்பாட்டிற் கும் இடையிலான தொடர்பு பற்றி ஒரு குறிப்பு பயன்தரும்.

### மனிதமேம்பாடு பற்றி

மனிதமேம்பாடு எனும் போது ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பில் வாழும் மனிதரின் ஆற்றல்களின் விருத்தியையே குறிக்கும். பொது வாக மனிதரின் உணவு, உறைவிடம், சுகாதாரம், கல்வி, உழைப்பாற்றல், பாதுகாப்பு மற்றும் ஒருவர் பெறுமதி மிக்கதெனக் கருதும் வாழ்முறை யைத் தேடும் சுதந்திரம் போன்றவை மனித மேம்பாட்டின் வரைவிலக்க ணத்தின் அம்சங்களாகக் கருதப்படு கின்றன. வாழ்முறையைத் தேடும் சுதந்திரம் என்பது சிந்தனை, பேச்சு, எழுத்துச் சுதந்திரங்களையும் உள்ள டக்குகிறது. இந்த வகையில் மனித மேம்பாட்டை நோக்குமிடத்து அது மனித நன்னிலையின் தன்மைகளைக் குறிக்கிறது. அபிவிருத்தியை மனித சுதந்திரங்களின் விரிவடைதலுடன் இணைக்கும் சிந்தனைப்போக்கு ஒன்று உண்டு. இன்றைய காலத்தில் இந்த அணுகுமுறையைப் பிரபல்யப் படுத்தியவர் அமர்த்தியா சென் அவர் கள் ஆகும். அபிவிருத்தியை மனித ஆற்றலுடைமைகளின் (capabilities) வளர்ச்சியின் படிமுறைப் போக் காகப் பார்க்கலாம் என சென் கூறுகி றார். ஆற்றலுடைமை மனிதரின் இருப்புகளையும்; (beings)செயற்பா

டுகளையும் (doings) உள்ளடக்குகிறது. இது ஒருவர் பசி, பிணி, எழுத்தறியாமை போன்றவற்றிலிருந்து விடுபடும் அடிப்படை இருப்புகளிலிருந்து அவர் தனக்குப் பெறுமதி வாய்ந்ததெனப் பகுத்தறிவு பூர்வமாகக் கருதும் இருப்புகள் செயற்பாடுகளை அனுபவிக்கும் ஆற்றல்களைச் சுதந்திரங்களைக் குறிக்கும், நீண்டகாலமாக இந்தக் கோட்பாட்டை பல ஆய்வுகளுக்கூடாக விளக்கிய சென் தனது முழுமையான கருத்துகளை 1999 இல் Development As Freedom எனும் நூலில் தருகிறார். சென்னுடைய கருத்து 18ம் நூற்றாண்டின் ஐரோப்பிய அறிவொளிக்காலத்தில் (The Enlightenment period) வெளிவந்த மனித விடுதலை பற்றிய சிந்தனையினால் ஆகர்ஷிக்கப்பட்டது. அவரது நிலைப்பாடு தாராளவாத தத்துவத்தில் வேரூன்றியுள்ளது. குறிப்பாக அடம் ஸ்மித்தின் தாராளவாதத்தில் என்று அவரே கூறியுள்ளார். இன்று அபிவிருத்தி கற்கைகள் துறையிலும் UNDP இன் மனித அபிவிருத்தி (Human development) அறிக்கைகளிலும் சென்னுடைய கோட்பாட்டின் செல்வாக்கைக் காணலாம். முதலாளித்துவ அமைப்புக்குள் ஜனநாயக விழுமியங்களுக்கு ஏற்ப அபிவிருத்திப் போக்குகளை மதிப்பிடவும் விமர்சிக்கவும் சென்னுடைய ஆற்றலுடைமைக் கோட்பாட்டைப் பயன்படுத்தலாம். அதேவேளை, அவருடைய தாராளவாத நிலைப்பாடும் உரிமைகளுக்கான மக்கள் போராட்டங்களைப் பற்றி அவர் கணக்கிலெடுக்கத் தவறியதும் விமர்சிக்கப்பட வேண்டும். அதேபோன்று முதலாளித்துவம் பற்றிய அவரது விளக்கங்களும் சர்ச்சைக்குரியவை. இந்த அம்சங்கள் பற்றி நான் 2001இல் ஒரு விரிவான கட்டுரையை எழுதியுள்ளேன். (Shanmugaratnam 2001). அபிவிருத்திச் சிந்தனைகள் பற்றி பிறிதொரு விரிவான கட்டுரையை எழுத வேண்டிய தேவை இருப்பதாகவும் கருதுகிறேன்.

இங்கு அழுத்திக் கூறவேண்டிய விடயம் என்னவெனில், மனிதமேம்பாட்டையோ நன்னிலையையோ பிரதானமாக, நோக்கமாகக் கொண்டு இயங்கும் சமூக அமைப்பில் நாம் வாழவில்லை. முதலாளித்துவ அமைப்பின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் மனித உழைப்பாற்றலின் வளர்ச்சி இன்றியமையாதது. இந்த அமைப்பில் மனித மேம்பாடு என்பது மூலதனத்தின் பொருளாதார, சமூக, அரசியல் தேவைகளுடன் நெருக்கமான உறவினைக் கொண்டுள்ளது. ஆகவே மனிதமேம்பாட்டை நாம் வாழும் சமூக அமைப்பின் தன்மைகளிலிருந்து பிரித்துப் புரிந்து கொள்ளவோ விளக்கவோ முடியாது. முதலாளித்துவத்திற்கு அடிப்படையான உலகளாவிய தன்மைகள் இருக்கும் அதேவேளை, அது நிறுவன ரீதியில் பல்வேறு அரசியல் அமைப்புகளைக் கொண்டுள்ளது. உதாரணத்திற்கு இராணுவ சர்வாதிகாரம் மற்றும் பாசிசம் போன்ற அடக்குமுறை மிகுந்த ஆட்சியமைப்புகளிலிருந்து பூர்சுவா சுதந்திரங்கள் மனித உரிமைகளைக் கொண்ட தாராளவாத மற்றும் சமூக ஜனநாயக ஆட்சி அமைப்புகள் வரை முதலாளித்துவத்தின் அரசியல் மாதிரிகளை நடைமுறையில் காணலாம். இத்தகைய அமைப்பு ரீதியான வேறுபாடுகளுக்கும் மனிதமேம்பாட்டின் விருத்தியின் மட்டங்களுக்குமிடையே நெருக்கமான உறவு இருப்பதைக்காணலாம். உதாரணமாக உணவு, உறைவிடம், உடை போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வாய்ப்புகள் கிடைக்கும் ஒரு சமூகத்தில் மற்றைய அடிப்படைச் சுதந்திரங்கள் மறுக்கப்படலாம். இந்தத் தடைகள் மனித மேம்பாட்டின் தொடர்ச்சியான வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும். பொதுவாக ஒரு நாட்டில் காணப்படும் ஜனநாயக சுதந்திரங்கள் சமூகப்பாதுகாப்பு போன்றவை மக்களின் போராட்டங்களின் விளைவுகள் என்பதை மறந்துவிடலாகாது. இப்போராட்டங்கள் வர்க்க ரீதியாகவும் பரந்த வெகுஜன ரீதியாகவும் இடம் பெறுகின்றன. இவற்றில் தொழிலாளவர்க்க மற்றும் பெண்ணுரிமை, சூழல்பாதுகாப்பு இயக்கங்கள் முக்கிய பங்குகளை வகித்துள்ளதைக் காணலாம். மறுபுறம் ஒரு முதலாளித்துவ அமைப்பின் அரசியல்ரீதியான சமூகரீதியான நியாயப்பாட்டிற்கு ஜனநாயக உரிமைகளும் சமூகப்பாதுகாப்பும் அவசியமாகின்றன. அடிப்படை உரிமைகளை மறுக்கும் அரசு அடக்குமுறைக் கருவிகளிலேயே தங்கியிருக்கும். அத்தகைய அரசில்

> மனித மேம்பாடு என்பது மூலதனத்தின் பொருளாதார, சமூக, அரசியல் தேவைகளுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டுள்ளது. மனித மேம்பாட்டை நாம் வாழும் சமூக அமைப்பின் தன்மைகளிலிருந்து பிரித்துப் புரிந்து கொள்ளவோ விளக்கவோ முடியாது

மனித மேம்பாட்டின் போக்கு கட்டுப்படுத்தப்படுகிறது.

முதலாளித்துவ அமைப்பின் முரண்பாடுகளே குறிப்பிட்ட சூழ்நிலைகளில் அதன் வரையறைக்குள்ளே சாத்தியமான ஜனநாயக சுதந்திரங்களுக்கு வழிவகுக்கின்றன. அத்தகைய சுதந்திரங்கள் பல சமூக மட்டங்களில் உள்ள மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தவும் அவற்றிற்காகப் போராடவும் உதவுகின்றன. இத்தகைய ஒரு நிலை வரும்போது சமூகபொருளாதார சந்தர்ப்பங்கள், அரசியல் அதிகாரம் போன்றவற்றின் பங்கீடு ஒரு முக்கிய கேள்வியாகிறது. இது ஆளும் வர்க்கத்திற்கு ஒரு பெரும் பிரச்சினையாகிறது. ஆகக் குறைந்த ஊதியம், சமூகப்பாதுகாப்பு, பால்சமத்துவம், சூழலின்பாதுகாப்பு, இன, மத, சாதிரீதியான பாகுபாட்

டினை ஒழித்தல் போன்ற அடிப்படை விடயங்கள் முக்கியத்துவம் பெறு கின்றன. இவற்றை விரும்பாத ஆட் சியாளர் ஜனநாயக உரிமைகளையே நசுக்க முடிவெடுப்பார்கள். இது அடக்குமுறை ஆட்சிக்கு இட்டுச் செல்லுமா இல்லையா என்பது அரசி யல் சக்திகளின் ஒப்பீட்டு ரீதியான பலத்தினைப் பொறுத்தது. இன்று இலங்கையில் அடக்குமுறை சக்திக ளின் கைகளே ஓங்கியிருப்பதைக் காண்கிறோம்.

இன்றைய நவதாராளவாத யுகத் தில் ஒவ்வொருவரும் சுயாதீனமான தனிநபராக தன்னியல்பான போட்டிச் சந்தையில் பங்குபற்றுவதன் மூலம் தனது சுயநலன்க ளைப் பூர்த்தி செய் வர் என எதிர்பார்க் கப்படுகிறது. மனித மேம்பாட்டிற்கு இதுவே வழி என் பதே அந்த அபிவி ருத்தி மாதிரியின் எடு கோளாகிறது. இது ஒருவித சந்தை அடிப்படைவாதம் என்றால் மிகையா காது. தொழிற்சங்க சுதந்திரத்தையும் தொழிலாளரின் கூட்டு நடவடிக்கைகளையும் நசுக்கு வதற்கு இந்தவாதம் பயன்படுகிறது. நடைமுறையில் இது தொழிலாள வர்க்க எதிர்ப்பு, மக்கள்எதிர்ப்பு ஆகி யவை மீதான அடக்குமுறைக்கு உத வுகிறது. தனிமனித சுதந்திரம் என்பது சந்தையில் பங்குபற்றும் சுதந்திரமாக மட்டுப்படுத்தப்படுகிறது. இது மனித மேம்பாட்டின் விருத்திக்குப் பொரு ளாதார ரீதியான அரசியல் ரீதியான, தடைகளைப் போடுகிறது.

நவதாராளவாதக் கொள்கையின் அமுலாக்கம் நாட்டுக்கு நாடு காலத் துக்குக் காலம் வேறுபடுகிறது. எந்த ஒரு அரசாங்கமும் இத்தகைய ஒரு கொள்கையைத் தனது அரசியல் நலன்களுக்கு ஏற்ற வகையிலேயே செயற்படுத்தும். முதலாளித்துவ அபி விருத்திப்போக்கு சமூகரீதியிலும் புவியியல்ரீதியிலும் முரண்பாடுகளு க்கும் ஏற்றத்தாழ்வுகளுக்கும் ஊடா கவே நகர்கிறது, இதன் விளைவாக வரும் எதிர்பார்ப்புகள் மற்றும் கோரி க்கைகளை அரசாங்கம் எப்படிக் கையாள்கிறது என்பதும் முக்கிய மான கேள்வி. இது ஒரு அரசியல் கேள்வியாகும். குறிப்பிட்ட பிரதேசத் தவரின் அல்லது குறிப்பிட்ட இன அல்லது மதக்குழுவினரின் ஆதர வைப் பெறும் நோக்கில் அரசின் நிதி வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படலாம். குறிப்பிட்ட பிரதேசங்களுக்குத் தனி யார் முதலீடுகளை ஈர்க்கும் வகை யில் அரசாங்கம் உட்கட்டுமான முத லீடுகளைச் செய்வதுடன், வேறு சலு கைகளையும் வழங்கலாம். இப்படி யாக நவதாராளவாத பொருளாதாரக் கொள்கை வலியுறுத்தும் பண்டமய மாக்கலும் தனியுடைமைமயமாக்க லும் அரசியல் ரீதியில் கையாளப்பட லாம். ஆகவே தூய நவதாராளக் கொள்கை என்று ஒன்று நடைமுறை யில் இல்லை. அரசியலை ஒதுக்கிப் பொருளாதாரத்தைப் பார்ப்பதில் அர்த்தமில்லை.

> இன்றைய நவதாராளவாத யுகத்தில் ஒவ்வொருவரும் சுயாதீனமான தனி நபரான தன்னியல்பான போட்டிச்சந்தையில் பங்கு பற்றுவதன் மூலம் தனது சுயநலன்களை பூர்த்தி செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மனித மேம்பாட்டிற்கு இதுவே வழி என்பதே அந்த அபிவிருத்தி மாதிரியின் எடுகோளாகிறது. இது ஒரு சந்தை அடிப்படை வாதம் என்றால் மிகையாகாது

## இலங்கையில் நடப்பதென்ன?

முழுமையாக தொகுத்து நோக்குமி டத்து இலங்கையின் தற்போதைய நிலைமை மிகவும் சிக்கலானதும் முரண்பாடுகள் நிறைந்ததாகவும் உள்ளது. நவதாராள கொள்கையை ஏற்றுள்ள அரசாங்கம் அதேவேளை, பொருளாதாரத்தில் பெருமளவிலான தலையீடுகளையும் தொடர்ச்சியாக மேற்கொள்வதோடு, நிறுவனமய மாக்கப்பட்ட சிங்கள - பௌத்த பேரினவாதமும், அரசியல், பொது நிர்வாகம், கல்விசார் நிறுவனங்கள் அனைத்தின் மீதான இராணுவமய மாக்கலும் ஆட்சியின் ஒட்டுமொத்த அதிகாரத்தையும் கூண்டோடு கைப் பற்றுவதில் முழுநேரமும் கண்ணாயி ருக்கும். முதலாவது குடும்பம், இதற்கு அடிபணிந்து செயல்படும் புல்லுருவி அரசியல்வாதிகள், உயர் அதிகாரிகள் மற்றும் ஊடகத்துறையி னர், சட்டமும் ஒழுங்கும் நிலை குலைந்த நிலையில் நசுக்கப்படும் சிவில்சமூகம் இவற்றுடன் சகல மட் டங்களிலும் ஊழல், இவை எல்லாம் ஒன்றுகூடும் இடமாகி விட்டது இலங் கைத்தீவு. முரண் பாடுகள் மிக்க இந்த நிலைமை வெளிப்ப டுத்தும் ஒழுங்கற்ற சமூகச்சூழலுக்குப் பின்னே ஒரு தர்க்க ரீதியான போக்கு உண்டு. அதைப் புரி ந்து கொள்ள அரசி யல் அதிகாரம் எப் படி இலங்கை அரச அமைப்பில் பண்பு ரீதியான மாற்றங் களை ஏற்படுத்துகிறது என்பதையும் இந்தப்போக்கு இலங்கையின் முத லாளித்துவ அபிவிருத்திப் போக்கை எப்படி வழி நடத்த முயல்கிறது என்ப தையும் அவற்றின் சமூகரீதியான விளைவுகளையும் பார்த்தல் அவசி யம்.

இலங்கை அரசின் நிர்மாணம் ஒரு தொடர்ச்சியான போக்கு. காலனித்து வம் கையளித்த அரசினை சுதந்திரத் திற்குப் பின்னர் வந்த அரசாங்கங்கள் யாப்புகளை மாற்றுவதற்கூடாகவும் தனிப்பட்ட சட்டங்களுக்கூடாகவும் மாற்றியமைத்து வந்தன. உள்நாட்டில் பெருந்தேசிய இனவாதத்தின் எழுச்சி வர்க்க முரண்பாடுகளை மழுங்கடித்த அதேவேளை, முதலாளித்துவத்தின் வளர்ச்சிப்போக்கின் மீதும் ஆதிக்கம் செலுத்தியது. இதனைப் பின்நோக்கிப் பார்க்கும் போது பேரினவாதத்தின் குட்டிப்பூர்சுவா கருத்தியலின் இனத்

துவ மேல் நிர்ணய அதிகாரம் மேலும் தெளிவாகிறது. குறிப்பாக 1956க்குப் பின்னர் பொருளாதாரத்தின் அரசுடைமையாக்கலை இந்தக் கருத்தியலே வழி நடத்தியது. அரச கூட்டுத்தாபனங்களின் வளர்ச்சி ஒரு அபிவிருத்தி அரசினால் வழிநடத்தப்படவில்லை. மறுபுறம் 1956இற்குப் பின்னரான காலகட்டம் இடதுசாரி இயக்கத்தின் வீழ்ச்சியையும் தொழிலாள வர்க்கம் இனத்துவ அரசியலால் உள்வாங்கப்படுவதையும் கண்டது. 1977 இல் UNP அரசாங்கம் ஏற்றுக்கொண்ட நவதாராள திறந்த பொருளாதாரக்கொள்கை அரசில் நிறுவன ரீதியான சில மாற்றங்களுக்கு வழிவகுத்தது. சுதந்திரவர்த்தகம், சுயபோட்டிச் சந்தை, தனியுடைமையாக்கல் போன்ற அடிப்படை அம்சங்களைக் கொண்ட இந்தக் கொள்கை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றாலும் மனித மேம்பாட்டைப் பொறுத்தவரை 1977க்கு முன்னர் இருந்த சமூகநல உதவிகள், மானியங்கள் படிப்படியாக அகற்றப்பட்டன. இன்றுவரை இந்தப் போக்கில் மாற்றமில்லை. அதேபோன்று தொழிலாளர் உரிமை மறுப்புப்போக்கு முன்பை விட மோசமாகத் தொடர்கிறது. 1977க்குப் பின்னர் அரசின் சிங்கள பௌத்தமயமாக்கல் மேலும் ஆழமாகத் தொடர்ந்தது. 1977-1983 காலகட்டத்தில் தமிழ்மக்களுக்கு எதிரான வன்செயல்கள் அதிகரித்தன. தேசிய இனப்பிரச்சினையின் இராணுவமயமாக்கல் துரிதமடைந்தது. ஒரு இனத்துவ மேலாதிக்க அரசான (Ethnocratic State) & இலங்கை அரசு இராணுவ ரீதியில் மேலும் பலமடைந்தது. இது பற்றி முன்னைய கட்டுரையில் விளக்கமாக எழுதியுள்ளேன் (உதாரணமாக சமகாலம் ஒக்டோபர் 1-15/2012இல் 'நிலமும் தேசியபிரச்சினையும்' எனும் தலைப்பிலான கட்டுரை).

நவதாராள பொருளாதாரக் கொள்கைக்கும் பேரினவாத அரசியலுக்குமிடையே முரண்பாடு உண்டு. முன்னையது மூலதனத்தின் வளர்ச்சியை மையமாகக் கொண்டது. அதைப்பொறுத்தவரை மூலதனத்தின் இலாபத்தையும் பாதுகாப்பையும் பாதிக்கும் அரசியல் அர்த்தமற்றது ஆபத்தானது. ஆனால், இலங்கையின் யதார்த்தம் இதனுடன் முரண்படுகிறது. 1983 கலவரத்தை ஆளும் கட்சியினரே நடத்தி வைத்தனர். அதில் தமிழருக்குச் சொந்தமான மூலதனம் பெருமளவில் அழிக்கப்பட்டது. தமது ஆட்சிக் காலத்தில் குவிந்த மூலதனத்தின் ஒரு கணிசமான பகுதியை அழிப்பதற்கு அதே ஆட்சியாளர்கள் உதவியாக இருந்தார்கள். இது இனத்துவ மேலாதிக்க அரசியலுக்கும் மூலதனத்தின் குவியல் சார்ந்த பொருளியலுக்குமிடையிலான முரண்பாட்டின் வெளிப்பாடு. இத்தகைய உள்நாட்டுச்சூழலில் மூலதனத்திற்கும் இனத்துவத்திற்குமிடையிலான உறவையும் கணக்கிலெடுத்தல் வேண்டும்.

போருக்குப் பின்னர் ஆட்சியாளர் அரசில் ஏற்படுத்தி வரும் மாற்றங்களை அவதானிக்கும் போது பல முக்கிய போக்குகளைக் காணலாம். ஒருபுறம் இவை அரசின் இனத்துவ மேலாதிக்கத் தன்மையை மேலும் ஆழமாக்கி சிங்கள பௌத்தத்தைச் சாராத இனங்களைக் குறிப்பாக தமிழ் பேசும் மக்களை மேலும் உரிமை மறுக்கப்பட்ட குடிமக்களாக்குகின்றன. மறுபுறம் இந்தப் போக்குகள் நாட்டின் சகல மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் நசுக்குகின்றன. முதன்முதலாக 'தேசிய இறைமை' எனும் பெயரால் அரசின் பாதுகாப்பு மேலும் இராணுவரீதியில் பலப்படுத்தப் படுகிறது. இந்த பாதுகாப்புமயமாக்கல் (Securitisation) குடிமக்களின் மனித பாதுகாப்பை அரசின் பாதுகாப்புக்கு கீழ்ப்படுத்தியுள்ளது. இதன் உச்சக்கட்டத்தை வடக்குக் கிழக்கில் தமிழ்மக்கள் மீது விதிக்கப்படும் இராணுவ ரீதியான அடக்குமுறை யில் காண்கிறோம்.

அடுத்து, போரு க்குப் பின்னான புனரமைப்புத்திட்டங்கள், நகர் அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவை இராணுவ மயமாக்கப்படுவது மட்டுமன்றி வடக்குக் கிழக்கில் இராணுவத்தினர் விவசாயம், வாணிபம், கடற்றொழில், உல்லாசத்துறை போன்ற துறைகளிலும் நேரடியாக ஈடுபட்டுள்ளனர். அது மட்டுமன்றி ஒழுக்கமுறைப்பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி எனும் போர்வையில் கல்வித் துறையினுள் இராணுவமயமாக்கல் ஊடுருவியுள்ளது. இவையெல்லாம் மனித சுதந்திரங்களையும் வாழ்வாதாரங்களையும் பலவிதமாகப் பாதித்து மனித மேம்பாட்டிற்கு தடைகளைப் போடுகின்றன. இவை இராணுவ மயமாக்கலின் சில முக்கியமான மக்கள் விரோத விளைவுகள்.

அரசின் பாதுகாப்புமயமாக்கலை ஆட்சியாளர் நியாயப்படுத்தப் பயன்படுத்தும் 'தேசியஇறைமை' 'பிரிவினைவாத ஆபத்து' போன்ற கருத்தியல் ரீதியான திரைகளுக்குப் பின்னால் உள்ள யதார்த்தங்களைப் பார்ப்பது அவசியம். அரசின் பாதுகாப்புமயமாக்கல் (தேசியபாதுகாப்பு அரசு) என்பது சிவில் சமூகத்தை அரசின் பலாத்காரக் கருவிகளால் கட்டுப்படுத்துவது அல்லது நசுக்குவ

> இலங்கை அரசின் நிர்மாணம் ஒரு தொடர்ச்சியான போக்கு. காலனித்துவம் கையளித்த அரசினை சுதந்திரத்திற்கு பின்னர் வந்த அரசாங்கங்கள் யாப்புகளை மாற்றுவதற்கூடாகவும் தனிப்பட்ட சட்டங்களுக்கூடாகவும் மாற்றியமைத்து வந்தன. பெருந் தேசிய இனவாதத்தின் எழுச்சி வர்க்க முரண்பாடுகளை மழுங்கடித்த அதேவேளை முதலாளித்துவத்தின் வளர்ச்சிப் போக்கின் மீதும் ஆதிக்கம் செலுத்தியது

தாகும். இந்தக் கடும்போக்கு வடக்கு கிழக்கில் மட்டுமன்றி சிங்களமக்கள் பெரும்பான்மையாக வாழும் தெற்கிலும் பலப்பட்டுவருவதைக் காணலாம். அங்கே தொழிலாளர்களின் மற்றும் நடுத்தர வர்க்க ஊழிய உழைப்பாளர்களின் வாழ்வாதாரத் தேவைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களுக்கான தொழிற்சங்க ரீதியான கூட்டுச்செயற்பாடுகளை முறியடிப்பதற்கு ஆட்சியாளர் அரசின் பலாத்காரக் கருவிகளை மட்டுமல்ல அரசியல்வாதிகளின் பாதாள உலக (underworld) பயங்கரவாதத்தையும் பயன்படுத்தி வருகின்றனர். உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவும் நீண்ட காலமாக ஸ்தம்பித்து இருக்கும் மெய்ஊதியமும் (real income) சகல இனங்களையும் சார்ந்த உழைக்கும் வர்க்கங்களின் மனித நன்னிலையை மோசமாகப் பாதித்திருக்கும் நிலையில் தொழிற்சங்க உரிமைகள் நசுக்கப்படுகின்றன.

பெரும்பான்மை இனத்தைப் பொறுத்தவரை சிவில்சமூகம் அரச பலாத்காரத்தின் அடக்குமுறைக்குப் பலியாக்கப்படும் நிலை ஒரு முக்கிய செய்தியைச் சொல்லுகிறது. அதாவது பெரும்பான்மை இன மக்களை சிங்கள-பௌத்தபேரினவாத கருத்தியலின் மேலாட்சியால் (Hegemony) மட்டும் வழமைபோல் கட்டியாள்வது கடினமாகிவிட்டது. சிவில்சமூகத்தில் கருத்தியலின் மேலாட்சி எனும் மிருதுவான அதிகாரசக்தியினால் (soft power) சிங்கள மக்களின் பெரும்பான்மையோரின் சம்மதத்தை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இன்றைய அரசாங்கத்தினால் பெறுவது சுலபமல்ல. இதனால் அரசின் வன்மையான அதிகாரத்தில் (hard power) ஆட்சியாளர் கூடுதலாகத் தங்கி நிற்கும் நிலையைக் காண்கிறோம். அதேவேளை, சிங்கள மக்கள் மீதான கருத்தியல் ரீதியான மேலாட்சியினை தக்கவைக்க ஜாதிக ஹெல உறுமய (JHU), பொதுபலசேனா (BBS), வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி (NFF) போன்ற அமைப்புகளையும் தமக்கு ஆதரவான ஊடகங்களையும் ஆட்சியாளர் பயன்படுத்துகின்றனர்.

நீண்ட காலமாக ஆளும் கட்சியினர் பெரும்பான்மை இனத்தின் பரந்த சமூகப்பிரிவினரான குட்டிப்பூர்சுவாப்பின்னணியைக் கொண்ட நடுத்தர, கீழ்நடுத்தர மட்டங்களின் அரசியல் ஆதரவையும் விசுவாசத்தையும் தக்கவைப்பதற்கு அரச நிறுவனங்களுக்கூடாகவும் அரச வளங்களைப் பயன்படுத்தியும் சலுகைகளை அவர்களுக்கு வழங்கி வந்தனர். குறிப்பாக அரச நிறுவனங்களிலும் அரசினால் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களிலும் வேலைவாய்ப்புகள் குடியேற்றத்திட்டங்களில் நிலப்பங்கீடுகள் போன்றவை. அரசியல் மயப்படுத்தப்பட்ட இத்தகைய சலுகைகள் தமிழ்பேசும் சமூகங்களின் சில பகுதிகளுக்கும் கிடைத்தது உண்மையெனினும் அவற்றின் கொள்கை ரீதியான நடைமுறை பெருந்தேசியவாத அரசநிர்மாணத்துக்கு உதவுவதையே நோக்காகக் கொண்டிருந்தது. அரசாங்கத்தை அமைப்பதற்கு தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பையும் பங்குபற்றலையும் பெறுவதற்கு இந்த சலுகைகளை ஐக்கிய தேசியக்கட்சியினதும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினதும், தலைமைகள் மாறி மாறி பயன்படுத்துவதும் வழக்கமாகி விட்டது.

> நவதாராள பொருளாதார கொள்கைக்கும் பேரினவாத அரசியலுக்குமிடையே முரண்பாடு உண்டு. அந்த பொருளாதாரக் கொள்கை மூலதனத்தின் வளர்ச்சியை மையமாகக் கொண்டது. அதைப் பொறுத்தவரை மூலதனத்தின் இலாபத்தை பாதுகாப்பையும் பாதிக்கும் அரசியல் அர்த்தமற்றது, ஆபத்தானது. ஆனால் இலங்கையின் யதார்த்தம் இதனுடன் முரண்படுகிறது

1977இல் ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சியில் நவதாராளவாதக் கொள்கை அமுலுக்கு வந்த போதும் பல அரச கூட்டுத்தாபனங்கள் பாரியளவிலான நட்டம் நிதியிழப்பு ஆகியவற்றுக்கு தொடர்ச்சியாக உள்ளாகியும் இன்றுவரை தனியுடைமையாக்கப்படாதிருப்பதை இந்தப் பின்னணியிலேயே பார்க்க வேண்டும். ■

*(தொடரும்...)*

---

*(15ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

அடியொற்றிய அரசியல் வாசிப்புக்கு வழியமைத்துள்ள நிலையில், கவிப்புக்கு உள்ளாகாத ஏனைய துறைகளை நோக்கியும் நகர முடியும்.

இதழ்கள் 'வாசகர்தளம்' 'எழுத்தாளர் தளம்' என்ற இருநிலைகளிலே இயங்கிய வண்ணமிருக்கும். தமிழ் இதழியலைப் பொறுத்தவரை உள்ளடக்கக் கனதியுடன் எழுதுவோரின் எண்ணிக்கை போதுமான அளவில் இல்லாத சூழலையும் குறித்து நோக்க வேண்டியுள்ளது. சமூக விஞ்ஞானிகளுக்குத் தமிழ்ச் சூழலிலே பற்றாக்குறை இருத்தல் போன்று, சமூக விஞ்ஞான எழுத்தாளர்களுக்கும் பற்றாக்குறை காணப்படுகின்றது. அத்தகைய இதழ்களை நடத்துவோருக்கும், ஆசிரியர்களுக்கும் அது ஒரு சவாலாக இருத்தலையும் சுட்டிக்காட்டவேண்டியுள்ளது.

தமிழிலே பல சமூக விஞ்ஞான இதழ்கள் தொடர்ந்து வெளிவராது நின்று போனமைக்கு அதுவும் ஒரு காரணம். அத்தகைய நெருக்கீடுகளினூடே தரவுறுதியோடு 'சமகாலம்' வெளிவந்து கொண்டிருத்தல் கடினமான ஆக்க உழைப்பின் பெறுபேறாகின்றது. ■


கே.ஆர்.டேவிட்

சர்வதேசப் பிரச்சினையாக பரிணமித்துள்ள தமிழர் பிரச்சினை

# தெரிவுகளும் சாத்தியங்களும்

இலங்கையில் நிலவுகின்ற இனப்பிரச்சினைக்கு இரண்டு விதமான தளங்களுண்டு. முதலாவதாக இனப்பிரச்சினைக்குள்ள இலங்கைத் தளத்தை நோக்கினால், இலங்கையில் இனப்பிரச்சினையானது வணிகமயமான தேர்தல் பொறிமுறைக்குள் புதையுண்டு போயிருப்பதை மிக இலகுவாக இனங்கண்டு கொள்ள முடியும். இனப்பிரச்சினையானது வணிகமயமான தேர்தலுக்குள் புதையுண்டு போனமைக்கு சிங்களத் தலைவர்கள் மட்டுமல்ல, இலங்கையிலுள்ள சிறுபான்மை இனங்களின் சகல தலைவர்களுக்கும் சமமான பங்குண்டு.

இரண்டாவதாக இலங்கை இனப்பிரச்சினையை சர்வதேச நிலையில் வைத்து நோக்கினால், இந்தியாவையும் உள்ளடக்கி அமெரிக்கா, சீனா, ரஷ்யா போன்ற வல்லரசு நாடுகளுக்கு இலங்கையை அவ்வப்போது மிரட்டுவதற்கான ஒரு அரசியல் சாணக்கியத்தினுள் இனப்பிரச்சினை புதைந்து போயிருப்பதை அவதானிக்கலாம்.

இலங்கையில் இனப்பிரச்சினையைப் பொறுத்து தனது இருப்பிற்கு எதிராக எதுவுமே நடந்துவிடாதென்ற தெளிவு இலங்கை அரசாங்கத்திற்குண்டு. தனக்கெதிராக கூட்டம் போடவும், சுலோகங்களைத் தாங்கவுமே தமிழ்த் தலைவர்களால் முடியக்கூடிய இறுதி நடவடிக்கைகள் என்பதை இலங்கை அரசு மிகத்தெளிவாகக் கணக்குப் போட்டுள்ளது. இலங்கையிலுள்ள தமிழ்த் தலைமைகளிடம் பலமான ஐக்கியமோ, வலுவான திட்டங்களோ, புதிய வழிகளைக் கண்டறியும் அரசியல் நுணுக்கங்களோ இல்லாமையும் அவர்களின் செயற்திட்டப் பலவீனங்களுமே இலங்கை அரசின் கணிப்பீட்டுக்கான காரணங்களாய் அமைகின்றன.

சர்வதேச பரப்பில் இலங்கை அவ்வப்போது பக்கச்சார்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, அந்நடவடிக்கைகள் தங்களின் அரசுக்கு இடையூறாக அமைந்துவிடுமோ என்ற ஐயத்தில் தமிழ் மக்களின் அவலங்களையும், வன்னியின் இறுதி யுத்த மீறல்களையும் துருப்புச் சீட்டாக இறக்கி இலங்கையின் நடவடிக்கைகளை நிறுத்த அல்லது, தணிக்க சர்வதேச சமூகம் முயற்சிக்கின்றது. அதேவேளை, சர்வதேச நாடுகளின் இவ் எச்சரிக்கைக்குரலானது தமிழ் மக்கள் மத்தியில் ஏதோ ஒருவித திருப்தியைக் கொடுக்கின்றது என்பதோடு, தமிழ்த் தலைமைகளும் மானசீகமாக திருப்திப்படுகின்றனர் என்பதையும் இங்கு கூறத்தான் வேண்டும்.

ஏறத்தாழ முக்கால் நூற்றாண்டு கால முதுமை வாய்ந்த இந்த இனப்பிரச்சினையின் தோற்றம், வளர்ச்சி மாற்றங்கள் தற்போதைய நிலை என்ற வரலாற்றின் முக்கிய அம்சங்களைத் தொட்டுப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

இனப்பிரச்சினைக்கு நீண்ட கால வரலாறுண்டு. முடிமன்னர் காலத்திலேயே ஆரியர் - திராவிடருக்கிடையே இன முரண்பாடுகள் நிலவியதாக வரலாறுகள் கூறுகின்றன. இக்கட்டுரையானது சேர்.பொன் இராமநாதன் காலத்தை எல்லையாகக் கொண்டே பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை இங்கு கூறி வைப்பது அவசியமானதென எண்ணுகிறேன்.

புவியியல் அரசியலில் உலக வரைபடத்தில் இலங்கை ஒரு கேந்திர நிலையச் சூழலில் அமைந்துள்ளமையே சர்வதேச அரசியல் பரப்பில் முக்கியத்துவம் பெறுவதற்குக் காரணமாகும். இலங்கை மிக நீண்டகாலமாக போத்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் போன்ற ஏகாதிபத்தியவாதிகளால் மிக மோசமாகச் சுரண்டப்பட்டுள்ளது. இதற்கூடாக இலங்கை தனக்கென்று ஒரு அரசியல் யாப்பைத் தோற்றுவிக்கவோ, பேணவோ முடியாததொரு சுய இருப்பற்ற ஒரு நிலையில் இருந்திருக்கிறதென்பதைப் புரிந்து கொள்ள முடியும். ஏகாதிபத்திய நாடுகளின் வரிசையில் இறுதியாக பிரித்தானியர் இலங்கையில் தரித்திருந்திருக்கின்றனர். இவர்களது காலத்திலேயே இந்தியத் தமிழ்மக்களை இலங்கைக்குக் கொண்டு வந்துள்ளனர். 1828 இல் இலங்கையில் கோப்பிச் செய்கையை மேற்கொள்வதற்காக 13 இந்தியக் குடும்பத்தினரை பிரித்தானியர் இலங்கைக்கு கொண்டுவந்ததாக வரலாற்றுப் பதிவுகள் தெரிவிக்கின்றன.

போத்துக்கீசரும், ஒல்லாந்தரும் இலங்கையில் இருந்தபோது சிங்

களப் பிரதேசங்களையும், தமிழ்ப்பிர தேசங்களையும் வேறுவேறாகவே நிர்வகித்தனர். பிரித்தானியரும் ஆரம்பத்தில் வேறு வேறாகவே நிர் வகித்தவர்கள், பின்னர் தங்களின் நிர்வாக இலகுக்காக சிங்கள, தமிழ்ப் பிரதேசங்களை இணைத்துக் கொண் டனர். அதுமட்டுமல்ல, தங்களின் இருப்பைப் பலப்படுத்திக் கொள்வ தற்காக பெரும்பான்மையினரான சிங்கள மக்களை அரவணைத்து அவர்களுக்கு தங்களின் அரசியல் நிர்வாகத்தில் பதவிகளும் வழங்கி னர். இங்குதான் இன முரண்பாடுகள் மூட்டம் கொள்ள ஆரம்பித்தன.

1921 இல் 'மானிங் அரசியல் சீர் திருத்தம்' என்ற அரசியல் அமைப்பு இலங்கையில் பிரித்தானியரால் கொண்டுவரப்பட்டது. இச்சீர்திருத் தக் கூற்றுகளில், 'தேசிய கட்டமைப்பி லுள்ள முக்கிய சபைகளில்' சிறுபா ன்மை இனங்களின் பிரதிநிதித்துவ உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தன.

'மானிங் அரசியல் சீர்திருத்தம்' வரும்வரை இலங்கையில் வாழ்ந்த சகல இனங்களும் 'இலங்கையர்' என்று தங்களைப் பொதுநிலையிலும், கலாசாரப்பண்பாட்டுத்தளங்களிலும், அரசியல் தளங்களிலுமே தங்களைத் 'தமிழர்களாக' வெளிப்படுத்திக் கொண்ட சூழலே காணப்பட்டது. இலங்கைத் தேசிய காங்கிரஸ் என்ற பொது அமைப்பே காணப்பட்டது. அதில் சகலரும் அங்கத்துவம் பெற்றி ருந்தனர். 'மானிங் அரசியல் சீர்திரு த்தம்' சிறுபான்மை மக்களின் பிரதி நிதித்துவ உரிமையை மறுத்ததால் சேர்.பொன் இராமநாதன் இலங்கைத் தேசிய காங்கிரஸிலிருந்து விலகி 1921 இல் 'தமிழர் மகாஜன சபை' என்றொரு அமைப்பை உருவாக்கி னார். இங்கு தான் இனங்களுக்கிடை யிலான பிளவு நிழலாக வரையப்பட் டது.

இந்தியாவில் பிரித்தானியருக்கு எதிரான போராட்டங்கள் நடந்து கொண்டிருந்தன. இலங்கையிலும் தமக்கெதிரான போராட்டங்கள் ஆர ம்பமாவதைத் தடுக்கும் நோக்கத் தோடு இராஜதந்திர ரீதியாக இனங்க ளைப் பிரித்து, அவர்களுக்கிடையே முரண்பாடுகளை பிரித்தானியர் வள ர்த்தனர். பிரித்தானியரால் அறிமுகப் படுத்தப்பட்ட பிரித்தாளும் தந்திரத் தையும் அரசியலை மதத்திற்குள் புதைத்து பரப்புகின்ற தந்திரோபா யங்களையுமே இன்று இலங்கை அர சும் கடைப்பிடித்து வெற்றிகாண் கிறது.

1921இல் ஏற்பட்ட பிளவின் தொடர்ச்சியாக 1944 இல் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் அரசில் தமிழர்களுக்கு ஐம்பதுக்கு ஐம்பது உரிமை கோரி 'அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்' கட்சியை உரு வாக்கினார்.

1947 இல் இந்தியாவும், 1948 இல் இலங்கையும் சுதந்திரமடைந்தன. இந்தியாவில் நடந்த போராட்டங்கள் காரணமாக இந்தியாவைவிட்டு வெளியேற முடிவு செய்த பிரித்தா னிய அரசு, இலங்கையை விட்டு வெளியேறவும் முடிவு செய்தது. இல ங்கையில் பிரித்தானியருக்கெதிரான எந்தப் போராட்டங்களும் நிகழ வில்லை.

பிரித்தானியர் இலங்கையை விட்டு வெளியேறும்போது நாட்டின் முக் கிய பதவிப் பொறுப்புகளை தங்க ளுக்குச் சாதகமான சிங்கள இனத்த வர்களிடமே வழங்கிச் சென்றனர். இலங்கை நிர்வாகத்தை ஏற்றுக் கொண்ட சிங்களப் பிரமுகர்கள் முத லாவது சுதந்திரதினத்தைக் கொண்டா டினர். இக்கொண்டாட்டத்தில் சிங் களக்கொடி ஏற்றப்பட்டது. இக்கொடி யின் சின்னத்தை அவதானித்த ஜி.ஜி. பொன்னம்பலம் ''சிங்கள மக்களை மட்டும் முதன்மைப்படுத்தும் கொடி'' என்ற முரண்பாட்டில் கொடியை நிரா கரித்தார். ஆனால், எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தனது வாகனத்தில் சங்கிலியனின் நந்திக் கொடியை ஏற் றினார்.

1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்து, 1949 இல் மலையக மக்க ளின் பிரஜாவுரிமைச்சட்டத்திற்கு ஜி.ஜி.பொன்னம்பலம் ஆதரவாக வாக்களிக்க, எஸ்.ஜே.வி. செல்வநா யகம் ஜி.ஜி.பொன்னம்பலத்தோடு முரண்பட்டுக்கொண்டு அகில இலங் கைத் தமிழரசுக் கட்சியை ஸ்தாபித் தார். 1921 இல் சேர். பொன் இராம நாதனால் 'மகாஜனசபா' என்ற அமைப்பும் தமிழர்களின் அரசியல் உரிமைகளை மையமாகவே வைத்து ஆரம்பிக்கப்பட்டது. 1944இல் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களால் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அமைப்பும் தமிழர்களின் அரசியல் உரிமைகளைக் கருதியே ஸ்தாபிக்கப் பட்டது. 1949இல் ஜி.ஜி. பொன்னம் பலம் தோட்டத்தொழிலாளர்களுக் குத் துரோகம் செய்துவிட்டாரென எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தினால் குற்றம் சாட்டப்பட்டு அகில இலங் கைத் தமிழரசுக் கட்சி என்ற அமைப் பும் தமிழர்களின் அரசியல் உரிமைக ளைக் கருதியே ஆரம்பிக்கப்பட்டது. இத்தொடரில் 1976 இல் எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஜி.ஜி.பொன்னம் பலம், தொண்டமான் ஆகிய மும் மூர்த்திகளும் இணைந்து வட்டுக் கோட்டை தீர்மானம் எடுத்ததும் தமி ழர்களின் அரசியல் இருப்புகளை முன்னிலைப்படுத்தியதாகவே அமைந்திருந்தது.

1957 இல் பண்டா - செல்வா ஒப் பந்தமும், 1965 இல் டட்லி -செல்வா ஒப்பந்தமும், ஆயுதக்குழுக்களின் சார்பில் 1985 இல் நடைபெற்ற, திம்பு மகாநாடும், 1994- 1995 இல்

**போராட்டத்தில் வெற்றி பெறுகின்ற குழுமத்தினால் தான் பேரம் பேச முடியும். போராட்டத்தில் தோற்றுப் போன தமிழ்க் குழுமத்தால் இன்றைய நிலையில் பேரம்பேச முடியாது. இந்தப் பின்புலத்திலேயே தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை எப்படிப் பெற முடியும் என்ற தெரிவுகளை ஆராய வேண்டி இருக்கிறது**

சந்திரிகாவுடனான பேச்சுவார்த்தைக ளும், 2002 இல் ஒஸ்லோ பிரகடனம், 2003 இல் டோக்கியோப் பிரகடனம் போன்ற சகல நடவடிக்கைகளும் தமிழர்களின் அரசியல் உரிமைகளை மையப்படுத்தியவைகளாகவே அமைந்தன.

1921 தொடக்கம் இன்றுவரை அகிம்சைப் போராட்டக் குழுவின ராலும், ஆயுதக் குழுவினராலும், அர சினாலும், சர்வதேச அமைப்பு களாலும் எடுக்கப்பட்ட தமிழர்களின் அரசியல் இருப்புகள் தொடர்பான 92 வருட கால முயற்சிகளின் பய னாக நமக்கு முன்னால் இப்போது இருப்பது 1987 இல் இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தில் முன்மொழி யப்பட்ட மாகாண சபை அதிகாரங் கள் மட்டுந்தான் என்பதையும், அந்த மாகாண சபை அதிகாரங்களும் இன் னமும் இழுபறி நிலையிலேயே உள்ளது என்பதையும் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

கடந்த 92 வருட காலமாக தமிழர்க ளின் அரசியல் உரிமைகள் தொடர் பில் எடுக்கப்பட்ட முயற்சிகளிலி ருந்து நாம் இரண்டு அனுபவங்களைக் கற்றுக் கொள்ளவேண்டும். முதலா வது ஒன்றன்பின் ஒன்றாகப் பதவிக்கு வந்த பேரினவாத அரசின் பலம், இரண்டாவது மாறுபட்ட அமைப்புக ளின் வடிவத்தில் தமிழர்களை வழி நடத்திய அகிம்சைவாதத் தலைமைக ளினது அரசியலும், ஒரே தலை மையில் தமிழ் மக்களை வழிநடத்திய ஆயுதக்குழுவினது அரசியல் பலவீனங்களுமாகும்.

பேரின மக்களை ஒரே கொள்கை யுள்ள இரு தலைமைகள் வழிநடத்தி யுள்ளன. தமிழ் மக்களை நேரடி எதிர் மறையான இரு தமிழ் அமைப்புகள் வழிநடத்தியுள்ளன.

பேரினவாத அரசியல் தலைமைக ளின் பலங்களாக, அவர்களின் வணிக முறையில் அமைந்த தேர்தல் வியூகங்களும் பௌத்தத்தை முன் னிலைப்படுத்துகின்ற அவர்களின் அரசியல் சாணக்கியங்களும், சர்வ தேச நாடுகளின் தங்களுக்குச் சாதக மான காய் நகர்த்தல்களை நாடிபிடித் துணர்ந்து அவைகளைத் தங்களின் நலத்திற்கு ஆதரவாக மாற்றிக் கொள் கின்ற மதிநுட்பங்களுமே காரணங் களாகியுள்ளன. அத்தோடு தமிழ்த் தலைமைகளின் பலவீனங்களும், எதிர்க்கட்சிகளின் பலவீனங்களும் ஆளும் கட்சியின் பலத்திற்கு வழி வகுத்துள்ளன.

இதேபோன்று தமிழ்த்தலைமைகள் தங்களுக்குள் ஐக்கியமின்மையாலும் கொள்கை வேறுபாடுகளாலும் ஏற் பட்ட தேர்தல்- தலைமைத்துவ போட் டிகளும், பிரதேசவாதங்களும், நடை முறைச் சாத்தியமற்ற கொள்கைகளில் நங்கூரமிட்டிருப்பதும் அரசியல் யதார்த்தங்களை சரிவரப்புரிந்து கொள்ளாமையுமே அவர்களின் பலவீனங்களுக்கு காரணங்களாக அமைகின்றன.

**அமெரிக்காவின் அரசியல் நடவடிக்கைகளுக்கு இலங்கையால் ஏதாவது பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படுமாயின் இலங்கையை பழிவாங்குவதற்காக தமிழர்களின் அரசியல் உரிமைகளில் வாஷிங்டன் கை வைக்கக்கூடும். அப்படியான நிலை ஏற்படுமா னால் தமிழர்களோடு இலங்கையும் மிகப்பெரிய பொறிக்குள் சிக்கிக்கொள்வதாகவே அமையும்**

ஒரு போராட்டத்தில் வெற்றிபெறு கின்ற குழுமத்தில்தான் பேரம் பேச முடியும். போராட்டத்தில் தோற்றுப் போன தமிழ்க் குழுமத்தால் பேரம் பேச முடியாது. இந்நிலையில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை எப்படிப்பெற முடியும் என்ற தெரிவு களை வரிசைப்படுத்திப் பார்ப்பது பொருத்தமானதாக அமையும்.

1.இலங்கை அரசு ஜனநாயக தத்து வத்தை ஏற்றுக்கொண்டு தமிழர்க ளின் அரசியல் உரிமைகளைத் தாமாக வழங்க முன்வரவேண்டும்.

2.தமிழர்கள் தாங்களே போராடித் தங்கள் அரசியல் உரிமைகளைப் பெற வேண்டும்.

3.இந்தியாவோ, அல்லது வேறெந்த ஒரு நாடோ இப்பிரச்சினையில் தலையிட்டு தமிழர்களுக்குரிய தீர் வைப் பெறுத்தரவேண்டும்.

இறுதியாக நடந்த போராட்டத்தால் உயிர்களை, சொத்துகளை, இருப்பு களை இழந்து உளவியல் ரீதியாக வும், அரசியல் ரீதியாகவும் பலவீனப் பட்டுப்போன தமிழ் மக்களுக்கு மேற்கூறப்பட்ட தீர்வுக்கான வழிக ளைவிட வேறெந்த வழிகளும் இல்லை என்பதில் சந்தேகமில்லை.

முதலாவது வழிக்கான சாத்தியங் கள் ஏற்படுவதற்கு இலங்கை ஜனநா யகத்தை நோக்கி நகரவேண்டிய அடிப்படை அரசியல் முன்னேற்றம் அவசியமானது. அதற்கான சாத்தியக் கூறுகள் இலங்கை அரசியல் நடவ டிக்கைகளில் இருப்பதாகத் தெரிய வில்லை.

இரண்டாவதாக அமைந்துள்ள தமி ழரின் போராட்ட மூலமான வெற்றி யைப் பெறுவதற்கு நடந்துமுடிந்த யுத்தத்தினாலும், யுத்தத்திற்கு முன்ன ரும் பின்னருமான இராணுவ நடவ டிக்கைகளாலும் நேரடிப்பாதிப்புக் குள்ளான இரண்டு தலைமுறை மக்களின் மறைவுக்குப் பின்னரான மூன்றாவது தலைமுறையினரின் காலத்திலேயே இவ் எழுச்சியை எதிர் பார்க்கலாம்.

மூன்றாவதாகக் கூறப்பட்டுள்ள சர் வதேச நாடுகளின் முயற்சியால் நிறைவேறுவதென்பது பல்வேறு அர சியல் கோணங்களை முன்னிலைப் படுத்திய பிரச்சினையாகும்.

சர்வதேச நாடுகளின் வரிசையில் இந்தியா முன்னிலை வகிக்கின்றது. அயல் நாடென்ற வகையில் முக்கியத் துவமும் பெறுகின்றது.

1983-1987 காலப்பகுதியில் ஈழ விடுதலைப் போராளிகளுக்கு இந்தி யாவே தளம் அமைத்துக் கொடுத்தி ருக்கின்றது. 1987 இல் வடமராட்சிப் போரோடு இந்தியா, இலங்கைத் தமி

ழர்களின் அதிகாரப்பகிர்வுக்கான பொறுப்பை எடுத்துக் கொண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை செய்து கொண்டது. 1990 இல் இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்திற்குப் புலிகளும் ஆதரவாக இருந்தமையும், ராஜீவ் காந்தியின் மரணத்திற்கும் புலிகளே காரணமாயிருந்தனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலும் இந்தியா, இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளிலிருந்து ஒதுங்கிக் கொண்டது. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா மௌனம் காக்கத் தீர்மானித்த அரசியல் போக்கினால், இலங்கைத் தீவில் இந்தியாவுக்கிருந்த அரசியல் உரிமைகளிலிருந்தும் இலங்கையைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கக்கூடிய அரசியல் அதிகாரத்திலிருந்தும் இந்தியா ஒதுங்க நேரிடுகின்றது. இதனால் இலங்கைத் தமிழர்களின் தீர்வுப் பிரச்சினை சர்வதேச வல்லரசான அமெரிக்க அரசியலில் மையங்கொள்ள வழிசமைக்கின்றது. இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை அமெரிக்காவில் மையங்கொண்டதால், அப்பிரச்சினை இன்று சர்வதேச பிரச்சினையாகப் பர்ணமித்துள்ளது.


இன்று தமிழர்களால் அவதானிக்கப்பட வேண்டியது என்னவெனில், இலங்கை அரசானது இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தினூடாக ஏற்படுத்தப்பட்ட வடக்கு - கிழக்கு இணைப்பை இலங்கை சட்ட மூலம் உடைத்ததோடு, இந்தியா - இலங்கை ஒப்பந்தம் கூறுகின்ற மாகாண சபையையும் வடக்குக் கிழக்கில் உதாசீனப்படுத்தியதோடு, இந்தியாவை அலட்சியப்படுத்தும் துணிவை இலங்கை அரசு வெளிப்படுத்திக் கொண்டுள்ளது.

அடுத்ததாக அமெரிக்காவில் மையங்கொண்டுள்ள தமிழர்களின் இனப்பிரச்சினையை, வல்லாதிக்கப் போட்டிகளுக்குப் பிரயோகிக்கும் ஒரு அரசியல் அஸ்திரமாகவே அமெரிக்கா பாவிக்க ஆரம்பித்துள்ளது. ஏதாவதொரு வல்லரசோடு, முக்கியமாக சீனாவோடு இலங்கை சாயும் போது தமிழர்கள் மீது நடத்தப்படுகின்ற மனித உரிமை மீறல்களையும், இறுதி யுத்தத்தில் ஏற்பட்ட யுத்த மீறல்களையும் சுட்டிக்காட்டி இலங்கையை எச்சரிக்கை செய்கின்றது. இவ் எச்சரிக்கைகளின் உள்ளீடுகளை இலங்கையும் நன்கு புரிந்தே வைத்திருக்கின்றது என்பதையும் இங்கு குறிப்பிடுவது அவசியமானதாகும்.

இலங்கையால் அமெரிக்காவின் அரசியல் நடவடிக்கைகளுக்கு பெருமளவில் ஏதாவது பாதிப்புகள் ஏற்படுமாயின் இலங்கையைப் பழிவாங்குவதற்காக இலங்கைத் தமிழர்களின் அரசியல் உரிமைகளில் அமெரிக்கா கை வைக்கக்கூடும். அப்படியொன்று ஏற்படுமானால் தமிழர்களோடு இலங்கையும் மிகப்பெரும் பொறிக்குள் சிக்கிக் கொள்வதாகவே அமையும்.

எனவே இப்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழர் தீர்வுக்கான மூன்று தெரிவுகளில் எதுவுமே நடைமுறைச் சாத்தியமற்றவைகளாகவே தென்படுகின்றன.

அரசியல் ஓட்டம் என்பது ஒரு நேர் கோட்டில் என்றுமே ஓடுவதில்லை. எனவே எதிர்பாராத அரசியல் மாற்றங்களும் ஏற்படலாம். அப்படி ஏற்பட்டதற்கான வரலாறுகளும் உண்டு. ■




அரசியலமைப்புக்கான

13 ஆவது திருத்தத்தைத் திருத்துதல்

# இன்றைய ஆட்சியின் நெறிகெட்டதன்மை

உடன்படிக்கையொன்றை செய்து கொள்ளும் நாடுகள் உலக ஒழுங்கில் தங்களது சுயாதிபத்திய அந்தஸ்தை பேணும் முகமாக அந்த உடன் படிக்கையை ஏற்றுச் செயற்படுவதற்கு சமஅளவிற்கு கடப்பாடு கொண் டவை. எனவே குறிப்பிட்ட ஒரு காலகட்டத்திற்கு அதிகாரத்திற்கு வரு கின்ற அரசியல்வாதிகளின் விருப்பு வெறுப்புகளுக்கு இசைவாக அத்த கைய உடன்படிக்கைகள் ஒருதலைப்பட்சமாக மீறப்படக்கூடியவையல்ல.



பேராசிரியர்
சுமணசிறி லியனகே

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உடன்படிக்கையொன்றின் அங்கமாக 1987 ஆம் ஆண்டில் இலங்கை அரசியலமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தத்தை மாற்றியமைப்பதில் தங்களுக்கிருக்கும் உறுதிப்பாட்டை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது நெருங்கிய சகாக்களும் வெளிக்காட்டியிருக்கிறார்கள். அதன் தாக்கங்களும் எதிர்விளைவுகளும் எவ்வாறாக இருந்தாலும், இந்த முயற்சி தற்போதைய அரசாங்கத்தின் அப்பட்டமான நெறிகெட்ட தன்மையை நிரூபித்திருக்கிறது. ஆனால், ஜனாதிபதியினதும் சகாக்களினதும் நெறிகெட்ட உறுதிப்பாட்டை அரசாங்கத்திற்குள் எட்டு அமைச்சர்கள் தட்டிக்கேட்டுச் சவாலுக்குள்ளாக்கியிருக்கிறார்கள் என்பது ஒரு வித நம்பிக்கையைத் தருகிறது. 13ஆவது திருத்தத்தைத் தளர்வுறச் செய்வதற்கான எந்தவொரு திருத்தத்துக்குமான தங்களின் எதிர்ப்பை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், லங்கா சமசமாஜக் கட்சி, ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ஜன நாயக இடதுசாரி முன்னணி போன்ற அரசாங்கக் கூட்டணியின் சில பங்காளிக் கட்சிகள் ஏற்கனவே வெளிக்காட்டிக் குரல் கொடுத்திருக்கின்றன.

காலஞ்சென்ற விஜய குமாரணதுங்கவுடன் அரசியலில் நெருங்கிச் செயற்பட்டவர்கள் 13 ஆவது திருத்தத்துக்கு எதிரான முயற்சியை உறுதியாக எதிர்க்கப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். அமைச்சர்கள் ராஜித சேனாரத்ன, றெஜினோல்ட் குரே மற்றும் டிலான் பெரேரா ஆகியோரின் துணிச்சலை நான் பாராட்டுகிறேன். இவர்களின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாக அமைச்சர்கள் பவித்ரா வன்னியாராச்சி, எஸ்.பி.திசாநாயக்க உட்பட வேறுபலரும் இணைந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். 1987 ஆம் ஆண்டுக்குப் பிறகு பதவியில் இருந்த சகல அரசாங்கங்களினாலும் நடைமுறையில் ஏற்கனவே தளர்வுறச் செய்யப்பட்ட 13 ஆவது திருத்தத்தை அரசியலமைப்பு ரீதியாக மேலும் பலவீனப்படுத்துவது பாரிய அரசியல் தவறாக அமையும். இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் 1958ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கை கிழித்தெறியப்பட்ட போது ஏற்பட்டிருக்கக்கூடிய விளைவுகளையும் விட ஆபத்தானவையாக இருக்கும் என்பதிற் சந்தேகமில்லை. 13ஆவது திருத்தத்தை தளர்வுறச் செய்வதற்கான தீர்மானம் நடைமுறைப்படுத்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



தப்படுமேயானால், அது நான்கு காரணங்களுக்காக, அண்மைக்கால இலங்கை அரசியல் வரலாற்றில் செய்யப்படுகின்ற மிகவும் மோசமான நெறிகெட்ட ஒரு நடவடிக்கையாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயம்.

முதலாவதாக, 26 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் அங்கமாகவே அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. தமிழ்த் தீவிரவாத இயக்கங்கள் உட்பட இலங்கைத் தமிழ் அரசியல் கட்சிகளுடனான பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள், தொடர்ச்சியான ஆலோசனை கலப்புகளின் பின்னரே இரு நாடுகளும் இந்த உடன்படிக்கைக்கு வந்தன. பல்வேறு தரப்புகளின் முரண்பாடான நலன்களையெல்லாம் கவனத்திலெடுத்த நீண்ட ஆலோசனை கலப்புகள்- பேச்சுவார்த்தைச் செயன்முறைகளின் விளைவாக விட்டுக்கொடுப்பின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டதே 13ஆவது திருத்தமாகும். இலங்கை சுயாதிபத்தியம் கொண்ட ஒரு நாடு. அரசியலமைப்பை மாற்றுவதற்கான சகல உரிமைகளுமே அதற்கு இருக்கின்றன என்ற வாதம் பலவீனமானதாகும். ஏனென்றால், இரண்டு அல்லது அதற்கும் கூடுதலான நாடுகள் உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ளும் போது, அந்த நாடுகள் சகலதுமே உலக ஒழுங்கில் தங்களது சுயாதிபத்திய அந்தஸ்தைப் பேணுமுகமாக அந்த உடன்படிக்கையை ஏற்றுச் செயற்படுவதற்கு சம அளவிற்கு கடப்பாடுகொண்டவை. எனவே, ஒரு குறிப்பிட்ட கால கட்டத்துக்கு அதிகாரத்துக்கு வருகிற அரசியல்வாதிகளின் விருப்பு வெறுப்புகளுக்கு இசைவாக அத்தகைய உடன்படிக்கைகள் ஒருதலைப்பட்சமாக மீறக்கூடியவையல்ல என்பதைக் கவனத்தில் கொள்வது மிகவும் அவசியமானதாகும். இதனால், இந்த உடன்படிக்கையில் சம்பந்தப்பட்ட ஏனைய தரப்புகளுடன் (இந்தியாவும் தமிழ் அரசியல் கட்சிகளும்) கலந்தாலோசிக்காமல் அதை இல்லாமற் செய்வதென்பது முற்றுமுழுதாக நெறிகெட்ட ஒரு காரியமாகும்.

இரண்டாவதாக, 13ஆவது திருத்தத்தை மேம்படுத்துவதற்கு (13+ என்று சொல்லிக்கொள்ளப்படுவது) நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது அரசாங்கமும் நாட்டு மக்களுக்கும் நெருங்கிய அயல்நாடான இந்தியாவுக்கும் உறுதியளித்திருந்தனர். 13+ என்று கூறப்படுவதை அரசாங்கம் எவ்வாறு அர்த்தப்படுத்திக் கொள்கிறது என்பது தெளியவில்லை என்பது உண்மையே. ஆனால், 13+ என்பது அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் பொறுத்தவரை, 13 ஆவது திருத்தம் + இரண்டாவது சபையே என்று அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஒரு தடவை கூறியிருந்தார். இந்த வகையாக 13+ ஐ வரைவிலக்கணப்படுத்துவது இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்குப் போதுமானதா என்று எவரும் கேட்கலாம். அந்தச் சிக்கலான விவகாரம் குறித்து இங்கு பேசுவது எனது நோக்கமல்ல.

13ஆவது திருத்தத்தைத் தளர்வுறச் செய்வதற்கான உத்தேசம் எதுவும் இருப்பதாக மகிந்த சிந்தனை ஆவணங்களில் எதுவுமே நாட்டுமக்களுக்கு ஒருபோதும் அறியத் தரவில்லை. இன்னும் சுவாரஸ்யமானது என்னவெனில் அரசியலமைப்புக்கான 17 ஆவது திருத்தத்தை ரத்துச் செய்வதற்கு ஒரு திருத்தம் கொண்டுவரப்படுமென்று மகிந்த சிந்தனையின் இரு ஆவணங்களும் மக்களுக்குக் கூறியிருக்கவில்லை.

எனவே, அரசாங்கம் அதன் அயல் நாட்டுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையை மீறுவதற்கு முயற்சிக்கிறது என்பது மாத்திரமல்ல, சொந்த மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளையும் மீறுகிறது. அத்தகைய அரசாங்கமொன்றுக்கு தொடர்ந்து அதிகாரத்தில் இருப்பதற்கான தார்மீகப்பலம் அல்லது தார்மீக அடிப்படை ஏதாவது இருக்கிறதா?

13 ஆவது திருத்தத்தைத் தளர்வுறச் செய்வதற்கான முயற்சிகளுக்கு ஆதரவான கூட்டமொன்று பற்றிய சுவரொட்டியொன்றை கொழும்பு விஜேராம சந்தியில் சில தினங்களுக்கு முன்னர் பார்த்தேன். 'படை வீரர்களினால் (ரணவிருவன்) பெறப்பட்ட வெற்றிக்குத் துரோகமிழைக்கப்படுவதற்கு ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது' என்ற வாசகம் அதில் காணப்பட்டது.

கடந்த காலத்தில் பல இரா ணுவ அதிகாரிகள் வெளிப்படுத்தியிருக்கக்கூடிய கருத்துகளை அல்லது விடுத்திருக்கக்கூடிய அறிக்கைகளை நினைவு மீட்டிப் பார்ப்போமேயானால், அவர்கள் சகலருமே விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்க இராணுவத்தினால் முடியுமென்றும் ஆனால், சமாதானத்தை அடைவதற்கும் பேணுவதற்கும் அவசியமான அரசியல் நடவடிக்கைகளை அரசியல்வாதிகள் முன்னெடுத்தால் மாத்திரமே அந்த இராணுவ வெற்றியைப் பாதுகாக்கக்கூடியதாக இருக்கும் என்றும் அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தார்கள்.

மேஜர் டென்சில் கொப்பேகடுவ போன்ற முக்கியமான இராணுவத் தலைவர்களினால் அளிக்கப்பட்டிருக்கக்கூடிய பேட்டிகளை மீளவும் வாசித்தால் நான் சொல்வது தெளிவாகப் புரியும். இராணுவ அகாடமியொன்றுக்கு சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக ஒரு தடவை நான் சென்ற போது பல கனிஷ்டமட்ட இராணுவ அதிகாரிகள் எனது இந்த நிலைப்பாட்டுடன் நூற்றுக்கு நூறுவீதம் இணங்கிக் கொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது. இராணுவ மோதல் பாதுகாப்புப் படைகளினால் அல்லது குறைந்தபட்சம் விழிப்புணர்வுடைய இராணுவத்தலைவர்களினால், இந்த வகையாக நியாயப்படுத்தப்பட்டதென்றால், இராணுவ வெற்றிக்குப் பிறகு தேசிய இனப்பிரச்சினையின் அரசியல் பரிமாணத்தைக் கையாள வேண்டியது அரசியல்வாதிகளின்

(37ஆம் பக்கம் பார்க்க...)



# இலங்கையி
# இழந்துவிட

டில்லியிலிருந்து
எம்.பி.வித்தியாதரன்

## முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் எம்.கே. ராஸ்கோத்ராவுடனான நேர்காணல்

**சமகாலம்; ஜவஹர்லால் நேரு, இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி என்று இந்தியாவின் பல பிரதமர்களு டன் பணியாற்றிய அரிய அனுபவத்தை நீங்கள் கொண்டிருக்கிறீர்கள். இந்தியா வின் அன்றைய வெளியுறவுக் கொள் கையையும் இன்றைய வெளியுறவுக் கொள்கையையும் நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?**

**ராஸ்கோத்ரா;** பண்டித் ஜவஹர் லால் நேரு காலத்துக்குப்பிறகு வெளியுறவுக் கொள்கையில் அங்கு மிங்குமாக சில மாறுபடுதல்கள் உண்டு. அமெரிக்கா அல்லது சீனா அல்லது பாகிஸ்தான் போன்ற நாடுக

# ல் இந்தியா செல்வாக்கை
# இல்லை

## 13வது திருத்தம் தொடர்பிலான தடுமாற்றம் இலங்கைக்கு நல்லதல்ல

சமகாலம் சஞ்சிகையின் முதலாவது ஆண்டு மலருக்காக இந்தியாவின் சிறந்த வெளியுறவுச் செயலாளர்களில் ஒருவரும் இலங்கையின் நல்லதொரு நண்பருமான மகாராஜா கிருஷ்ணா ராஸ்கோத்ராவை பேட்டி காணத் தீர்மானித்தோம். பண்டித் ஜவஹர்லால் நேருவின் சரித்திர முக்கியத்துவ நாட்களில் இருந்து இந்தியவெளியுறவு அமைச்சில் பணியாற்றிய ராஸ்கோத்ரா முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் நிறைந்த இந்திராகாந்தியின் கால கட்டத்திலும் பின்னர் ராஜீவ்காந்தியின் பதவிக்காலத்தின் ஆரம்ப நாட்களிலும் கடமை புரிந்தவர். உபகண்டப் பிரிவினைக்குப் பிறகு லாகூரில் இருந்து இந்தியாவுக்கு வந்த ஒருவர் என்ற வகையில், ராஸ்கோத்ரா இந்தியாவின் அயல் நாடுகள் சகலதுடனும் குறிப்பாக, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இலங்கையுடன் நல்லுறவுகளைப் பேணுவதில் மிகுந்த அக்கறை கொண்டவராக இருக்கிறார்.

வெளியுறவு அமைச்சில் பணியாற்றிய காலகட்டத்தில் கொண்டிருந்ததைப் போன்ற நுண்மதித்திறத்துடன் தற்போது 89 வயதிலும் இருக்கின்ற ராஸ்கோத்ரா இந்த விரிவான பேட்டியிலே, இந்திய சுதந்திரத்துக்குப் பின் னரான ஆரம்ப நாட்களில் இருந்து, பிறகு இந்திராகாந்தியின் கீழ் வெளியுறவுச் செயலாளராக பதவிவகித்த நாட்கள் வரையான இந்திய வெளியுறவுக் கொள்கை பற்றியும் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திராகாந்தியின் நிலைப்பாடு, இலங்கை தொடர்பான அவரின் கொள்கை, விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் அணுகுமுறைகள் மற்றும் இந்திய வெளியுறவுக் கொள்கை தொடர்பான தனது வெளியுறவுக் கொள்கை தொடர்பான தனது தற்போதைய கருத்துகள் ஆகியவை பற்றியும் மனந்திறந்து பேசியிருக்கிறார்.

இலங்கையின் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் தொடர்பில் அந்த நாட்களில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் சம்பந்தப்பட்டவரான ராஸ்கோத்ரா, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த முக்கிய விவகாரத்தில் தனது சொந்த உறுதிமொழியில் இருந்து தடுமாறுவது நாட்டுக்கு நல்லதாக இருக்கப் போவதில்லை என்று கருதுகிறார். தமிழர்களுக்கு உரிமைகள் கொடுக்கப்படாவிட்டால், தொடர்ந்தும் அவர்கள் பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்பட்டால் அதனால் மீண்டும் இலங்கையில் கிளர்ச்சி மூளும் என்று அச்சம் தெரிவிக்கும் ராஸ்கோத்ரா, விடுதலைப் புலிகள் இப்போது இராணுவ ரீதியாக ஒழிக்கப்பட்டுவிட்டாலும், புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் மீண்டும் அத்தகைய போராட்ட இயக்கத்தை ஆரம்பிக்கக் கூடிய வல்லமையுடன் இருக்கிறது என்றும் குறிப்பிட்டார். ஆசியாவின் நூற்றாண்டைப் பற்றி எல்லோரும் பேசுகிற இச்சந்தர்ப்பத்தில், அடுத்துவரும் வருடங்களில் சர்வதேச உறவுகள் எவ்வாறு விருத்தி காணும் என்பது குறித்த ராஸ்கோத்ராவின் கருத்துகளைப் பார்ப்போமே.

ளுடனான உறவுகளைப் பொறுத்தவரை அத்தகைய மாறுபடுதல்களை உதாரணத்துக்குக் குறிப்பிடலாம். ஆனால், அவை பெரிய மாறுதல்கள் அல்ல. இந்தியாவின் நலன்களை உறுதிப்படுத்துவதே எந்தவொரு நாட்டுடனுமான எமது உறவுகளுக்கான அடிப்படை உந்துதலாக இருந்து வந்திருக்கிறது. நலன்களைப் பாதுகாப்பதே முக்கியமானது. ஆம், இந்த நலன்கள் யாவை? உண்மையில் பாதுகாப்புக்கே முன்னுரிமை. அடுத்து பொருளாதார நலன்கள்.

பண்டித்ஜியின் காலத்திலும் பிறகு குறிப்பாக இந்திராகாந்தியின் காலத்திலும் இந்தியாவில் பஞ்சநிலை ஏற்பட்டது. உணவுக்குப் பெருந்தட்டுப்பாடு காணப்பட்டது. என்ன செய்வதென்று அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. அமெரிக்காவுடனான எமது உறவுமுறை அவ்வளவு நன்றாக இருக்கவில்லை. ஏனென்றால், அணிசேராக் கொள்கையே இந்தியாவின் கொள்கை என்று பண்டித்ஜி பிரகடனப்படுத்தியிருந்தார். அதாவது அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையேயான போட்டாபோட்டிக்குள் சிக்குப்படாதிருக்கும் நோக்குடனான கொள்கை. அது தொடர்பில் அமெரிக்கர்கள் அவ்வளவு திருப்தியாயிருக்கவில்லை. கோதுமைக்காக இந்தியா அமெரிக்காவை அணுகவேண்டுமா? உண்மையில், அமெரிக்கர்கள் இலவசமாக இந்தியாவுக்கு கோதுமையைத் தர முன்வந்தார்கள். நாம் ஏன் அவர்களிடமிருந்து இலவசமாக எடுக்க வேண்டும். தேவையானால் பணத்தைக் கொடுத்து விலைக்கு வாங்குவோம் என்பதே நேருவின் நிலைப்பாடு. இறுதியில் விநியோகங்களுக்காக ஒரு இணக்கப்பாடு காணப்பட்டது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் காஷ்மீர் நெருக்கடி தொடர்பா

னது அடுத்த பிரச்சினை. பாகிஸ்தானுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்த அமெரிக்கா இஸ்லாமாபாத்துடன் இணக்கப்பாடொன்றுக்கு வருமாறு இந்தியாவுக்கு பெரும் நெருக்குதல்களைக் கொடுத்தது. இந்த நெருக்குதல்களின்போது நேரு ஒருபோதுமே சோவியத் யூனியனை அணுகவில்லை. ஆனால், அவர்கள் பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு உதவ முன்வந்தார்கள். தனது வாழ்நாள் பூராகவும் நேரு அணிசேராக் கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்தார்.




இந்திராகாந்தியுடன் ராஸ்கோத்ரா

பாகிஸ்தான் இராணுவத்தின் உதவியுடன் காஷ்மீருக்குள் ஊடுருவியவர்களை நாம் எதிர்த்துச் சண்டையிட வேண்டியிருந்தது. எமது பாரம்பரிய இராணுவ தளவாட விநியோகஸ்தரான பிரிட்டனிடமிருந்து ஆயுதங்களைப் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டது. இந்தியா மீது நெருக்குதல்களைப் பிரயோகிப்பதற்காக அவர்கள் ஆயுத விநியோகங்களை நிறுத்தி வைத்திருந்தார்கள். அதனால், இந்தியாவின் பாதுகாப்பு நலன்களைக் கருத்தில் கொண்டு நாம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தோம்.

> ‘இலங்கை இனப் பிரச்சினையில் ஒருபோதுமே நேரடியாக தலையிடக்கூடாது என்பதே இந்திராஜியின் உறுதியான கொள்கையாக இருந்தது’

பிறகு 1965ஆம் ஆண்டு பாகிஸ்தானின் தாக்குதல் வந்தது. பெரும் நெருக்குதல்களுடனேயே நாம் அந்தப் போரைச் சந்தித்தோம். ஒரு முட்டுக்கட்டை நிலையில் போர் முடிவுக்கு வந்தது. ஆனால், அது எமக்கு அனுகூலமான முட்டுக்கட்டை. அதனால் நாம் நல்லதொரு நிலையில் இருந்தோம். சோவியத் யூனியன் இந்தக் கட்டத்தில் சினேகபூர்வமாகச் செயற்பட்டு இப்பிரச்சினையில் சம்பந்தப்பட்டது. தங்களது ஆலோசனையும் உதவியும் இந்தியாவுக்கு ஏற்புடையதாக இருக்காது என்பது அமெரிக்காவுக்குத் தெரியும். ஏனென்றால், எமக்கான ஆயுத விநியோகத்தை அவர்கள் நிறுத்தியிருந்தார்கள். அதனால், எமது பாதுகாப்பு மற்றும் இராணுவ நலன்களைப் பாதுகாப்பதற்காக சோவியத் யூனியன் பக்கம் மேலும் சாய்ந்தோம்.

நேருவின் காலத்தில், லால் பகதூர் சாஸ்திரியின் காலத்தில், ஏன் இந்திரா காந்தியின் காலத்திலும்கூட, கொரியப் போர், வியட்நாம் போர் போன்ற ஆசிய மோதல்களில் அமெரிக்கர்களின் அநாவசிய தலையீடு உட்பட பல விவகாரங்களில் நாம் அவர்களை எதிர்த்தோம். எமது நிலைப்பாட்டை நாம் ஒருபோதும் விட்டுக்கொடுக்கவில்லை. ஆனால், கல்வி, கலாசார பரிமாற்ற செயற்பாடுகள் போன்ற ஏனைய துறைகளில் அமெரிக்காவுடன் நாம் கண்ணியமான உறவு முறையொன்றைப் பேணினோம். ட்ரூமனின் காலத்துக்குப் பிறகு ஐசனோவர் 8 வருடங்கள் பதவியில் இருந்தார். அந்தக் கட்டத்தில் அமெரிக்காவுடனான எமது உறவு முறை ஓரளவுக்கு மேம்பட்டது. இந்தியாவின் அணிசேராக் கொள்கை குறித்து சிறப்பான விளக்கப்பாடு ஏற்பட்டதே இதற்குக் காரணம் என்று நான் நினைக்கிறேன். முழுதாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், எதிராகவோ அல்லது குரோதமாகவோ செயற்படாத ஒரு தன்மை காணப்பட்டது. ஐசனோவர்தான் இந்தியாவுக்கு முதன்முதலாக விஜயம் செய்த அமெரிக்க ஜனாதிபதியாவார்.

**சமகாலம்; எனவே, பிரதான கவனம் பாதுகாப்பு நலன்களிலேயே குவிந்திருந்தது என்கிறீர்கள்.......**

**ராஸ்கோத்ரா;** நல்லவர்களோ கெட்டவர்களோ எந்தப் பிரதமரின் கீழும் பாதுகாப்பு விவகாரங்களில் இந்தியா நிலையானஒரு அணுகுமுறையையே கடைப்பிடித்தது. எமக்கு சில கெட்ட பிரதமர்களும் இருந்தார்கள். இந்தியா அதன் பாதுகாப்பை பேணுவதிலேயே கவனத்தைச் செலுத்தியது. நெருக்கடியான சூழ்நிலைகளில் எமக்கு உதவும் நாட்டை நாடிச் செல்வோம். உதாரணத்துக்கு, பாகிஸ்தானுடனான 1971 போரின் போது அமெரிக்கர்கள் எமக்கு விரோதமாக இருந்தார்கள். தங்களது 7 ஆவது கடற்படையை வங்காள விரிகுடாவுக்கு அனுப்பினார்கள். நாம் சோவியத் யூனியனுடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டோம்.

ஏனென்றால் சோவியத் சீன உறவுகள் நன்றாக இருக்கவில்லை. சோவியத் - அமெரிக்க உறவுகளும் நன்றாக இருக்கவில்லை. இதன் காரணத்தினால் அந்தப் போரில் பாகிஸ்தானுக்கு சீனா உதவுவதை அல்லது இந்தியாவுக்கு எதிராக அமெரிக்காவுடன் இணைந்து கொள்வதைத் தடுக்கக் கூடியதாக இருந்தது.

**சமகாலம்; அயல் நாடுகள் மீதான கவனக்குவிப்பு எவ்வளவு முக்கியமானது?**

**ராஸ்கோத்ரா;** உள்நாட்டில் உறுதிப்பாடு ஏற்பட்டதும் வெளியுறவுக் கொள்கை எங்கிருந்து ஆரம்பிக்கிறது? அமெரிக்காவுடனோ, ரஷ்யாவுடனோ அல்ல. அயல் நாடுகளுடனேயே ஆரம்பிக்கிறது. ஏனென்றால், அன்றாடம் அவர்களுடனேயே நாம் விவகாரங்களைக் கையாளுகிறோம். விசேடமாக, நேபாளம், பூட்டானுடன் எமக்கு வடக்கில் திறந்த எல்லை இருக்கிறது. இந்தப் பகுதிகளில் எமது நிருவாகம் மிகவும் வலுவானதாக இல்லை. ஆனால், நேரு மிகவும் விவேகமான மனிதர். மன்மோகன் எல்லை வரை எமது நிருவாகத்தை மெது மெதுவாக விஸ்தரித்தார். மேற்குப் பக்கத்தில் நாம் கவனக்குறைவாக இருந்திருக்கிறோம். அதனால்தான் லடாக் பிராந்தியத்திற்குள் சீனர்கள் பிரவேசித்து நான்கு வருடங்களாக பாதையொன்றை அமைத்தார்கள். எமக்குத் தெரிந்திருக்கவில்லை. பிறகு பெரிய குழப்பநிலை ஏற்பட்டது.

பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து நாம் பெருமளவு பிரச்சினைகளை முதுசமாகப் பெற்றிருக்கிறோம். உப கண்டப் பிரிவினையும் பிரச்சினைகளைத் தோற்றுவித்தது. ஒரு சில நூற்றாண்டுகளாக இந்தியா பஞ்சத்தை அனுபவித்தது. சுதந்திரத்துக்குச் சற்று முன்னதாக வங்காளத்தில் பஞ்சம் மூண்டது. அதை நாம் சமாளித்தோம். 1947இற்குப் பிறகு இந்தியாவில் பஞ்சம் ஏற்படவில்லை. வரட்சி நிலவிய கால கட்டங்கள் இருந்தன. நாம் உணவை இறக்குமதி செய்தோம். பிறகு பசுமைப் புரட்சி வந்தது. எமது பொருளாதாரத்தை, எமது விவசாயத்தை நாம் வலுப்படுத்தியிருக்கிறோம். எமது மக்களுக்குப் போதுமான அளவுக்கு உணவளிக்க நாம் முயற்சித்தோம். இந்தக் கால கட்டத்தில் நிருவாகமும் பலப்படுத்தப்பட்டது. அது அயல் நாடுகளுடனான விவகாரங்களைக் கையாளுவதில் எமக்கு ஒரு நல்லதொரு நிலையை ஏற்படுத்திக் கொடுத்தது. தொலைதூர நாடுகளுடனான விவகாரங்களையும் திறமையாகக் கையாள ஆரம்பித்தோம்.

**சமகாலம்; அயல்நாடுகள் சம்பந்தப்பட்ட இந்தியக் கொள்கை எந்தளவுக்கு வெற்றிகரமானது?**

**ராஸ்கோத்ரா;** எமது அயலவர்கள் சற்று சிக்கலான ஆட்கள். முதல் நாளில் இருந்தே பாகிஸ்தான் விரோதமாக இருந்து வருகிறது. எம்மீது 4 போர்களைப் பாகிஸ்தான் திணித்தது. அவற்றை நாம் சந்தித்தோம். பாகிஸ்தானுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. ஆனால், இந்தியாவுடனான மோதலின் மூலமாகத்தான் முன்னேற முடியாது என்ற பாடத்தை பாகிஸ்தான் படித்திருப்பதாக இன்னமும் நான் நம்பவில்லை. அது ஒரு வங்குரோத்து நிலையில் இருக்கிறது. 5 அல்லது 7 வருடங்களுக்கு ஒரு தடவை பாகிஸ்தான் வங்குரோத்து அடைகிறது. இராணுவத்துக்காக அது பெருமளவில் செலவு செய்கிறது. அந்த இராணுவம் நான்கு தடவைகள் இந்தியாவுடன் போரை ஆரம்பித்து பெரிதும் பாதிக்கப்பட்டது.

நேபாளமும் கூட, கையாளுவதற்கு சிக்கலான ஒரு நாடு. அதன் சனத்தொகையில் அரைவாசி இந்திய வம்சாவளியின் - தெராய் சனத்தொகை. அவர்களுக்கு இந்தியாவுடன் வலுவான உறவுகள் இருக்கின்றன. பல வருடங்களாக அவர்கள் ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்படுகிறார்கள்.

மிகவும் அண்மையில்தான் அவர்கள் வாக்குரிமையைப் பெற்றார்கள். இப்போது ஆட்சிமுறையின் பல பிரிவுகளுக்குள்ளும் அவர்கள் பிரவேசித்திருக்கிறார்கள். நாம் அவர்களின் உள் அரசியல் விவகாரங்களில் தலையிடமாட்டோம். பொருளாதார ரீதியில் நேபாளத்தவர்கள் இந்தியா மீதே முற்றிலும் தங்கியிருக்கிறார்கள். திறந்த எல்லையோர வசதியை அவர்களுக்கு நாம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் வந்து போகிறார்கள். குடியேறுகிறார்கள். அவர்களுக்கு எந்தத் தடையும் இல்லை. ஆனாலும், எப்போதும் அதிருப்தியுடனேயே இருக்கிறார்

> 'இலங்கைக்கு ராஜீவ்காந்தி அனுப்பிய இராணுவத்தின் பணி என்னவாக இருந்தது? தமிழர்களை ஒடுக்குவதுதானே? இது ஒரு விவேகமான கொள்கையோ தீர்மானமோ அல்ல'



மார்கரட் டச்சருடனான சந்திப்பின் போது ராஜீவ் காந்தி சகிதம் ராஸ்கோத்ரா

கள். நாம் அவர்களுக்கு எவ்வளவு கூடுதலாகச் செய்கிறோமோ, அந் தளவுக்கு கூடுதலாக அவர்கள் திருப் தியற்றவர்களாக இருக்கிறார்கள். அதனால், அவர்களுடனான உறவு முறை சிக்கலானது.

**சமகாலம்; நேபாளத்தில் சீனாவின் செல்வாக்கு அதிகரிப்புக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?**

**ராஸ் கோத்ரா;** சீனர்கள் தங்கள் உத வித் தூதரகங்களையும் கலாசார நிலையங்களையும் தெராய் பிராந்தி யத்தில் அமைப்பதற்கு அனுமதிப் பதன் மூலமாக நேபாளிகள் எமக்கு பாதுகாப்பு பிரச்சினையைத் தோற்று விக்கத் தொடங்கியிருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். நாம் மிக வும் அவதானமாக இருக்க வேண் டும். எல்லைகளை மூடவேண்டு மென்று நான் யோசனை கூறவில்லை. ஏனென்றால் அவ்வாறு செய்வது தெராய் மக்களைத் தனிமைப்படுத்தி விடும். ஆனால், நிலைவரத்தை உரிய முறையில் கையாள வேண்டித் தான் இருக்கிறது.

**சமகாலம்; பூட்டானைப் பற்றி.....?**

**ராஸ்கோத்ரா;** பூட்டானுடன் எமக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. சீனர்கள் அந்த நாட்டு விவகாரங்க ளில் சம்பந்தப்படுவதற்கு முயற்சிப் பது குறித்து நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. சீனர்கள் உள்ளே வந்தால்,பிரச்சினையை உரு வாக்க ஆரம்பிப்பார்கள். ஆனால், நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்.

**சமகாலம்; பங்களாதேஷ் பற்றி...?**

**ராஸ்கோத்ரா;** பங்களாதேஷ் சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இந் தியாவுடனான உறவுகளில் ஏற்ற இறக்கங்கள் இருந்து வந்திருக்கின் றன. என்றாலும் மொத்தமாகப் பார்த் தால் பங்களாதேஷுடனான எமது உறவு திருப்திகரமானதாகவே இருக் கிறது என்பேன். ஏனைய அயல் நாடு களைப் போன்று பங்களாதேஷும் இந்தியாவுக்கு நெருக்குதல்களைக் கொடுக்கவே செய்கிறது. தொந்தரவு



நரசிம்மராவ், நட்வார் சிங் சகிதம் ராஸ்கோத்ரா

கொடுக்கவே செய்கிறது. எம்மால் நிறைவேற்ற முடியாத கோரிக்கை களை முன்வைக்கிறார்கள். என் றாலும் அவர்கள் உண்மையில் இந்தி யாவுக்கு எதிராகச் செல்ல முடியாது. செல்ல விரும்பமாட்டார்கள். ஆனால், பங்களாதேஷுக்கு உதவுவ தற்கு எம்மால் முடிந்ததை நாம் செய்யவேண்டும். அடிப்படையில் அவர்களின் சுபாவம் எமக்குச் சினேகபூர்வமானது என்று நினைக் கிறேன்.

**சமகாலம்; உங்களது பார்வையில் மியன்மார் எவ்வாறு முக்கியமா னது?**

**ராஸ்கோத்ரா;** மியன்மாரை (பர்மா) நாம் நீண்டகாலமாக கவனிக் காமல் இருந்துவிட்டோம்,ஆனால், இப்போது அந்த நாட்டுடனான உறவு மீது கவனம் செலுத்திக் கொண் டிருக்கிறோம் என்று நான் நினைக்கி றேன். சீனர்கள் அங்கு அதிகாரம் செலுத்துகிற ஒரு நிலையில் இருந் தார்கள். அதை இப்போது பொறுத் துக்கொள்வது மியன்மாருக்கு கஷ்ட மாகவுள்ளது. அதனால், அவர்கள் இந்தியாவின் ஈடுபாடு அதிகரிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அவர்களது எண்ணெய் மற்றும் வாயு உற்பத்தி, ஏனைய உற்பத்தித்துறைக ளில் எமது ஈடுபாடு அதிகரிப்பை அவர்கள் விரும்புகிறார்கள்.

**சமகாலம்; அமெரிக்காவுடனும் மியன்மார் இப்போது உறவுகளை வளர்த்துக் கொள்வதில் பெரும் ஆர்வம் காட்டுகிறதே?**

**ராஸ்கோத்ரா;** மியன்மார் தொடர் பான அணுகுமுறையில் அமெரிக்கா முட்டாள்த்தனமாக நடந்துகொண் டது. தடைவிதிப்புகள் மியன்மா ருக்கு பெரும் பாதிப்புகளை ஏற்படுத் திவிட்டன. அந்த நாட்டைத் தனிமைப்படுத்தி, சீனாவின் மடியில் போய்விழ வைத்துவிட்டன. நாமும் பலவருடங்களாக அதே கொள்கை யைக் கடைப்பிடித்தோம். ஆனால் 5-6 வருடங்களுக்கு முன்னர் நாம் அந்தக் கொள்கையைக் கைவிட்டு விட்டோம் என்று நினைக்கிறேன். அதனால், பின்னர் வரவேற்கக்கூடிய நிகழ்வுப் போக்குகளைக் காணக்கூடி யதாக இருக்கிறது.

**சமகாலம்; இலங்கையுடனான இந்தியாவின் உறவுகளை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

**ராஸ்கோத்ரா ;** இலங்கை பிரச்சினை யாக இருக்கிறது. ஒரு அர்த்தத்தில்

நோக்குகையில் இந்தியாவுக்கு மிக நெருக்கமான நட்பு நாடாக இலங்கையே இருந்திருக்க வேண்டும். ஏனென்றால், இந்தியாவைப் போன்று இலங்கையும் ஆரம்பம் முதலிலிருந்தே ஜனநாயக ஆட்சி முறையையே பின்பற்றி வந்திருக்கிறது. ஜனநாயகம் அங்கு செழுமை பெற்றிருக்கிறது. ஆனால், அது குறைபாடுகளுடனான ஒரு வகை ஜனநாயகம். ஏனென்றால், அங்குள்ள சிறுபான்மையினத்தவர்களான தமிழர்களுக்கு பிரஜாவுரிமை மறுக்கப்பட்டது. தமிழர்களின் மொழியுரிமை மறுக்கப்பட்டது. எமது நாட்டில் மொழி வாரியான மாநிலங்கள் பலவற்றைக் கொண்டிருக்கிறோம். அந்த மொழிகளை நாம் மதிக்கிறோம். அவை செழித்து வளருகின்றன. அத்துடன் அரச மொழிகளாகவும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், எம்மைப் போலன்றி இலங்கை குறைபாடுகளையுடைய ஜனநாயகமாக இருந்த காரணத்தினால் ஆயுதமோதல் மூண்டது. இதில் இந்தியாவும் சம்பந்தப்படவேண்டியிருந்தது. ஏனென்றால், மோதல் ஆரம்பமானபோது பெருமளவு தமிழர்கள் அகதிகளாக தமிழ் நாடு வந்து குவிந்தார்கள். தமிழர்களின் தலைவர்களும் இந்தியாவுக்கு வந்து தங்கள் பிரச்சினைகள் குறித்து எமக்கு முறையிட்டார்கள். 1983 ஆம் ஆண்டில் நான் வெளியுறவுச் செயலாளராக இருந்த போது இது ஆரம்பித்தது. நாம் தமிழர்களுக்கு பெரிதாக எதையும் கொடுத்ததாக நான் நம்பவில்லை. சிலவகையான ஆயுதப் பயிற்சிகளை ஆரம்பத்தில் கொடுத்தோம். சில டம்மி ரைபிள்களைக் கொடுத்தோம். அதற்குப்பிறகு தமிழர்கள் இன்று எமது நக்சலைட்டுகள் பெறுவதைப் போன்று ஆயுதங்களைப் பெறத் தொடங்கினார்கள். எங்கிருந்து பெற்றார்கள் என்பதை கடவுள்தான் அறிவார். மிகவும் நவீனரக ஆயுதங்களையும் அவர்களினால் பெறக்கூடியதாக இருந்தது. நாம் தமிழர்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்ததாக இலங்கை குற்றஞ்சாட்டியது. அது உண்மையில்லை.

'தமிழ்நாடு செய்யக்கூடிய எந்த காரியத்தினாலுமோ அல்லது இந்திய அரசாங்கம் செய்யக்கூடிய எந்தக்காரியத்தினாலுமோ அல்ல, மேற்குலகில் பெரும் அனுதாபத்தையும் ஆதரவையும் அனுபவிக்கும் புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தின் நடவடிக்கைகளினாலேயே தமிழர் போராட்டம் மீண்டும் தோன்றக்கூடும். 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இலங்கை ஜனாதிபதி தடுமாறுகிறார். இது அந்நாட்டை எங்கே கொண்டு போய் விடும்?'

**சமகாலம்; ஆனால் ஜி.பார்த்தசாரதி ஒருதடவை டில்லியில் (ஒப்சேவர் றிசேர்ச் பவுண்டேசனில்) இலங்கைத் தமிழர்களுக்கு றோ பயிற்சியளித்ததாக ஒப்புக் கொண்டாரே?**

**ராஸ்கோத்ரா ;** அவர்களில் சிலருக்கு நாம் பயிற்சியளித்தோம். ஏனென்றால் அவர்கள் பெரிதும் துன்புறுத்தப்பட்டார்கள், தங்கள் நாட்டை விட்டு விரட்டப்பட்டார்கள். அவர்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்பதை முன்னிலைப்படுத்துவதற்காக நாம் அவ்வாறு செய்ததாகவே அதை அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் உள்நாட்டுப் போர் ஒன்றை விரும்பியிருக்கவில்லை. தமிழர்களை ஒடுக்கும் இலங்கையின் கொள்கை காரணமாகவே உள்நாட்டுப் போர் மூண்டது. இராணுவத்திலோ பொலிஸிலோ தமிழர்கள் அனுமதிக்கப்படவில்லை. நிருவாகப்பதவிகளும் அவர்களுக்கு பெரிதும் மறுக்கப்பட்டன. இவ்வாறு பலபாகுபாடுகள், கொடுமைகள். இவற்றுக்கெதிராகத் தமிழர்கள் கிளர்ந்தெழுந்த காரணத்தினாலேயே மோதல் மூண்டது. அவர்கள் கொல்லப்பட்டார்கள். எமது தமிழர்களும் இக்கொலைகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்தார்கள். 1980களில் தமிழ் நாட்டில் உள்ள தமிழர்களைக் கையாளுவது எமக்கு மிகவும் சிக்கலான பிரச்சினையாக இருந்தது. என்றாலும் நாம் அதைச் சமாளித்தோம். எதையாவது செய்யுமாறு இலங்கை அரசாங்கத்துக்கு இந்திராகாந்தி தொடர்ச்சியாக ஆலோசனை கூறிக்கொண்டேயிருந்தார். ராஜீவ்காந்தி தனது காலத்தில் ஜெயவர்தனவுடன் இந்திய-இலங்கை சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். அதை பிரேம



எஸ்.எம்.கிருஷ்ணாவுடன்

தாச நிராகரித்தார். அதனால், நாம் அரசியல் ரீதியில் தலையிடவேண்டியிருந்தது.

நான் வெளியுறவுச் செயலாளராக இருந்த வேளையில் எமது கொள்கை- இந்திராகாந்தியின் கொள்கை மிகவும் தெளிவானது. அக்கொள்கை 3 அல்லது 4 அம்சங்களைக் கொண்டிருந்தது. இந்த நெருக்கடியை அமைதியான முறையில் தீர்ப்பதற்கு இலங்கை மீது செல்வாக்கைச் செலுத்த முயற்சிக்க வேண்டும் என்பதே முதலாவது அம்சம். இருதரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவந்து இணக்கம் காண வைப்பதே எமது வழிமுறையாக இருந்தது. எமது உதவி அல்லது ஆலோசனை அவர்களுக்குத் தேவைப்பட்டால் அதை வழங்குவதற்கு நாம் முன்வந்தோம். அந்தச் செயன்முறைகளில் ஜி.பார்த்தசாரதி ஈடுபடுத்தப்பட்டார். அவர் அடிக்கடி புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையே பறந்து பேச்சுவார்த்தைகளை நடத்தினார். இந்தியாவில் இருந்த இலங்கைத் தமிழ்த் தலைவர்களுடனும் இலங்கை அரசாங்கத்துடன்- ஜனாதிபதி ஜெயவர்தனவுடனும் ஏனையவர்களுடனும் கலந்தாலோசனைகளை நடத்தினார். வெளியுறவுச் செயலாளர் என்றவகையில் எனது பணி இலங்கை வெளியுறவுச் செயலாளருடன் தொடர்பைப் பேணி இந்த பேச்சுவார்த்தைச் செயன்முறைகளுக்கு உதவியாக இருநாடுகளினதும் கொள்கையை ஒழுங்கமைப்பதாகவே இருந்தது. அப்போது இலங்கை வெளியுறவுச் செயலாளராக விஜயசிங்க் பதவிவகித்தார். ஒவ்வொரு வாரமும் நாம் 2-3 தடவைகள் பேசுவோம். இனநெருக்கடி விரிவடையாதிருப்பதை உறுதி செய்வதற்கு எம்மாலியன்றதைச் செய்து கொண்டிருந்தோம்.

இருதரப்பினருக்கும் தமிழர்களுக்கும் ஜெயவர்தன அரசாங்கத்துக்கும் உந்துதல் அளித்துக் கொண்டிருந்தோம். ஆனால், நாம் ஒரு போதும் நேரடியாகத் தலையிடவில்லை. நேரடித்தலையீட்டினால் ஏற்படக்கூடிய விளைவுகளை இந்திரா காந்தி நன்றாக விளங்கிக் கொண்டிருந்தார்.

ராஜீவ்காந்தி பிரதமராக வந்த போது-அவர் மிகவும் இளையவர். அறிவுக் கூர்மையானவர். ஆனால், பெரிய அனுபவம் இருக்கவில்லை. அவர் கேட்டுக் கொண்டதன் பிரகாரம் இலங்கைக் கொள்கை தொடர்பாக மூன்று தடவைகள் விளக்கம் அளித்தேன். மேற்கூறப்பட்ட அம்சங்களை வலியுறுத்திக் கூறினேன். அவரும் சிறந்த கொள்கை என்று புரிந்துகொண்டு, அவற்றையே பின்பற்றப் போவதாக என்னிடம் கூறினார். ஒருபோதுமே நேரடியாக தலையீடு செய்வதில்லை என்பதே நிலைப்பாடாக இருந்தது.

> ‘வெளியிலிருக்கும் புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தின் செல்வாக்கிற்கு உட்படாமல் இலங்கைத் தமிழர்கள் ஜனநாயக செயன்முறைகளையே முன்னெடுக்க வேண்டும் என்பதே எனது ஆலோசனை. தமிழர்களின் நியாயபூர்வமான அபிலாசைகளையும் நலன்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இலங்கை அரசிடம் எனது வேண்டுகோள்’

1985 பெப்ரவரியில் நான் பதவியில் இருந்து ஓய்வுபெற்றேன். அப்போது ஜி.பார்த்தசாரதியும் அந்தச் செயற்பாடுகளில் சம்பந்தப்படுத்தப்படவில்லை. இது யாரின் செல்வாக்கினால் நடந்ததோ நானறியேன். ரொமேஷ் பண்டாரி வெளியுறவுச் செயலாளராக வந்தார். அவருக்கு இந்தப் பிரச்சினையைப் பற்றித் தெரிந்திருக்கவில்லை. அவர் டில்லிக்கும் கொழும்புக்கும் இடையே பறக்க ஆரம்பித்தார். அதற்குப் பிறகு இந்தியத்தரப்பில் தமிழ்தெரிந்த எவரும் இருக்கவில்லை. அயல் நாடுகளுடனான விவகாரங்கள் குறித்து அனுபவமுடைய ஒருவரும் கூட பிரதமருக்கு இருக்கவில்லை. வெளியுறவு அமைச்சர் என்றவகையில் இந்தப் பேச்சுவார்த்தைகளில் சம்பந்தப்பட்டுவந்த பி.வி.நரசிம்மராவும் வெளியுறவு அமைச்சில் இருந்து விடுவிக்கப்பட்டு மனிதவள அபிவிருத்தி அமைச்சராக்கப்பட்டார். ராஜீவ் காந்தி இதை ஏன் செய்தார் என்று எனக்குத் தெரியவில்லை. நேரடியாக நட்வார் சிங்கும் வெளியுறவு அமைச்சராக்கப்படவில்லை. வேறுயாரோ நியமிக்கப்பட்டார். அவருக்கு இலங்கையைப் பற்றிய எந்தவகையான அறிவோ தெளிவோ இருக்கவில்லை. சம்பந்தப்பட்ட விவகாரங்கள் பற்றிய விளக்கமும் இருக்கவில்லை.

ஜெயவர்தனவின் பதவிக்காலம் முடிவுக்கு வந்து கொண்டிருந்த போது யாழ்ப்பாணத்தில் இராணுவம் தமிழர்களுக்கு அநியாயங்களைச் செய்து கொண்டிருந்தது. அவர்கள் பட்டினிபோடப்படும் அபாயம் தோன்றியது. வடபகுதியில் உணவுப் பொட்டலங்களை விமானமூலம் போட்டதே ராஜீவ் காந்தியின் முதலாவது தலையீடாகும். நிலைவரத்தைக் கையாள வேறு மார்க்கங்கள் உண்மையில் இருந்தன. அடுத்தது, இராணுவ உதவியைப் பெறுவதற்கான உடன்படிக்கையொன்றை செய்து கொள்வதற்கு ஜெயவர்தன ராஜீவ் காந்தியை இணங்கச் செய்துகொண்டிருந்தார். அந்த நேரம் ஜெயவர்தன தெற்கிலும் ஆயுதக் கிளர்ச்சியொன்றுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. இரு கிளர்ச்சிகளையும் அவரால் கையாள முடியவில்லை. அதைப் பற்றி எம்மிடம் ஜெயவர்தன வெளிப்படையாகவே சொன்னார். இந்தப் பிரச்சினையில் இருந்து விடுபட அவர் இந்தியாவின் உதவியை நாடினார்.

நான் அதற்கு ஒருபோதும் இணங்கியிருக்கமாட்டேன். நான் அந்த நேரம் வெளியுறவுச் செயலாளராக இருந்திருந்தால் (உள்ளே போகாதீர்கள். உங்கள் இராணுவத்தை அனுப்பாதீர்கள்) என்று தான் ஆலோசனை

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



களை கூறியிருப்பேன். ஆனால், எம்மில் எவரும் அப்போது அங்கே இல்லை.

அவர் இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பினார். இத்துருப்புகளின் பணி என்னவாக இருந்தது? தமிழர்களை ஒடுக்குவது. இது ஒரு விவேகமான கொள்கையல்ல. இது ஒரு விவேகமான தீர்மானமும் அல்ல. தமிழ்நாட்டில் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி நாம் சிந்தித்திருக்க வேண்டும். 'உங்களுடன் இலங்கை விவகாரத்தை ஆராய்ந்திருக்கிறேன். இந்த விவகாரத்தில் இந்திரா காந்தியின் கொள்கை என்ன என்பதையும் உங்களுக்கு தெளிவாக விளக்கிக் கூறியிருந்தேன். ஒருபோதுமே நேரடியாகத் தலையிடுவதில்லை என்பதே அந்த நிலைப்பாடு. ஆனால், நீங்கள் உங்கள் இராணுவத்துடன் அங்கே போயிருக்கிறீர்கள். போவது சுலபம். அங்கிருந்து வெளியே வருவது தான் மிகவும் கஷ்டமானது என்று நான் பிரதமருக்கு ஒரு கடிதத்தை எழுதினேன். அவருக்கு கோபம் வந்துவிட்டது.

பிறகு பிரேமதாச ஜனாதிபதியாக வந்தார். அவர் இந்தியத் துருப்புகள் வெளியேற வேண்டுமென்று விரும்பினார். தமிழர்களும் பிரேமதாசாவின் இராணுவமும் எமது இராணுவத்துடன் சண்டையிட்டார்கள். எமது ஆட்கள் கொல்லப்பட்டார்கள். பிரதமர் ராஜீவ்காந்தி என்னிடம் ஆட்களை அனுப்பினார். என்ன செய்வது என்று கேட்டார். 'இப்போதுகூட, படைகளை வாபஸ் பெறமுடியுமென்றால், நீங்கள் வாபஸ் பெறுங்கள். ஆனால், நிலைவரம் அதற்கு அப்பால் போய்விட்டது' என்று நான் அவருக்குக் கூறினேன்.

பிறகு அவர் தமிழர்களுக்குத் தீங்கிழைத்தார். பிரேமதாச எமக்கு மிகவும் விரோதமானவராக இருந்தார். தவறான ஆலோசனையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டிற்கான விலையை காந்தி செலுத்தினார். யார் அந்த ஆலோசனையை அவருக்குக் கூறினார்கள் என்பது எனக்குத் தெரியாது.

**சமகாலம்; சில பத்திரிகைகளில் வெளியானதைப் போன்று மணி சங்கர் ஐயர்தான் அத்தகைய ஆலோசனையை வழங்கினாரா?**

**ராஸ்கோத்ரா;** இல்லை. மணி அந்த வகையான காரியத்தைச் செய்திருக்க மாட்டார். பிரதமரைச் சூழவிருந்த அதிகாரிகள் தான் அந்த ஆலோசனையைக் கூறியிருக்கவேண்டும். அதற்கான விலையாக ராஜீவ்காந்தி தனது உயிரையும் பலிகொடுக்க வேண்டியேற்பட்டது. அவர் படுகொலை செய்யப்பட்டார். எவ்வாறெனினும் அவருக்குப் பிறகு பிரதமராக வந்த விஸ்வநாத் பிரகாப் சிங் இலங்கையில் இருந்து இராணுவத்தை உடனடியாக வாபஸ்பெற்றார்.

**சமகாலம்; விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தைப் பற்றி உங்கள் கருத்து என்ன? அந்தப் போராட்டத்தினால் ஏன் எதையும் சாதிக்க முடியாமற் போனது?**

**ராஸ்கோத்ரா;** நான்கு கட்டங்களாக நடைபெற்ற ஈழப்போரின் இறுதிக்கட்டம் ஆரம்பமான போது, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய குழம்பிப் போன சிலரைத் தவிர, இந்தியாவில் உள்ள சகலருக்கும் ஒருவிடயம் மிகத் தெளிவாகத் தெரிந்தது என்று நான் நினைக்கிறேன். அதாவது இலங்கையில் எமது அயல் நாடு பிரிவினை என்பது சாத்தியமில்லாத விடயம். அதுமிகவும் சிறியதொரு நாடு. அது ஒரு ஜனநாயக நாடு. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஜனநாயகரீதியான வழிமுறைகள் இருக்கின்றன. அந்த வழிமுறைகள் நீண்டகாலம் பிடிக்கலாம். ஆனால், நாம் பிரிவினையை ஆதரிக்க மாட்டோம். இலங்கை இராணுவத்துக்கு ஆயுதங்களை நாம் பகிரங்கமாகக் கொடுக்க முடியாது. அதனால் அவர்கள் பாகிஸ்தானிடம் போனார்கள். சீனாவிடம் போனார்கள். நாம் அதைவிரும்பவில்லை. ஆனால் நாம் என்ன செய்யப்போகிறோம்? போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு இலங்கைப் படைகளுக்கு எமது கடற்படை உதவியது என்று நான் நினைக்கிறேன். பிரபாகரன் உண்மையில் ஒரு தவறான தலைவர் என்றும் நான் நினைக்கிறேன். பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். அவரின் போரில் சிறுவர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள். தனது படைகளைப் பாதுகாக்க அவர் குடிமக்களைக் கேடயமாகப் பயன்படுத்தினார். இவ்வாறு பல விடயங்களைக் கூறலாம்.

**சமகாலம்; பிரபாகரன் இந்திராகாந்தியைச் சந்தித்தாரா?**

**ராஸ்கோத்ரா;** பிரபாகரன் இந்திராஜியைச் சந்தித்ததில்லை. ராஜீவ் காந்தியைச் சந்தித்தார். இந்திராஜி காலத்தில் பிரபாகரன் பிரபலமான ஆளாக இருக்கவில்லை. இரண்டோ, மூன்றோ முக்கிய தலைவர்கள் தான் இருந்தார்கள். அவர்களுடன்தான் நாம் விவகாரங்களைக் கையாண்டோம். அவர்கள் டில்லியிலும் இருந்தார்கள். டில்லிக்கு வெளியேயும் இருந்தார்கள். அவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினோம். ஜனநாயக வழிமுறைகளில் தங்கள் இலக்கை அடைய முயற்சிக்க வேண்டுமென்று அவர்களுக்கு நாம் ஆலோசனை கூறினோம்.

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் தடுமாறுகிறார் போலத் தோன்றுகிறது. இது இலங்கையை எங்கே கொண்டு போய்விடும்? தமிழ்நாடு செய்யக்கூடிய எந்தக்காரியத்தினாலுமோ அல்லது இந்திய அரசாங்கம் செய்யக்கூடிய எந்தக் காரியத்தினாலுமோ அல்ல, மேற்குலகில் பெரும் அனுதாபத்தையும் ஆதரவையும் அனுபவிக்கும் புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தின் நடவடிக்கைகளினாலேயே தமிழ்ப் போராட்ட இயக்கம் மீண்டும் தோன்றக்கூடும் என்பதை அவர்கள் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் நினைக்கவில்லை. புலம்பெயர் தமிழ்ச் சமூகத்திடம் பெருமளவு பணம் இருக்கிறது. ஆயுதங்களைப் பெற்று விநியோகிக்கக் கூடிய வாய்ப்

புகளும் அவர்களுக்கு இருக்கின்றன. இத்தகையதொரு சூழ்நிலையில் இலங்கை அரசாங்கத்துக்கு சீனாவி னால் எந்தளவுக்கு உதவக் கூடியதாக இருக்கும் என்று எனக்குத் தெரிய வில்லை.

**சமகாலம்; எனவே, இந்தப் போராட்ட இயக்கம் மீண்டும் ஆரம் பிக்கப்படக்கூடும் என்று நீங்கள் சந்தேகிக் கிறீர்களா?**

**ராஸ்கோத்ரா;** அது மீண்டும் நடை பெறமுடியும் என்று நான் அஞ்சுகி றேன். அவ்வாறு நேரும் பட்சத்தில் எமக்கும் அதனால் பாதிப்பே. நான் இலங்கையை மிகவும் நேசமிக்க கண் களினால் பார்க்கிறேன். சகல வேளை களிலும் இலங்கையுடன் சாத்தியமா னளவுக்கு சிறந்த உறவுகளைக் கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறவன் நான். ஆனால், தமி ழர்கள் பெரும்பான்மையினராக வாழுகின்ற பகுதிகளில், அதாவது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கணிசமான சுயாட்சி நிருவாகத்துக் கான தமிழர்களின் நியாயபூர்வமான அபிலாசைகள் பூர்த்திசெய்யப்படாத பட்சத்தில் அதிருப்தியும் மனக்குறை யும் தொடரவே செய்யும். 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல் வது குறித்தும் பேச்சுகள் இருந்தன. தங்களால் ஏன் 13ஆவது திருத்த த்தை முழுமையாக நடைமுறைப்படு த்த முடியவில்லை என்பது குறித்து அல்லது நடைமுறைப்படுத்த ஏன் விரும்பவில்லை என்பது குறித்து விளக்கமளிக்க இலங்கை ஜனாதிபதி யின் சகோதரர் டில்லிக்கு வந்திருக்கி றார். 13 ஆவது திருத்தம் அவர்கள் எங்களுடன் இணங்கிக் கொண்ட ஒரு விடயம். அந்த உடன்படிக் கைக்கு நாங்களும் ஒரு தரப்பு.

**சமகாலம்; எனவே, இந்தியாவி னால் இப்போது என்ன செய்ய முடியும்? ஏனென்றால் நாங்கள்....... ஏற் கனவே......**

**ராஸ்கோத்ரா;** நான் இந்திராகாந்தி யின் கொள்கைக்கே திரும்பிப் போகிறேன்.... வெளியில் இருக்கும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் செல் வாக்கிற்கு உட்படாமல், தமிழர்கள் ஜனநாயக செயன்முறைகளையே முன்னெடுக்கவேண்டும் என்று ஆலோசனை கூறுவேன். எந்தவித மான சிவில் அல்லது அரசியல் அல் லது ஆயுத குழப்ப நிலை மீதும் நாட் டம் காட்டாமல் ஜனநாயகவழியைப் பின்பற்ற வேண்டும். தமிழர்களின் நியாயபூர்வமான அபிலாசைகளை யும் நலன்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இலங்கை அரசாங் கத்துக்கு நான் வேண்டுகோள் விடுக் கிறேன். நாம், அதாவது இந்தியா உறு தியாக இருக்க வேண்டும். நாம் பிரதி பலிப்பை வெளிக்காட்டுகிறோம். தமிழ் நாடும் அதன் பிரதிபலிப்பை வெளிக்காட்டிக்கொண்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இலங்கை விளையாட்டு வீரர்கள் கிரிக்கெட் விளையாடுவதற்கு தமிழ்நாட்டு அர சியல்வாதிகள் அனுமதிக்கவில்லை. இவையெல்லாம் முறையான காரி யங்கள் இல்லை. முட்டாள்த்தனமா னவை. இந்தியா ஒரு பெரியநாடு. தமிழ்நாடும் கூட ஒரு பெரிய மாநி லம். அதனால், விளையாட்டுக்குள் அரசியலைக் கொண்டுவருவது தவ றானது. இரண்டாவதாக, சில இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு இந்தியாவினால் பயிற்சியளிக்கப்படு வது தொட ர்பில் பெரும் கூச்சல் கிளப்பப்படுகிறது. இரண்டோ, மூன்றோ தடவைகள் அவர்கள் திருப் பியனுப்பப்பட்டிருக்கிறார்கள். இந்தி யாவிடமிருந்து இத்தகைய எதிர்வி னையை நான் ஏற்றுக்கொள்ளமாட் டேன். ஒரு சிறிய அயல் நாட்டுட னான விவகாரங்களை நாம் கையா ளுகிறோம் என்பதை மனதிற் கொள்ள வேண்டும்.

**சமகாலம்; ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களை ஆத ரித்து வாக்களித்த இந்தியாவின் செயலை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர் கள்?**

**ராஸ்கோத்ரா;** மீண்டும்... நாம் சரி யான காரியத்தையே செய்திருக்கி றோம். நிலைமைகள் இங்கு சரியாக இல்லை. என்றென்றைக்குமே நாம் மூடிமறைக்கமுடியாது. எமது மதிப் பீட்டின் படி இலங்கை அரசாங்கம் சரியாக நடந்துகொள்ளவில்லை என் றால், எமது சரியான மதிப்பீட்டின் படியே நாம் நடந்து கொள்ள வேண் டும். இலங்கை அதை விரும்பாமல் இருக்கலாம். ஆனால், எமது வாக்கை சரியான வழியில் பயன் படுத்தி, இலங்கை அதன் வழிமுறை களைத் திருத்திக்கொள்ள செல்வாக் கைச் செலுத்த முயற்சிப்பது எமது உரிமையாகும்.

**சமகாலம்; ஆனால், இலங்கைமீது எமக்கு இருந்திருக்கக்கூடிய செல் வாக்கு எல்லாவற்றையும் இந்தியா இழந் துவிட்டது என்று சில அவதானிகள் கூறு கிறார்களே?**

**ராஸ்கோத்ரா;** இல்லை. நாம் இலங் கையில் எமது செல்வாக்கை இழந்து விடவில்லை. அவர்களது அமைச்சர் கள் ஏன் இந்தியாவுக்கு வருகிறார் கள்? இலங்கையின் புவியியல் தன் மையும் இந்தியாவின் புவியியல் தன் மையும் அத்தகையது. அதாவது, சீனர்கள் என்னதான் செய்தாலும், பாகிஸ்தானியர்கள் என்னதான் செய் தாலும், இலங்கை மீதான எமது செல் வாக்கு அருகிச் செல்லப்போவ தில்லை. இலங்கை ஜனநாயக வழியில் சமாதானமுறைகளில் முன் னேறிச்செல்வதற்கு உதவுகிற அனுகூ லமான செல்வாக்காகவே எமது செல் வாக்கு இருக்க வேண்டும். நிச்சய மாக அது அரசியல் ஜனநாயகம் என்று நான் நம்புகிறேன். இதுவே எமது நோக்கமாக இருக்க வேண்டும். அவர்கள் விரும்புகிறார்களோ இல் லையோ நாம் ஒத்துழைப்புக்கொள் கையையே கடைப்பிடிக்க வேண்டும். இலவசமாக ஆலோ சனை வழங்க வேண்டும். அவர்கள் ஒரு இக்கட்டுக்குள் மாட்டுப்பட்டால், அதிலிருந்து அவர்கள் விடுபட நாம் உதவ வேண்டும். ஆனால், ஐ.நா. வில் நாம் எமது விருப்பத்திற்கேற் பவே வாக்களிக்க வேண்டும்.

அங்கே ஏதாவது தவறாக நடப்பதை நாம் கண்டால்... பாகிஸ்தானுடன் சேர்ந்து எமக்கு எதிராக அவர்கள் செயற்பட்டு வந்திருக்கிறார்கள். 1971 போரின் போது பாகிஸ்தான் இராணுவ விமானங்கள் இலங்கையில் தரையிறங்க அனுமதிக்கப்பட்டன. ஆனால், நாம் அந்த அனுகூலமற்ற நிலைவரத்தைக் கூட நிதானமாகக் கையாண்டோம். அது ஒரு சுதந்திரமான நாடு. அவர்களது செயற்பாடுகளை நாம் விரும்பவில்லை. ஆனால் அவர்கள் செய்கிறார்கள். நாம் என்ன செய்வது.

**சமகாலம்; பாகிஸ்தானின் பாத்திரத்தை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்? இலங்கையுடன் அந்த நாடும் நெருக்கமான உறவைக் கொண்டிருக்கிறதே....**

**ராஸ்கோத்ரா;** அவர்களது காஷ்மீரில் இருக்கின்ற பயங்கரவாதிகளின் முகாம்கள் தொடர்பில் அவர்கள் எவ்வாறு செயற்படுகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியிருக்கிறது. மும்பையில் படுபயங்கரமான செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் தொடர்பில் அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள். எமது ஆட்களில் சிலர் நவாஸ் ஷெரீப் குறித்து உற்சாகமாக இருக்கிறார்கள். ஆனால், ஷெரீப்பின் கடந்த காலம் அவ்வளவு நல்லதல்ல. இந்தப் பயங்கரவாதச் சக்திகளை உற்சாகப்படுத்தியவர் அவர். ஆனால், பாகிஸ்தானில் அவர்களே பயங்கரவாதிகளின் செயல்களினால் பாதிக்கப்பட்டுக்கொண்டிருப்பதால் சில பாடங்களை அவர்கள் உண்மையில் படித்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.

அவ்வாறு அவர்கள் பாடத்தைப் படித்திருந்தால், எவ்வாறு இனிமேல் நடந்துகொள்கிறார்கள் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். பாகிஸ்தான், குறிப்பாக அதன் இராணுவம் இந்தியாவை எதிரியாகவே பார்க்கிறது. ஆனால் அதேவேளை பாகிஸ்தான் மக்கள் எமது நாட்டை சினேகபூர்வமான உணர்வுடனேயே நோக்குகிறார்கள். பாகிஸ்தானுக்கு மேற்கொண்ட விஜயங்களின்போது நான் இதை நேரடியாக அனுபவத்தில் கண்டிருக்கிறேன். நாமும் அதை உணர்வுபூர்வமாகவே நோக்குகிறோம். அதனால், இந்தியாவோ அதன் மக்களோ பாகிஸ்தானை எதிரி நாடாகப் பார்க்கவேயில்லை. பாகிஸ்தான் மீது அமெரிக்காவுக்கோ அல்லது சீனாவுக்கோ இருக்கக்கூடிய செல்வாக்கு பாரம்பரியமாக இந்தியாவுக்கு விரோதமானதாகவே இருந்துவந்திருக்கிறது. பாகிஸ்தானும் இந்தியாவும் நெருங்கி வந்தால் சீனர்களோ அமெரிக்கர்களோ எதையும் செய்யப்போவதில்லை. அவர்களும் தங்கள் நிலைப்பாடுகளை மாற்றிக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அதேவேளை, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான வர்த்தகம், போக்குவரத்துகள் அதிகரிப்பதற்கு நாம் பாடுபட வேண்டும். இருநாடுகளினதும் மக்கள் சந்திக்க வேண்டும். நாம் கிரிக்கெட் விளையாடவேண்டும். வேறுநாடுகளில் அல்ல எமது இரு அணிகளும் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் கிரிக்கெட் விளையாட வேண்டும். அவர்களது இசைக்கலைஞர்கள் இந்தியாவுக்கு வரவேண்டும். அவர்கள் எமது நாட்டில் பெருமளவு ரசிகர்களைக் கொண்டவர்கள். எமது நடிகர்களை அவர்கள் விரும்புவதில்லை. ஆனால், அதைப் பற்றியே நாம் பேசிக் கொண்டிருக்கக்கூடாது. ■

---

*(27ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

தார்மீகக் கடமையாகும். போர்க் காலப் பிரதமரான வின்ஸ்ரன் சேர்ச்சில் ஒரு தடவை கூறியதைப் போன்று, வெற்றிபெற்ற தரப்பினர் பெருந்தன்மையாக நடந்துகொள்ள வேண்டியது அவசியமானதாகும். ராஜபக்ஷ ஆட்சி இதற்கு மறுதலையாகவே நடந்து கொள்கிறது.

இறுதியாக, அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தைத் திருத்துவதற்கான முயற்சிகளில் இருக்கக்கூடிய நெறிகெட்ட தன்மையை எந்தவொரு நாகரிகமான சமுதாயத்திலும் பெரிதாக மதிக்கப்படுகின்ற மிகவும் எளிதானதும் சிக்கலற்றதுமான மனித நியாயத்தைப் பற்றிச் சிந்தித்துப்பார்த்தால் சுலபமாகப் புரிந்துகொள்ள முடியும். ஒருவருக்கு கொடுத்ததை நாம் திருப்பி வாங்கிக் கொள்ளக் கூடாது என்று நாம் சிறுவர்களாக இருந்த காலத்தில் பெற்றோரும் ஆசிரியர்களும் பௌத்த மத குருமாரும் எமக்குப் போதித்திருக்கிறார்கள். சிங்கள அரசியல் தலைவர்களின் ஆதிக்கத்திலான அரசாங்கங்களினால் அளிக்கப்பட்ட பல வாக்குறுதிகள் பல்வேறு காரணங்களுக்காக மீறப்பட்டிருக்கின்றன. காலனித்துவ ஆட்சியின் முடிவுக்குப் பின்னரான இலங்கையின் சரித்திரம் இந்த வாதத்துக்கு ஆதாரவாக தாராளமான சான்றுகளைக் கொண்டிருக்கிறது. மாவட்டங்களுக்கு சுயாட்சியை மொத்த ஏற்பாடுகளைக் கொடுப்பதற்காக 1970களின் பிற்பகுதியில் மாவட்டச் சபைகள் அமைக்கப்பட்டன. வடக்கில் இந்த மாவட்ட சபைகளுக்கான தேர்தல்கள் எந்த இலட்சணத்தில் நடத்தப்பட்டன என்பதை நாமெல்லோரும் நன்கறிவோம். மாகாணங்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் தீர்மானங்களை மாகாணங்களே மேற்கொள்வதற்கு வசதியாக 1987 ஆம் ஆண்டு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களுடன் மாகாண சபைகள் முறை ஏற்படுத்தப்பட்டது. மாகாணங்களிடமிருந்து இந்த மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களை மீள எடுத்துக்கொள்வதற்கு மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் நாட்டம் கொண்டிருக்கிறது. இந்த அரசியல்வாதிகளிடம் எள்ளளவிற்கேனும் நயநாகரிகப் பண்பு கிடையாதா?. ■



சுரேந்திர அஜீத் ரூபசிங்க

# 13வது திருத்தத்தின் அரசியலும் வட மாகாண சபைத் தேர்தலும்

சிங்கள-பௌத்த கொடியின் கீழ் மிகவும் மையப்படுத்திய ஒற்றையாட்சியை நிர்மாணிப்பதும் நாட்டின் சகல பகுதிகளிலும் அதன் ஆணையை மேலோங்கச் செய்வதும் ராஜபக்ஷ அரச குலத்தினதும் அதன் ஆட்சிக்குழுவினதும் வலுப்படுத்தல், விரிவாக்கம் மற்றும் தொடர்ச்சி என்பவற்றுக்கான முன் நிபந்தனையாகும்

ராஜபக்ஷ ஆட்சிக்குழுவின் தமிழ்த் தேசத்தின் மீதான இராணுவ வெற்றி, ஆக்கிரமிப்பு மற்றும் அட க்கியொடுக்குதல் என்பவற்றின் தொடர்ச்சியான ஒரு விடயமே 13ஆவது திருத்தத்தின் மீதான அரசியலமைப்பு ரீதியான தாக்குதலாகும். 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மீதான தாக்குதல் வரலாற்று ரீதியாக வடக்கு, கிழக்கில் எம்மோடு சேர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு சட்டரீதியாகவும், அரசியலமைப்பு ரீதியாகவும் தமிழ்த் தேசிய இனத்தின் அந்தஸ்தையோ, அரச நிலையையோ மறுக்கும் ஒரு நடவடிக்கையாகும். தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் மற்றும் சட்ட அந்தஸ்தை அரசியலமைப்பு ரீதியாக மறுத்து, பிளவுபடாத நாடு முழுவதும் சிங்கள - பௌத்த தேசிய இனத்தின் கேள்விக்கிடமற்ற மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதே இத்தாக்குதலின் நோக்கமாகும்.

பேரினத்தின் மேலாதிக்கத்தை நிலைநாட்டி, இந்த வடிவிலான பூரணமான ஆதிக்கவாத சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதற்கு, இந்த ஆட்சிக்குழுவுக்குள்ள தேவை என்ன? இது வெறுமனே நஞ்சூட்டப்பட்ட ஒரு தத்துவார்த்தம் சம்பந்தமான பிரச்சினை அல்ல. இது ஒரு மூளை குழம்பிய தற்புகழ்ச்சிக் கிறுக்குத்தனமும் அல்ல. இது தீவிரவாதம், அல்லது ஆட்சிக்குழுவைப் பலவந்தப்படுத்தும் அடிப்படைவாத சக்திகளின் பிரச்சினையுமல்ல.

13ஆவது திருத்தத்தைச் சட்டரீதியாகவும், அரசியலமைப்பு ரீதியாகவும் செயலிழக்கச் செய்வது ஆட்சிக்குழுவின் அரசியல் பொருளாதாரம் மற்றும் அதன் உயிர்வாழ்க்கை சம்பந்தமான நிபந்தனைகள் குறித்த விடயமாகும். சிங்கள பௌத்தக் கொடியின் கீழ் மிகவும் மையப்படுத்திய ஒற்றையாட்சியை நிர்மாணிப்பதும், நாட்டின் சகல பகுதிகளிலும் அதன் ஆணையை மேலோங்கச் செய்வதும், ராஜபக்ஷ அரச குலத்தினதும், அதன் ஆட்சிக்குழுவினதும் வலுப்படுத்தல், விரிவாக்கம் மற்றும் தொடர்ச்சி என்பவற்றுக்கான முன் நிபந்தனையுமாகும். பூரணமான அதிகாரம், செல்வம் மற்றும் பெருமை என்பவற்றுக்கான தணியாத தாகமும் அரச குலத்தின் வாரிசுரிமை மூலம் அதைத் தொடருவதற்கான தேவையும் ஒரு குறிப்பிட்ட வடிவத்திற்கான அரசியல் பொருளாதாரத்தை அவசியப்படுத்துகின்றன.

வானளாவ உயரும் ஊழல், மாஃபியா, போதைப்பொருள் இயந்திரத்துக்கு தடையின்றி இயங்கும் எரிபொருளாக விளங்கும் பாதாள உலக நிதியியல் கொடுக்கல் - வாங்கல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசியல் பொருளாதாரமே இன்று நாட்டில் நிலவுகின்றது. வெளிநாட்டுச் சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து, வடக்கு, கிழக்கின் மனித மற்றும் இயற்கை மூலவளங்கள் கொள்ளையிடப்படுகின்றன. பொருளாதாரச் சுரண்டலைத் தடையின்றி மேற்கொள்வதற்கு வழிசெய்வது இந்த ஆட்சிக்குழுவின் மிக முக்கியமான பொருளாதாரத் தேவையாக உள்ளது. இந்த ஆட்சிக்குழுவுடன் கட்டுண்ட ஒரு முழு வீச்சிலான, ஒட்டுண்ணி வர்க்க முகவர்களின் ஆதரவு மேற்படி நடவடிக்கைகளுக்கு இருந்து வருகிறது. இக்கேவலமான சம்பாத்தியம் முற்று முழுதான கொள்ளை, மற்றும் இந்த ஆட்சிக் கும்பலினதும், அதன் வால்பிடிகளினதும் அரசியல் பொருளாதாரத்தை இயக்கும் இலாபமாக இருந்து வருகிறது.

வடக்கு - கிழக்குப் பிராந்தியம் முற்று முழுதான கொள்ளைக்கான

## 13வது திருத்தத்தை வலுவிழக்கச்செய்யும் முயற்சி ராஜபக்ஷ முக்கூட்டணியின் (சிங்களபௌத்த பேரினவாத -இராணுவவாத- ஆதிக்கவாத) சர்வாதிகாரத்தை நிலைபோக்கி நடைமுறைப்படுத்தும் ஏற்பாடுகளின் நடுநாயகமான விடயமாகி உள்ளது

மிகவும் கவர்ச்சிகரமான பிரதேசமாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. வாழ்வாதாரம், பாதுகாப்பு, கௌரவம், நீதி மற்றும் ஜனநாயக சுதந்திரத்திற்கு முன்னுரிமை வழங்குவதற்குப் பதிலாக, உட்கட்டமைப்புகளைக் கட்டியெழுப்புவதில் தீவிரம் காண்பிக்கப்படுகிறது. பிராந்தியத்தின் தமிழ்-முஸ்லிம் மக்களை அரசியல் அடிமைகளாக வைத்திருப்பதும் இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் வைத்திருப்பதும் ராஜபக்ஷ ஆட்சிக்குழுவின் முதலாளித்துவ நிகழ்ச்சிநிரலை முன்னோக்கிச் செலுத்துவதற்கான பொருளாதார அடிப்படையை வழங்குகின்றது. உரிமைகள் பறிக்கப்பட்டு, அடக்கியொடுக்கப்பட்ட வெகுஜனங்கள் வாழ வழியின்றி, செய்வதறியாது திண்டாடுகிறார்கள்.

தொடரும் உல்லாசப் பிரயாணத் தொழில் விரிவாக்கம், விவசாயக் கைத்தொழில், வாணிப - வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் பரவலான அபிவிருத்தி வலயங்கள் என்பவை சம்பந்தமாக பாரிய உட்கட்டமைப்புக் கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டியுள்ளது. இவை மிகப்பெரிய அளவுகளிலான உடனடித் தரகுக்கூலிகளுக்கான மூலவளங்களாக இருப்பதோடு, தரகுமுதலாளித்துவப் பொருளாதாரத்தோடு கட்டுண்ட ஓர் ஒட்டுண்ணி ஒப்பந்தக்காரர்கள் வர்க்கத்தையும், ஒரு முழு அரசு அதிகாரித்துவவாத விடயங்களாகவுமுள்ளன. இந்த அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கும், அதன் அரசியல் பொருளாதாரத்துக்கும் வரையறையற்ற, அரசியல் மேலாதிக்கமும், முழு வடக்கு - கிழக்குப் பிராந்தியத்தினதும், ஆட்புல வலுப்படுத்தலும் அவசியமாகின்றன.

நாட்டின் ஏனைய பகுதிகளைப் போன்றே, வடக்கு - கிழக்கு மாகாணங்களும் சீனா, இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான், பாகிஸ்தான் மற்றும் ஏனைய அந்நிய சக்திகளிடையே கேக் துண்டாடப்படுவது போன்று, வெட்டித் துண்டாடப்படுகின்றன. உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் எமது பொருளாதாரத்தின் உயிர்நாடிகளை விழுங்கி ஏப்பமிடுகின்றன. அதேவேளை, அரசியலமைப்பிற்கான 18ஆவது திருத்தம், திவிநெகும, பிரதம நீதியரசர் மீதான குற்றப்பிரேரணை என்பன அமுலாக்கப்பட்டன.முன்னைய பிரதம நீதியரசரின் இடத்துக்கு ஆட்சிக் குழுவுக்கு நம்பகமான முகவர் ஒருவரின் நியமனம், இடம்பெற்றது. தற்போது 13ஆவது திருத்தத்தின் மீது தொடுக்கப்பட்டுள்ள தாக்குதல் அனைத்தையும் வழிநடத்துவது ஆட்சிக்குழுவின் அரசியல் பொருளாதாரமேயாகும். இது அரசகுல தரகுமுதலாளித்துவ ஆட்சியை வலுப்படுத்தித் தொடருவதற்கும், தடையற்ற பின் வாரிசுரிமையை உறுதி செய்வதற்குமான நிபந்தனையாகும்.

LTTE அமைப்பை இராணுவ ரீதியாக அழித்தொழிப்பதற்கும், ''பிரிவினைப் பயங்கரவாத'' அச்சுறுத்தலை ஒழிப்பதற்கும் நடத்தப்பட்ட யுத்தம் ராஜபக்ஷ அரச குலத்தின் அரசியல் மற்றும் தத்துவார்த்த மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு வழியமைத்தது. இப்பொழுது 13ஆவது திருத்தத்தை வலுவிழக்கச்செய்யும் முயற்சி ராஜபக்ஷ முக்கூட்டணியினரின் சிங்கள - பௌத்த, பேரின - இராணுவவாத- ஆதிக்கவாத சர்வாதிகாரத்தை நிலைபேறாக்கி, நடைமுறைப்படுத்தும் முயற்சியின் நடு நாயகமான விடயமாகியுள்ளது.

உத்தேச திருத்தங்கள் மாகாண சபைகளின் உண்மையான அதிகாரங்களை நீக்கி, சுயாட்சி சம்பந்தமான அனைத்தையும் இல்லாதொழித்துள்ளது. கூடுதலான மையப்படுத்தலையும் நிறைவேற்று ஜனாதிபதியிடம் மேலும் கூடுதலான அதிகாரங்களைக் குவிப்பதையுமே இது நோக்கமாகக் கொண்டுள்ளதாகும். இந்த நிகழ்ச்சி நிரலுக்குச் சகல ''அந்நியர்களுக்கும்'' எதிரான மதவாத மற்றும் வகுப்புவாத வெறுப்பைத் தொடர்ச்சியாகத் தூண்டி விடுவது அவசியமாகும். இத் தத்துவார்த்தச் சீரழிவு ஒரு வழமையான, தொடர்ச்சியான முறையில், நிறுவன ரீதியாகவும், சமூக ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் உற்பத்தி செய்யப்பட்டு, வகைப்பெருக்கம் செய்யப்படுகின்றது.

### ஆடம்பர வெற்றிப்பவனிகள்

ஆயுதப்படையினருக்கான வீடமைப்புகள், யுத்த நினைவாலயங்கள் என்பவை இடம்பெறும் அதே வேளையில், தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தின் நினைவுச் சின்னங்கள் மதிப்புக் குலைக்கப்பட்டு, அழித்தொழிக்கப்படுகின்றன.

இத்தத்துவார்த்தச் சீரழிவு, ஆட்சிக்குழு மீதான குருட்டுப்பக்தியை ஓர் உணர்வு பெற்ற, உன்னதமான, சுய - தியாகம் நிறைந்த தேசபக்தி உணர்வோடு சமப்படுத்தும் வகையில் அனைவருக்கும் ஊட்டப்படுகின்றது. உங்களிடம் மத அர்ப்பணிப்பு மற்றும் விசுவாசம் நிறைந்த ஓர் அரசியல் தத்துவார்த்தம் இருந்தால், இந்த உணர்வு ஆட்சிக்குழுவின் மீதான விசுவாசத்துக்குச் சமம். இந்த விசுவாசத்தினதும், புராதன நாகரிகத்தினதும் பாதுகாவலன் என்னும் உணர்வினதும் சேரிடமாகவிருந்தால், பெரும்பான்மை சிங்கள மற்றும் பௌத்த மக்களிடையே ஒரு காத்திரமான, தத்துவார்த்த அடிப்படையிலான ஒரு நவ - பாசிஸவாத, முதலாளித்துவ சர்வாதிகாரத்தைப் பயன்படுத்தும் மிகவும் வலுவான சக்தி உருவாக்கப்

படுகிறது.

இந்த அரசியல் தத்துவார்த்த மேலாதிக்கவாதத்தின் சமூக அடிப் படை பெரும்பான்மைவாதமாகும். இவர்கள் தேசிய, பிராந்திய, உள்ளூர் மட்டங்களில் தமது அரசியல் பிரதி நிதிகளினூடாக அரசியல் மற்றும் நிர் வாக ஆதிக்கத்தைப் பயனுறுதியுடன் பேணி, அதிகாரத்துவவாதச் சலுகை களையும் பெற்று வருகின்றன. இது ஒரு பரந்த வீச்சிலான உயர்வான சலுகைகளையும், சமூக முன்னேற்ற விவகாரங்களையும் கொண்ட நகர்ப் புற மற்றும் அரை - நகர்ப்புற முதலா ளித்துவ மற்றும் குட்டி முதலாளித் துவ பொருளாதார தொழில்நுட்பத் தைச்சார்ந்து வாழும் வர்க்கங்களை உருவாக்குகின்றது.

இத் தரகுமுதலாளித்துவ நிகழ்ச்சி நிரல், புதிதாகப் பரிணமிக்கும் சிங்கள வர்த்தக, வாணிப மற்றும் கைத்தொழில் முதலாளித்துவ வர்க் கத்தின், ஒடெல், கீல்ஸ் மற்றும் சின்ன மன் கிராண்ட் போன்ற இடங்களில் பெரிதும் காணப்படும். ஆடம்பர வாசஸ்தல தொகுதிகளில் வாழும், ஆறு கார்களில் வலம் வரும், தமது பிள்ளைகளைச் சலுகைமிக்க வர்க்கத் தினரின் கல்வி நிறுவனங்களில் கல்வியூட்டும் நபர்களின் வாழ்க்கை முறையுடன் இணங்கிச் செல்கின்றது. இது பௌத்த குருமாரை உரு வாக்கும் பின்தங்கிய, மூடநம்பிக்கை நிறைந்த கிராமிய சிங்கள மக்களின் விடயங்களுக்கு நேர்மாறான ஒன்றா கும்.

இம்மதக் குருமாரின் அதிகாரப் படி நிலை சலுகைகளை மூடிமறைக்கும் பிற்போக்குத்தன்மை என்பவற்றின் சக்திவாய்ந்த அரசியல் மற்றும் தத்து வார்த்த நிறுவனங்களாக மாறியுள் ளன. இது காலங்கடந்த நிலப்பிரபுத் துவவாதம் மற்றும் ஊழல், நட்பு, நவ காலனித்துவ முதலாளித்துவம் என்ப வற்றுக்கிடையிலான ஓர் அரசியல் உறவாகவும் உள்ளது. ராஜபக்ஷ நிகழ்ச்சிநிரல் ஒரு முழு வீச்சிலான ஊழல் நிறைந்த நிதித் தரகர்கள், வியாபாரிகள், பணம் பறிப்போர், போதை வஸ்து வியாபாரிகள், யுத் தப் பிரபுக்கள் மற்றும் சூதாட்ட விடு திச் சொந்தக்காரர்கள் என்போர் மத்தி யில் நிலைபேறாக்கப்பட்ட ஓர் அரசியல் பொருளாதாரத்தினால் இயங்கப்படுகின்றது. இவர்கள் நட்பு - மாபியா- போதைப்பொருள் வியா பாரிகள் என்போரைக் கொண்ட ஒரு முழு வீச்சிலான முதலாளித்துவ வர்த்தகர்கள் ஆவர். இப்பொருளா தார, அரசியல் தத்துவார்த்தக் கூட் டங்களை ஒன்றிணைத்தல் அதன் விளைவு பூரணமான, ஆதிக்கவாத, அதிகார ஆட்சிக்குழுவாகும். இது கேள்விக்கிடமற்ற, பிரிவடையாத சர் வாதிகாரத்தைப் பிரயோகிக்கக்கூடிய தாகும். இந்த ஆட்சிக்குழு ஒரு ஐந்து நட்சத்திர ஜனநாயகப் போர்வையின் கீழ் அரை பாசிஸ வளர்ச்சி அம்சங்க ளுடனான ஆட்சியாக மாறியுள்ளது.

இத்தத்துவார்த்தமும், அதன் அரசி யல் நிகழ்ச்சிகளிலும் மிகவும் புத்தி சாதுரியமான முறையில் சக்தியற்ற, நம்பிக்கையற்ற அச்சவுணர்வு கொண்ட வெகுஜனங்களின் புனிதம் சம்பந்தமான உணர்வுகளின் உள்ளி ருந்து ஆட்டுவிக்கப்படுகின்றது. இவர்கள் சிங்களவராக இருப்பதி லும், பௌத்தர்களாக இருப்பதிலும் ஏதோவொரு சுய மதிப்பு, கௌரவம் மற்றும் பெருமை கொண்டவர்களாக உணர வைக்கப்படுகின்றனர். இது ஒரு வகையில் தவறாக வழிநடத்தப் படுவதும், தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்ளும் அகங்கார உணர்வுமா கும். இந்தப் போலியான உணர்வு மிகவும் மிருகத்தனமான இனப்படு கொலை மற்றும் இன வெறுப்பு உணர்வுகளைத் தூண்டுவதற்கும், பயன்படுத்தப்படலாம் என்பதோடு, அவ்வாறு பயன்படுத்தப்பட்டும் வந் துள்ளது.

இந்த வக்கிர, உள்ளுணர்வின் அனைத்துமடங்கும் பரவலும், ஆழ மும், சக்தியும் ''ஏகாதிபத்திய எதிர் ப்பு'', முதலாளித்துவ தேசிய பகட்டா ரவார வீறாப்புடன் சேருகையில் அது மேலும் சக்தி மிக்கதாகின்றது. வெளி நாடுகளிலிருந்தும், உள்நாட்டிலும் பகைவர்களால் சூழப்பட்டிருக்கும், முற்றுகை உணர்வை உருவாக்குவது ஆட்சிக்குழுவின் தேவையின் பிரகா ரம் இடம்பெறும் தீர்மானகரமான விடயமாகும். இது பயம் மற்றும் இருப்பு சம்பந்தமான ஓர் ஒருமைப் பாட்டை உற்பத்தி செய்கின்றது.

இது மிகவும் ''அபாயகரமான'' வேளையில் ஒரு கூட்டு, பழங்குடி வரலாற்று விதி சம்பந்தமான ஓர் உணர்வை ஏற்படுத்துகின்றது. இது அன்றாடம் சிங்களப் பொது மக்க ளின் நரம்புகளுள் பாய்ச்சப்படும், தேசாபிமான இரத்தமாகும். இது தமிழ்த் தேசிய இனத்தையும், ஏனைய தேசிய இனங்களையும் இனத்துவ, மத ஜனசமூகங்களையும் விழுங்கும் எதிரிகளாகச் சித்தரிக்கின்றது. ஆயு தப் படையினரின் நரம்புகளுள் செலு த்தப்படும் தத்துவார்த்த இரத்தம் இது வேயாகும். மிகவும் விந்தையான வர லாற்றுத் தர்க்கத்தில் LTTE அமைப் பின் அரை - பாசிச வாத, காட்டு மிராண்டிப் பயங்கரவாதம், அரசின் கட்டமைப்பு ரீதியான, முறைமை யான பயங்கரவாதத்துக்கு எதிர் வினையாக இடம்பெற்ற போதிலும், அது இந்த நிகழ்ச்சி நிரலுக்குத் துணை போயுள்ளது. இந்த அம்சங்கள் விம் பம் உற்பத்திசெய்யும் வடிவத்தில்

**விடுதலைப்புலிகள் அமைப்பு இராணுவ ரீதியாக அழிக்கப்பட்டதை தொடர்ந்து தமிழ் தேசத்தின் வரலாற்று அந்தஸ்தை அழிக்கும் அரசியல்- அரசியலமைப்பு முயற்சி இடம்பெறுகிறது. ஒரு தேசம் என்ற வகையில் தமிழ் மக்களின் இருப்பு தீர்மானிக்கப்படவிருக்கிறது**

ஒன்றிணைக்கப்படும் போது, அது பழங்கதைகளிலுள்ள விமோசன மளிப்பவன்ஃ போர்ரன் என்னும் தோற்றத்தை ஆளும் மன்னனுக்கும், அரசுக்கும் பரிவாரங்களுக்கும், இராச் சியத்துக்கும் வழங்குகின்றது.

மேலும், இரும்புப் பிடிச் சர்வாதி காரம் எவ்வகையிலும் தளர்வடை வது காற்றை வெளியேற்றி அனைத் தையும் சரித்து விழச்செய்துவிடும். ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியும் அதன் வர்க்கத் தோழர்களும், மக்களை அச்சுறுத்தி வாழ்க்கை நடத்தும் ஊழல் குற்ற வியல், ஒட்டுண்ணி ஏஜண்டுகளும் ஒரு புரட்சிகர மக்கள் நியாய சபை யின் முன்னால் நிற்க முடியாதவர்கள் ஆவர். ராஜபக்ஷ ஆட்சிக்குழுவி னால் இது முடியாது. ரணில் விக் கிரமசிங்கவின் நோய்ப்பாவனைகள், முதுமைத் தளர்ச்சி மற்றும் அரசியல் ஆற்றலின்மை அனைத்தும் இந்த முதலாளித்துவ சர்வாதிகார முறை மையைப் பாதுகாக்கும் விளையாட் டின் ஒரு பகுதியே ஆகும். வெகு ஜனங்கள் கப்பலை நடுக்கடலில் புரட் டிப்போடும் வேளையில் படகை ஆட்ட முடியாது.

''ராஜபக்ஷ ஆட்சிக் குழுக்களைக் கவிழ்ப்பது தற்போதைய நிகழ்ச்சி நிர லில் இல்லை'' என்று பிதற்றுவதன் மூலம் எதிர்க்கட்சித் தலைவர் இதையே கருதுகிறார். ''தற்போது தேவைப்படுவது 17ஆவது திருத் தத்தை மீண்டும் கொண்டு வருவதே யாகும்'' என்றும் அவர் கூறுகின்றார். இரத்தம் சிந்துதல் முடிவுற்றதும், அவர் ஒரு புதிய அரசியலமைப்பி னால் களையைத் துடைத்துவிட்டு, சுத்தமான ரேட்டை அணிந்து கொண்டு, சந்திரிகா செய்தது போன்று மீண்டும் விளையாட்டைப் புதிதாக ஆரம்பிக்க எண்ணுவார். ஜனநாயகத் தின் பெயரில் மீண்டும் இனப்படு கொலை இரத்தக்கறை சிந்துவதே நோக்கமாகும்.

பரிணமிக்கும் அரசியல் கட்சி நிலையும், 13ஆவது அரசியலமைப் புத்திருத்தம் சம்பந்தமான கழுத் தறுப்பு நாடகமும், வட மாகாண சபை க்கான உத்தேசத் தேர்தலும் மிக வும் முக்கியமானவையும், தீர்மானக ரமானவையுமாகும். இது எமது நாட் டின் எல்லைகளுக்குமப்பால் பார தூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். தமிழ்த்தேசிய இனத்தினதும், இலங்கை மக்களினதும், எதிர்காலம் பல்வேறு ஏகாதிபத்திய மற்றும் பிரா ந்திய ஆதிக்கவாதச் சக்திகளிடையி லும், கூர்மையாகும் பகைமை மற் றும் போட்டி என்பவற்றாலும், இந்த முறைமையைப் பேணி வரும் பொம்மை, நவ காலனித்துவ ஆளும் வர்க்கத்தின் பாத்திரத்தினாலும் தீர்மா னிக்கப்படும்.




13ஆவது அரசியல் திருத்தத்தை யும் வட மாகாண சபைக்கான உத்தே சத் தேர்தலையும் அரசியல் மேடை யில் நடு நாயகமாக்கும் தீவிர முயற் சிகள் இடம்பெற்றுவருகின்றன. இப்பிரச்சினை மிகவும் தீர்மானகர மான அரசியல் மோதலாகத் தீவிரம டைந்து வருகின்றது. ஒரு தேசம் என் றவகையில் தமிழ் மக்களின் இருப்பு தீர்மானிக்கப்படவுள்ளது. LTTE அமைப்பு இராணுவ ரீதியாக அழிக் கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்த் தேசத்தின் வரலாற்று அந்தஸ்தை அழிக்கும் அரசியல் - அரசியலமை ப்பு முயற்சி இடம்பெறுகின்றது.

பொதுபல சேனா,ராவண பலகாய, சிங்கள ராவய, மகாசேனா படைப்பி ரிவு, என்பவை இந்த நிகழ்ச்சி நிரலில் அதிரடித் துருப்பினராகவுள்ளனர். ஜாதிக்க ஹெல உறுமயவும் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்ன ணியும் அரைப் பாசிஸத்தின் எழுச்சி யின் முன்னணியில் உள்ளதால் பரி ணாமித்து, கூர்மையடையும் இந்தப் பலமுறை சந்திப்பு மிகவும் தீர்மான கரமானதாக அமையும். 13ஆவது திருத்தத்தைப் பாதுகாப்பது தமிழ்த் தேசத்தின் பிரச்சினை மாத்திரமல்ல, அது இலங்கையில் அரை - பாசிஸ வாத சர்வாதிகாரத்துக்கு எதிராக சுதந் திரத்தையும், ஜனநாயகத்தையும் பாதுகாக்கும் தீர்மானகரமான வர லாற்றுப் போராட்டமும் ஆகும். ■

*எழுதியவர் இலங்கை கம்யூ னிஸ்ட் கட்சியின் (மாவோயிஸ்ட்) செயலாளர் ஆவார்.*

# கல்லறைக்குப் போன காதல்

எம்.கே.

‘இது கொலையாக இருக்குமோ என்று சந்தேகப்படுகிறோம். இது காதலுக்கு எதிராக நடக்கவில்லை. குறிப்பிட்ட ஒரு கட்சியினர் தாங்கள் இழந்துவிட்ட செல்வாக்கை மீட்டெடுக்க இந்த காதல் திருமணத்தை அரசியலாக்கி விட்டார்கள்’ என்கிறார் விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன்

‘என் தந்தை இறந்த பிறகு, என் காதலனுடன் வாழ்வதில் எவ்வளவு சந்தோஷம் கிடைப்பதாக இருந்தாலும், அவர் வேண்டாம்’ - இதுதான் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஜூலை 1ஆம் திகதி நடைபெற்ற வழக்கு விசாரணைக்குப் பிறகு வெளியே வந்து திவ்யா அளித்த பரபரப்புப் பேட்டி. இந்தப் பேட்டி காதலன் இளவரசனின் இதயத்தில் பாய்ந்த இடியாக மாறியது. ‘‘அவள் வருவாள். எப்போது வந்தாலும் ஏற்றுக் கொள்ளத் தயார்’’ என்று நம்பிக்கையின் சிகரத்தின் மீது அமர்ந்திருந்த இளவரசன் உயிருக்கு உயிராக நேசித்த திவ்யாவின் இந்த அதிரடிப் பேட்டியில் சிதைந்து போனார். ‘‘இனி வாழ்வதற்கு என்ன இருக்கிறது?’’ என்ற முடிவிற்கு வந்த இளவரசன் தன் உயிரை மாய்த்துக் கொள்ள முடிவு செய்தான். ‘‘அன்பை’’ அரசியலும், சாதியும் ஒன்றாக நின்று அடித்துக் கொன்ற சம்பவமாக ‘இளவரசன்- திவ்யா’ காதல் மாறி, இன்று தமிழகத்தை உலுக்கிக் கொண்டிருக்கிறது.

ஜூலை முதல் நாள் திவ்யாவின் பேட்டி. 4ஆம் திகதி இளவரசன் தற்கொலை. ஒன்பது மாத அவர்களின் காதல் போராட்டம் ஒரு நொடியில் முடிவுக்கு வந்து விட்டது. இருவரும் ஒருவரையொருவர் மனதார காதலித்தவர்கள்தான்.





அதற்குரிய வயதை எட்டவில்லை என்ற காரணத்தைச் சொல்லி 'சாதி' தலைதூக்கி நின்றது. வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்த திவ்யாவும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த இளவரசனும் கைகோர்த்த சம்பவம், அந்த சமுதாய த்தை நம்பி அரசியல் நடத்திக் கொண்டிருக்கும் தலைவர்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்தது. குறிப்பாக அடுத்தடுத்து தேர்தல் தோல்விகளைச் சந்தித்துக் கொண்டிருந்த பாட்டாளி மக்கள் கட்சி இந்த காதல் பிரச்சினையை தன் கையிலெடுத்தது. வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் எப்படி தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பெண்ணை திருமணம் செய்து கொள்ளலாம் என்று தர்மபுரியில் உள்ள அக்கட்சியினர் கிளப்பிய போர்க்கொடி, தர்மபுரி காதல் திருமண விவகாரத்தை முன்வைத்து பெரும் கலவரமாக மாறியது.

திவ்யாவும், இளவரசனும் காதல் திருமணம் செய்து கொண்டனர். அக்டோபர் 10ஆம் திகதியிலிருந்து நவம்பர் 6ஆம் திகதி வரை, அதாவது 27 நாள் தர்மபுரி 'கலவரபுரியாக' மாறுவதற்கான களம் ரெடியாகிக் கொண்டிருந்தது. காதலர்கள் நிம்மதியாக இருந்தாலும், காதலை எதிர்ப்பவர்கள் சும்மா இருக்கவில்லை. 'என் பெண் திருமணம் செய்து கொண்டு விட்டாள். சரி. அவள் நல்லா இருந்தால் போதும்' என்ற மனநிலையில்தான் அவரது தந்தை நாகராஜன் இருந்தார். ஆனால், விதி வலியது. விளையாடியது. மகள் திருமணமான 28ஆவது நாள் நாகராஜன் திடீரென்று தற்கொலை செய்து கொண்டார். அவ்வளவுதான்! தர்மபுரி கலவரபூமியாக மாறியது. அங்குள்ள நத்தம் காலனி, அண்ணாநகர், கொட்டாம்பட்டி ஆகிய கிராமங்கள் சூறையாடப்பட்டன. அங்கு வசித்தவர்கள் எல்லாம் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். தர்மபுரி மாவட்டம் பொதுவாக வன்னியர் சமுதாயத்தினர் அதிகம் வாழும் பகுதி என்பதால், இந்தக் கலவரம் காவல்துறை கட்டுப்பாட்டிற்குள் வரவே சில நாட்கள் பிடித்தது. பிறகு 146 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டு, இறுதியில் இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி. பொலிஸாரின் விசாரணைக்கு மாற்றப்பட்டது.



கலவரம் சற்று ஓய்ந்தது. திருமணமான ஆறு மாதங்கள் கழித்து, 'என் மகளை சட்டவிரோதமாக அடைத்து வைத்துள்ளார்கள்' என்று திவ்யாவின் தாய் தேன்மொழி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அந்த வழக்கு விசாரணையில்தான் இத்தனை அதிரடித் திருப்பங்களும் ஏற்பட்டு, இறுதியில் இப்போது இளவரசனின தற்கொலையில் முடிந்திருக்கிறது. தர்மபுரி அரசு கலைக்கல்லூரிக்கு பின்புறம் உள்ள ரயில்வே தண்டவாளத்தின் பக்கத்தில் இளவரசன் உடல் மூளை சிதறிய படி கிடந்தது. பார்த்தவர்கள் திடுக்கிட்டுப் போனார்கள். அதில் கூட உடல் கிடந்த இடம் 'ரயில்வே பொலிஸின் கட்டுப்பாட்டில் வருகிறதா' அல்லது 'சட்டம் ஒழுங்கு பொலிஸின் கட்டுப்பாட்டில் வருகிறதா' என்று முதலில் சர்ச்சை வெடித்திருக்கிறது. அங்கு முழு பலத்தில் பொலிஸ் வருவதற்கு கூட சற்று தாமதமானது. ஒரு வழியாக தர்மபுரி எஸ்.பி. அஸ்ரா கார்க், சேலம் ரேஞ்ச் டி.ஐ.ஜி சஞ்சய் குமார் பெரும் பொலிஸ் பட்டாளத்துடன் ஸ்பாட்டிற்கு வந்தார்கள். சடலத்தின் அருகில் பீர்பாட்டில், வாழைப்பழம், பை போன்றவை கிடந்திருக்கின்றன. அனாதையாக நின்ற பைக் பார்த்தவர்களை கண்கலங்க வைத்தது. இளவரசனின் தந்தை இளங்கோ, தாயார் அம்சவேணி ஆகியோர் ஓடி வந்து கதறி அழுததும், தலையில் அடித்துக் கொண்டு ஒப்பாரி வைத்ததும் நெஞ்சை பிளக்க வைக்கும் காட்சிகள்!

''அவள் வருவாள் என்று காத்திருந்தான். அவதான் வரமாட்டேன்னு சொல்லிட்டாளே. எங்களுக்கு எல்லாம் தைரியம் சொன்னவன். இப்படிப் போயிட்டானே'' என்று இளவரசனின் தந்தை தலையில் அடித்துக் கொண்டு அழுதார். ஆறுதல் சொல்வதற்கு அங்கே யாரும் இல்லை. பெற்ற தாய் வயிற்றில் அடித்துக் கொண்டு

இளவரசனை கட்டிப் புரண்டு கதறியது கல் நெஞ்சமும் கரையும் விதத்தில் இருந்தது. பொலிஸார் உடலைக் கைப்பற்றி உடனடியாக பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார்கள். பொலிஸ் தரப்பில், ''மும்பை குர்லா எக்ஸ்பிரஸ் ரயிலில் விழுந்து இளவரசன் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார். அது பற்றி விசாரித்து வருகிறோம். போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் வந்ததும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று கூறுகிறார்கள். ஆனால் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனோ, ''இளவரசனின் தலையில் ஒரேயொரு இடத்தில் அடிபட்டிருக்கிறது. ரயில் மோதியிருந்தால் உடல் சுக்கு நூறாக நொறுங்கிப் போயிருக்கும். ஆனால் உடலில் வேறு எங்கும் காயங்கள் இல்லை. அதனால் இது கொலையாக இருக்குமோ என்று சந்தேகப்படுகிறோம். ஆகவே இது பற்றி ஹைகோர்ட் நீதிபதி தலைமையில் நீதிவிசாரணைக்கு உத்தரவிட வேண்டும்'' என்று கோரிக்கை வைத்துள்ளார். அது மட்டுமல்ல, ''இது காதலுக்கு எதிராக நடக்கவில்லை. குறிப்பிட்ட கட்சியினர் தங்கள் கட்சி செல்வாக்கு இழந்து விட்டது. அந்தச் செல்வாக்கை மீட்டெடுக்க இந்த காதல் திருமணத்தை அரசியலாக்கி விட்டார்கள். அது பற்றியும் விசாரிக்க வேண்டும்'' என்றும் கூறியிருக்கிறார்.

இதேபோல் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி சிவகாமி, ''இதை தற்கொலை என்று அனைவரும் சொல்வதை முதலில் எதிர்க்கிறேன். எந்தக் காயமும் இன்றி ஒருவர் எப்படி ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொள்ள முடியும். கொலையை மறைக்கவே எடுத்த எடுப்பிலேயே இதை தற்கொலை என்கிறார்கள். அதைக் கண்டிக்கிறேன்'' என்று கூறியிருக்கிறார். அதேமாதிரி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் இன்னொரு முக்கிய தலைவர் ரவிக்குமாரும், ''இது தற்கொலை என்பதற்கான ஆதாரங்கள் இல்லை. இது பற்றி தீவிர விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். நீதி விசாரணையே உண்மைகளைக் கொண்டு வரும்'' என்று அழுத்தம் திருத்தமாக சொல்லியிருக்கிறார். ''திவ்யா இனி திரும்பவும் கிடைக்க மாட்டாள் என்பதை உணர்ந்த இளவரசன் ஒரு கட்டத்தில் ஏதாவது வேலைக்குப் போகலாம் என்ற மன நிலைக்கு வந்திருக்கிறான். ஆனால் 'காதல் நினைவுகள்' அவனது மனதை கசக்கி எறிந்து விட்டது. இப்படியொரு விபரீத முடிவிற்கு போய் விட்டான்'' என்று அவனது உறவினர்களும் சொல்லி புலம்புகிறார்கள். இளவரசனின் சடலம் கிடந்த இடத்தில் சிதறிக்கிடந்த பையில் 'திவ்யாவும்- இளவரசனும்' ஒருவருக்கொருவர் எழுதிக் கொண்ட காதல் கடிதங்கள் சிக்கியுள்ளன. உணர்ச்சி பெருவெள்ளத்தில் உருவாக்கப்பட்ட அந்தக் கடிதங்களை தன் ரத்தத்தில் நனைத்து விட்டுச் சென்று விட்டான் இளவரசன்!

இந்தக் காதல் திருமண விவகாரத்தை சென்னை உயர்நீதிமன்றம் தீர்த்து வைப்பதாக இருந்தது. மார்ச் 13 அன்று தொடரப்பட்ட 'ஆள் கொணர்வு மனு' மீதான தீர்ப்பு ஜூலை 5ஆம் திகதி வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், நீதிமன்றம் தீர்ப்பு சொல்லும் முன்பே தனக்குத் தானே தீர்ப்பு எழுதிக் கொண்டு விட்டான் இளவரசன். காதல் திருமணம் பற்றிய தீர்ப்பு வெளிவர வேண்டிய தினத்தில் அவன் தேடிக்கொண்ட தீர்ப்பு ''தற்கொலையா'' அல்லது ''கொலையா'' என்பது பற்றிய போஸ்ட் மார்ட்டம் நடைபெறும் சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. ''கொலை வழக்கு பதிவு செய்ய வேண்டும்'' என்று ஜூலை 5ஆம் திகதியன்று இளவரசன் உடல் இருக்கும் அரசு மருத்துவமனை முன்பு அவரது உறவினர்கள் போராட்டம் நடத்தும் துயர நிலை தோன்றிவிட்டது. ''அவசர அவசரமாக போஸ்ட்மார்ட்டம் செய்கிறார்கள்'' என்ற குற்றச்சாட்டும் கிளம்ப, ஒரு கட்டத்தில் போஸ்ட் மார்ட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டிய கட்டாயம் கூட டாக்டர்களுக்கு ஏற்பட்டது. இந்த ஒன்பது மாத காதல் போராட்டம் டாக்டர் ராமதாஸ் தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சிக்கும், திருமாவளவன் தலைமையிலான விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கும் தமிழகத்தில் ஒரு மாபெரும் ''மகாபாரதப் போரை'' கொண்டு வந்து நிறுத்தியது. இரு தலைவர்களும் தங்கள் தரப்பு வாதத்தை எடுத்து வைத்து போராட்டங்கள் நடத்தினர். ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். தலைவர்களைச் சந்தித்தனர். ஆனால், இவர்களது அரசியல் இரு கட்சிகளின் எதிர்கால வாக்கு வங்கிக்கு உதவியதே தவிர, ''இரு மனமும் சங்கமித்த'' அந்த ''திவ்யா- இளவரசன்'' காதலைச் சேர்த்து வைக்க உதவவில்லை. அது மட்டுமல்ல, இனி இந்த இரு கட்சித் தலைவர்களும் மட்டுமன்றி, இரு சமுதாயத்தினரும் கூட இணைந்து பயணிக்க முடியாத ''கறுப்பு அத்தியாயத்தை'' இந்த காதல் திருமணத்தை முன்வைத்து உருவாக்கி விட்டார்கள்.

இதற்கிடையில் மரணமடைந்த இளவரசனின் வழக்கறிஞர் ரஜினிகாந்த், ''இளவரசன் தனியாகச் சென்றிருக்கிறார். அவர் தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது வேறு யாராவது ரயிலில் தள்ளி விட்டார்களா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதில் எங்களுக்கு சந்தேகம் இருக்கிறது. வன்னியர் சங்கத் தலைவர்கள் மீது புகார் கொடுப்போம்'' என்று பேட்டியளித்திருக்கிறார். அதே வேளையில் ''இளவரசன் வேண்டாம்'' என்று திவ்யா முடிவு எடுத்து பேட்டி அளித்ததற்கு வன்னியர் சங்கத் தலைவர்கள், பா.ம.க. தலைவர்கள்தான் காரணம் என்றும் ஒரு குற்றச்சாட்டு கிளம்பியிருக்கிறது. ஆனால் பா.ம.க. இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ், ''தன் காதல் பற்றி திவ்யா முடிவு செய்து கொள்ளட்டும். நம் கட்சித் தலைவர்கள் யாரும் தலையிடக்கூடாது என்று நாங்கள் கூறிவிட்டோம். திவ்யா சொல்வதற்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை'' என்று சில

***(52ஆம் பக்கம் பார்க்க...)***



# தெரிவுக் குழுவும் தெரியாத முடிவும்

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அரசு உறுப்பினர்கள் பெருவாரியாக சிங்களப்பேரினவாதிகள் என்று தமிழ்த் தலைமைகளால் சாயம் பூசப்பட்டோரே. அவர்களின் கொள்கைகள் அனைத்தையும் பேரினவாதம் என்ற கண்ணாடி மூலம் மாத்திரம் பார்க்கத்தொடங்கினால் தமிழ்த்தலைமைகள் அடையப்போகும் பயன் எதுவுமில்லை




என்.சத்தியமூர்த்தி

அதிகாரப் பகிர்வு மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து, அரசு முன்வைத்த பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் ஆளும் கூட்டணியின் உறுப்பினர்களை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அறிவித்துள்ளார். ஆனால், அதனைக் காரணம் காட்டி, செப்டெம்பர் மாதம் நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்ட வடக்கு மாகாண சபைத்தேர்தல் ஒத்திவைக்கப்படமாட்டாது என்றும் அரசு தற்போது உறுதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான அரசைப் பொறுத்தவரையில், தெரிவுக்குழுவும் முக்கியம், வடக்கு மாகாணசபைத் தேர்தலும் முக்கியம். மஹிந்தவின் இடத்தில் வேறொரு சிங்கள ஜனாதிபதி தற்போதைய அரசியல் மற்றும் சர்வதேசச் சூழலில் பதவி வகித்து வந்தாலும், இது போன்ற முடிவைத் தான் எடுத்திருப்பார்கள். தேர்தல் அரசியலை முன்னிறுத்திப்பார்க்கும் போது, அவர்கள் அனைவரும் ''பாலுக்கும் காவல், புனைக்கும் தோழன்'' என்ற நிலையிலேயே தொடர்ந்து வருகின்றனர்.

தெரிவுக்குழுவில் அரசு உறுப்பினர்கள் பெருவாரியாக 'சிங்களப் பேரினவாதிகள்' என்று தமிழ்த் தலைமைகளால் சாயம் பூசப்பட்டோரே அதிகம் உள்ளனர். ஆனால், அவர்களது கொள்கைகள் அனைத்தையும் பேரினவாதம் என்ற தங்களது கண்ணாடி மூலம் மட்டுமே தமிழ்த் தலைமைகள் தொடர்ந்து காணத் தொடங்கினால், அதனால் அடையப்போகும் பயன் எதுவும் இல்லை. அதற்கும் அப்பால் சென்று, அவர்கள் கூறும் இலங்கைத் தேசியம் மற்றும் பாதுகாப்பு கவலைகளையும் உள்ளடக்கி நோக்கினால் மட்டுமே சிறிதாவது தெளிவு பிறக்கும்.

அது போன்றே, சிங்களப் பேரினவாதக் கட்சிகளும், இனவாதத்திற்கும் அப்பால் சென்று, இலங்கையின் ஒற்றுமை மனதளவிலானது என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். உதட்டளவில் அவர்கள் பேசிய ஒற்றுமை தமிழ் மனங்களை மாற்றிவிடவில்லை என்பதையும் அவர்கள் உணர்ந்து செயல்பட்டால் மட்டுமே ஐக்கிய இலங்கையின் எதிர்காலம், அவர்கள் எதிர்பாக்கும் வண்ணம்



தெரிவுக்குழுவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் யாரும் இடம்பெறாதது நெருடலாக உள்ளது. அரசில் அங்கம் வகிக்கும் தமிழ் பேசும் மக்களின் கட்சிகளில் முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமே தெரிவுக்குழு விடயத்தில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளது. இது தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு பின்னடைவு என்று கருத இடமுண்டு

சிறப்பாக அமையும். அல்லாது, இரு தரப்பினரும் வறட்டு வேதாந்தம் பேசினால், இன்னும் ஒன்றும் இல்லாமல் போகப்போவது தமிழ் இனம். அதன் காரணி என்ற விதத்தில் சிங்கள-பௌத்த பேரினவாதமும் அரசியல் சூழலில் காணாமல் போய் விடும்.

### எங்கே முஸ்லிம் காங்கிரஸ்?

தெரிவுக் குழுவில் அரசு சார்பு உறுப்பினர்களில், வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஈ.பி.டி.பி கட்சியின் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இடம் பெற்றுள்ளார். அது போன்றே தமிழ் பேசும் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதியாக அமைச்சர் ரிஷாட் பதியுதீன் நியமிக்கப்பட்டுள்ளார். மலையகத் தமிழர்களின் பிரதிநிதியாக முத்துசிவலிங்கமும் அமரவுள்ளார். ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் யாரும் இடம் பெறாதது நெருடலாக உள்ளது.

அண்மையில், அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்ற அரசின் முடிவிற்கு, முஸ்லிம் காங்கிரஸும் ஈ.பி.டி.பி-யும் கூட எதிர்ப்புத் தெரிவித்தன என்று செய்திகள் கூறின. அதன்படி, மாகாணங்கள் குறித்து சட்டம் இயற்றுவதற்கு மொத்த மாநிலங்களில் பெரும்பான்மை மாகாண சபைகள் ஆதரவு தெரிவித்தால் போதும் என்ற அரசின் முயற்சிக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. அதே சமயம், அரசின் மற்றொரு முயற்சியாக, இரண்டு மாகாணங்களை இணைப்பதற்கு ஜனாதிபதிக்கு தற்போதுள்ள அதிகாரத்தை பின்வாங்குவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆதரவு தெரிவித்ததாகவும் செய்திகள் கூறின. இதே நிலைப்பாட்டைத்தான் அரசில் அங்கம் வகிக்கும் தமிழ் பேசும் மக்களின் பிற பிரதிநிதித்துவ கட்சிகளும் எடுத்துள்ளன. ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமே தெரிவுக் குழு விடயத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இது தமிழ் பேசும் மக்களுக்கு பின்னடைவு என்று கருத இடமுள்ளது. அதேசமயம், தெரிவுக்குழுவின் முடிவு எதுவானாலும் அதற்கு சட்ட வடிவம் கொடுத்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். தெரிவுக் குழுவில் எடுக்கப்படும் முடிவுகள் மெஜாரிட்டி உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றிருக்க வேண்டும். அதேசமயம், பாராளுமன்றத்தின் முன் வைக்கப்படும் சட்ட முன்வடிவு, அரசியல்சாசன திருத்தமாகவே இருக்கும். அது நிறைவேற்றப்பட மூன்றில் இரண்டு பகுதி அங்கத்தவர்களின் ஆதரவைப் பெற்றிருக்க வேண்டும்.

தற்போது பாராளுமன்றத்தில் அரசிற்கு அத்தகைய ஆதரவு உள்ளது. அதே சமயம், அந்த உறுப்பினர்களில் 30 பேராவது, தற்போது அரசு முன் வைத்துள்ள அரசியல் சட்ட திருத்தங்களுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. அது போன்றே, ஹெல உறுமய கட்சி முன்வைத்துள்ள பதின்மூன்றாவது சட்டத் திருத்தத்தை நீர்த்துப்போகச் செய்யும் எந்த முயற்சிக்கும் தாங்கள் ஆதரவு தெரிவிக்கப் போவதில்லை என்றும் அவர்கள் கூறியுள்ளனர். அவர்களில் முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி, மற்றும் சிங்கள தரப்பைச் சேர்ந்த இடதுசாரிக் கட்சிகளும் அடங்குவர். ஏன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்களும் இந்தக் குழுவில் பங்குபெற்றுள்ளனர்.

### கூட்டமைப்பு என்ன செய்ய வேண்டும்?

தெரிவுக் குழுவில் தமது உறுப்பினர்களுக்கு இடம் கொடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், அமைச்சர் ரவூப் ஹக்கீம், அது போன்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அங்கு இடம் பெறவில்லை என்றால், அதன் நம்பகத்தன்மையே கேள்விக்குறி ஆகிவிடும் என்று கூறியுள்ளார். இது முற்றிலும் உண்மை. அதேசமயம், 'கிழக்கு-வடக்கு மறு இணைப்பு' போன்ற முக்கிய பிரச்சினைகளில் இந்த இரு கட்சியினரிடையேயும் அவர்கள் சார்ந்துள்ள சமூகத்தினரிடையேயும் கருத்து வேற்றுமைகள் உள்ளன.

அதேசமயம், தேசிய அளவில், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, அதிகாரப் பரவல் குறித்து எந்த வித திட்டத்தையும் முன்வைக்கவில்லை. அண்மையில் அந்தக் கட்சி வெளியிட்ட அரசியல் சட்ட மறு ஆய்வு குறித்த திட்டத்தில், 'அர்த்தமுள்ள அதிகாரப் பரவல்' செயல்படுத்தப்படும் என்ற மட்டில் தனது கொள்கையை ஒரே வசனத்தில் முடித்துக் கொண்டுள்ளது. ஏன், தற்போது பிரச்சினையின் மையமான பதின்மூன்றாவது திருத்தம் குறித்துக் கூட அந்தக் கட்சியின் அரசியல் சட்ட

பொதுசன நூலகம்



திட்ட வரைவு கருத்துக் கூறவில்லை. எதுவாக இருந்தாலும், அந்தக் கட்சி ஆட்சியில் இருந்தபோது நிறைவேற் றப்பட்ட பதின்மூன்றாவது திருத்தம் குறித்த நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டியது அவசியமாகியுள்ளது.

### ஒருதலை கணக்கீடு

கடந்த பல தசாப்தங்களாகவே 'சிங்களக் கட்சிகள்' அனைத்தும் ஒரே அணியில் நின்று தமிழர்களின் அரசி யல் அபிலாஷைகளை அழித்து வரு கிறது என்பதே தமிழர் தரப்பு வாதம். அதேசமயம், நிழல் எதிரிகளை முன் னால் நிறுத்தி வைத்துக்கொண்டு, தங் களது அரசியல் கணக்கீடு மட்டுமே வெற்றிபெறும் என்று ஒருதலைப்பட் சமாக திட்டம் தீட்டும் தமிழ் அரசி யல் தலைமைகள் சாதித்தது எதுவு மில்லை.

அந்த விதத்தில், இந்திய-இலங்கை ஒப்பந்தமும், அதன் அடிப்படையில் இரு மாகாண இணைப்பு மற்றும் பதின்மூன்றாவது திருத்தம் ஆகி யவை முன்னெடுக்கப்பட்ட காலகட் டத்தில் ஜனாதிபதி ஜெயவர்தனவின் பதவியும் அரசியலும் முடிவுக்கு வர அதிக மாதங்கள் இல்லை என்பதை தமிழ்த் தேசியத் தலைமை உணர வில்லை. அதன் அடிப்படையில், இந் தியாவை அவர்கள் அறிவுறுத்தவும் இல்லை. ஏன் கடந்த 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கூட் டமைப்பு சரத் பொன்சேகாவை ஆத ரித்தாலும், இன்று வரை அதிகாரப் பரவல் மற்றும் பதின்மூன்றாவது திருத் தம் குறித்து அவர் தெளிவான கருத்து எதனையும் கூறிவிட வில்லை.

அரசியல் ரீதியாக, கூட்டமைப்பும் சரி, இலங்கை தமிழ்த் தேசியவாதிக ளும் சரி, தாங்கள் உண்மையிலேயே ஒற்றைப்படுத்தப்பட்டு விட்டோம் என்பதை ஏற்றுக்கொண்டு தங்களது பண்டைய சித்தாந்தங்களையும் செயல்திட்டங்களையும் மறு ஆய்வு செய்ய வேண்டும். அது போன்றே தங்களது, தனி மனித மற்றும் சமூக எதிர்பார்ப்பின் அடிப்படையில் மட் டுமே கொள்கைகளை வகுத்துக் கொண்டு, 'தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்று சொல்லிக் கொண்டிருந்தால் அதனால் அடை யப்போவது எல்லாம் பெருத்த நஷ் டமே. அதனையே கடந்த காலம் முன்னிறுத்திக் காட்டும்.

அண்மைக்காலம் வரை தமிழ்த் தேசியத் தலைமைகள் பதின்மூன்றா வது திருத்தத்தை எதிர்த்தே அரசியல் செய்து வந்தனர். தற்போது முதலு க்கே மோசம் என்ற நிலைமை தோன் றியதும், இந்தியா சென்று வந்துள்ள னர். அங்கு பிரதமர் மன்மோகன் சிங் ஆறுதல் வார்த்தைகளை அளித்துள் ளார். பதின்மூன்றாம் சட்ட திருத்த மாறுதல் குறித்து இந்தியா கவலை அடைந்துள்ளதாகவும் தெரிவித்துள் ளார். எதிர்வரும் பொதுநலவாய உச்சி மாநாட்டை ஒட்டி, இந்தியா மற் றும் சர்வதேச சமூகத்தின் எதிர்ப்பை சம்பாதித்துக்கொள்ள இலங்கை அரசு விரும்பாது. ஆனால் அதுவே முடிந்த முடிவு என்றும் கருதிவிட முடியாது.

உச்சி மாநாட்டினை ஒட்டி, வடக்கு மாகாணத் தேர்தல் மற்றும் தெரிவுக் குழு போன்ற அரசியல் முனைவு களை அரசு கையில் எடுத்துள்ளது. அது போன்றே தற்போது இலங் கைக்கு விஜயம் செய்துள்ள தென்னா பிரிக்க அரசியல் குழுவின் முனைப்பு களையும் எடுத்துக்கொள்ள வேண் டும். அடிப்படையில், இரு நாடுக ளும் சந்தித்த உள்நாட்டுப் பிரச்சினை கள் வெவ்வேறானவை. இலங்கை யில் நடந்த அளவிற்கு அங்கு உள் நாட்டுப் போர் நிகழவில்லை. அது போன்றே அங்கு அரசியல் தீர்விற் குப் பிறகு அதிக எண்ணிக்கையில் உள்ள கறுப்பர் இனம் ஆட்சிக்கு வந் தது. இலங்கையில் நிலைமை அது வல்ல.

தற்போதைய சூழ்நிலையில், புதி தாக அதிக அதிகாரங்களை பெற்றுக் கொள்வதை விட, இருக்கும் பதின் மூன்றாவது திருத்தத்தை காப்பாற்றிக் கொள்வதே கூட்டமைப்பின் முன் னுள்ள முதல் கடமை. அதிக அதிகா ரங்களுக்கு தேவையான அரசியல் சட்டத் திருத்தத்திற்கு மூன்றில் இரண்டு பங்கு பாராளுமன்ற உறுப்பி னர்கள் ஆதரவு கொடுக்க வேண்டும். ஆனால், தற்போதுள்ள சட்டத்தை காப்பாற்றிக் கொள்ள, அரசு பக்கத் தில் உள்ள 30 உறுப்பினர்களுடன் எதிர்க்கட்சிகளும் இணைந்து செய லாற்றினால் மட்டுமே போதும்.

அதற்கான முயற்சியை கூட்ட



> தற்போதைய சூழ்நிலையில் புதிதாக அதிக அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதை விட, இருக்கின்ற 13ஆவது திருத்தத்தை காப்பாற்றிக்கொள்வதே தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் முன்னால் உள்ள முதல் கடமையாகும்

மைப்பு எடுக்க வேண்டும். அதன் அடிப்படையில், தெரிவுக் குழுவி லும் பங்கு பெறவேண்டும். அங்கும் சமகால அரசியல் நிலைமையை மன தில் வைத்துக்கொண்டு மட்டுமே செயலாற்ற வேண்டும். சர்வதேச சமூ கம் பிறரைப் பழிக்கலாம். ஏன், அவர் களுக்கு தண்டனை கூட வழங்க லாம். ஆனால், அவர்களால், சிங்கள மக்களின் மனதையும், சிங்களக் கட்சி களின் போக்கையும் மாற்றிவிட முடியாது. அது உள்நாட்டில், கலந்தா லோசனை மூலம் மட்டுமே சாத்திய மாகும். ■



பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க எம்.பி.

# இரு மகஜர்களும் கருத்தொருமிப்பைத் தூண்டுவதற்கான ஒரு முயற்சியும்

மாகாணங்களின் இணைப்பு தடை செய்யப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியுமானால் மாகாண சபைகளுக்கு கூடுதல் சுயாட்சி கொடுப்பது பற்றிய அச்சங்கள் தவறானவை.

அண்மையில் இரு வேறுபட்ட மகஜர்கள் எனக்குக் கிடைக்கப் பெற்றிருந்தன. ஒன்று இலங்கையில் சமாதானத்துக்கான உலகக் கூட்டமைப்பு (World Alliance For peace in Sri lanka) என்று தன்னை அழைத்துக் கொள்கிற அமைப்பின் மகஜர். மற் றையது வெள்ளிக்கிழமை கருத்துக் களம் Friday Forum என்ற அமைப்பிடமிருந்து வந்திருந்தது. இரண்டுமே முற்றிலும் வேறுபட்ட கருத்துக்கோணத்தில் அமைந்தவை. அரசியலமை ப்புக்கான 13 ஆவது திருத்தத்தை ஒழிக்க வேண்டுமென்று ஒன்று கோரிக்கை விடுத்த அதேவேளை, மற்றையது அந்தத்திருத்தத்தில் எந்தமாற்றத்தையும் செய்யக்கூடாது என்று வலியுறுத்தியது.

இரு தரப்புகளினதும் அச்சங்களை விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியம் என்று நினைக்கின்றேன். இரு தரப்புகளுமே தங்களினால் முன் வைக்கப்பட்ட நிலைப்பாடுகளுக்கான காரணங்களையும் விளக்கிக் கூறியிருந்தன. சமமான அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த மூன்று கோணங்களில் இருந்து இந்தப் பிரச்சினையை நாம் நோக்க வேண்டிய தேவையிருக்கிறது என்று எனது அபிப்பிராயமாகும்.

முதலாவது கோணம் நெறிமுறை சம்பந்தப்பட்டதாகும். அந்தக்கோணத்தில் நோக்கும்போது, தற்போதைய இலங்கை அரசாங்கம் மாகாண சபைகளை ஒழிப்பதென்பது முற்றிலும் பழைமையான ஒரு காரியமாகவே அமையும். ஏனென்றால், அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதாக அரசாங்கம் தெளிவாக உறுதியளித்திருந்தது. அந்தத்திருத்தத்துக்கு அப்பால் செல்லத்தயாராக இருப்பதாகவும் கூட அரசாங்கம் பல சந்தர்ப்பங்களில் வாக்குறுதி கொடுத்தது.

மாகாண சபைகளின் கையில் மிகவும் கூடுதல் அதிகாரங்கள் போய்ச் சேருவது நாட்டின் ஒற்றையாட்சித் தன்மை சீர்குலைக்கப்படக் கூடிய சூழ்நிலைக்கு வழிவகுக்கக்கூடும் என்று இலங்கையில் சமாதானத்துக்கான உலகக் கூட்டமைப்பு நம்புகிறது. இந்த அச்சம் ஆதாரமற்றது என்று நான் நம்புகிறேன். சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணான வகையில் இரு மாகாணங்கள் பலவந்தமாக இணைக்கப்பட்ட நேரத்தில், அத்தகைய அச்சத்தை என்னால் விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருந்தபோதிலும் கூட, இப்போது அந்த அச்சம் குறித்து நான் இத்தகைய கருத்தைக் கொண்டிருக்கிறேன். இந்தக் காரணத்தினால் நான் மாகாணங்களின் இணைப்புக்கு வகைசெய்கிற அரசியலமைப்பு ஏற்பாட்டை நீக்குவதில் தவறேதும் இருப்பதாக நான் காணவில்லை. மீண்டும் இணைப்பைக் கொண்டு வருவதென்பது தற்போதைய அரசாங்கத்தினால் அளிக்கப்பட்ட உறுதிமொழியின் ஒரு அங்கமல்ல. அரசியலமைப்புக்கு விரோதமானது என்று தீர்ப்பளிக்கப்பட்டதும் செப்பிடுவித்தை போன்ற காரியத்தின் ஊடாகச் சாதிக்கப்பட்ட முன்னைய செயற்பாடொன்றை இந்த அரசாங்கம் ஏற்று நடக்க வேண்டுமென்று வலியுறுத்துவது தவறாகவே அமையும்.

மாகாணங்களின் இணைப்பு தடை செய்யப்படுகிறது என்பதை ஏற்றுக் கொள்ள முடியுமானால், மாகாண சபைகளுக்கு கூடுதல் சுயாட்சி கொடுப்பது பற்றிய அச்சங்கள் தவறானவை என்று நான் கருதுகிறேன். ஆனால், இந்த இடத்தில்தான் நடைமுறை அம்சம் பற்றிய பிரச்சினை வருகிறது. ஏனென்றால், அதிகாரப் பரவலாக்கம் பற்றிய விவாதத்துக்கு அடிப்படையாக அமைந்த, அடிப்படையாக அமையவேண்டிய கோட்பாட்டை மாகாண சபைகளினால் நிறைவுபடுத்த முடியாது என்பது தெளிவானது. அரசாங்கத்தை மக்களுக்கு நெருக்கமாகக் கொண்டுசெல்

வதாகவே அதிகாரப் பரவலாக்கம் இருக்க வேண்டும் என்பதே அந்தக் கோட்பாடாகும்.

எவ்வாறெனினும், மாவட்ட சபைக ளுக்கு நகருவது பொருத்தமானதாக இருக்காது. ஏனென்றால், இது மாகாண சபைகளுக்குச் சவாலாக அமையும் என்பதுடன், ஒத்த நிருவா கங்கள் போன்ற சூழ்நிலைக்கு வழி வகுக்கும். அதன் காரணத்தினாற் தான், தற்போது இருக்கின்ற மாகாண சபைகளை எதிர்ப்பவர்களும் அவ ற்றை ஆதரிப்பவர்களும் உள்ளூராட் சிகளின் அதிகாரங்களை (குறிப்பாக, மத்திய அரசாங்கம் அல்லது மாகாண சபைகள் மக்களுக்குத் தேவைப்படு கிற சேவைகளை தற்போது வழங்கா மலிருக்கிற துறைகளில்) அதிகரிப் பதற்கு ஒன்றிணைய வேண்டும் என்று நான் நம்புகிறேன். தற்போது உள்ளூராட்சிகளின் பொறுப்பில் இருப்பதாகக் கருதப்படக்கூடிய வச திகளுக்கு மேலதிகமாக, கல்வி, சுகா தாரம், போக்குவரத்து மற்றும் கிரா மப்பகுதிகளுக்குக் கிடைக்காமல் இருக்கிற ஏனைய சேவைகள் தொடர் பில் தெளிவான பொறுப்புகளையும் அவற்றுக்கு ஒப்படைக்க வேண்டும்.

பரிசீலனைக்கு எடுக்கப்படவேண் டிய மூன்றாவது பரிமாணத்துக்கும் அதாவது, அரசியல் பரிமாணத்துக்கு இது உதவியாக அமையும். இந்த விடயத்தைப் பொறுத்தவரை நாம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அர சியலைப்பற்றி பரிசீலிக்க வேண்டிய தேவையிருக்கிறது. உள்நாட்டு அரசி யலில் நாம் கருத்தொருமிப்பை ஊக் குவிக்க வேண்டியிருக்கிறது. எந்த வொரு தரப்பினருமே தங்களது கருத்துக் கோணம் வெற்றிபெற வேண்டுமென்ற நோக்கில் செயற்பா டுகளை முன்னெடுப்பதைத் தவிர்க்க வேண்டும். மாகாணங்களின் இணை ப்பைத் தவிர்த்து மாகாண சபைகளுக் கான தற்போதைய ஏற்பாடுகளை (உள்ளூராட்சிகளைப் பலப்படுத்துவ தற்கான இணக்கப்பாட்டுடன்) ஏற்றுக் கொள்வது மக்களுக்கு திருப்திகர மானமுறையில் சேவை செய்ய உதவு வதுடன், இருதரப்பினரதும் அச்சங்க ளைப் போக்கவும் உதவும் என்று நான் நம்புகிறேன்.


இலங்கை விவகாரங்களில் அக் கறை கொண்ட சர்வதேச தரப்புக ளைத் திருப்திப்படுத்தவும் இது உத வும், பயங்கரவாதத்தை ஒழித்துக் கட் டுவதற்கான எமது முயற்சிகளை தடு த்துநிறுத்த முயற்சித்ததுடன் நின்று விடாமல், தற்போதைய அரசாங்கத்து க்கு மாற்றீடான ஒரு அரசாங்கம் பத விக்கு வரவேண்டுமென்ற விருப் பத்தை தெளிவாக வெளிக்காட்டவும் தயங்காத நாடுகளை மகிழ்விக்க வேண்டிய ஒரு தார்மீகக் கடப்பாடு எமக்கு இருப்பதாக நான் நினைக்க வில்லை என்கிற அதேவேளை, எம்மை ஆதரித்து நின்ற நாடுகளுக்கு நாம் விசுவாசமாக இருக்க வேண் டும். இத்தகைய நாடுகளில் இந்தியா இருப்பதாக நான் நம்புகிறேன். ஜப் பானும் இத்தகைய ஒரு நாடே என்ப திற் சந்தேகமில்லை. பிறிக்ஸ் (BRICS) என்று அழைக்கப்படுகிற பிரேசில், ரஷ்யா, சீனா, தென்னாபிரி க்கா போன்ற நாடுகளும் இஸ்லாமிய நாடுகள் அமைப்பின் உறுப்புநாடு களும் எமக்கு ஆதரவாகவே நின் றன. இலங்கையைப் பிளவுபடுத்துவ தற்கு மேற்கொள்ளப்படக்கூடிய எந்த வொரு எதிர்கால முயற்சியையும் கூட, இந்த நாடுகள் எதிர்க்கும் என் கிற அதேவேளை, எமது போர் நடவ டிக்கைகளின் போது நாம் விளக்கமா கக் கூறிநின்ற தாராளவாதம், பன் முகத்தன்மை மீதான பற்றுறுதியிலும் இந்த நாடுகள் நம்பிக்கை வைத்திருக் கின்றன. அவற்றை நாம் கைவிடலா காது. விரோதித்துக்கொள்தலாகாது.

சமுதாயத்தின் அடிமட்டத்தவர்க ளுடன் பரந்தளவிலான கலந்துரையா டல்களின் ஊடாக சகல குழுக்களுக் கும் மேலும் அதிகாரமும் உரிமையும் அளிக்கும் செயற்பாடுகளும் உள் ளூர்த் தேவைகளை கூடுதலான அளவுக்கு உணர்ந்து அரசாங்கம் முன்னெடுக்கக்கூடிய செயற்பாடு களும் இந்த நாடுகளுக்குத் திருப்தி யைத் தரும் என்று நான் நம்புகிறேன். இந்தியா நிச்சயமாக மகிழ்ச்சிய டையும். ஏனென்றால், ஏனைய நாடு களில் உள்ளதைப் போன்று இரண்டு அடுக்கு ஆட்சிமுறையைக் கொண்ட தாக இந்தியா இருப்பது மாத்திர மல்ல, பஞ்சாயத்துமுறையையும் அது அறிமுகப்படுத்தியிருக்கிறது. மேற்கூறப்பட்ட இரண்டு அடுக்கு ஆட்சி முறையை அடிப்படையாகக் கொண்டதே 13ஆவது திருத்தமா கும். முன்னர் எதிரெதிராக இருந்த குழுக்களுக்கிடையே சமாதானத் தைக் கொண்டு வந்த தென்னாபிரிக்க அரசியலமைப்பு உள்ளூராட்சி முறை க்குச் செய்யப்பட்ட மேம்பாட்டின் ஊடாக முற்போக்கான முறையில் மாற்றியமைக்கப்பட்டதையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். பெரு மளவிலான மத்தியமயப்படுத்தலை வலியுறுத்துவதன் மூலமாக அல்லது கூருணர்வுடனும் விளக்கமான அறி வுடனும் உள்ளூர்ப் பிரச்சினைக ளைக் கையாள முடியாத பெரிய அல குகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வலியுறுத்துவதன் மூலமாக இந்த சர் வதேச போக்குகளை நாம் அலட்சி யம் செய்யக்கூடாது.

ஷெனாலி வடுகே என்ற பத்தி எழுத்தாளர் பல பிரச்சினைகள் குறி த்து கூர்மையான நுண்ணறிவுத் திறம் கொண்டவர். ஆனால் அவருடன் ஒரு விடயத்தில் நான் முரண்படுகி றேன். மாகாண சபைகள் பலவற்றின் உறுப்பினர்களின் தரம் காரணமாக அவற்றை ஒழிக்க வேண்டுமென்று அவர் அண்மையில் வாதிட்டிருப்ப தைக் காணக்கூடியதாக இருந்தது. தனது வாதத்தை நிரூபிப்பதற்காக தான் வெறுக்கிற காரியங்களில் ஈடு படுகிற பல பிரதேச சபை உறுப்பினர் களை அவர் உதாரணம் காட்டியிருந் தார். தனது இந்த அளவுகோலை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரயோகிக்க அவர் நினைக்கவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானதாகும். அவரின் வாதத்தின் அடிப்படையில் நோக்கினால், சில உறுப்பினர்களின் நேர்மையற்ற செயல்களுக்காக சகல அரசியல் நிறுவனங்களையும் ஒழி க்க வேண்டும். இது ஏற்றுக்கொள்ள முடியாதது என்பது எனது

*(52ஆம் பக்கம் பார்க்க...)*

குமார் டேவிட்



# இலங்கைத் தமிழர் பிரச்சினையும் இந்தியாவும்

இலங்கைத் தமிழர் விவகாரத்தையே (யாழ்ப்பாணத் தமிழர் என்று தவறுதலாக அழைக்கப்படுகின்றவர்கள்) இக்கட்டுரை ஆராய்கிறது. மலையகத் தமிழர்களின் பிரச்சினையை இங்கு ஆராய்வுக்கு நான் எடுக்கவில்லை. இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொடங்கி உள்நாட்டுப் போரின் முடிவுவரையான நீண்டகால கட்டத்தையன்றி, மிகவும் அண்மைய வரலாறு மீதே நான் இங்கு கவனத்தைச் செலுத்துகிறேன். தமிழர் என்ற சொல் பயன்பாடு இலங்கைத் தமிழர்களை மாத்திரமே குறித்து நிற்கும். இந்தியாவுக்கும், உண்மையில் குறிப்பாக டில்லியில் உள்ள மத்திய அரசாங்கத்துக்கும் தமிழ் மக்க

**இந்திய – இலங்கை சமாதான உடன்படிக்கையை ஒருதலைப்பட்சமாகவும்கூட ரத்துச் செய்யலாம். ஆனால் அந்தளவு தூரத்திற்கு செல்வதற்கு ராஜபக்ஷ விரும்புவாரா?**

ளின் போராட்டத்துக்கும் இடையேயான பொதுவான உறவுமுறை தொடர்பில் கண்ணோட்டத்தைச் செலுத்தும் நான் எந்தவொரு அரசியல் தலைவருமோ அல்லது அரசியல் இயக்கமுமோ (ஜே.ஆர்.ஜெயவர்தன, பிரபாகரன், மகிந்த ராஜபக்ஷ அல்லது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு) இந்தியாவை பகைத்துக் கொண்டால் அல்லது அலட்சியம் செய்தால் பெரும் அனர்த்தங்களை எதிர்நோக்க வேண்டிவரும் என்ற முடிவுக்கு வருகிறேன்.

பிரபாகரன் ராஜீவ் காந்தியைக் கொலை செய்த போது அவர் ராஜீவ் காந்தியை மாத்திரம் கொல்லவில்லை. தனது புதை குழியையும் தோண்டினார். தமிழீழத்தை அடைவதற்கு இருந்திருக்கக் கூடிய கொஞ்சநஞ்ச நம்பிக்கையையும் இல்லாமல் ஒழித்தார். சின்னஞ்சிறியதொரு தீவில் இருக்கும் ஒரு பிடிவாதக்காரன், ஒரு குட்டிச் சர்வாதிகாரி இந்தியாவின் முன்னாள் பிரதமரை, மீண்டும் பிரதமராக வர இருந்தவரை கொலை செய்ய முடியுமென்றும் அவ்வாறு செய்துவிட்டு தானும் தனது இயக்கமும் மாண்டு போகாமல் தப்பித்துக்கொள்ள முடியுமென்று கற்பனை செய்ய முடியுமா? விடுதலைப் புலிகள் இந்தியாவைப் பகைத்துக் கொண்டு இந்திய மக்களை தங்களுக்கு எதிராகத் திருப்பிய கணமே உள்நாட்டுப்போரில் அவர்களுக்குத் தோல்வி நிச்சயமென்றாகிவிட்டது.

1980களில் ஜே.ஆர்.ஜெயவர்தன டில்லிக்கு ஆத்திரமூட்டிய போது, 1987ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியபோது அவர் இந்தியத் தலையீட்டினால் தடுத்து நிறுத்தப்பட்டார். அத்தலையீடே இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கும் இலங்கையின் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்துக்கும் வழி வகுத்தது. இந்தியாவின் ஆசீர்வாதத்துடன் ராஜபக்ஷ 2009இல் இராணுவ நடவடிக்கையை முழுமூச்சுடன் தீவிரப்படுத்தி போரை முடிவுக்குக் கொண்டுவரத் தீர்மானித்தபோது அவர் வெற்றி பெறுவதற்கு இந்தியா உதவியது. இன்று ராஜபக்ஷ வித்தியாசமான ஒரு விளையாட்டில் ஈடுபட்டிருக்கிறார். அவர் உறுதியான முறையில் வழிக்குக் கொண்டுவரப்படுவார் என்றே நான் எதிர்பார்க்கிறேன். சிங்களத் தேசியவாதிகளும் தமிழ்த்தீவிரவாதிகளும் விரும்பலாம் அல்லது விரும்பாமல் விடலாம். ஆனால், உண்மை என்னவென்றால், இலங்கையின் முக்கிய நிகழ்வுப் போக்குகளில் இந்தியா ஒரு தீர்க்கமான காரணியாகும்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க இந்தியாவுடனான உறவுகளை மிகவும் உன்னதமான முறையில் கையாண்டார். சிறிமா -சாஸ்திரி உடன்படிக்கை, கச்சதீவு இலங்கைக்கு கையளிக்கப்பட்டமை போன்ற நிகழ்வுகள் வெளியுறவுக் கொள்கையைப் பொறுத்தவரை சதிப்புரட்சிகள் போன்று நோக்கத்தக்கவை. சந்திரிகாவும் இந்தியாவுடனான உறவுகளை மிகவும் நியாயமான முறையில் கையாண்டார். 'யங்கி டிக்கி' என்று அழைக்கப்பட்ட சிடுசிடுப்பான அந்த ஜெயவர்தனவே இந்தியாவுடனான உறவுகளைப் பொறுத்

தவரை செய்யாத காரியங்களை கிறுக்குத்தனமான ராஜபக்ஷாக்கள் இப்போது செய்துகொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இந்தியா தொடர்பில் இந்த அரசாங்கத்துக்கு நிலையான தந்திரோபாயமோ அல்லது நன்கு சிந்தித்து வகுக்கப்பட்ட தந்திரோபாயமோ கிடையாது. அன்றாடம் ஏதோ அலுவல்கள் நடந்தேறிக்கொண்டுபோகின்றன.

இரு அரசுகளுக்கிடையிலான இந்தியா- இலங்கை சமாதான உடன்படிக்கையின் விளைவாகக் கொண்டு வரப்பட்டதே இலங்கையின் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தமாகும். அவ்வுடன்படிக்கை அரசியல் கட்சிகளுக்கிடையிலானதோ அரசியல் தலைவர்களுக்கிடையிலானதோ அல்ல. கைச்சாத்திட்ட இரு அரசாங்கங்களையும் அது கட்டுப்படுத்துகிறது. உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதற்குப் பின்னரான கால கட்டத்தில் இந்தியாவிலும் இலங்கை யிலும் பதவிக்கு வந்திருக்கக்கூடிய அரசாங்கங்களையும் அது கட்டுப்படுத்துகிறது. பரஸ்பர இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே அந்த உடன்படிக்கையை ரத்துச் செய்யலாம். அல்லது ஒரு தலைப்பட்சமாகவும் ரத்துச் செய்யமுடியும். ஆனால், அந்தளவு தூரத்திற்கு செல்வதற்கு ராஜபக்ஷ விரும்புவாரா? இந்த அரசாங்கம் அவ்வாறு செய்யக்கூடிய அளவுக்கு முட்டாள்தனமானது. ஆனால், அவ்வாறு செய்தால் அது டில்லியின் கைக்கட்டை அவிழ்த்துவிடும் என்பது மாத்திரம் நிச்சயமானது. டில்லி அதன் உளவு நிறுவனமான 'றோ'வை இவ்வளவு காலமும் ஓரளவுக்கு கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது என்பதை மறந்து செயற்படுவது விவேகமானதல்ல. இந்திரா காந்தியின் இரண்டாவது பதவிக்காலத்தின் (1980-84) அந்தப் பழைய நாட்கள் ஜே.ஆர்.ஜெயவர்தன ஓயாது பெருந்தொல்லைகளை அனுபவித்த கால கட்டமாகும் என்பதை மறந்து செயற்படுவதும் கூட விவேகமானதல்ல. அத்தகைய நாட்கள் மீண்டும் வராதிருப்பதையே ராஜபக்ஷ விரும்பக்கூடும் என்று நினைக்கிறேன்.

இலங்கை சுயாதிபத்தியம் கொண்ட ஒரு நாடு. 13ஆவது திருத்தம் தொடர்பில் விரும்பியவாறு செயற்படுவதற்கு அதனால் முடியும் என்று மரபுவழியாகச் சிந்தித்து விதிமுறைகளைக் கடுமையாக வலியுறுத்தும் பேர்வழிகள் இருக்கிறார்கள். 13ஆவது திருத்தத்தை இலங்கையினால் திருத்தவும் முடியும். ரத்துச் செய்யவும் முடியும். அல்லது குப்பைக் கூடைக்குள் போடவும் முடியும் என்று இந்தப்பேர்வழிகள் பேசுகிறார்கள். இது இந்திய-இலங்கை சமாதான உடன்படிக்கையை தூக்கியெறிவதற்குச் சமமானதாகும். இந்த வம்பளப்புக்காரர்களுக்கு யதார்த்த உலகைப் பற்றி உணர்த்தவேண்டியது அவசியமாகும். பெரியவல்லாதிக்க நாடுகளுக்கு (அமெரிக்கா, சீனா, ரஷ்யா மற்றும் இந்தியா போன்றவை) அவற்றின் எல்லைகளுக்கு அப்பாலும் நலன்கள் இருக்கின்றன. இந்த நாடுகள் அந்த நலன்களைப் பேணுவதற்காக கடுமையின்றி கனிவான முறையிலும் தங்கள் அதிகாரத்தைப் பிரயோகிக்க முடியும் அல்லது உரத்த தொனியுடன் கடுமையாகவும் பிரயோகிக்கவும் முடியும். இந்தியாவைப் பொறுத்தவரை அதற்கு மலையகத் தமிழர்களினதும் இலங்கைத் தமிழர்களினதும் நலன்களில் அக்கறையுண்டு. முஸ்லிம்களின் நலன்களிலும் ஓரளவுக்கு இந்தியாவுக்கு அக்கறையுண்டு. இந்துசமுத்திரப் பாதுகாப்பு போன்ற விவகாரங்களிலும் இந்தியா அதன் கவனத்தை உன்னிப்பாகச் செலுத்துவது இயல்பானதே, இவையெல்லாம் வாழ்வின் யதார்த்தங்கள். இவை குறித்து விழிப்புணர்வு தேவை.

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தவறைத் திருத்த வேண்டும்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னோடியான தமிழர் விடுதலைக் கூட்டணி கால்நூற்றாண்டுக்கு முன்னர் 13ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டபோது அதைப் புத்திசாலித்தனமற்ற முறையில் நிராகரித்துவிட்டது. இந்தத் தமிழர் விடுதலைக்கூட்டணி தான் தற்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியை பிரதான அங்கத்துவக்கட்சியாகக் கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னோடி. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இப்போது வடக்கில் மாகாண சபைக்கான தேர்தலை நடத்த வேண்டுமென்றும், 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கோரிக்கை விடுத்துக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். கடந்த காலத்தில் என்னதான் ஐயுறவுகள் இருந்தாலும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இப்போது 13ஆவது திருத்தத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டு அதை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கோரிக்கையை உறுதியாக முன்வைக்க வேண்டும். அவ்வாறு செய்யாதுவிட்டால், அது சகல வகையான முரண்பாடுகளுக்குள்ளும் சிக்கித் தவிக்க வேண்டிவரும்.

> கடந்த காலத்தில் என்னதான் ஐயுறவுகள் இருந்தாலும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இப்போது 13வது திருத்தத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டு அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை உறுதியாக முன்வைக்க வேண்டும். இல்லையேல் அது சகல வகையான முரண்பாடுகளுக்குள்ளும் சிக்கித்தவிக்க வேண்டி வரும்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வெளியே இருக்கிற சில தமிழ்க் கட்சிகள், குழுக்கள் (கூட்டமைப்புக்குள் இருக்கிற சில சக்திகளும் கூட) புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் இருக்கின்ற தீவிரவாதிகளிடமி

ருந்து நெருக்குதல்களை எதிர்நோக்குகின்றன. புலம்பெயர் தமிழ்ச் சமூகம் என்பது ஒரே தன்மையானதல்ல. அதற்குள் விடுதலைப் புலிகளின் எச்ச சொச்சங்கள் தொடக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற குழுக்கள் வரை பல்வேறு வகைப்பட்ட சக்திகள் இருக்கின்றன. ஆனால், தீவிரவாதப் போக்குக் கொண்டவையாக இருந்தாலென்ன, மிதவாதப் போக்குடையவையாக இருந்தாலென்ன அவை சகலதுமே சுயநிர்ணய உரிமையைப் பற்றியே பேசுகின்றன. 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை விடுப்பதன் மூலமாக சுயநிர்ணய உரிமையை அலட்சியம் செய்யப் போகிறீர்களா? என்று அவை கேள்வியெழுப்புகின்றன. இந்தக் கேள்விக்கு துணிச்சலுடன் உரிய பதில் அளிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

13ஆவது திருத்தத்தை நிராகரித்திருக்கும் பிரிட்டிஷ் தமிழ் அமைப்பு (British Tamil Forum) நாட்டுப் பிரிவினை தொடர்பில் உடனடியாக சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தவேண்டுமென்று கோரிக்கைவிடுத்து அர்த்தமில்லாத அறிவிப்பொன்றைச் செய்திருக்கிறது. குழப்பமான இந்தச் சிந்தனையை நான் மறுதலிக்கிறேன். இலங்கையில் உள்ள நிலைவரங்களைப் பற்றிய சரியான புரிதல் இன்றி பிரிட்டிஷ் தமிழ் அமைப்பு அபத்தத்தனமாக நடந்துகொள்கிறது என்பதே எனது உறுதியான அபிப்பிராயமாகும். வடமாகாண சபைத் தேர்தல் மற்றும் 13ஆவது திருத்தத்தை தளர்வுறச் செய்தல் தொடர்பில் பேரினவாதிகளுடன் ஒரு பெரிய சமர் இப்போது நடந்துகொண்டிருக்கிறது. பிரிந்து நிற்காமல் இந்தச் சமரில் களமிறங்கி பேரினவாதிகளை, இனவெறியர்களைத் தோற்கடிக்கவேண்டியதே தற்போதைய தருணத்தில் அத்தியாவசியமானதாகும். உள்நாட்டில் தமிழர்கள் மத்தியில் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் இருக்கின்ற முரண்டு பிடிப்புக்காரர்களுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தற்சமயம் முன்னுரிமை கொடுக்க வேண்டிய பணி எது என்பதை தெளிவுபடக் கூறிவிடவேண்டும். தற்போதைய போராட்டம் அடுத்து வரும் போராட்டங்களும் தோல்விகாணும் பட்சத்தில் சுயநிர்ணய உரிமையும் பிரிவினையும் மிகவும் பொருத்தமானவையாக இருக்கும். ஐக்கியப்பட்ட ஒரு இலங்கைக்குள் தங்களது ஜனநாயக உரிமைகளை, சமூக உரிமைகளை தமிழ் மக்களினால் தற்போதைய சூழ்நிலையில் வென்றெடுக்க முடியாமற் போகும் பட்சத்தில், அவை பொருத்தமானவையாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயம். அந்த நிலைவருமா? எனக்குத் தெரியவில்லை. பதில் செதுக்கப்பட்ட பளிங்குக் கோளம் எவரிடமும் இல்லை. ஆனால், முட்டாள்கள் மாத்திரமே யதார்த்த உலகில் காணப்படுகின்ற சமரில் முழுமனதுடன் முதலில் குதிக்காமல், உரிய காலத்துக்கு முன்னரே போராட்டத்தைக் கைவிடுவார்கள் என்பது எனது உறுதியாள நிலைப்பாடு. ■

---

*(44ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

தினங்களுக்கு முன்புதான் விலகிக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் இளவரசன் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படும் நேரத்தில் அந்த வழியாகச் சென்ற ரயிலின் எஞ்சின் டிரைவரிடம் பொலிஸ் தீவிர விசாரணை நடத்துகிறார்கள். இந்த விசாரணை யும், இளவரசனின் பிரேத பரிசோதனை அறிக்கையும் நடந்தது தற்கொலையா? கொலையா? என்பதை வெளிச்சத்திற்கு கொண்டு வரும். ஆனால் காதல் ஒன்று ''கறுப்பு அத்தியாயமாக'' மாறிவிட்டது. அது மட்டுமன்றி, காதல் கலவரமாக மாறி, இன்று இருவரின் உயிரைப் பறித்துக் கொண்டு போய்விட்டது. பெண்ணை பெற்றவர் ஏற்கனவே தற்கொலை செய்து கொண்டு விட்டார்! பெண்ணை மணந்தவரும் மரணமடைந்து விட்டார். முன்னது தற்கொலை என்று முடிவாகி விட்டது. ஆனால் இது தற்கொலையா? கொலையா? என்ற ''மர்ம முடிச்சு'' அவிழ தமிழகம் காத்திருக்கிறது. ஆனால், காதல் கல்லறைக்குப் போய்விட்டது! எஞ்சியிருக்கும் காதலி திவ்யா இனி மிஞ்சியிருக்கும் காலத்தில் ''பழிச்சொல்'' ''இழிச்சொல்'' படலத்தை சந்திக்க வேண்டிய இக்கட்டான நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்! ■




*(49ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

அபிப்பிராயம். ஆனால், பொறுப்புடைமையை கூடுதலான அளவுக்கு உறுதி செய்ய எமது தேர்தல் முறையை நாம் நிச்சயமாக மாற்ற வேண்டும். அதுமாத்திரமல்ல நிறைவேற்று அதிகாரப்பதவிகளுக்கு ஆட்களைத் தெரிவுசெய்வதற்கும் சிறந்த முறையொன்று குறித்தும் நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதியொருவரை நாம் தெரிவுசெய்வது போன்று உள்ளூராட்சி அமைப்புகளுக்கும் பிரதம நிறைவேற்று அதிகாரத் தலைவர் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டும் என்பது எனது சொந்த அபிப்பிராயம். ■

# ஆளும் கட்சிகளை அடித்துப்போடும் தெற்காசியத் தேர்தல் களம்

என்.எஸ்.



கடந்த மே மாதம் பாகிஸ்தான் தொடங்கி, அடுத்த ஆண்டு மே மாதம் முடிய தெற்காசியாவில் உள்ள அனைத்து நாடுகளிலும் தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல்கள் நடக்க உள்ளன. இதில் இலங்கை மட்டுமே விதிவிலக்கு. அந்த நாட்டில் தேசிய தேர்தல்கள் எதுவும் நடைபெறுவதற்கான காலம் நெருங்கவில்லை என்றாலும் அதனால் மட்டுமே, குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல் நடந்து விடாது என்று கூறிவிட முடியாது. அதை விட குறிப்பாக, சர்வதேசமும் உற்று நோக்கும் வட மாகாண சபைத் தேர்தல்கள் செப்டெம்பர் மாதம் நடக்கவுள்ளன. அத்துடன் மேலும் இரண்டு மாகாண சபைகளுக்கான தேர்தல்களும் நடைபெற வாய்ப்புகள் உள்ளன.

இந்த தேர்தல்களில் எல்லாம் மிக முக்கியமானது அடுத்த மே மாதம் நடைபெறவுள்ள இந்தியத் பாராளுமன்றத்தின் மக்களவைக்கான தேர்தல். அதுவே எதிர்வரும் நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்தில் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக செய்திகள் கருத்து தெரிவித்து வருகின்றன.

> இந்திய அரசியல் தலைமையில் மாற்றம் ஏற்பட்டால் அதனை அண்டை நாடுகள் கூர்ந்து கவனித்து அதனடிப்படையில் அவற்றின் கொள்கைகளை வகுக்க வேண்டியுள்ளது. இது போன்ற காரணங்களுக்காக இந்தியாவும் அண்டை நாடுகளின் தேர்தல்களை உற்று நோக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுகின்றது

இந்திய தேர்தலின் முக்கியத்துவம் அந்த நாட்டின் சனத்தொகை, ஜனநாயக மாண்பு, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது அல்ல. மாறாக, பாகிஸ்தான் உட்பட்ட தெற்காசிய நாடுகள் ஒவ்வொன்றும் இந்தியாவை முக்கியத்துவப்படுத்தியே தங்களது அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு குறித்த கொள்கைகளை வகுத்து வந்துள்ளன. அந்த வகையில், இந்திய அரசியல் தலைமையில் மாற்றம் ஏற்பட்டால் அதனை அண்டை நாடுகள் கூர்ந்து கவனித்து அதன் அடிப்படையில் தங்களது கொள்கைகளையும் வகுக்க வேண்டியுள்ளது.



சிறிதோ, பெரிதோ இந்தியாவும் இது போன்ற காரணங்களுக்காக அண்டை நாடுகளின் தேர்தல்களை உற்று நோக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறது. உதாரணத்திற்கு, வங்காள தேசத்தை எடுத்துக்கொண்டால், நாற்பது ஆண்டுகளுக்கு முன் அந்த நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்கு தலைமை வகித்த அவாமி லீக் கட்சிக்கு இந்தியா ஆதரவு தெரிவித்து வந்தது. அந்த ஒரே காரணத்திற்காக, பின்னர் உள்நாட்டு அரசியல் மாற்றங்களால் பதவிக்கு வந்த வங்காள தேச தேசியக்கட்சி, இந்தியாவை சந்தேகக் கண்ணுடனேயே பார்த்து வருகிறது. இன்னும் சொல்லப்போனால், அந்தக் கட்சியின் உள்நாட்டு அரசிய

லுக்கு இந்தியாவை அது பகடைக் காயாக பயன்படுத்தி வருகிறது.

இது போன்றே, நேபாளத்திலும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் அரசியலுக்கு வரும் முன்னர், அந்த நாட்டின் அப்போதைய மன்னராட்சி, மக்களாட்சிக்காகப் போராடிவந்த நேபாள காங்கிரஸ் கட்சிக்கு இந்தியா ஆதரவு அளித்து வந்ததாக சந்தேகித்தது. பின்னர் மாவோயிஸ்ட் கட்சியோ, இந்தியா தங்களை ஆதரிக்கவில்லை என்று குற்றம் சாட்டியது. இந்தியா, சோவியத் யூனியனின் கைப்பாவையாகச் செயல்படுகிறது என்று மேலை நாடுகள் குற்றம் சாட்டி வந்த காலகட்டத்தில், இலங்கையில் ஜே.வி.பி, இந்தியாவை எதிர் நாடாகவே கருதி அரசியல் செய்து வந்தது. ஜே.வி.பி நிறுவனர் ரோஹண விஜயவீரவின் 'ஐந்து சித்தாந்தங்களில்' நடுவான 'இந்திய எதிர்ப்பு' இன்னமும் அந்தக் கட்சியின் கொள்கையாகவே தொடருகிறது.

ஏன், அண்மையில் ஜனநாயகப்பாதையில் அடியெடுத்து வைத்த மாலைதீவு போன்ற குட்டி நாட்டில் கூட, உள்நாட்டு அரசியலில் இந்தியா மையப்படுத்தப்பட்டு வருகிறது. அங்கு கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் பதவி இழந்த ஜனாதிபதி முகமது நஷீத், பின்னர் பதவியேற்ற துணை ஜனாதிபதி வாஹீத் ஹுசைன் அரசை இந்தியா ஏற்றுக்கொண்டதைச் சாடினார்.

அப்போது பதவியில் இருந்த இந்தியத் தூதுவரையும் அவர் விட்டுவிடவில்லை. பின்னர், அவரே சமாதானம் அடைந்தார். புதுடில்லி சென்று இந்திய அரசு தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். ஏன், தனக்கு எதிரான குற்றவியல் வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருக்க இந்திய தூதுவரகத்தில் புகுந்து, பிரச்சினை ஆக்கினார். தற்போது நஷீதிற்கு எதிரான மாலைதீவு அரசியல் கட்சிகள் அனைத்தும் இந்தியாவைச் சந்தேகப்படுகின்றன.







### எதிர்க் கட்சிகளுக்கு ஏற்றம்?

கடந்த சில காலமாக, தெற்காசியாவில் பெரும்பாலான தேர்தல்களில் ஆளும் கட்சிகள் அடிவாங்கி வந்துள்ளன. எதிர்க்கட்சிகள் ஏற்றம் பெற்று வந்துள்ளன. ஆனால், அடுத்த ரவுண்டில் நிலைமை தலைகீழாக மாறி வந்துள்ளது. இனப்போருக்குப் பிந்தைய காலகட்டத்தில், இலங்கை மட்டுமே இதற்கு விலக்காக அமைந்துள்ளது. மக்களின் எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும் அரசியல்வாதிகள் மீது அவர்களுக்கு உள்ள நம்பிக்கையைக் குறைத்து வந்துள்ளது.

இந்த ஒவ்வொரு நாட்டிலும் கடந்த காலங்களில் கால் பதித்த போராளிக் குழுக்கள் இந்த உண்மையையே பறைசாற்றி வந்துள்ளன. ஆனாலும், கடந்த சில தசாப்தங்களாகவே, தெற்காசிய நாடுகளில் போராளிக் குழுக்களின் மீது மக்களின் நம்பிக்கை குறைந்து, மிதவாத அரசியல் தலைமைகள் மீது மீண்டும் குறைபாடான நம்பிக்கை வைக்கத் தொடங்கியுள்ளனர். தலைமுறை மாற்றங்கள், கல்வி-அறிவு, வாழ்க்கைத் தர மேம்பாடு என பல காரணங்களை இந்த மாற்றத்திற்கு அடிப்படையாகக் கூறலாம்.


மே மாதம் பாகிஸ்தானில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சி படுதோல்வி அடைந்தது. எதிர்க்கட்சியான முஸ்லிம்லீக் தலைவர் நவாஸ் ஷெரீப் மூன்றாவது முறையாக பிரதமராக பதவியேற்றுள்ளார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போது பதவியில் இருக்கும் ஆஸிஃப் அலி சர்தாரி போட்டியிடப் போவதில்லை என்று கூறியுள்ளார். மக்கள் கட்சியின் தலைவர் என்ற வகையில் பாராளுமன்றத் தேர்தல் தோல்வியில் அவருக்கு முக்கிய பங்கு உள்ளது. ஜனா

திபதித் தேர்தலில் அவர் வெற்றி பெறுவதும் குதிரை கொம்பே.

வங்காள தேசத்தில் நடைபெற வுள்ள பாராளுமன்றத் தேர்தலிலும் பிரதமர் ஹஸீனா தலைமையிலான அவாமி லீக் தலைமையிலான கூட் டணி வெற்றி பெறும் வாய்ப்பு குறை வாகவே உள்ளதாக செய்திகள் தெரி விக்கின்றன. கடந்த மாதம் தலைநகர் டாக்கா தவிர்த்த நான்கு முக்கிய நகரங்களில் நடைபெற்ற உள்ளா ட்சித் தேர்தல்களில் அந்தக் கூட்டணி படுதோல்வியைத் தழுவியுள்ளது. இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சி கூட்டணி அரசுக்கு எதிரான போராட் டங்களை வலுப்படும் என்று எதிர் பார்க்கலாம்.

நேபாளத்திலோ இப்போது அரசோ ஆட்சிப் பொறுப்போ யாரிட மும் இல்லை. மன்னர் ஆட்சி ஒழிந்த கையோடு தோற்றுவிக்கப்பட்ட புதிய குடியரசிற்கு அரசியல் சட்டம் இயற் றுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை அந்தப் பணியை முடிக்காமலே அதனை ஒட் டிய அரசியலிலேயே அதிக காலத்தை செலவிட்டது. எனவே, உச்ச நீதிமன் றத்தின் ஆணையின்படி நடைபெற வுள்ள அரசியல் நிர்ணய சபைக்கான புதிய தேர்தலில், முன்பு பதவியில் இருந்த மாவோயிஸ்ட் தலைமையி லான கூட்டணியின் உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைய வாய்ப்புள்ளது.

அண்டை நாடான பூட்டானில் மன்னராட்சி தொடர்ந்தாலும், அங் கும் மன்னராகவே முன் வந்து ஜனநா யகப்படுத்திய பாராளுமன்றத்திற்கு தேர்தல் நடைபெறவுள்ளது. அங்கு மன்னர் மீது மக்களுக்கு உள்ள மரியாதையை, அங்குள்ள அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொண்டு செயல் பட்டு வருகின்றன. இந்தப் பின்னணி யில் இன்னும் சில காலத்திற்காவது, பூட்டானில் பன்முக தேர்தல் என்பது எந்தக் கட்சி பதவிக்கு வருகிறது என் பது குறித்து மட்டுமே இருக்கும். அந் தக் கட்சியின் கொள்கைகள் என்ன என்பது குறித்து யாரும் கவலைப் படப் போவதில்லை. அரசின் நல்ல தையும் கெட்டதையும் மன்னர் ஏற்



றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.

ஆப்கானிஸ்தானில், ஜனாதிபதி ஹமீத் கர்ஸாயின் இரண்டாவது ஆட்சிக் காலம் அடுத்த ஆண்டு முடி விற்கு வருகிறது. அதோடு ஒட்டி, அமெரிக்கா தலைமையிலான பன் னாட்டு இராணுவக் குழுவும் ஆப்கா னிஸ்தானில் இருந்து வெளியேற உள்ளது. அரசியல் சட்டத்தை மாற்றி மூன்றாவது முறை தேர்தலில் போட் டியிடப்போவது இல்லை என்று கர் ஸாய் அறிவித்துள்ளார். அந்த விதத் தில் அடுத்த ஆண்டு தேர்தல் ஆப் கானின் அமெரிக்க உறவைச் சார்ந்தே இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். இதில் தேர்தலில் பங்கு பெறாத தலி பான்களின் நிலைப்பாடு எதுவாக இருக்கலாம் என்ற கேள்விக்கே இட மில்லை. இவ்வாறு வெளியுறவுப் பிர ச்சினையை முன்னிறுத்தி உள்நாட்டு அரசியல் போட்டியால் பாகிஸ்தான், வங்காள தேசம் ஆகிய நாடுகள் தொடர்ந்து பிரச்சினைகளைச் சந்தி த்து வருகின்றன. ஆப்கானிஸ்தா னின் எதிர்காலம் தொடர்ந்து கேள் விக்குறியாகவே உள்ளது.

ஆப்கானிஸ்தான் அளவிற்கு இல்லை என்றாலும், இலங்கை,இந் தியா ஆகிய இரு நாடுகளுக்கும் அண்மையில் உள்ள மாலைதீவில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஏழாம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. கடந்த ஆண்டு பெப்ரவரி ஏழாம் திகதி அரங்கேறிய ஆட்சி மாற்றத்தை அடுத்து நடை பெறும் முதல் தேர்தல் என்பதால், குழப்பமும், எதிர்பார்ப்பும், குழப்ப மான எதிர்பார்ப்பும் அங்கு நிலவு கின்றன. ஜனாதிபதித் தேர்தல் இரண் டாவது கட்டத்திற்கு செல்லுமேயா னால், அது அதிகமான பிரச்சினைக ளையே உருவாக்கும். அதனைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு மார்ச் மாதம் உள்ளாட்சி தேர்தலும் மே மாதம் பாராளுமன்றத் தேர்தலும் நடைபெறவுள்ளன. இவை அனைத் திலும் ஒரே கட்சியோ கூட்டணியோ ஒருசேர வெற்றி பெறவில்லை என் றால் மீண்டும் குழப்பமே நிலவும்.

இவை மட்டுமல்லாமல், தெற் காசியப் பிராந்தியத்தின் அண்டை நாடான ஈரானில் தற்போது தேர்தல் நடந்து முடிந்து, புதிய ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அது போன்றே, மியன்மாரிலும் அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெறவுள்ளது. வெளிநாட்டவரை திருமணம் செய்து கொண்ட ஒருவர் அங்கு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது. அந்த வகையில் ஜனநாயக வீராங் கனை சூகி தேர்தலில் போட்டியிடு வதே பிரச்சினையாக மாறிவிடும். அதனை அரசாங்கமும் எதிர்க்கட்சிக ளும் நேரிட்டு முடிவெடுத்தால் மட் டுமே அங்கு தேர்தல் நடைபெறு வதில் ஏதாவது அர்த்தம் இருக்கும்.

இந்தப் பின்னணியில் நடைபெற வுள்ள இந்தியப் பாராளுமன்றத் தேர் தல் இந்தியாவை மட்டுமல்ல, அண்டை நாடுகளிலும் எதிரொலிக் கும். உதாரணத்திற்கு, இலங்கை இனப்பிரச்சினை குறித்த இந்திய அரசு மற்றும் மத்தியில் ஆளும் காங் கிரஸ் கட்சியின் நிலைப்பாடு தமிழ் நாட்டில் இன்னும் விவாத விடயமே. அதனால் தேர்தல் முடிவுகள் மாறி விடும் என்று சொல்வதற்கில்லை. மாறாக, பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான அரசில் இருந்து தி.மு.க. பின்வாங்கிய பின்னரும், கடந்த இரண்டு தசாப்தங்களில் திரா விடக் கட்சிகளின் ஆதரவு இல் லாமலே மத்தியில் ஆட்சி நிலையாக உள்ளது. இதுவே தேர்தலுக்குப் பின்னரான நிலையாகவும் தொடர லாம்.

(67ஆம் பக்கம் பார்க்க...)



ராஜ்யசபைத் தேர்தலில் வெற்றிபெற்ற அ.தி.மு.க. உறுப்பினர்கள் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா சகிதம் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா

# எம்.ஜி.ஆர். வாக்குகளுக்கு விஜயகாந்த் வைத்த குறி

## பொதுத்தேர்தலில் ஐந்து முனைப்போட்டிக்கு தயாராகிறது தமிழகக்களம்

'விதைத்தது ஒன்று. ஆனால் முளைத்தது வேறு' என்ற கதையாக மாறி வருகிறது தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தலைவர் விஜயகாந்தின் அரசியல் களம். சமீபத்தில் நடந்து முடிந்த ராஜ்ய சபைத் தேர்தலில் வேட்பாளரை நிறுத்தினார். காங்கிரஸ் கட்சியின் ஆதரவு கிடைத்து விடும் என்று நம்பி முண்டாசு கட்டி நின்றார். ஆனால், ''திராவிட முன் னேற்றக் கழகத்தின் 18 எம்.பி.க்கள் இப்போது மத்திய அரசுக்கு தேவையா'', ''ஒரு ராஜ்ய சபை பதவியில் வெற்றி பெற வைப்பதற்காக விஜயகாந்த் தேவையா'' என்று காங்கிரஸ் கட்சி தீவிர ஆலோசனை நடத்தியது. கடைசி நிமிடத்தில் தங்கள் கட்சியின் ஐந்து சட்டமன்ற உறுப்பினர்களும் தி.மு.க. வேட்பாளர் கனிமொழியை ஆதரிப்பார்கள் என்று அறிவித்தது காங்கிரஸ் கட்சி. இந்த அறிவிப்பு தமிழகத்தில் எதிர்வரும் தேர்தல் கூட்டணியை நிர்ணயிக்கும் அந்தஸ்தைப் பெற்று விட்டது. அரசியலில் ''ஆச்சர்யங்கள்'' திடீரென்று நடக்கும் என்பதற்கு எடுத்துக் காட்டாக இது அமைந்து விட்டது.

ஆனால், பாராளுமன்ற தேர்தல் கூட்டணியை திசை திருப்பியது விஜயகாந்த் என்றால் சாலப் பொருத்தமாகவே இருக்கும். ராஜ்ய சபைத் தேர்தலில் தனியாக வேட்பாளரை நிறுத்தாமல் தி.மு.க. கேட்டது போல் அவர் ஆதரவை அளித்திருந்தால் புதிய பாராளுமன்ற அணி உருவாகும் காட்சிகள் அரங்கேறியிருக்கும். அதில் முதல் ரவுண்டில் தி.மு.க.-தே.மு.தி.க. போன்ற கட்சிகளும், பிறகு போகப் போக காங்கிரஸ் போன்ற கட்சி கூட அக்கூட்டணியில்




முத்தையா காசிநாதன்




விஜயகாந்த் தனது வாக்கை பதிவு செய்கிறார்

ஐக்கியமாகியிருக்கும். ஆனால் தி.மு.க. வுடன் சங்கமிப்பதில் விஜயகாந்திற்கு சங்கடம். ஏனென்றால் அவர் தி.மு.க.வின் வாக்கு வங்கியைக் கைப்பற்றுவதை விட அ.தி.மு.க.வின் வாக்கு வங்கியை அள்ளிச் செல்வது எளிது என்று எண்ணுகிறார். விஜயகாந்த் கட்சி துவங்கிய நாளில் இருந்து அவரை ''கறுப்பு எம்.ஜி.ஆர்'' என்றே அழைக்கிறார்கள். அ.தி.மு.க. விடம் உள்ள அடிப்படை வாக்கு வங்கியான எம்.ஜி.ஆர் வாக்கு வங்கியை அப்படியே நகர்த்திக் கொண்டு செல்ல கையிலெடுத்த பிரசாரம் இது. அதுவும் குறிப்பாக சென்ற சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்த பிறகு விஜயகாந்திற்கு அந்த நம்பிக்கை மேலும் துளிர் விடத் தொடங்கியது. தி.மு.க. எதிர்ப்பில் ஆர்வமாக இருந்தால் மட்டுமே இந்த எம்.ஜி.ஆர் வாக்கு வங்கி தம்மிடம் ஓடி வந்து ஐக்கியமாகும் என்று விஜயகாந்த் நினைக்கிறார். அதனால் தான் அவர் ராஜ்ய சபைத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளரை ஆதரிக்கவில்லை.


அதற்கு பதில் அவர் தனது வேட்பாளராக நிறுத்தப்பட்ட ஏ.ஆர்.இளங்கோவனுக்கு காங்கிரஸின் ஆதரவைக் கேட்டார். அப்போது தி.மு.க. - காங்கிரஸ் உறவு முறிந்திருந்த நேரம். தமிழக காங்கிரஸ் தலைவர்களான மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம், கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜி.கே.வாசன், முன்னாள் மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், தற்போதைய தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் ஆகியோர் அடங்கிய நால்வர் அணியும் விஜயகாந்தின் இந்த முயற்சிக்கு ஆசி வழங்கியது. ராஜ்ய சபைத் தேர்தலில் தன்னை ஆதரித்து விட்டால் தன் தலைமையை ஏற்றுக் கொண்டு பாராளுமன்றத் தேர்தலின் போது தனிக்கூட்டணி அமைக்க காங்கிரஸ் கட்சி முன்வரும் என்று விஜயகாந்த் நம்பினார். ''அது தே.மு.தி.க.வின் இமேஜை வளர்க்க உதவும். பிறகு 2016 சட்டமன்ற தேர்தல் போரில், பாராளுமன்ற தேர்தலில் கிடைத்த வாக்கு வங்கி இமேஜ், எம்.ஜி.ஆர் வாக்கு வங்கி என்ற இரு சிப்பாய்களுடன் நுழைந்து கலக்குவோம். எப்படியும் தமிழக முதலமைச்சர் பதவியை பிடிப்போம்'' என்பது விஜயகாந்தின் தொலை நோக்குத் திட்டம். ஆனால் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சராக இருக்கும் ஏ.கே. அந்தோணி போன்றவர்கள் தமிழக காங்கிரஸில் உள்ள ''நால்வர் அணி'' யின் முயற்சிக்கு தடை போட்டார்கள். விளைவு! தி.மு.க.வேட்பாளரை ஆதரிக்கும் முடிவை எடுத்தார் சோனியாகாந்தி.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டது. அ.தி.மு.க. சார்பில் டாக்டர் மைத்ரேயன், லக்குமணன், அர்ஜுணன், ரத்தினவேலு போன்றோர் வெற்றி பெற்றார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் டி.ராஜா ஜெயித்தார். தி.மு.க. சார்பில் கனிமொழி வென்றார். ஆனால் தே.மு.தி.க. சார்பில் போட்டியிட்ட இளங்கோவன் தோற்றார். தே.மு.தி.க.வின்



தமிழ்நாடு காங்கிரஸ் தலைமையகமான சென்னை சத்தியமூர்த்தி பவனில் தி.மு.க. சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான டி.ஆர்.பாலு, காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் சகிதம் கனிமொழி

29 எம்.எல்.ஏ.க்களில் ஏழு பேரே அவர் நிறுத்திய வேட்பாளருக்கு எதிராக வாக்களித்தார்கள். வெகுண்டெழுந்தார் விஜயகாந்த். அ.தி.மு.க. மீது தன் அட்டாக்கைத் தொடுத்தார். ஆனால் அது வித்தியாசமான தாக்குதல்! அவர் விடுத்த அறிக்கையில் இரு ''சென்ஸிட்டிவான'' விடயங்களை டச் பண்ணினார். ஒன்று ''தி.மு.க.வுக்கும், அ.தி.மு.க.வுக்கும் ரகசிய ஒப்பந்தம் இருக்கிறது'' என்று குண்டு போட்டார். இன்னொன்று, ''எம்.ஜி.ஆரின் எதிரியான தி.மு.க.வின் வேட்பாளரை அ.தி.மு.க. நினைத்திருந்தால் தோற்கடித்திருக்க முடியும். ஆனால், நான் வெற்றி பெற்றுவிடக் கூடாது என்பதற்காகவே தி.மு.க.வை வெற்றி பெற வைத்தது. இதுதான் எம்.ஜி.ஆருக்கு காட்டும் விசுவாசமா?'' என்று கேள்வி எழுப்பினார். இவை அர்த்தம் நிரம்பிய



கேள்விகள். ஒன்று முன்பு காமராஜர் சொன்னது போல் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் ஒன்றுதான் என்ற கருத்தை வாக்காளர்கள் மத்தியில் கொண்டு போக விஜயகாந்த் முனைகிறார். இன்னொன்று எம்.ஜி.ஆரின் எதிரியான தி.மு.க.வின் வெற்றிக்கு ஆதரவாக இருக்கிறார் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா என்று கூறி, அ.தி.மு.க.வில் உள்ள எம்.ஜி.ஆர் வாக்காளர்களை கவர முயற்சிப்பது!

நடந்து முடிந்த ராஜ்ய சபைத் தேர்தலின் வியூகங்கள், வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் ''ரெயின்போ'' கூட்டணிகள் அமைவதற்கு அடித்தளம் அமைக்கும். அ.தி.மு.க.வைப் பொறுத்தமட்டில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா ''40-க்கு 40'' தொகுதிகளில் வெற்றி என்பதில் தெளிவாக இருக்கிறார். அதேபோல் தன் வாக்கு வங்கி அஸ்திரத்தை அசைத்துப் பார்க்க ''வியூகம்'' வகுக்கும் விஜயகாந்தை அசராமல் அடித்து விரட்டுகிறார். ஆட்சியில் அமர்ந்தவுடன் விஜயகாந்துடனான கூட்டணியை முறித்தார். அவர் கட்சி எம்.எல்.ஏ.க்கள் ஏழு பேர் தொகுதி பிரச்சினையை முன் வைத்து அடுத்தடுத்து முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்தார்கள். இப்போது ராஜ்ய சபைத் தேர்தலில் தே.மு.தி.க. வேட்பாளர் எக்காரணத்தைக் கொண்டும் வெற்றி பெற்றுவிடக்கூடாது என்பதற்கான வழிமுறைகளை வகுக்கார். அதற்காக தனக்கு வர வேண்டிய ஒரு ராஜ்ய சபைப் பதவியையே தியாகம் செய்தார்! இதனால் ''இதைத்தானே எதிர்பார்த்தாய் பாலகுமாரா'' என்ற பாணியில், விஜயகாந்த் தேர்தல் களத்தில் தனிமைப்படுத்தப்பட்டு நிற்கிறார். அதே நேரத்தில் தன்னுடன் இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் இருக்குமாறு பார்த்துக் கொண்டிருக்கிறார் முதல்வர் ஜெயலலிதா. தேசிய அரசியலுக்கு அவர்கள் உதவுவார்கள் என்ற எண்ணமே அதற்கு காரணம். இன்றைய நிலையில் அ.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய மூன்று கட்சிகளும் ஓரணியில் இருக்கிறார்கள். அவர்கள் அணியில் சேருவதற்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வைகோ தயாராக இருக்கிறார். ஆனால், அ.தி.மு.க. கொடுக்க முன்வரும் தொகுதிகளை வைத்தே அவர் இறுதி முடிவு எடுப்பார் என்று தெரிகிறது. அ.தி.மு.க. தலைமையில் உருவாகும் இந்த அணி தேர்தல் களத்தில் முதல் அணியாக இருக்கும்.

தி.மு.க. அணியைப் பொறுத்தமட்டில் திருமாவளவன் தலைமையிலான விடுதலைச் சிறுத்தைகள் மட்டும் எஞ்சியிருந்தது. அதுவும் தர்மபுரி காதல் கலவர விவகாரத்தில் தி.மு.க.வில் இருப்பதா வேண்டாமா என்று திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் இந்த ராஜ்ய சபைத் தேர்தல் மூலம் மீண்டும் காங்கிரஸூடன் தி.மு.க. கூட்டணி சேரும் வாய்ப்பு கனிந்திருக்கிறது. இது பற்றிக்கூறும் தி.மு.க. முன்னணித் தலைவர் ஒருவர், ''ராஜ்ய சபைத் தேர்தலுக்காக கம்யூனிஸ்டுகள், தே.மு.தி.க., பா.ம.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளிடமும் நாங்கள் ஆதரவு கேட்டோம். அவர்கள் இல்லை என்று கூறிவிட்டதால் காங்கிரஸிடம் ஆதரவைக் கேட்டோம். அவ்வளவுதான். 2016 சட்டமன்றத் தேர்தல், 2014 பாராளுமன்ற வெற்றியை வைத்தே இருக்கிறது. இவர்கள் எல்லாம் கூட்டணி வைத்துக் கொள்வார்கள். நாங்கள் மட்டும் தனியாக நிற்க வேண்டுமா?'' என்று கேள்வி எழுப்புகிறார்.

> கனிமொழியை மீண்டும் ராஜ்யசபை உறுப்பினராக்குவதற்காக காங்கிரஸின் ஆதரவை நாடுவதற்கு தயங்காத தி.மு.க. கூட்டணி எதுவும் கிடையாது என்று அறிவித்திருக்கிறது. ஆனால் இவ்விரு கட்சிகளும் கூட்டணி வைப்பதில் தயக்கம் இல்லை. காங்கிரஸ் கேட்கும் எண்ணிக்கையில் தொகுதிகளைக் கொடுப்பதில் தி.மு.க.வுக்கு ஏற்படக்கூடிய தயக்கமே பிரச்சினையாக இருக்கும்

இந்நிலையில், ஜூன் 29ஆம் திகதி சென்னை வந்த அகில இந்திய காங்கிரஸ் செயலாளர் முகுல் வாஸ்னிக், ''கூட்டணி பற்றி ஏ.கே. அந்தோணி தலைமையிலான கமிட்டி முடிவு செய்யும். இப்போது உள்ள தமிழக அரசியல் சூழ்நிலையில் நாங்கள் தி.மு.க.வை ஆதரித்தோம்'' என்று பட்டும் படாமல் பேசி விட்டுச் சென்றார். அடுத்த நாள், அதாவது ஜூன்-30ஆம் திகதி மதுரையில் பொதுக் கூட்டத்தில் பேசிய தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின், ''காங்கிரஸுடன் கூட்டணி இல்லை'' என்றே அறிவித்தார். இந்த இரு கட்சிகளுமே கூட்டணி வைப்பதற்கு தயக்கம் இல்லை. ஆனால், தாங்கள் கேட்கும் எண்ணிக்கையில் தொகுதிகளை கொடுக்க வேண்டும் என்ற காங்கிரஸும், மீண்டும் 2009 போல் 16 தொகுதிகளை காங்கிரஸ் கேட்டு விடக்கூடாது என்று தி.மு.க.வும் நினைப்பதே இந்த முஸ்தீபுகளுக்குக் காரணம். தி.மு.க.-காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள், மனித நேய மக்கள் கட்சி, புதிய தமிழகம் போன்றவை ஓரணியில் சேரும் வாய்ப்பு வந்திருக்கிறது. இது இரண்டாவது அணியாக இருக்கும்!

மூன்றாவதாக தே.மு.தி.க.! இக்கட்சி தலைமையில் அணி அமைக்க வேறு கட்சிகள் முன் வரவில்லை. விஜயகாந்தை தலைவராக ஏற்றுக் கொள்ள அவர்கள் தயங்குவதே அதற்கு முதல் காரணம். அதனால் விஜயகாந்த் தனியாகவே வருகின்ற பாராளுமன்றத் தேர்தலைச் சந்திக்க வேண்டிய தர்மசங்கடம் ஏற்பட்டிருக்கிறது. ''நம் இலக்கு 2016 சட்டமன்றத் தேர்தல்'' என்ற நோக்கில் அவர் பயணிப்பதால், பாராளுமன்ற தேர்தலில் தனித்தே களமிறங்குவார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. ராஜ்ய சபைத் தேர்தலுக்குப் பிறகு கூட அவர் காங்கிரஸையோ, தி.மு.க.வையோ நேரடியாகச் சாடவில்லை என்றாலும், ''இவர்களுடன் கூட்டணி வைத்தால் நமக்கு வேண்டிய எண்ணிக்கையில் தொகுதிகளை கொடுக்க மாட்டார்கள்'' என்றே அவர் நினைக்கிறார். அது மட்டுமன்றி தி.மு.க.வுடன் கூட்டணி வைத்தால் தன்னிடம் உள்ள எம்.ஜி.ஆர் ரசிகர்கள் போய் விடுவார்கள். அ.தி.மு.க.வில் உள்ள எம்.ஜி.ஆர் வாக்குகளையும் கவர முடியாது என்று அஞ்சுகிறார். ''கூட்டணியை விட தன் இமேஜ் முக்கியம்'' என்று நினைக்கிறார் விஜயகாந்த். ஆனால், ஏற்கனவே அவரிடம் இருந்த ''பிரபல'' வேட்பாளர்கள் அ.தி.மு.க. பக்கம் சாய்ந்து விட்டார்கள். தேர்தல் செலவுகளை கவனித்துக் கொள்ளும் வேட்பாளர்களும் அ.தி.மு.க. பக்கமாகப் போய் விட்டார்கள். இது போன்ற சூழ்நிலையில் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தால், தன்னிடம் உள்ள மைனாரிட்டி வாக்குகளும் பறிபோய்விடும் என்று விஜயகாந்திற்கு தயக்கம் உண்டு. ஆகவே ''இந்த முறை பாராளுமன்ற தேர்தலில் தனித்துப் போட்டியிடுவோம். சட்டமன்ற தேர்தல் வரும் போது யார் வருகிறார்களோ அவர்களுடன் இணைந்து கூட்டணி காண்போம்'' என்ற எண்ணத்தில் இருக்கிறார் விஜயகாந்த்.

> தமிழகத்திலுள்ள சகல பாராளுமன்ற தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிடப் போவதாக பாட்டாளி மக்கள் கட்சி கூறிக்கொண்டிருக்கிறது. இந்தக் கட்சியும் காதல் திருமணத்திற்கு எதிராகப் பிரசாரம் செய்யும் ஏனைய சிறிய கட்சிகளும் சேர்ந்து தேர்தலில் குதிப்பார்கள். இந்த அணி தமிழகத் தேர்தல் களத்தில் நான்காவது அணியாக இருக்கும்

எம்.ஜி.ஆர் வாக்கை குறி வைக்கும் விஜயகாந்தை ஒரு வழி பண்ணி விட அ.தி.மு.க.வினர் முயற்சிகளை எடுப்பார்கள் என்றே தெரிகிறது. ''அ.தி.மு.க.வில் இருந்து விட்டு வெளியேறியவர்கள் எம்.ஜி.ஆர் வாக்கை இழுக்க நினைத்தால் கூட பொறுத்துக் கொள்ளலாம். தனிக்கட்சி தொடங்கிய விஜயகாந்த் ஏன் எம்.ஜி.ஆரை வைத்து எங்களுடன் மோத வேண்டும்'' என்று கோபப்படுகிறார்



அ.தி.மு.க. அமைச்சர் ஒருவர். விஜயகாந்த் மீது பல்வேறு நீதிமன்றங்களில் போடப்படும் அவதூறு வழக்குகள், அந்த வழக்குகளில் விஜயகாந்த் ஆஜராகப் போகும் போது ஏற்படும் திடீர் கலாட்டாக்கள் எல்லாம் இதை எடுத்துக் காட்டுகின்றன. ஜூலை 1ஆம் திகதியன்று நாகர்கோயில் நீதிமன்றத்திற்கு தன் ஆதரவாளர்களுடன் சென்ற விஜயகாந்திற்கும், அ.தி.மு.க. வழக்கறிஞர்களுக்கும் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது. அதையொட்டி விஜயகாந்த் மீது தனியாக ஒரு கிரிமினல் வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் பார்த்தால், தமிழக பாராளுமன்ற தேர்தல் களத்தில் தே.மு.தி.க. தனியாகப் போட்டியிடுவது தவிர்க்க முடியாதது என்றே தெரிகிறது. அக்கட்சி போட்டியிடுவது தேர்தல் களத்திற்கு மூன்றாவது அணியை கொண்டு வந்து சேர்க்கும்.

இந்த அணிகள் தவிர, நான்காவது, ஐந்தாவது அணிகள் கூட அடுத்த

பாராளுமன்ற தேர்தலில் வரும். டாக்டர் ராமதாஸ் தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சி ஏற்கனவே ''நாங்கள் திராவிடக் கட்சிகளுடனும் கூட்டணி சேர மாட்டோம். தேசியக் கட்சிகளுடனும் சேர மாட்டோம்'' என்று டிக்ளேர் பண்ணி விட்டது. ''காதல் விவகாரத்தை'' கையிலெடுத்து வன்னியர் சமுதாய வாக்காளர்கள் அதிகமாக இருக்கும் பகுதிகளில் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறது. அதனால்தான் மு.க.ஸ்டாலின் வந்து சந்தித்த போது தி.மு.க.வின் வேட்பாளர் கனிமொழிக்கு முதலில் ஆதரவு தருகிறோம் என்று கூறிவிட்டு, பிறகு பா.ம.க.வின் செயற்குழுவில் ''ஆதரவு இல்லை'' என்று தீர்மானம் போட்டார்கள். இப்படி எல்லாக் கட்சிகளையும் பா.ம.க. புறக்கணிப்பதில் விசேஷம் இருக்கிறது. பா.ம.க.விற்கு இருக்கும் பிரச்சினையும் தொகுதிகளின் எண்ணிக்கைதான்! அந்தக் கட்சி பலமாக இருந்த 1999 வாக்கில் தி.மு.க.விடம் 9 பாராளுமன்ற தொகுதிகள் வரை பெற்று போட்டியிட்டது. ஆனால், அடுத்தடுத்து ஏற்பட்ட தேர்தல் தோல்விகளால், இனி அவ்வளவு தொகுதிகளை பா.ம.க.விற்கு கொடுக்க தி.மு.க.வோ, அ.தி.மு.க.வோ நிச்சயம் முன் வராது. அதனால்தான் ஜூலை 1ஆம் திகதியன்று கூட, ''யாருடனும் கூட்டணி இல்லை. தமிழகத்தில் உள்ள 39 பாராளுமன்றத் தொகுதிகளிலும் பா.ம.க. தனித்துப் போட்டியிடும்'' என்று அக்கட்சியின் தலைவர் ஜி.கே. மணி கூறியுள்ளார். பாட்டாளி மக்கள் கட்சியும், ''காதல் திருமணத்திற்கு'' எதிராக பிரசாரம் செய்யும் மற்ற சிறிய கட்சிகளும் சேர்ந்து பாராளுமன்றத் தேர்தலில் குதிப்பார்கள். இந்த அணி தமிழக தேர்தல் களத்தில் நான்காவது அணியாக இருக்கும்.

ஐந்தாவது அணிக்கும் பஞ்சமில்லை. அது பாரதீய ஜனதாக் கட்சியும், இந்திய ஜனநாயக மக்கள் கட்சியும் சேர்ந்த அணியாக இருக்கும்! ஏனென்றால் தமிழகத்தில் பா.ஜ.க.வினால் தி.மு.க.விற்கோ, அ.தி.மு.க.விற்கோ இப்போது வெற்றிக்கு துணை நிற்க முடியாது. நரேந்திர மோடி பிரதமர் வேட்பாளர் என்றால் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைக்கும் கட்சிக்கு தமிழகத்தில் பாதிப்பு ஏற்படும். அந்த அளவிற்கு மைனாரிட்டி வாக்குகள் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க.விற்கு எதிராகப் போகும். அந்த ஆபத்தைச் சந்திக்க இரு கட்சிகளும் விரும்பவில்லை. தேர்தலுக்குப் பிறகு மத்தியில் பா.ஜ.க. ஆட்சி அமைக்கும் சூழ்நிலை வந்தால், இந்த இரு கட்சிகளும் போட்டி போட்டுக் கொண்டு ஆதரிக்க முன்வரலாம். அது வேறு

> தி.மு.க.வுடன் கூட்டணி வைத்தால் தன்னுடன் உள்ள எம்.ஜி.ஆர். ரசிகர்கள் போய்விடுவார்கள். அ.தி.மு.க.விலுள்ள எம்.ஜி.ஆர். வாக்குகளையும் கவரமுடியாது என்று விஜயகாந்த் பயப்படுகிறார். கூட்டணியை விட தன் இமேஜே முக்கியம் என்றே அவர் நினைக்கிறார்

விடயம். ஆனால், தேர்தலுக்கு முன் அப்படியொரு கூட்டணிக்குத் தயாராக இல்லை. ஒரு சில தமிழக பா.ஜ.க. தலைவர்கள் மனதில், தே.மு.தி.க.வை சேர்த்துக் கொண்டு கூட்டணி வைக்கலாம் என்ற எண்ணம் பசுமை பெற்றிருக்கிறது. ஆனால் பா.ஜ.க.வில் உள்ள வேறு சில முக்கிய தலைவர்களோ, ''அப்படியொரு கூட்டணி அமைந்தால் நமக்கு என்ன லாபம்? விஜயகாந்த் தலைமையில் நாம் கூட்டணி வைத்தால் தே.மு.தி.க. விற்குத்தான் ''இமேஜ்'' கிடைக்கும். அது தேர்தலுக்குப் பிறகு நம்முடன் நட்பு பாராட்டலாம் என்று நினைக்கும் அ.தி.மு.க. போன்ற கட்சிகளை பகைத்துக் கொள்வது போல் ஆகிவிடும். ஒரு எம்.பி. கூட ஜெயிக்க முடியாத கூட்டணியை வைத்து தேர்தலுக்குப் பிறகு வரும் பல எம்.பி.க்களின் ஆதரவை நாம் ஏன் இழக்க வேண்டும்'' என்று தலைமைக்கு எடுத்துக் கூறுகிறார்களாம். ஆனால், இப்போது பா.ஜ.க.வுடன் இந்திய ஜனநாயக மக்கள் கட்சி இணைந்து கூட்டணி அமைக்கும் சாத்தியக்கூறுகள் தெரிகின்றன. அதனால்தான் என்னவோ சில தினங்களுக்கு முன்பு இந்திய ஜனநாயக மக்கள் கட்சித் தலைவர் நடத்தும் கல்வி நிறுவனங்களில் எல்லாம் வருமான வரித்துறையினர் ''திடீர்'' ரெய்டு நடத்தினார்கள். ஆகவே, பா.ஜ.க. தலைமையில் சிறிய கட்சிகள் எல்லாம் சேர்ந்து உருவாக்கப்படுவது ஐந்தாவது அணி!

''எம்.ஜி.ஆர் வாக்குகளை கைப்பற்றி முதலமைச்சர் பதவியைப் பிடிப்போம்'' என்று கருதி, இந்த ராஜ்ய சபைத் தேர்தலில் விஜயகாந்த் போட்ட விதை வேறு விதமாக முளைத்து விட்ட கதை இதுதான். அதனால், வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் ஐந்து அணிகள் உருவாகி, ஐந்து முனைப் போட்டிக்கு தமிழக தேர்தல் களம் படு வேகமாக தயாராகிக் கொண்டிருக்கிறது. இது போன்ற தேர்தல் களத்தை இதற்கு முன்பும் தமிழகம் சந்தித்து இருக்கிறது. ஆனால், அது மூன்று அணிகளாகவோ, நான்கு அணிகளாகவோ மட்டுமே இருந்திருக்கிறது. ஆனால், அதே போட்டி இந்த முறை ஐந்து அணிகளாக மாறியிருக்கிறது. இந்தக் கட்சிகளை விட சுயேச்சைகளாக நிற்பவர்களையும் ''தனி அணி'' என்று கணக்கில் எடுத்துக் கொண்டால், 2014 பாராளுமன்றத் தேர்தலில் தமிழகம் ஆறு அணிகளை சந்தித்துவிடும் போலிருக்கிறது. வாக்காளர்களை அட்ராக்ட் பண்ணும் பிரசாரங்களும், பேச்சுகளும் பரபரப்பிற்கு பஞ்சமில்லாமல் பவனி வரப் போகிறது! ■





# ஜூலியா கில்லர்ட் தோல்வியும் அவுஸ்திரேலிய தலைமை மாற்றமும்

கலாநிதி சந்திரிகா சுப்ரமண்யன்



கடந்தமாதம் 27ஆம் திகதி அவுஸ்திரேலியாவின் காலை புதிய தலைமைத்துவத்தின் கீழ் புலர்ந்தது. தொழில் கட்சியின் தலைமைப் பதவிக்கான போட்டியில் கெவின் ரட் ஜூலியா கில்லர்ட்டை 57 - 45 என்ற விகித வாக்குகள் வித்தியாசத்தில் வென்று அவுஸ்திரேலியாவின் தலைமைப் பொறுப்பை தட்டிச் சென்றுள்ளார்.தொடர்ந்து அவர் பிரதமராக இரண்டாவது முறையாகப் பதவி ஏற்றுள்ளார்.

இதேபோல முன்பு ஜூலியா கில்லர்ட் கெவின் ரட்டிடமிருந்து இந்தப் பதவியை தட்டிச் சென்று சரியாக மூன்றாண்டுகள் நிறைவடைந்த வேளையில் ஜூலியா தலைமைப் பதவியை இழந்து நிற்கிறார். தனது தோல்வியைத் தொடர்ந்து தான் அரசியல் வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெறப் போவதாக அவர் அறிவித்திருக்கிறார். இதை ஜூலியா கட்சிக் குழுக் கூட்டம் வாக்கெடுப்புக்காக கூடுவதற்கு முன்னரே தான் தோல்வி அடைந்தால் கட்சியின் முடிவை ஏற்று அரசியலை விட்டு விலகுவதாக அறிவித்திருந்தார்.

தனது வெற்றி குறித்து பேசும் போது ரட், மிகப் பணிவுடனும், மரியாதையுடனும் தனது பழைய பணிக்குத் திருப்புவதாகத் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் பிரதமராகி பேசும்போது, ரட் தனது உரையில், நாமெல்லோரும் இந்தப் பாராளுமன்றத்தில் இந்த இடத்தில் மனிதர்கள், அதை நினைவில் கொண்டு சக உறுப்பினர்களிடம் கருணையோடும் மென்மையாகவும் நடந்து கொள்வது அவசியம் என்று குறிப்பிட்டார். ஜூலியா கில்லர்ட்டின் சேவையைப் பாராட்டி சிறந்த அறிவாளி, மிக அதிகபட்ச சக்தியுடன் செயல்பட்ட பிரதமர் எனவும் பாராட்டினார்.

தனது முழு ஆட்சிக்காலத்தையும் முற்று முழுதாக முடிக்க முன்னரே கில்லர்ட்டினால் ஆட்சிக் கட்டிலை விட்டு இறக்கப்பட்டவர் கெவின்ரட். வாக்களித்தவர்களுக்கு இது பெரிய அதிர்ச்சியாகவே அமைந்து இருந்தாலும் கூட அவர்கள் இந்தத் துரோகத்தைக் கண்டு கொள்ளவில்லை என்பதே உண்மை. ஆனாலும் ஜூலியா

> ஜூலியா கில்லர்ட் கெவின் ரட்டிடமிருந்து தலைமைப் பதவியை தட்டிச் சென்று சரியாக மூன்று ஆண்டுகள் நிறைவடைந்த வேளையில் அவர் பதவியை இழந்து நிற்கிறார். பெண் என்ற காரணத்தினால் பல சமயங்கள் ஜூலியா அவமானப்படுத்தப்பட்டிருக்கிறார். அவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டு ஆட்சி நடத்தியிருப்பது பெரிய விடயமே

கில்லர்ட் அரசியல் கொலை பாதகியாகவே விமர்சிக்கப்பட்டார்.

எல்லாவற்றையும் மீறி ஜூலியா அவுஸ்திரேலியாவின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையைத் தட்டிச் சென்றார். ஆனால், பெண் அரசியல் வாதிகளுக்குரிய சவால்களும் இல்லாமல் இருக்கவில்லை.

### ஜூலியா சந்தித்த சவால்கள்

தனக்கு முன்னுதாரணமாகவோ அல்லது முன்மாதிரியாகவோ, வழிகாட்டிகளோ, பின்பற்ற எவருமில்லாத நிலையில் தான் ஜூலியா பிரதமர் ஆனார். தலைமைப் பொறுப்பிலிருக்கக் கூடிய பெண்கள் வழக்கமாகச் சந்திக்க நேரிடும் பதவிக்கு சம்பந்தமில்லாத விமர்சனங்கள், உதாரணமாக உடைகள், சிகை அலங்காரம், திருமண உறவு போன்ற வம்புகள், வதந்திகள் இவரையும் விட்டு வைக்கவில்லை.

எதிர்க்கட்சியினர் மரியாதைக்குரிய விதத்தில் பிரதமர் என அழைப்பதை தவிர்த்தனர். சிறுபான்மை அரசுக்கே உரிய சவால்கள் அரசு சாதிக்க வேண்டிய பட்டியலை விட நீண்டதாக அமைந்தது. இந்தச் சூழ்நிலை ஆட்சிக்கு அழுத்தம் தருவதாக அமைந்தது ஜூலியாவை கத்தி மேல் அமரவைத்தது. இதனால் கூட்டுக்கட்சிகளுக்கு இசைந்து கொடுக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஜூலியா அரசு தள்ளப்பட்டது. ஆட்சியைக் காப்பாற்றும் நிர்ப்பந்தம் அரசை நடத்துவதை விட முக்கியமானதாகிப் போனது.

அரசியல் எதிர்நீச்சலில் மூன்றாண்டுகள் நின்று பிடித்தாலும் கூட அரசியல் இக்கட்டுகள் தொடர்ந்த வண்ணமே இருந்தன. கொள்கைகள், சட்ட மூலங்கள் புதிதாக்கப்பட வேண்டிய சூழ்நிலையில் 2010 இலிருந்து ஜூலியா அரசு நாட்டில் பாரிய மாற்றங்களைக் கொண்டு வரும் முகமாக பாராளுமன்றத்தில் 485 சட்டங்களை அமுலாக்கியது.இதுவே அவருக்கு எதிராகத் திரும்பியது என்றால் மிகையாகாது. பழைமை வாதிகளின் நடுவில் மாற்றங்களை அமுல்படுத்துவது மிகச்சிக்கலான விடயமாகும்.

சுரங்க வரி, புகையிலை வரி, சூதாட்டக் கருவிகள் தொடர்பான மாற்றங்கள், கார்பன் வரி தொடர்பான எதிர்ப்பு ஆகியவை இவற்றில் சில உதாரணங்கள். பாரிய மாற்றங்களை தகுந்த ஆதரவு இன்றி மேற்கொண்டால் பாரிய விளைவுகள் கிட்டும் என்பது ஜூலியா கற்றுக் கொண்ட பாடமாகும். அடுத்தது உலக பொருளாதார நெருக்கடி பற்றிய அச்சம் காரணமாக அவுஸ்திரேலிய பொருளாதாரத்தில் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை இன்னொரு காரணமாகும்.

### ஜூலியாவின் சாதனைகள்

உலகப் பொருளாதார நெருக்கடியைத் தாண்டி அவுஸ்திரேலிய பொருளாதாரத்தை நிலை நிறுத்திய பெருமை ஜூலியாவுக்குரியது. அவுஸ்திரேலியாவில் வேலையின்மை, பணவீக்கம், அரசுக் கடன் ஆகியவை மிகக் குறைவாக இருந்தது. அதிகபட்ச முதலீடு இன்னொரு சிறப்பம்சமாகும். கார்பன் வரிமூலம் காலநிலை மாற்றப் பிரச்சினையும், தேசிய அகலக்கற்றை இணைப்பு ஆகியவை பாராட்டுதற்குரியது.

உடல் நலத்திட்டங்கள், அகதிக் கொள்கைகள், ஐக்கிய நாடுகள் சபையில் பாதுகாப்பு குழுவில் இடம், கனிம வள வாடகைத்திட்டம் போன்றவையும் சிறப்பானவை.

ஜூலியாவின் கல்வித் திட்டங்கள் அதிகபட்ச மாணவர்கள் பல்கலைக் கழகம், பட்டம், வேலைவாய்ப்பு, கல்வி, தொழில் பயிற்சி போன்ற சாதனைகளை எட்ட உதவி செய்தது உண்மை. குடும்பங்களுக்கு ஊக்கத் தொகை பொதி மூலம் வருமானம் குறைந்த வீடுகள் பயன் பெற்றன. தொழில் மற்றும் ஓய்வூதிய சட்ட மாற்றங்கள் மக்களுக்கு பயன் தரும் வகையில் அமைந்தன. இவ்வளவு இருந்தும் எதனால் ஜூலியாவுக்கு இந்த சரிவு ஏற்பட்டது?

### ஊடகங்கள்

ஒரு தரப்பில் இதற்கு காரணம் ஊடகங்கள் காட்டிய பாகுபாடு எனப்படுகிறது. அவுஸ்திரேலியாவின் முக்கிய பெரிய ஊடகங்களனைத்தும் லிபரல் கட்சி பிரமுகர்கள் வசம் இருப்பதும், தொழில் கட்சிக்கு பாதகமாக இருப்பதையும் முக்கிய காரணமாகச் சுட்டிக்காட்டலாம். இங்குள்ள 12 பத்திரிகைகளில் 8 அவதூறுச் செய்திகளுக்கு பேர் போனவையென்றும் பத்திரிகை தர்மம் இல்லாதவையென்றும் உலக அரங்கில் கருதப்படுகின்றன. இவை ஜூலியாவுக்கு எதிராக பிரசாரம் செய்தன.


### எதிர்க்கட்சிகளின் அவதூறு

எதிர்க்கட்சிகளின் அவதூறு மற்றும் பிரசார துஷ்பிரயோகம் பற்றி எந்த ஒரு கண்காணிப்பு முறையும் இல்லாமை அவர்களின் கட்டவிழ்ந்த நடவடிக்கைகளுக்கு வாய்ப்பளித்தது.

உட்கட்சி அழுத்தம் இன்னொரு காரணமாகும். முன்யோசனை இல்லாமல் வாக்குறுதி வழங்கியது, முன்யோசனை இல்லாமல் தேர்தல் திகதி அறிவிப்பு, பல அமைச்சர்களின் ராஜினாமா, பீட்டர் ஸ்லிப்பரை சபாநாயகராக ஆக்கியது போன்ற பல காரணங்களைக் கூறலாம்.

பெண் என்ற ஒரு காரணத்தினால் பல சமயங்களில் ஜூலியா அவமானப்படுத்தப்பட்டிருக்கிறார். அவற்றையெல்லாம் தாங்கிக்கொண்டு மூன்றாண்டுகள் அரசு நடத்தியிருப்பது பெரிய விடயமே. முகத்தில் கோபமோ, எரிச்சலோ அல்லது, கவலையோ இல்லாமல் நடந்து கொண்டார் என்பது சிறப்பாகும். பேட்டிகளில் அமைதியாகவும் பணிவாகவும் நடந்து கொண்டார். பெண்மை இழிவுபடுத்தல் தொடர்பாக அவரது பாராளுமன்ற பேச்சு பெண்களிடம் நற்பெயரை சம்பாதித்துக் கொடுத்தது.

இத்தனை சவால்களையும் எதிர்த்து நின்றாலும் கூட கெவின் ரட்டிடம் அவர் தோற்றுப் போனது தலைமை மாற்றம் வேண்டும் என்ற தொழிற் கட்சியின் எதிர்பார்ப்பு என்றால் மிகையாகாது. செப்டெம்பர் 14ஆம் திகதி தேர்தல் நடக்கும் போது அவுஸ்திரேலியாவின் தலைமை தீர்மானிக்கப்படுவது உறுதியாகும். ■



# பொருளாதார நெருக்கடிக்குள்
# புதிய செல்வாக்கை அனுபவிக்கும் மார்க்சியம்

> மார்க்ஸ் சொல்லி யவாறு விடயம் என்னவென்றால் உலகை விளக்குவ தல்ல அதனை மாற்றுவதேயாகும்



பாஸ்கர் சுங்கரா

எதிர்காலம் பற்றிய கனாத்தோற்றங்களை மூலதனம் நமக்கு விற்றுவந்துள்ளது. நியூயோர்க்கில் கடந்த 1939 உலக வணிக விழாவின்போது, வணிக நிறுவனங்கள் புதிய தொழில்நுட்பங்களைக் காட்சிப்படுத்தின. நைலோன், வளிப்பதனப்படுத்தல் (ஏ.சி.), ஒளிர் குழல் விளக்கு, பிரமிப்பூட்டும் வியூமாஸ்றர். வெறுமனே உற்பத்திப் பண்டங்கட்கும் அப்பால், பொருளாதார மந்தத்தாலும் ஒரு ஐரோப்பிய போர் வாய்ப்புப்பற்றியும் சோர்ந்து போயிருந்தோருக்கு, நடுத்தர வர்க்கத்தினருக்கான ஓய்வும் வளமும் கொண்ட ஒரு இலட்சிய உலகு முன்வைக்கப்பட்டது.

இந்த எதிர்காலக் கனாக்காட்சிச் சவாரி, அவ்விழாவிற் பங்குபற்றியோரைப் புதிய நெடுஞ்சாலைகளையும் அபிவிருத்தித் திட்டங்களையும் கொண்ட மாற்றப்பட்ட நிலக்காட்சிகளின் குறுகிய வடிவங்களூடு- அதாவது நாளைய உலகினூடு- கொண்டு சென்றது. அது முதலாளித்துவம் பற்றிய விசுவாசத்தைப் புதுப்பிப்பதற்கான உணர்ச்சிவயமான முயற்சியாகும்.

இரண்டாம் உலகப்போரின் பின்பாக, இக் கனாத்தோற்றத்தின் பகுதி பலித்தது. முதலாளித்துவம் செழித்தது. அமெரிக்கத் தொழிலாளர்களும், ஒரு சீரற்ற முறையிலேனும், முன்னேற்றங் கண்டனர். கீழிருந்து வந்த அழுத்தங்களால் அரசு நொறுக்கப்படாமல், சீர்திருத்தவாதிகளால் கையாளாப் பெற்றது. வெறும் வர்க்கப்போராட்டமன்றி, வர்க்க சமரசம் முன்பு கற்பனை செய்யப்படாத பொருளாதார வளர்ச்சியையும் பகிரப்பட்ட பொருள் வளத்தையும் பராமரித்தன.

சுரண்டலும் ஒடுக்குதலும் மறையவில்லை. எனினும் சமூக அமைப்பு வலுவானதாயும் இயங்குவலிமையுடனும் மட்டுமன்றி ஜனநாயக இலட்சியங்களுடன் உடன்பாடானதாயும் இருந்தது. எனினும் இம் முன்னேற்றம் தற்காலிகமானதாகவே இருந்தது. 'முழு வேலைவாய்ப்புடைமையின் அரசியல் அம்சங்கள்', எனும் நூலின் ஆசிரியர் மிஷால் கலெக்கி (Michal Kalecki) பல தசாப்தங்கள் முன்பே எதிர்வுகூறியது போன்று, சமூக ஜனநாயகம் 1970களில் ஒரு அமைப்பு நெருக்கடியைச் சந்தித்தது. உயர்வான வேலைவாய்ப்புகளும் சமூகநல அரசின் பாதுகாப்பும் தொழிலாளரை விலைக்கு வாங்குவதற்கு மாறாக, போர்க்குணமிக்க ஊதியக் கோரிக்கைகட்குத் தூண்டின. நிலைமைகள் நன்றா

யிருந்த போது முதலாளிமார் ஈடு கொடுத்து வந்தனர். எனினும் பொருளாதாரத் தேக்கப் பண வீக்க நிலைமைகளில் - மந்தமான வளர்ச்சியும் உயரும் பணவீக்கமும் சந்தித்த நிலைகளில் பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பின் (OPEC) ஏற்றுமதித் தடைகளும் சேர, இலாப மீட்டல் நெருக்கடி ஒன்று உருவானது.

உருவாகிவந்த நவதாராளவாதம் பணவீக்கத்தை மறித்து இலாபத்தை மீட்டெடுத்தது. ஆனால், தொழிலாளி வர்க்கத்தின் மீதான நச்சுத்தனமான தாக்குதலின் மூலமே அது இயலுமாயிற்று. சமூக நல அரசைக் காப்பதற்கான கடுஞ் சண்டைகள் நடந்தன. எனினும்,நமது யுகம், கிளர்ச்சி நீக்கமுடையதாயும் அரசியல் ஒத்துழைப்புடையதாகவுமே பெரிதும் இருந்து வந்துள்ளது. அன்று தொட்டு, உண்மையான ஊதியப் பெறுமதி தேங்கியுள்ளது. கடன் ஓங்கியுள்ளது. பழைய சமூக- ஜனநாயகக் கட்டமைப்புப் பற்றிய பழைய கனாத் தோற்றத்துக்குக் கட்டுண்டுள்ள ஒரு புதிய தலைமுறைக்கான எதிர்பார்ப்புகள் இருண்டே உள்ளன.

1990களின் தொழில்நுட்ப எழுச்சியின் பயனாக, பழைய 'ஃபோர்ட் காலத்து' தொழிலகத்தின் இடத்தைப் பிடிக்கக்கூடிய இலகுவானதும் இணக்கப்பாடானதுமான ஒரு 'புதிய பொருளாதாரம்' பற்றிப் பேச்சுகள் எழுந்தன. ஆயினும் அது 1939 உலக வணிக விழாவில் உறுதியளிக்கப்பட்ட எதிர்காலத்தினின்றும் வெகு தொலைவிலானதாகவே இருந்தது.

எனினும் 2008இல் ஏற்பட்ட பொருளாதார மந்தம் அந்தக் கனவுகளை நொறுக்கியது. கீழிருந்து மிரட்டல்களில்லாததான முதலாளித்துவம் சீரழிவானதாகவும் காட்டுத்தனமானதாகவும் ஊக அடிப்படையிலானதாகவும் வளர்ந்தன.

என் தலைமுறையினரிற் பலரை பொறுத்தவரை முதலாளித்துவத்தின் தத்துவார்த்த ஆதாரங்கட்குக் குழி பறிக்கப்பட்டுவிட்டது. 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட அமெரிக்கர்களிடையே அதிக வீத மானோருக்கு முதலாளியத்தை விட சோசலிசத்துக்குச் சாதகமான ஒரு அபிப்பிராயம் உள்ளமை, கெடுபிடிப் போர்க்காலத்தில் சோஷலிசத்தை ஸ்டாலினிசத்துடன் சமப்படுத்துவது இனியும் செல்லாது என்பதற்கான சைகையாகிறது.


ஆய்வறிவு மட்டத்திலும் அதுவே உண்மை. மார்க்சியர்கள் பிரதான நீரோட்டத்தில் ஓரளவு கண்டுகொள்ளப்படுகிறார்கள். அயற்கொள்கை (Foreign Policy) சஞ்சிகை சமகாலப் பொருளாதார நெருக்கடியை விளக்க (Larry Summers) லறி சமேர்ஸை விடுத்து லியோ பனிச் (Leo Panitch) ஐ நாடுகிறது. டேவிட் ஹாவி (David Harvey) போன்ற சிந்தனையாளர்கள் தம் தொழிற்பாட்டுக் காலத்தின் பிற்பகுதியில் மறுமலர்ச்சி பெற்றுள்ளனர். நான் பதிப்பிக்கும் ஜாக்கொபின் (Jacobin) சஞ்சிகையை உள்ளடக்கும் தாராளவாதத்திற்கு இடதான சிந்தனைப் பரவலாக அடையாளங்காணப்படுவதை விளக்குவதனால், அதன் காரணம் வெறுமனே பிரதான நீரோட்டத்தின் மாற்றுவழிகள் பற்றிய நம்பிக்கை இழப்புக்கும் மேலாகக், கிளர்ச்சியாளர்கள், அமைப்புச் சார்ந்த ஆழமான வினாக்களை எழுப்பவும் புதிய விருத்திகளை வரலாற்றுச் சூழலிற் பொருத்திப் பார்க்கவும் ஆற்றலுடையோராய் உள்ளமையேயாகும்.

கொண்டாடப்படும் தாராளவாதியாயுள்ள போல் க்ருக்மன் (Paul Krugman) நீண்ட காலமாக அமெரிக்க வாழ்வின் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவையான சிந்தனைகளைப் மேற்கோள்காட்டி வருகிறார். தன்னியக்கப் பொறிகளையும் உழைப்பின் எதிர்காலத்தையும் பற்றிப் பேசும்போது 'அது பழைய வகை மார்க்சியத்தின் எதிரொலிகளைக் கொண்டுள்ளது. - அது உண்மைகளைப் புறக்கணிப்பதற்கான நியாயமாகாது. ஆனால், மிக அதிகமாக அவ்வாறே அமைகிறது.' ஆனால் மீளெழுச்சியுற்ற இடதுசாரிப் போக்கினிடம் கவலைகட்கும் மேலாக விடயங்கள் உள்ளன. அவர்களிடம் யோசனைகள் உள்ளன. வேலை நேரத்தைக் குறுக்குவது பற்றி, உழைப்பை நுகர்வு நீக்கஞ் செய்வது பற்றி, உற்பத்தியில் ஏற்படும் முன்னேற்றங்கள் வாழ்வை மேலும் துன்பமாக்குவதற்கு மாறாகச் சிறப்பானதாக்குவதைப்பற்றி.

இங்கு தான், எவ்வளவு ஒழுங்கீனமாகவேனும், 21ஆம் நூற்றாண்டின் சோசலிசமாக உருவாகி வருகிற விடயம் தனது வலிமைகளைப் புலப்படுத்துகிறது. எதிர்காலம் பற்றிய ஒரு கனாத்தோற்றத்தை முன்வைக்க விருப்புடைமை- இதுவெறும் விமர்சனத்தை விட ஆழமானது. எனினும் ஆய்வறிவுப் பெயர்வுகள் தம்மளவிற் பொருள் குறைந்தவை.

2011 இல் 'கைப்பற்றல்' (occupy) இயக்கம் தொடங்கிய போதிலும், அமெரிக்காவின் அரசியல் நிலக் காட்சி இருண்டேயுள்ளது. தொழிலாளர் இயக்கம், முக்கியமாகச் சிக்கன நடவடிக்கைகட்கு எதிராகப் போராடும் பொதுச் சேவைத்துறை ஊழியர்களுடையது. சற்று உயிர்த் துடிப்பைக் காட்டுகிறது. எனினும் இவையாவும் ஆக மிஞ்சினால் பின்வரிசைத், தற்காப்புப் போராட்டங்களே. தொழிற்சங்க இணைவு வீதம் சரிந்துகொண்டே போகிறது. புரட்சிகர ஆவேசமன்றி அக்கறையீனமே கோலோச்சுகிறது.

அமெரிக்காவில் மார்க்சியம், மாறி வரும் நம் உலகைப் பற்றிக் குழம்பிப் போயுள்ள பிரதான நீரோட்டக் கருத்துரையாளர்களின் ஆய்வறிவுக் கருவி என்பதற்கும் மேலானதாக இருக்க வேண்டும். அது அந்த உலகை மாற்றும் கருவியாக அமைய வேண்டும். பேசப்படுவதாக 1939 இன் தீர்க்கதரிசிகள் வழங்கியதை விட நிசமான ஓய்வு, வளச்செழிப்பு ஜனநாயகம் என்பன வெறுமனே எழுத்தில் மட்டுமன்றி மக்களின் நுகர்வுக்காகப் பேசப்பட வேண்டும். ஒரு சோசலிச 'டிஸ்னி உலகம்' 'உலகின் முடிவுக்குப்' பின்பான ஒரு உற்சாக மூட்டல். ■



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

மதுசூதனன்

இந்துத்துவ அரசியலின் எழுச்சி, இந்து மதவெறி மற்றும் முஸ்லிம் மத வெறி ஆகியவற்றுக்கு எதிரான தொடர்ச்சியான போராட்டத்தை தனது இருப்புக்கான அடையாளமாக உறுதிப்படுத்தி வந்தவர். சமூக அரசியல் பொருளாதாரம், பண்பாடு, மதவியல், தத்துவவியல், உளவியல் முதலான தளங்களில் ஊடாடி மதவெறிக்கு எதிரான கருத்தியல் போராட்டத்தை வலுப்படுத்துவதில் முன்னின்று உழைத்தவர்

# அஸ்கர் அலி என்ஜினியர் (1939 - 2013)

அனைத்திந்திய அளவில் தீவிர மதவெறி எதிர்ப்புச் செயல் வீரரும் ஆய்வாளரும் கோட்பாட்டாளரும் உறுதிமிக்க இஸ்லாமிய சீர்திருத்தவாதியுமான அஸ்கர் அலி என்ஜினியர் தனது 73ஆவது வயதில் (மே 14- 2013) காலமானார்.

1980களில் தீவிரம்பெற்ற பார்ப்பன இந்துமத வெறியையும் அதற்கு எதிர்வினையாக வலுப்பெற்ற இஸ்லாமிய மதவெறியையும் எதிர்த்துப் போராடிய அறிவுத்துறையினரில் அஸ்கர் அலி என்ஜினியர் மிகவும் முக்கியமானவர். இவர் இக்காலத்தில் உருவாக்கிய அறிவுச் சொல்லாடல்கள் சமகால அரசியல் சமூகத்தை, சிவில் சமூகத்தை மிகவும் நுட்பமாகவும் மிகவும் ஆழமாகவும் விமர்சனத்திற்கு உட்படுத்தின. மாற்றங்களை உருவாக்குவதற்கான நம்பிக்கையை வளர்த்தெடுப்பதிலும் தீவிரமாகச் செயற்பட்டவர். இவரது எழுத்துகள் இந்து மதவெறியை மட்டுமன்றி இஸ்லாமிய மதவெறி கடுங்கோட்பாட்டுவாதத்தை எதிர்ப்பதற்கும் பெரிதும் பயன்பட்டன.

அஸ்கர் அலி என்ஜினியர் தாவூதி போரா முஸ்லிம் குடும்பத்தில் பிறந்தவர். இவர் பொறியியலில் (சிவில்) பட்டம் பெற்று மும்பாய் மாநகராட்சியில் பொறியியலாளராக நீண்டகாலம் பணிபுரிந்தவர். இஸ்லாம் பற்றிய ஆய்விலும், சமய ஒப்பியல் ஆய்விலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இஸ்லாமிய மூல நூல்களை அரபி, பாரசீக மொழிகளிலேயே கற்றவர். தொடர்ந்து ஆங்கிலத்தில் பல நூல்களை எழுதி உள்ளவர். முக்கியமான அரசியல் பிரச்சினைகள் எழுச்சி பெறக்கூடிய காலங்களில் இவரது கட்டுரைகள் பலரது கவனத்தை ஈர்த்துள்ளது.

மேற்கத்தைய தத்துவஞானம் குறிப்பாக இருத்தலியல், மார்க்சியம் போன்றவை இவருக்கு ஈடுபாடுள்ள ஏனைய துறைகளாகும். 1990களுக்குப் பின்னர் இவரது கட்டுரைகள், நேர்காணல்கள் தமிழில் வெளிவரக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாக இருந்தன. இவர் முற்போக்கு இடதுசாரி சிந்தனைகளில் நெருக்கமான ஊடாட்டம் உள்ளவராக இருந்துவந்துள்ளார்.

என்ஜினியர் எழுதிய ''இஸ்லாமிய தோற்றமும் வளர்ச்சியும்'' என்னும் தமிழ் நூலை ( தமிழில் : ஐ. இசக்கி) ஓரியன்ட் லாங்மன்ட் 1993 இல் வெளியிட்டது. அன்று முதல் தமிழ் வாசகர்களுக்கு என்ஜினியர் அறிமுகமாகி உள்ளார். இந்நூல் இஸ்லாத்தின்

தோற்றத்தை சமூக மற்றும் பொருளாதாரப் பின்னணியில் விளக்க முயன்றுள்ளது. இதற்கு மார்க்சிய அணுகுமுறையைப் பயன்படுத்தியுள்ளார். குறிப்பாக மார்க்சிய அணுகுமுறை சமூக -மதக்கோட்பாடுகளை விளக்குவதற்கு ஏற்றகருவியாக உள்ளதென்பதை தெட்டத்தெளிவாகப் புரிந்துகொண்டு செயற்பட்டுள்ளார்.

இந்த நூல் கூடிய மட்டும் ஒரே மாதிரியைப் பின்பற்றுவதையோ எந்தவொரு கோட்பாட்டு விளக்கம், சித்தாந்தம் அல்லது மாதிரி வடிவைப் எந்திரத்தனமாகப் பின்பற்றுவதையோ தவிர்க்க முயலும். உண்மை என்பது சமூக ரீதியானதென்றாலும் அரசியல் அல்லது கோட்பாடு ரீதியிலானதென்றாலும் மேலெழுந்தவாரியாக நினைப்பதைப் போலன்றி மிகச் சிக்கலானது. அதைப் பகுத்தாய்ந்து அறிவதற்கு மிகவும் கவனம் தேவை. ஒரே தன்மையாகப் பின்பற்றுவதையோ கொள்கைகளை வரட்டுத்தனமாகப் பின்பற்றுவதையோ, தவிர்க்க வேண்டும். சமய சித்தாந்தங்கள் விடயத்தில் மேலும் அதிகம் கவனம் தேவை. ஏனென்றால், அதில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் அதிக குழப்பமானவை. மற்றைய சித்தாந்தங்களை விட இந்த நம்பிக்கைகள் அதிக உறுதியுடனும் அதிக பிடிப்புடனும் கைக்கொள்ளப்படுகின்றன. எந்த வொரு தனிப்பட்ட கோட்பாட்டு விளக்கம், மாதிரி வடிவம் அல்லது கருதுகோள் - அது எவ்வளவு தான் விஞ்ஞான ரீதியாக உண்மையென நிரூபிக்கப்பட்டிருந்தாலும், ஒரு உண்மையின் பல்வேறு அம்சங்களையும் முழுக்க முழுக்க விளக்கிவிட முடியாதென்பது இந்த நூலாசிரியரான அஸ்கர் அலி என்ஜினியரின் உறுதியான கருத்து.

இந்த நூல் நிச்சயம் தெளிவான பார்வைப் புலன்களை உருவாக்கக் கூடியது எனலாம். அதற்கான தேர்விற்கும் தெரிவிற்கும் உரிய சந்தர்ப்பங்களை அடையாளங்காட்டுகிறது. ஆய்வு முறையியல் சார்ந்து நுட்பமான கூறுகளை கற்றுக்கொள்வதற்கும் இந்த நூல் புதுப்பாதை காட்டுகிறது.

இதுபோல் என்ஜினியரின் மற்றொரு நூலான ''இஸ்லாத்தின் பிரச்சினைகள் ஒரு மறுபார்வை'' 2003 இல் வெளிவந்தது. இந்நூலில் இஸ்லாத்தின் பிரச்சினைகள் ஒரு மறுபார்வை- அறிமுகம், இஸ்லாமும் அகிம்சையும், சுதந்திரம் - நல்லொழுக்கம்- இஸ்லாம், இஸ்லாமும் குடும்பக் கட்டுப்பாடும், இஸ்லாமும் முஸ்லிமில்லாத சிறுபான்மையினரும், இஸ்லாமும் மனித உரிமைகளும், இஸ்லாமும் குற்றங்களுக்கான தண்டனையும், இஸ்லாமும் அற மதிப்பீடுகளும், இஸ்லாம்- முஸ்லிம் - சமகால இந்தியா, இஸ்லாம் - அறுதித் தரிசனம் முதலான அத்தியாயங்களில் ஆக்கம் பெற்றுள்ளது.

சமகால இந்தியச் சூழலில் இஸ்லாம் - முஸ்லிம்- சிறுபான்மைச் சமூகம் என்ற இணைப்பு நாம் புரிந்து கொள்ள வேண்டிய விளக்கவேண்டிய அரசியல் நிலைப்பாடுகளுக்கான கோட்பாட்டாக்க தெளிவை இந்நூல் தெளிவுபடுத்துகிறது. குறிப்பாக இஸ்லாமின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்யும் முக்கியமான ஆக்கமாக இந்நூல் அமைந்துள்ளது. இஸ்லாம் குறித்து சமுதாயத்திற்குள் நிலவும் தவறான கருத்தாக்கங்கள் மற்றும் ஒற்றைப்புரிதல்களை ஆய்வு செய்கிறது. முஸ்லிம்கள் மட்டுமல்லாமல் முஸ்லிம் அல்லாத வரிடத்திலும் இஸ்லாம் குறித்த ஒரு மறு மதிப்பீட்டையும் மறு சிந்தனையையும் என்ஜினியர் வலியுறுத்துகின்றார். அரேபியாவின் சமூகவியல் மற்றும் வரலாற்று சூழ்நிலைகளில் உருவாகி, நவீன உலகத்திற்குப் பொருந்தாமல் உள்ள நடைமுறைகளை புறக்கணித்து ஒதுக்கவும் வேண்டுகிறார். அதற்கான சிந்தனைகளையும் கேள்விகளையும் தர்க்க ரீதியில் இழையோடவிடுகின்றார். இதைவிட நவீன உலகில் மதத்தின் பங்கு ஒரு பன்முகச் சமூகத்தில் மதச்சிறுபான்மையினரின் அடையாளம் ஆகியவை குறித்து மேலும் தெளிவாக ஆராய்கின்றார்.

இந்த இரு நூல்களும் என்ஜினியரின் சமூகப்பார்வையை தத்துவ தரிசனத்தை பரிசீலிப்பதற்கான சிறந்த கருவிகள் எனக் கூறலாம். ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உருவான இஸ்லாம், பிரபுக் குலத்தினர் தம் வர்க்க நலனுக்கு ஏற்ப வளைத்ததையும் பெண்ணுரிமையை பறித்ததையும் துணைக்கண்டத்தில் அஷ்ரப், அஜ்லப் என்ற மேல்சாதி - கீழ்சாதி பிரிவினை பேணப்பட்டதையும் என்ஜினியர் அம்பலப்படுத்துகிறார். காலனியாதிக்க எதிர்ப்பிலும் கூட ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த ஏழை முஸ்லிம்களும் உலமாக்களும் தான் முன்னின்றனரேயன்றி மேட்டுக்குடி முஸ்லிம்கள் அல்லவென்பதை தனது ஆய்வுகளில் ஆதாரபூர்வமாக விளக்கியுள்ளார்.

இந்துமத வெறியின் எதிர்விளைவாகத் தான் இஸ்லாமிய கடுங்கோட்பாட்டு வாதமும் தீவிரவாதமும் வலுப்பெற்றன. இருந்தபோதிலும் சிறுபான்மை மதவெறியை என்ஜினியர் மென்மையாக அணுகவில்லை. மதவெறியினால் ஏற்படும் பாதிப்புகளை இந்து - முஸ்லிம் என்ற சட்டகத்திற்கு அப்பாற்பட்டு உழைக்கும் வர்க்கத்திற்கு ஏற்படும் பாதிப்பு என்ற கோணத்திலேயே முதன்மையாக அணுகுகின்றார்.

மதக்கலவரங்கள் தொடர்பான என்ஜினியரின் ஆய்வுகள் முன்மாதிரியானவை. ஜபல்பூர் கலவரத்தில் தொடங்கி வட இந்தியாவில் அடுத்தடுத்து நடைபெற்ற கலவரங்களையும் மிக நுணுக்கமாக ஆய்வு செய்திருக்கிறார். ஒவ்வொரு பிரச்சினைகளிலும் என்ன விதமான வர்க்க முரண்பாடுகள் அல்லது சமூகப் பொருளாதாரக் காரணிகள் எப்படி மத முரண்பாடுகளாகத்திரிக்கப்பட்டன என்பதையும் தெளிவுபடுத்துகிறார். பிரச்சினைகள் கலவரங்கள் ஏற்படுத்தும் உணர்வுத் தாக்கங்களுக்கு அப்பால் எவற்றையும் அறிவுபூர்வமாக ஆராய வேண்டும், அதன் வெளிச்சத்தில் உண்மையைக் கண்டறிய வேண்டும் என்பதிலும் இவர் உறுதியாக இருந்துள்ளார். இதற்காகவே தனது ஆய்வுகளை எழுத்துகளை முழுமையாகப்

பயன்படுத்தியுள்ளார்.

இந்தியாவின் வரலாற்றை இந்து - முஸ்லிம் மோதலின் வரலாறாக திரித்துக்காட்டும் சதியை இந்துத்துவ சக்திகள் மிகத் தீவிரமாக அரங்கேற்றி வருகின்றன. இவற்றுக்கு பதிலளிக்கும் வகையில் ஆதாரபூர்வமாக மறுக்கும் எழுத்துகளை எழுதத் தொடங்கினார். மன்னர்களை அவர்களுடைய வர்க்க நலன் தான் இயக்கியதேயன்றி மதமல்ல என்பதை வரலாற்று ஆதாரங்களுடன் மறுத்து நிறுவின. மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு உழைக்கும் வர்க்கத்திடம் நிலவி வந்த ஒற்றுமையின் சான்றாக சூஃபி மற்றும் வட இந்திய பக்தி இயக்க மரபுகளிடையே காணப்படும் ஒற்றுமையெனும் வரலாற்றில் இருந்து எடுத்துக்காட்டி என்ஜினியர் கொடுத்த விளக்கம், அரசியல் செயற்பாட்டிற்கான மாற்றுக்களங்களை திறந்து விட்டன. மதச்சார்பற்ற சமூக உருவாக்கத்திற்கான கருத்தியல் கூறுகளை முன்வைத்துக் கொண்டிருந்தார். மத வெறி எந்தவடிவில் யார் மூலமாக வந்தாலும் அவை எதிர்க்கப்பட வேண்டும் என்பதிலும் உறுதியாக இருந்துள்ளார்.

சிறுபான்மையினர் மீதான தொடர்ச்சியான திட்டமிட்ட தாக்குதல் என்பது பா.ஜ.க ஆட்சியில் நடந்து வரும் மிக அபாயகரமான நிகழ்வுப் போக்காகும் என்பதை ஆரம்பம் முதல் தெளிவுபடுத்திக்கொண்டு வந்தார். பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பின்னர் எம்.எஸ். கோல்வாக்கர் நிர்ணயித்துள்ள இலக்கை அடைவதற்கு சங்க பரிவாரங்கள் குறிப்பாக பி.எச்.பி. யும் பஜ்ரங்களும் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகின்றன. சிறுபான்மை மக்களைத் தாக்குவது என்னும் அபாயம் வாழ்க்கையாக மாறியுள்ளதென்பதையும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் தெளிவாக எடுத்துரைத்து வந்தார்.

என்ஜினியர் இஸ்லாமிய சீர்திருத்தவாதியாக இருந்தபோதிலும் எப்போதும் மதச்சார்பற்றவர்களுடன் தான் தன்னை இணைத்திருந்தார். அவர்களுடன் தான் தன்னை முழுமையாக அடையாளப்படுத்திக் கொண்டார். ''தான் இறந்த பின்னரும் முற்போக்கானவர்கள் துயிலும் இடுகாட்டில் தன்னை புதைக்கவேண்டும் என விரும்பினார். கொள்கையைக் கடைப்பிடிப்பதில் பாறைபோன்ற உறுதியைக் கொண்டவர்'' என்று தனது தந்தையை நினைவு கூருகிறார் அவரது மகன் இர்பான் என்ஜினியர்.

என்ஜினியர் ஷியா இஸ்லாமின் ஒரு உட்பிரிவான தாவூதிபோரா சமூகத்தில் பிறந்தவர். இங்கு சையத்னா மொஹியுதீன் என்ற தலைமை மதக் குருவின் சர்வாதிகாரம் இருந்தது. இந்த மத குருவை வணங்க மறுத்து தன் இளம் வயதிலேயே அஸ்கர் அலி எஞ்சினியர் கலகம் செய்தவர். 1970களில் இந்த மதகுருவின் சர்வாதிகாரத்தை அம்பலப்படுத்தி டைம்ஸ் ஒஃப் இந்தியா நாளேட்டில் ஒரு கட்டுரை எழுதினார். இதனால் என்ஜினியர் சமூக நீக்கம் செய்யப்பட்டு சொந்த தாயைக் கூட பார்க்கமுடியாமல் தடுக்கப்பட்டார். ஆறுமுறை இவர் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தினர் கூலிப்படையினர். என்ஜினியரின் வீடும் அலுவலகமும் சூறையாக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டன. ஆனால், என்ஜினியர் இவை எவற்றுக்கும் இறுதிவரை அடிபணியவில்லை.

இந்துத்துவ அரசியலின் எழுச்சி இந்துமதவெறி மற்றும் முஸ்லிம் மதவெறி போன்றவற்றை எதிர்த்து தொடர்ந்து போராடுவது தனது இருப்புக்கான அடையாளமாக உறுதிப்படுத்திவந்தார். இதற்காக சமூக அரசியல், பொருளாதாரம், பண்பாடு, கருத்தியல், மதவியல், தத்துவவியல், உளவியல் முதலான தளங்களில் ஊடாடி மதவெறிக்கெதிரான கருத்தியல் போராட்டத்தை வலுப்படுத்தி வந்தார். இறுதிவரை மதச்சார்பற்ற சமூகத்தை உருவாக்குவதற்கான சமூகப் போராளியாக வாழ்ந்துவந்தார். ■

---


*(55ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

பத்திரிகை ஹேஷ்யங்களை வைத்துப் பார்க்கும் போது, மத்தியில் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்குத் திரும்பாது. குஜராத் முதல்வர் நரேந்திர மோடி தலைமையில் பாரதிய ஜனதாக் கட்சி அங்கம் வகிக்கும் கூட்டணியே ஆட்சியைப் பிடிக்கும். மாறாக களநிலையில், கடந்த 2004 மற்றும் 2009ஆம் ஆண்டு தேர்தல்களிலும் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றிருக்கக்கூடாது - ஆனால், இரு முறையும் அந்தக் கட்சி வெற்றி பெற்றதென்னவோ உண்மை. இவை இரண்டும் தவிர்த்து, 1989 மற்றும் 1996 ஆகிய தேர்தல்களைப் போலவே, காங்கிரஸ் அல்லது பாரதீய ஜனதாக் கட்சியின் ஆதரவோடு மூன்றாவது அணி ஆட்சியைப் பிடித்தால் என்ன ஆகும்? முந்தைய வி. பி.சிங், தேவகௌடா மற்றும் குஜ்ரால் தலைமையிலான அரசுகளைப் போலவே நித்திய கண்டம், பூரண ஆயுசு என்ற விதத்தில், சில பல மாதங்களுக்கு மட்டுமே அதனால் தாக்குப்பிடிக்க முடியும்.

பின்னர், 2016ஆம் ஆண்டு வாக்கில் புதிய நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று, தெளிவு பிறக்கும். அதுவரை, பொருளாதாரக் கொள்கை என்று மட்டுமல்ல, பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டுக் கொள்கையில் குழப்பமே நிலவும். இன்னும் சொல்லப்போனால், ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதிலேயே, அப்போதைய பிரதமரும் அரசும் நாட்களைச் செலவிட வேண்டியிருக்கும். பின் னரே கலங்கிய தண்ணீரில் தெளிவு பிறக்கும்! ■

நூல் அறிமுகம்

# பிரிவுக் காரியாதிகாரி முறையின் தோற்றமும் மறைவும் (1939-1963)






க.சண்முகலிங்கம்

டி. ஆர்.ஓ (DRO) என்ற சுருக்கப் பெயரைப் பதவிப் பெயராகக் கொண்ட நிர்வாக உத்தியோகத்தர் முறை 1939 ஆம் ஆண்டில் இலங்கையில் நடைமுறைக்கு வந்தது. தமிழில் 'பிரிவுக் காரியாதிகாரி' என அழைக்கப்படும் இவ்வுத்தியோகத்தர்களின் நியமனம் இலங்கையின் சமூக அரசியல் வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பம் என்றே கூறலாம். பிரிவுக் காரியாதிகாரி முறை நடைமுறைக்கு வருமுன்னர் இந்நாட்டில் நிலமானிய, அரை நிலமானிய முறைமையொன்றிற்குரிய தான உள்ளூர் நிர்வாக முறை இருந்து வந்தது. மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு அடுத்த நிலையில் இருந்த நிர்வாக அதிகாரிகளாக முதலியார்கள், றட்டே மஹாத்தயா என்ற பதவிப் பெயருடையவர்கள் தென்பகுதியில் பணிபுரிந்தனர். வடகிழக்கு மாகாணங்களில் இவர்களையொத்த அதிகாரிகளின் பெயர்கள் வேறாக இருந்தன. இடத்துக்கிடம் வேறுபட்ட இப்பதவிகள் பற்றிய விபரங்களை பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

| பகுதி | பதவி |
|---|---|
| 1. கரையோர மாகாணங்கள் (சிங்களப்பகுதிகள்) | முதலியார்கள் |
| 2. 1815இற்கு முன்னர் கண்டி அரசின் கீழிருந்த கண்டிப்பகுதி | றட்டே மஹாத்தயா |
| 3. கரையோர மாகாணங்கள் (தமிழ்ப்பகுதிகள்) | |
| அ. வடமாகாணம் (மன்னார் நீங்கலாக) | மணியகாரன் |
| ஆ. மன்னார் மாவட்டம் | அதிகாரம் |
| இ. கிழக்கு மாகாணம் | வன்னியனார் |

முதலியார்களும், றட்டே மஹாத்தயாக்களும் அவர்களையொத்த பிறரும் ஓய்வு பெறச் செய்யப்பட்டதும், இப்பிரபுக் குலத்தின் இடத்திற்கு கல்வித் தகைமையின் அடிப்படையில், போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் படி இலங்கை முழுமைக்குமாக பிரிவுக்காரியாதிகாரிகள் நியமிக்கப்பட்டதும் முக்கியம் வாய்ந்த சமூக மாற்றம் என்பதில் ஐயமில்லை. 1939 இல் தொடங்கப்பட்ட இச்சேவை 1963 இல் முடிவுக்கு வந்தது. இறுதியாக 1962 ஆம் ஆண்டில் பிரிவுக்காரியாதிகாரி சேவைக்கு 34 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர். 1963 இல் உருவாக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையில் (சி.ஏ.எஸ்) உள்ளீர்க்கப்பட்ட காரியாதிகாரிகள் ஒன்றிணைந்த நிர்வாக சேவையில் இணைந்தனர். அவர்களில் பலர் உள்ளூராட்சி, கமநலச்சேவை, கூட்டுறவு போன்ற வெவ்வேறு திணைக்களங்களின் உதவி ஆணையாளர்களாக இடமாற்றம் பெறவும், பதவி உயர்வுகளைப் பெற்று அரசாங்க அதிபர், அமைச்சுச் செயலாளர் போன்ற உயர் பதவிகளை வகிக்கவும் முடிந்தது. காரியாதிகாரியாகச் சேர்ந்தவர் காரியாதிகாரியாகவே ஓய்வுபெறும் நிலை மாறியது.

D.R.O (1939-1963) Man For All Seasons (பன்முக ஆளுமை மிக்க டி.ஆர்.ஓ) என்ற தலைப்பில் வெளிவந்துள்ள நூல் பிரிவுக்காரியாதிகாரி முறைமையின் தோற்றத்தையும் மறைவையும் எடுத்துக் கூறுகி

றது. இந்நூல் இரு பகுதிகளைக் கொண்டது. 61 பக்கங்களைக் கொண்ட முதலாவது பகுதியில் இலங்கையின் உள்ளூர் நிர்வாக முறையின் வரலாறு விரித்துரைக்கப் பட்டுள்ளது. இரண்டாவது பகுதியில் பிரிவுக்காரியாதிகாரிகளாகவிருந்து இளைப்பாறிய 11 உத்தியோகத்தர்களின் அனுபவப் பகிர்வாக அமையும் 11 கட்டுரைகளும், பயனுள்ள தகவல்களைக் கொண்ட 3 பின்னிணைப்புகளும், நூற்பட்டியலும் இடம்பெற்றுள்ளன.

## ஆட்சேர்ப்புமுறை

காரியாதிகாரிகளை ஆட்சேர்க்கும் முறையில் 'மெரிற்றோகிரசி' (Meritocracy) என்னும் பண்பு புகுந்தது. பிறப்பால் ஒருவர் அடையும் தகுதிகளைக் கொண்டு அல்லாமல் நபர் ஒருவர் வாழ்க்கையில் தாம் தேடிக்கொள்ளும் தகைமைகளையும், திறமைகளையும் அடிப்படையாகக் கொண்ட ஆட்சேர்ப்பு முறை நவீன அலுவலர் ஆட்சியின் பிரதான இயல்புகளில் ஒன்று. இது ஜனநாயக முறைகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு உதவியது. தென்பகுதிகளின் பலம் பொருந்திய றட்டே மஹாத்தயாக்களும் முதலியார்களும் தம் பதவிகள் பறிக்கப்படுவதை எதிர்த்தனர். குறிப்பாக கண்டிப்பகுதிகளில் புதிய முறைக்கு எதிர்ப்பு இருந்தது. முன்னைய கண்டி இராச்சியத்தின் பகுதிகள் கரையோர மாகாணங்களோடு ஒப்பிடும்போது கல்வியில் பின்தங்கியனவாய் காணப்பட்டன. பட்டப்படிப்பை அடிப்படைத் தகுதியாகக் கொண்டு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டால் தம் பகுதிகளில் கரையோர மாகாணங்களின் சிங்களவர்களும், தமிழர்களும் 'றட்டே மஹாத்தயாக்களின்' இடத்தைப் பிடித்து விடுவார்கள் என்ற பயம் கண்டியர்களுக்கு ஏற்பட்டது இயல்பானதே. இதனால் ஆரம்பத்தில் காரியாதிகாரிகளை ஆட்சேர்ப்புச் செய்யும் பொழுது 'எஸ்.எஸ்.சி' எனப்படும் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தை அடிப்படைத் தகுதியாக வைத்துக் கொள்வதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. 1950களில் பட்டதாரிகள் மட்டுமே பிரிவுக்காரியாதிகாரி சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். 1962 ஆம் ஆண்டு பெப்ரவரி 2ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த ஆட்சேர்ப்பு விளம்பரத்தின் படி, பிரிவுக் காரியாதிகாரி பதவிக்கு விண்ணப்பிப்போரிற்கு இருக்க வேண்டிய தகுதிகள் பின்வருவனவாகக் குறிப்பிடப்பட்டிருந்தன.

1. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. 21இற்கும் 25 இற்கும் இடைப்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.
3. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

சிவில் சேவைப் பரீட்சையினைப் போன்ற போட்டிப் பரீட்சை மூலம் காரியாதிகாரிகள் 1950களில் தெரிவு செய்யப்பட்டனர். 1962 ஆம் ஆண்டின் பரீட்சை வினாத்தாள்கள் அமைப்பு பின்வருமாறு;

1. பட்டப்படிப்புக்கான மூன்று பாடங்களில் ஒவ்வொரு பாடத்திலும் இரண்டு வினாத்தாள்கள் என்ற முறையில் 6 வினாத்தாள்கள்-600 புள்ளிகள் (உ+ம் பொருளியல், வரலாறு, சிங்களம் என்ற மூன்று பாடங்களை ஒருவர் தெரிவு செய்தால் இம்மூன்று பாடங்களில் ஒவ்வொன்றிலும் இரு வினாத்தாள்களுக்கு விடை எழுதவேண்டும்)
2. மேலதிகமாக மூன்று வினாத் தாள்கள்

அ. கட்டுரை - 100 புள்ளிகள்
ஆ. பொது அறிவு - 150 புள்ளிகள்
இ. சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் என்ற மொழி இலக்கியப் பாடத்தில் ஒரு வினாத் தாள் -150 புள்ளிகள்

ஒன்பது வினாத்தாள்களுக்குமாக வழங்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 1000 ஆகும். 1939 இற்கும் 1962 இற்கும் இடைப்பட்ட காலத்தில் 13 தடவைகள் பிரிவுக் காரியாதிகாரி பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்பட்டது.

## பிராந்திய முறையிலான ஆட்சேர்ப்பு

பிரிவுக் காரியாதிகாரிகளின் ஆட்சேர்ப்பு தெளிவான மூன்று புவியியல் பிராந்தியங்களின் (Area) அடிப்படையில் செய்யப்பட்டதென்பது இம்முறையின் விசேட அம்சமாகும். இம்மூன்று புவியியல் பிராந்தியங்களாவன.

1. கண்டிப்பகுதி
2. கரையோரப்பகுதி
3. தமிழ் பேசும் மக்கள் பகுதி (Tamil Speaking area)

முன்னைய கண்டி இராச்சியத்தின் பகுதி பின்னடைந்த பகுதியாக இருந்ததால் ஆட்சேர்ப்புக்குரிய கல்வித் தகைமை ஆரம்பத்தில் எஸ்.எஸ்.சியாக குறைக்கப்பட்டிருந்ததைக் குறிப்பிட்டோம். இதனை விடக் கண்டியர் சமூகத்திற்கு மேலதிக பாதுகாப்பு ஒன்றும் தேவைப்பட்டது. கண்டிப் பகுதியின் காரியாதிகாரிகள் பிறப்பால் கண்டியராக, கண்டிச் சிங்களவராக இருத்தல் வேண்டும் என்பதே இப்பாதுகாப்பு, அக்கால இலங்கையில் தென்பகுதியில் வாழ்ந்த மக்களிடையே

1. கண்டிச் சிங்களவர்
2. கரை நாட்டுச் சிங்களவர்

என்ற அடையாள உணர்வு மிகுந்திருந்ததையும் கண்டியர் தம் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வுடையவர்களாய் இருந்ததையும் இது எடுத்துக் காட்டுகிறது. கண்டிச் சிங்களவர்களின் பிராந்திய பிரதேச அடிப்படையிலான கோரிக்கை காரணமாக தமிழ்பேசும் தமிழர்கள், முஸ்லிம்களின் உரிமைகளும் கவனத்தில் கொள்ளப்பட்டன. காரியாதிகாரி ஆட்சேர்ப்பு தொடர்பான அரசாங்க ஆவணங்களில் 1930களிலேயே 'தமிழ்பேசும் மக்கள் பகுதி' என்ற தொடர் உபயோகிக்கப்பட்டுள்ளது என்பது கவனிக்கத்தக்கது. இந்நூலை நான் படிக்கும் வரை இப்படியான ஒரு சொற்றொடர் பிரயோகம் தமிழ்த்தேசியவாதம் 1960களில் கண்டுபிடித்ததொன்று என்றும் இது ஒரு கருத்தியல் என்றும் கூறப்பட்ட

வாதத்தை ஏற்றுக்கொண்டிருந்தேன். அந்த வாதம் தவறானது என்பது இப் போது புரிகிறது. காரியாதிகாரி முறை தொடர்பான அரசாங்க அறிக்கைக ளும் ஆவணங்களும் 1962 வரை 'தமிழ் பேசும் (மக்களின்) பகுதிகள்' என்ற தொடரை பதிவு செய்து வந் துள்ளன என்பது எனக்கு வியப் புக்குரிய விடயமாகப்படுகிறது.

1. கண்டிய சிங்களவர் மட்டுமே கண் டிப் பகுதியின் காரியாதிகாரி பதவி வெற்றிடத்திற்கு நியமிக்கப் படலாம். போட்டிப் பரீட்சை நடை பெற்ற பின்னர் பொதுச் சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப் படும் விசேட சபை பரீட்சார்த்தி கண்டிச் சிங்களவர் என்பதற்குரிய சான்றுகளை பரிசீலனை செய்து உறுதி செய்யும். கண்டிச் சிங்கள வர் என்ற தகைமை இல்லாத ஒரு பரீட்சார்த்தி கரையோரப் பகுதிச் சிங்களவர் எனக் காணப்படின் கரையோரப் பகுதியின் வெற்றி டத்திற்கு பிற தகைமைகளின் அடிப்படையில் நியமிக்கப்பட லாம்.
2. சிங்கள மொழியைத் தாய் மொழி யாகக் கொண்ட ஒருவரே கரை யோரப் பகுதிக்கு நியமிக்கப்பட லாம். இதேபோன்று தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட ஒரு வரே தமிழ் பேசும் பகுதிக்கு நியமிக்கப்படலாம்.

மேற்குறித்த நிபந்தனைகள் குழு உரிமைகளின் பாதுகாப்பு ஏற்புடைய விடயமாக அன்று கருதப்பட்டதை எடுத்துக்காட்டுகிறது.

## கடந்து சென்ற ஒரு காலம் பற்றிய நினைவுத் துயர்

நூலின் இரண்டாம் பகுதியில் உள்ள அனுபவப் பதிவுகளில் கடந்து சென்ற ஒரு காலம் பற்றிய நினைவுத் துயர் வெளிப்படுகிறது. உத்தியோகத் தர்களின் அனுபவங்கள் சுவை மிக்க முறையில் எடுத்துச் சொல்லப்பட் டுள்ளன. பொலிஸ் அதிகாரம் செயற் படாத பகுதிகள் (Un Policed area) மன்னார், வவுனியா, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களிலும், கிழக்கு மாகாணத்திலும், பிற சிங்களப் பகுதி களிலும் இருந்தன. குற்றத் தடுப்பு வேலைகளிலும், குற்றவாளிகளைக் கைது செய்து நீதிவான் முன்னிலை யில் நிறுத்துதல், வழக்குத் தொடுத் தல் என்பன காரியாதிகாரிகளின் கட மைகளின் பகுதியாக இருந்தது. கே.தயாபரன், கே.சி. லோகேஸ்வரன் ஆகியோர் எழுதியுள்ள கட்டுரைக ளில் அவர்கள் குற்றவாளிகளைக் கையாண்ட அனுபவம் சுவையாக எடுத்துக்கூறப்பட்டுள்ளது. காரியாதி காரியின் பொலிஸ் வேலை தொடர் பாக எல்.எம்.சமரசிங்க எழுதியுள்ள கட்டுரை (பக்139-143) புத்தளம், ஆனமடுவ பகுதியில் கிடைத்த அனு பவங்களை சுவாரஸ்யமாக விவரிக் கிறது. இத்தொகுப்பில் உள்ள சிறந்த கட்டுரைகளில் இதுவும் ஒன்றாகும்.

1963இல் காரியாதிகாரிமுறை ஒழிக்கப்பட்டது பற்றி இந்நூலின் கட் டுரையாளர்களோ, நூலின் பதிப்பாசி ரியர்களோ கவலை தெரிவிக்க வில்லை என்பதையும் குறிப்பிடுதல் வேண்டும். அவர்கள் இம்முறை முடி வுக்கு வந்ததால் நன்மை பெற்றார் கள். திரும்பிப் பார்க்கும் போது காரி யாதிகாரி சேவையின் மறைவு தவிர் க்க முடியாத தேவையாயிற்று, இச் சேவை 1970களில் எழுந்த இனவாத அழுத்தங்களைத் தாக்குப் பிடித்திருக் கவும் முடியாது. ஒரு உதாரணத்தை மட்டும் குறிப்பிடலாம். 1962 இல் 34 காரியாதிகாரிகள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட போது அவர்களுள் 10 பேர் தமிழர்களாக இருந்தனர். ஏன் இப்படியான சலுகை என்று கேட்க லாம். காரியாதிகாரி நியமனமும், ஆட்சேர்ப்பும் மூன்று வெவ்வேறு பிரதேசங்களின் வெற்றிடங்களின் அடிப்படையில் செய்யப்பட்டவை. தமிழ்ப் பகுதிகளுள் அடங்கும் காரி யாதிகாரி வெற்றிடங்களுக்கு தமிழர் களே நியமிக்கப்படவேண்டும் என்ற விதி இருந்தது. காரியாதிகாரி பிரிவுக ளும் சனத்தொகை விகிதாசாரப்படி அல்லாமல் இடப்பரப்பையும், விஸ் தீரணத்தையும் கவனத்தில் கொண்டு பிரிக்கப்பட்டிருந்தன.

## காரியாதிகாரி சேவையும் கல்வித் தகைமைகளும்

மக்களுக்கு சேவை செய்தல், பார பட்சமற்ற முறையில் நீதியான தீர்மா னங்களை எடுத்தல், கிராம அபிவிரு த்தி, உட்கட்டமைப்புகளின் விருத்தி என்ற விடயங்களில் பழைய நிலமா னிய அதிகாரிகளை விடக் காரியாதி காரிகளின் சேவை பன்மடங்கு உயர்ந்ததாக இருந்தது. புதிய சேவை யின் அறிமுகம் நிர்வாகத்தில் புதிய விழுமியங்களைக் கொண்டு வந்தது. ஆட்சேர்ப்பின் போது கல்வித் தகை மைகளுக்கு அழுத்தம் கொடுத்ததன் நற்பயன் இதுவெனலாம். 1950களி லும், இறுதியாக 1962 இலும் நியமிக் கப்பட்டவர்கள் பட்டதாரிகளாக இருந்தனர். இவர்களில் பலர் சிறந்த கல்வியாளர்களாகவும் இருந்தனர். 1950களிலும், 1962இலும் தெரிவு செய்யப்பட்டோரில் பெரும்பான் மையினர் இலங்கைப் பல்கலைக்கழ கத்தின் (பேராதனை) 'பொற்காலத் தின்' அறுவடைகள். ஆங்கில மொழி மூலம் கல்வி கற்ற இவர்கள் சேவை க்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டபோது இவர்களின் மொழிப் புலமைக்கு முதன்மை அளிக்கப்பட்டதை பரீட் சைத் திட்டம் எடுத்துக் காட்டுகிறது. சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் என்ற மூன்று மொழிகளில் ஏதாவது ஒரு மொழியில் விசேட வினாத்தாளிற்கு பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும். இவ்வினாத் தாளிற்கு 150 புள்ளிகள் வழங்கப்பட் டன. இதுமொழிப் புலமைக்கு அளிக் கப்பட்ட முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. காரியாதிகாரிகளுக்கு ஏறக்குறைய இருவருடங்கள் வரை சிறந்த பயிற்சி வழங்கப்பட்டது. நீண்ட காலப் பயிற்சியின் பின்னரே அவர்கள் வேலையில் அமர்த்தப்பட் டனர்.

## பன்முக ஆளுமை மிக்க காரியாதிகாரிகள்

1939 இல் காரியாதிகாரியாக நியமிக்கப்பட்ட எம்.டி.பண்டா அரசி யலில் புகுந்து பாராளுமன்ற உறுப்பி னராகவும், அமைச்சராகவும்

(73ஆம் பக்கம் பார்க்க...)

# தம் அடிப்போம், ‘ஈ’ தம் அடிப்போம்



## ஈ சிகரெட் பாதுகாப்பானதா?

ஈமெயில், ஈ பாங்கிங், ஈ கொமேர்ஸ், ஈ மெடிசின் இதெல்லாம் தாண்டி இப்ப ஈ சிகரெட்டா. பெயர்தான் ஈ சிகரெட்டானாலும் இணைய த்தில் புகைப்பதல்ல என்பது தெரிந் ததுதானே.

இது இப்பொழுது மேலைநாட்டு இளைஞர்களைக் கவர்ந்து இழுக்கிறது. இலக்ரோனிக் சிகரெட் என்பது சிகரட்டைப் போன்ற உருவ அமைப்பைக் கொண்ட ஒரு இலக்ரோனிக் கருவி.

மூக்கில் கை வைக்காதீர்கள்! வாயில் வைத்து ஊதித் தள்ளுகிறார்கள். பிரித்தானியாவில் மட்டும் 2012இல் 700,000 இற்கு மேற்பட்டவர்கள் ஈ சிகரெட் உபயோகித்தார்களாம். இவ்வருட இறுதிக்குள் (1000,000) பத்து இலட்சத்தைத் தாண்டிவிடும் என மதிப்பிடுகிறார்கள்.

“சைட் அடிப்போம் தம் அடிப்போம் தண்ணியைத்தான் கலந்தடிப்போம்..”

எனப் பாடித் திரியும் எம்நாட்டு இளைஞர்களின் கண்களில் இது இன்னமும் பட்டதாகத் தெரியவில்லை.

அறிவியல் களரி

### புகைத்தல் ஆபத்தானது

எதற்காக ஈ சிகரெட்டை நாடுகிறார்கள்? வழமையான சிகரெட்டை எதற்காக நாடுகிறார்களோ அதே காரணத்திற்காகத்தான். ஆம்! “கிக் கிடைக்க வேண்டும். அதேநேரம், பாதிப்புகள் இருக்கக்கூடாது என நினைப்பவர்கள் நாடுகிறார்கள். “புகைப்பதில் பக்க விளைவுகள் இருக்காது” என்கிறார்கள் உற்பத்தியாளர்கள். இது உண்மையா? பின்னாடி பார்ப்போம்.

சிகரெட் புகைக்கும்போது புகையில் நிகடின் என்ற இரசாயனம் வருகிறது. இதுதான் புகைப்பவர்களுக்கு உற்சாகத்தை ஊட்டுகிறது. போதையைக் கொடுக்கிறது. மீண்டும் மீண்டும் புகைக்கத் தூண்டுகிறது. ஆனால், அதேநேரம் அந்தப் புகையில் கரியும் வேறு பல இரசாயனங்களும் உள்ளன. இவைதான் பல்வேறு நோய்களுக்குக் காரணமாகின்றன.

புகைப்பதன் மிக ஆபத்தான பின்விளைவு புற்று நோய் தான். புகைப்பதால் புற்றுநோய் சுவாசப் பையில் மட்டுமே வரும் என்றில்லை, உதட்டில், வாயில், இரைப்பையில், மலக் குடலில் மற்றும் சிறுநீர்ப்பையிலும் ஏற்படும் என்பது நன்கு அறியப்பட்ட விடயமாகும்.

புற்றுநோய்க்கு அப்பால் இருதய நோய்கள், மாரடைப்பு, பக்கவாதம் ஆகியன ஏற்படுவதுடன், ஆஸ்மா தூண்டப்படுகிறது. அத்துடன் நாட்பட்ட படிப்படியாக முற்றிச்சென்று



வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்

சாதாரணமாக உட்கார்ந்திருக்கும் போதே சுவாசிக்கத் திணறும் நோயும் (Chronic Obstructive pulmonary Disease COPD) ஏற்படும். முற்றாகக் குணப்படுத்த முடியாத இது புகைப்பவர்களின் மரணத்திற்கான பயணத்தை விரைவுபடுத்தும்.

சி.கருணாகரசு அவர்களின் கவிதைகளில் ஒன்று புகைப்பவர்களின் வாழ்வு சுருங்குவதை இவ்வாறு அழகாகச் சொல்கிறது.

விரலிடுக்கில் ...
அது கசியும்போது
காலத்தின் இடுக்கில்
நீ ...
நழுவிக்கொண்டிருக்கிறாய் !

### ஈ சிகரெட் எப்படியானது

ஈ சிகரெட் என்பது அண்மைய கண்டுபிடிப்பு என்று சொல்ல முடியாது. இதற்கான அடித்தளம் 1963 இலேயே Herbert A.Gilbert என்பவரால் இடப்பட்டது. அது சிகரட் போன்ற வடிவம் கொண்டது அல்ல. புகையற்ற சிகரெட் என்ற அது நிகட்டின் திரவத்தை வெப்பம் ஊட்டி அதன் சுவையை வாய்வுடன் கலந்து அளிப்பதாகும். தனது கண்டுபிடிப்பிற்கான காப்புரிமையை எவருக்கும் கொடுக்காததால் அது வழக்கொழிந்து போயிற்று.

நவீன ஈ சிகரெட்டின் தந்தை ஒரு சீனர் ஆகும். Hon Lik என்ற இவர் ஒரு மருந்தாளர் ஆகும். புரபலீன் கிளைக்கோல் கலந்த நிகரின் திரவத்தை ஒரு வகை அல்ரா சவுண்ட் முறை மூலம் வாய்வு வடிவத்துக்கு மாற்றும் பொறிமுறையை 2000 ஆம் ஆண்டளவில் கண்டுபிடித்தார். இதன் திருத்திய வடிவம் 2004இல் Golden Dragon Holdings கொம்பனியால் (Ruyan) என்ற பெயரில் சந்தைக்கு விடப்பட்டது. ''புகைப்பதை ஒத்தது'' என்ற பொருள்படும் இது 2005இல் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. சிகரெட் புகைப்பதைக் கைவிடுவதற்கான உதவிக் கருவியாக இது வர்த்தகமானது. அதேநேரம், சிகரெட் புகைக்கு மாற்றீடாகவும் இதைப் பயன்படுத்தினார்கள்.

அவற்றின் அமைப்புகளில் பலவித வேறுபாடுகள் இருந்தபோதும் அடிப்படையில் செயன்முறை ஒன்று. அதில் மூன்று பாகங்கள் இருக்கும். நுனியில் எரிவது போன்ற தோற்றத்தைக் கொடுக்கும் LED லைட் இருக்கும். அடுத்து பற்றரி, இறுதிப் பகுதி வாயில் வைக்கும் atomizer. இது உள்ளே உள்ள திரவத்தை நுண் திவாலைகளாக்கி புகைபோல வாயில் கிடைக்கச் செய்யும்.

ஈ சிகரெட் புகைப்பதை வப்பிங் (Vaping) என்கிறார்கள். இங்கு உட்கொள்ளப்படுவது ஆவி (vapour) அதாவது நிகடின் அடங்கிய ஆவியாகும். அதனால்தான் அந்தப் பெயர் வந்தது. நிகடின் ஆவி பிடிக்கும் ஈ புகைத்தலால் ஆசை அடங்குமா? இல்லை ஆவி பிரியுமா உடலிலிருந்து?

### ஈ புகைத்தல் ஆபத்தற்றதா?

'பக்க விளைவுகள் இன்றிப் புகையுங்கள்' 'பாதுகாப்பான புகை', 'சிகரெட் புகைப்பதை நிறுத்துவதற்கு இது உதவும்' போன்ற நம்பிக்கைகளை இது இளைஞர்களிடையே விதைத்துள்ளது. இருந்தபோதும் ஈ புகைத்தலின் நன்மை தீமை பற்றிய விஞ்ஞானபூர்வ ஆய்வுகள் பெருமளவில் செய்யப்படவில்லை. கிடைக்கும் ஒரு சில நம்பிக்கை தருவதாக இல்லை.

சிகரெட் புகையிலுள்ள புற்றுநோயைக்கொண்டுவரும் இரசாயனம் nitrosamines (TSNAs) ஆகும். ஈ ஸ்மோகிங் புகையிலும் இந்த இரசாயனம் இருக்கவே செய்கிறது. ஆனால் குறைந்த அளவில்தான் இருக்கிறது.

'புகைத்தலைக் கைவிடுவதற்கான சிகிச்சையாக உபயோகிக்கும் நிகடின் ஒட்டிகளிலும் (nicotine patch) அத்தகைய அளவு இருக்கிறதுதானே' என மெத்தப்படித்த ஒருவர் ஈ சிகரெட்டிற்கு கைலாகு கொடுக்க முன்வந்தார்.

ஆனால் உலக சுகாதார ஸ்தாபனத்தால் நஞ்சு என அறிவிக்கப்பட்ட di-ethylene glycol எனும் இரசாயனம் ஈ சிகரெட்டில் இருக்கிறது என்பது கவனிக்கத்தக்கது. இது சிறுநீரக செயலிழப்பு, நரம்புகளின் பாதிப்பு, சுவாச செயலிழப்பு போன்ற ஆபத்தான பாதிப்புகளைக் கொண்டுவரும்.

> ஈ புகைத்தல் 'பக்க விளைவுகள் இன்றி புகையுங்கள்' 'பாதுகாப்பான புகை' 'சிகரெட் புகைப்பதை நிறுத்துவதற்கு இது உதவும்' என்பன போன்ற நம்பிக்கைகளை இளைஞர்களிடையே விதைத்துள்ளது. இருந்த போதிலும் ஈ புகைத்தலின் நன்மை, தீமை பற்றிய விஞ்ஞானபூர்வ ஆய்வுகள் பெருமளவில் செய்யப்படவில்லை. கிடைக்கக்கூடிய ஒரு சில ஆய்வுகளும் கூட நம்பிக்கை தருவதாக இல்லை

University of California வைச் சார்ந்த ஆய்வாளர்கள் வேறு பல நச்சுப் பொருட்களும் இதில் கலந்திருப்பதாக இவ்வருடம் மார்ச் மாதம் வெளியிட்ட அறிக்கையில் கூறுகிறார்கள். வெள்ளி, இரும்பு, அலுமினியம், சிலிக்கேட், ரின், நிக்கல், குரோமியம் போன்றவற்றை அவர்கள் ஈ சிகரெட்டின் புகையில் இனம் கண்டுள்ளனர். இவற்றின் அளவானது சாதாரண சிகரெட்டின் புகையில் உள்ளதை விட அதிகமான அளவில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இவை சுவாசிப்பதில் சிரமத்தையும், சுவாச அடைப்பு போன்ற பிரச்சினைகளை ஏற்படுத்தவல்லன.

எனவே பாதுகாப்பானது என்று சொல்ல முடியாதுதானே. சுவாசப் பிரச்சினை பற்றி இன்னும் கொஞ்சம்

சொல்லலாம்.

### சுவாசப் பிரச்சினை

ஈ சிகரெட் பற்றிய ஆய்வுகள் குறைவு என்றோம். இருந்தபோதும் அண்மையில் கிரீஸ் நாட்டில் செய்யப்பட்டது சிறியதும் ஆரம்ப கட்டத்திலானதும் என்ற போதும் முக்கியமானது. ஒருபோதும் புகைக்காதவர்கள், புகைப்பவர்கள் என்றபோதும் சுவாச நோய்கள் இல்லாதவர்கள், சுவாச நோய்கள் உள்ள புகைப் பிடிப்பாளர்கள் என பல வகையினரையும் உட்படுத்தி இருக்கிறது.

ஒரு ஈ சிகரெட்டை 10 நிமிடங்கள் புகைக்கக் கொடுத்த பின் அவர்களது சுவாசப் பையின் செயற்திறனைப் பரிசோதித்தனர்.

Spirometry, Static lung Volume, single breath nitrogen test, airway conductance ஆகிய பரிசோதனைகள் செய்யப்பட்டன. அதன் பிரகாரம் அவர்களின் சுவாசப் பாதையினது செயற்திறனானது (airway resistance) 180% 220% சதவிகிதம் பாதிக்கப்பட்டிருந்தது. புகைக்காதவர்கள், புகைப்பவர்களாயின போதும் சுவாச நோய்கள் இல்லாதவர்கள் ஆகிய இருதரப்பினரிடம் இவ்வாறான மாற்றம் ஏற்பட்டது. புகைத்ததனால் ஏற்கனவே சுவாச நோய் உள்ளவர்களில் இம்மாற்றம் காணப்படவில்லை. ஆனால் அது எதிர்பார்க்கக் கூடியதே எனச் சொல்லத் தோன்றுகிறது.

ஈ சிகரெட்டினால் சுவாசப் பாதிப்புகள் ஏற்படும் என்பதற்கு இவ் ஆய்வு சான்றாகும். ஆயினும் நீண்டகால உபயோகத்தில் எத்தகைய பாதிப்புகள் ஏற்படும் என்பதுபற்றி அறிய புதிய ஆய்வுகள் தேவைப்படுகின்றன.

### புகைத்தலை நிறுத்த உதவுமா?

அண்மையில் Addiction என்ற சஞ்சிகையில் வெளியான ஆய்வுக் கட்டுரையானது சர்ச்சைக்குரியது. சுய விருப்பத்தின் பேரில் இணையம் மூலம் பதிலளித்த 1347 பேரைக் கொண்ட ஆய்வு இதுவாகும். ஈ சிகரெட் புகைத்தல் இவர்களில் 91 சதவிகிதமானவர்கள் புகைப்பதற்கான ஏக்கம் கணிசமான அளவு தங்களுக்கு குறைந்துவிட்டது என்று சொன்னார்கள். இவர்களில் பலர் தங்கள் கடைசி சிகரெட்டை புகைத்து பல மாதங்கள் ஆகிவிட்டதாகவும் சொன்னார்கள்.

### இது நம்பிக்கை தரக் கூடிய முடிவா?

நிச்சயமாக இல்லை. அவர்கள் கைவிட்டதும் புகைப்பதற்கான ஏக்கம் குறைந்ததும் வழமையான சிகரெட்டிற்கே ஆகும். ஆனால் ஈ சிகரெட் புகைக்கிறார்கள். அதாவது புகைத்தலிலிருந்து முற்றாக விடுபடவில்லை. புகைக்கிறார்கள். சிகரெட்டுக்குப் பதிலாக ஈ சிகரெட்டை! என்னென்ன பாதகங்கள் வரும் என்பது இன்னமும் தெளிவில்லாததைப் புகைக்கிறார்கள்.

எனவே புகைத்தலைக் கைவிடுவதற்கான மார்க்கம் ஈ புகைத்தல் என எந்த மருத்துவரும் சிபார்சு செய்ய முடியாத நிலையே இன்னமும் உள்ளது.

இறுதியாக என்ன சொல்லலாம்?

நஞ்சென்று தெரிந்தும்
ஊதித் தள்ளினீர்கள்
என்னென்று இன்னும் புரியாததை
புகைத்துத் தள்ளுகிறீர்
நன்று !
இன்னொரு வாழ்வு கிடைக்காது
கவனம்
அரிதெனக் கிடைத்த வாழ்வை
சாம்பலாக்காதீர்.


என யாராவது புதுக் கவிதை எழுதி இளிச்சவாயன்களுக்குத்தான் லாயக்கு 'ஈ சிகரெட்' என நகைத்தால் அதில் தவறு இல்லை. ■

---

(70ஆம் பக்கத்தொடர்ச்சி...)

உயர்வுபெற்றார்.ஈ.எல்.பி.ஹுரூள்ள, யு.பி. விஜயக்கோன், டி.பி.வெலகெதர ஆகியவர்களும் காரியாதிகாரி சேவையில் இணைந்து பின்னர் அமைச்சர்களாகவும், பிரதி அமைச்சர்களாகவும், உயர்ச்சி பெற்றனர். 1942ஆம் ஆண்டில் காரியாதிகாரியாக நியமனம் பெற்ற எக்ஸ்.எம். செல்லத்தம்பு பின்னாளில் அரசியலில் புகுந்து வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். ஏ.பெருமையினார் (1939), ஜே.எம்.சபாரத்தினம் (1939) தி.முருகேசம்பிள்ளை (1941), தமிழ் எழுத்தாளர் (இலங்கையர் கோன் என்ற புனைப் பெயருடையவர்) என்.சிவஞானசுந்தரம் (1940) ஆகியோர் தமிழ் மக்கள் மத்தியில் நன்கு அறியப்பட்டோராக இருந்த காரியாதிகாரிகளாவர். 1962இல் சேவையில் சேர்ந்து கொண்ட 10 தமிழ் காரியாதிகாரிகளில் பெரும்பான்மையினர் 1980களிலும் 1990களிலும் அரச சேவையில் மிக உயர் பதவிகளை வகித்தனர். பின்னிணைப்பு II, பின்னிணைப்பு III ஆகியவற்றில் இவர்களின் பெயர்களையும், வகித்த பதவிகளையும் பற்றிய விபரங்களைக் கண்டு கொள்ளலாம். 1962 இல் சேவையில் இணைந்து கொண்ட கே.சி.லோகேஸ்வரன் (அரசாங்க அதிபர், செயலாளர், வெளிநாட்டுத் தூதுவர் ஆகிய பதவிகளை வகித்தவர்), கே.தயாபரன் (மேலதிக செயலாளர்) ஆகிய இருவரும் எழுதிய அனுபவப் பதிவுகள் இந்நூலில் கட்டுரைகளாகச் சேர்க்கப்பட்டுள்ளன. தம்மிக அமரசிங்கவின் (செயலாளர்) கட்டுரையும் வாசகர்கள் தவறவிடக் கூடாத சிறந்த கட்டுரை என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். யாழ். மாவட்ட அரசாங்க அதிபராக சில ஆண்டுகள் கடமையாற்றியவரும் பின்னர் வெளிநாட்டுத் தூதுவராக இருந்தவருமான லயனல் பெர்னாண்டோ அவர்களும், காரியாதிகாரியாக பதவி வகித்தவர் என்ற செய்தியையும் இந்நூலில் இருந்து அறியக் கூடியதாய் உள்ளது. 1950களில் சேவையில் இணைந்து பிரசித்தி பெற்றிருந்த காரியாதிகாரிகளின் பெயர்களை குறிப்பிடுவதை விரிவஞ்சித் தவிர்த்துள்ளேன். ■

# நூற்றாண்டு காணும் இந்திய திரையுலகில் தமிழ் சினிமாவின் பங்கு



அரிய தகவல்களை சமகாலத்துடன் பகிர்ந்து கொள்கிறார்

## பிலிம் நியூஸ் ஆனந்தன்

எம்.காசிநாதன்

பிலிம் நியூஸ் ஆனந்தன் - திரைப்படத்துறையுடன் அறுபது ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆழமான தொடர்புடையவர். திரைப்பட ஆராய்ச்சியாளராக, போட்டோகிராபராக, பத்திரிகையாளராக, திரைப்பட சரித்திர தொகுப்பாளராக திகழ்பவர். ஆரம்ப கால நடிகர்களில் ஆரம்பித்து இன்றைய நடிகர், நடிகைகள், திரைப்பட இயக்குனர்கள் வரை யாரும் இவரைத் தெரியாதவர் இருக்க முடியாது.

இவர் போட்டோ கிராபராக எடுத்த முதல் படம் நடிகை பத்மினியுடையது. தென்னக திரைப்பட வரலாற்றை விரல் நுனியில் வைத்திருப்பவர். தமிழக அரசின் கலைமாமணி விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்றவர். இவரது 61ஆவது பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு அப்போது முதல்வராக இருந்த கருணாநிதி தலைமை வகித்தார்.

சினிமாவின் வைரவிழாவின் போது தென்னிந்திய பிலிம் சேம்பர் இவருக்கு விருது கொடுத்துப் பாராட்டியது. தமிழக அரசே நடத்திய 'ஸ்டார் நைட்' விழாவில் அப்போது முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர் பங்கேற்று 'தங்க மோதிரம்' அணிவித்தார். திரையுலகத் தகவல் களஞ்சியம் போல், 'சாதனை படைத்த தமிழ்த் திரைப்பட வரலாறு' என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டவர். இப்புத்தகம் வெளியிடுவதற்குரிய முழுப் பணத்தையும் கொடுத்தவர் இப்போது தமிழக முதலமைச்சராக இருக்கும் ஜெயலலிதா. இப்படி தமிழக முதல்வர்கள் அனைவரிடத்திலும் நீங்காப் புகழ் பெற்ற பிலிம் நியூஸ் ஆனந்தனிடம் 'இந்திய சினிமாவின் நூற்றாண்டு' பற்றியும், அதில் தமிழ் சினிமாவின் பங்கு பற்றியும் கேட்டோம்.

இந்த முதிர்ந்த வயதிலும் மனமுவந்து நம்மை அழைத்த அவர் தமிழ் சினிமா பற்றிய அரிய தகவல்களை நம்மோடு பகிர்ந்து கொண்டார். இதோ அவர் அளித்த பிரத்தியேகப் பேட்டி!

**நூறு ஆண்டு கொண்டாடும் இந்திய சினிமா பற்றி உங்கள் கருத்து என்ன?**

சினிமா எடுப்பது என்பது அயல் நாட்டிற்குச் சொந்தமானது. இந்தியாவிற்கு அல்ல என்பதை முதலில் நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். அந்தத் தடைகளை உடைத்து இந்தியாவிலேயே படம் எடுக்க வேண்டும் என்ற முயற்சியில் இறங்கியவர் பால்கே. 'தாதா சாகேப்' 'ராவ் பகதூர்' எல்லாம் அப்போது பட்டப் பெயர்கள். அதனால்தான் நாம் அவரை 'தாதா சாகேப் பால்கே' என்று அழைக்கிறோம். அவர்தான் முதல் மௌனப் படத்தை எடுத்தார். அப்படத்தின் பெயர் ராஜா ஹரிச்சந்திரா. எடுத்த வருடம் 1913. அதைத்தான் இந்த வருடம் இந்திய சினிமாவின் நூற்றாண்டு தினமாகக் கொண்டாடுகிறோம். அது தமிழ் சம்பந்தப்பட்டது அல்ல. வட நாட்டுக்காரர் ஒருவர் எடுத்த முதல் மௌனப்படத்தின் நூற்றாண்டு விழா அது.

**அந்த இந்திய சினிமாவில், தமிழ் சினிமாவின் முத்தாய்ப்பான பங்கு பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?**

1917இல் தான் தமிழுக்கு 'பால்கே' மாதிரி ஒருவர் வந்தார். அவர் கே.என். நடராஜன் முதலியார். தமிழ் சினிமாவிற்கு முன்னோடி இந்த நடராஜன் என்று நான் எம்.ஜி.ஆரிடமே சொல்லியிருக்கிறேன். இவர் சென்னை மவுன்ட் ரோட்டில் 'ஸ்பார் பார்ட்ஸ்' கடை வைத்திருந்தவர். அவருக்கு சினிமா தயாரிக்கும் எண்ணம் வந்தவுடன் அஸிஸ்டென்ட் டைரக்டராகப் போக வேண்டும் என்று நினைக்கவில்லை. அதற்கு மாறாக லண்டன் போனார். முதலில் அங்கு 'போட்டோகிராபி' மற்றும் 'டைரக்‌ஷனை தீர்க்கமாக கற்றுக் கொண்டார். பிறகு இந்தியா திரும்பினார். அவர் எடுத்த முதல் மௌனப்படம் 'கீச்சக வதம்'. மகாபாரதத்தில் வரும் கதாப் பாத்திரத்தை வைத்து எடுத்த அற்புதமான படம். நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்த டி.பி.ராஜலெட்சுமி தான் அதில் ஹீரோ. 1917இல் வெளிவந்த இந்த மௌனப் படம்தான் தமிழன் எடுத்த முதல் படம். ஆகவே தமிழ் சினிமாவிற்கு நூறாண்டு பிறக்க இன்னும் நான்கு வருடங்கள் இருக்கிறது. இந்த 'கீச்சகவதம்' மெட்ராஸில் ரிலீஸாகவில்லை. பாம்பேயில்தான் ரிலீஸ் ஆனது. இப்போது அதன் பிரின்ட்டே கிடையாது. கேரளாவைச் சேர்ந்த ஜே.டி.டேனியல் என்பவர் எடுத்த 'மாங்கடவர்மா' என்ற மௌனப்படத்தின் எட்டாயிரம் அடி பிரின்ட் மட்டும்தான் இன்னமும் இந்திய ஆர்க்கியாலஜிக்கல் துறையில் இருக்கிறது. அவரும் தமிழன்தான். இது தவிர, இன்றைக்கு மற்ற எந்த மொழியில் வெளிவந்த மௌனப்படமும் இல்லை.

**'டாக்கீஸ்' படங்கள் எப்போது வந்தன?**


1931இல் 'டாக்கீஸ்' படங்கள் வெளிவரத் தொடங்கியது. அதற்கும் முன்னோடி வழக்கம் போல் பாம்பேதான். 'ஆலம் ஆரா' என்ற படம் அது. பிறகு தமிழில் டாக்கீஸ் படம் எடுக்க முன்வந்தவர் பம்பாயில் இருந்த ஆதர்ஷ் இராணி என்ற இந்திக்காரர். அவர் தனது நண்பரான தெலுங்கு டைரக்டர் எச்.எம். ரெட்டியிடம் தன் விருப்பத்தைச் சொல்கிறார். அவரும் 'ஓ.கே.' சொல்லி விட்டார். ஹீரோயினாக டி.பி.ராஜலெட்சுமி நடித்தார். ஹீரோவாக தனது நண்பரான வெங்கடேஸ்வரலூவை ரெட்டி பரிந்துரைத்தார். அந்தப் படத்தில் ஹீரோயின் தமிழில் வசனம் பேசுவார். ஹீரோ தெலுங்கு மொழியில் வசனம் பேசுவார். அதில் 'பியூன்' கரக்டர் வரும். அவர் இந்தியில் பேசுவார். ஒரு படத்தில் தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மூன்று மொழிகளில் வசனம் பேசுவார்கள். அப்படி வந்த படம் தான் 'காளிதாஸ்'!

> காளிதாஸ் படத்திற்கான விளம்பரத்தில் 'முதல் பேசும் படக்காட்சியை கேளுங்கள்' என்று வரும். ஏனென்றால் அது வரை வந்த விளம்பரங்களில் மௌனப்படத்தை காணுங்கள் என்றுதான் இருந்தது

அந்தப் படத்திற்கான விளம்பரத்திலேயே, 'முதல் பேசும் படக் காட்சியைக் கேளுங்கள்' என்று வரும். ஏனென்றால் அதுவரை வந்த விளம்பரங்களில் 'மௌனப் படத்தை காணுங்கள்' என்றுதான் இருந்தது. இது பேசும்படம் என்பதால் 'கேளுங்கள்' என்று விளம்பரம் செய்தார்கள். சென்னை மின்ட் பகுதியில் உள்ள சினிமா சென்டரில் தான் (இப்போது முருகன் தியேட்டராக இருக்கிறது) திரையிடப்பட்டது. சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட மகாத்மா காந்தியே கூட்டம் பேச வரும் காலங்களில் இந்தத் தியேட்டரில் ஓய்வெடுப்பார். அடுத்து முழு வீச்சில் வந்த தமிழ்ப் படம் 'காலவா'. இதை தானே டைரக்ட் பண்ணி, ஹீரோவாகவும் நடித்தவர் பி.பி.ரங்காச்சாரி.

**தமிழ் சினிமாவில் 'ஹீரோக்கள்' பிரவேசம் எப்படியிருந்தது?**

அப்போதெல்லாம் நாடக நடிகர்கள்தான் ஹீரோக்கள். நாடக நடிகைகள்தான் ஹீரோயின்கள். அவர்கள் சொந்தக்குரலிலும் பாட வேண்டும். ஏனென்றால் பின்னணிப் பாடகர்கள் அப்போது இல்லை. 1954இல் தான் பின்னணிப் பாடகர்கள் வந்தார்கள். அதுவும் ஏ.வி.மெய்யப்பச் செட்டியார்தான் கொண்டு வந்தார். அவர்



பால்கே

1948இல் ஸ்ரீவள்ளி என்று ஒரு படம் எடுத்தார். 15 வயதில் உள்ள டி.ஆர். மகாலிங்கம் ஹீரோ. இன்றைய நடிகை லட்சுமியின் அம்மா ருக்மணிக்கு அப்போது 13 வயது. அவர்தான் ஹீரோயின். அவர் வள்ளி வேடத்தில் காட்சி தருவார். கிழவன், கிழவிகள் ஹீரோ, ஹீரோயின்களாக இருந்த காலம் போய் சின்னஞ்சிறு சிட்டுகள் ஹீரோ, ஹீரோயின்களாக நடித்த தமிழ்ப் படம் ஸ்ரீவள்ளி. அதில் ஒரு சுவாரஸ்யமான சம்பவம்! டி.ஆர். மகாலிங்கமும் பாட வேண்டும்.

> முன்பு நாடக நடிகர்கள்தான் ஹீரோக்கள். நாடக நடிகைகள்தான் ஹீரோயின்கள். அவர்கள் சொந்த குரலிலும் பாட வேண்டும். 1954இல் தான் பின்னணிப் பாடகர்கள் வந்தார்கள்

ருக்மணியும் பாட வேண்டும். படம் எடுத்து முடிக்கப்பட்ட பிறகு விநியோகஸ்தர்களிடம் போட்டுக் காட்டப்பட்டது. படத்தைப் பார்த்து விட்டு அவர்கள், 'மகாலிங்கம் குரலுக்கு இணையாக ருக்மணி குரல் இல்லை. படம் பெயிலியர் ஆகிவிடும்' என்று ஏ.வி.எம்.மை எச்சரித்து விட்டார்கள். ஏ.வி.எம்.மிற்கோ தர்மசங்கடம். ஏனென்றால் வள்ளிப்படம் எடுத்த போது பத்தாயிரம் ரூபாய் ருக்மணிக்கு சம்பளம் கொடுத்து அடுத்து இரு படங்களுக்கு தலா 20000 ரூபாய், 30000 ரூபாய் சம்பளம் என்று கூறி கான்ட்ராக்ட் போட்டு விட்டார். செட்டியார் தயங்கித் தயங்கி ருக்மணியிடம், 'உன் குரல் வளம் போதாதும்மா. என்ன செய்யலாம். நீயே சொல்லு' என்று கேட்க, அவரோ தன்னை விட்டால் போதும் என்று கருதி 'நீங்கள் என் கான்ட்ராக்டை கேன்சல் செய்வீர்களா' என்று கேட்



பி.யூ.சின்னப்பா

டுள்ளார். செட்டியாருக்கு மகிழ்ச்சி. 'அதுக்கு என்ன ம்மா. இதோ இப்போதே கேன்சல் பண்ணுகிறேன்' என்று கூறி கான்ட்ராக்ட்டை கேன்சேல் பண்ணினார். பிறகு அன்று கச்சேரிகளில் பாடிக்கொண்டிருந்த பெரியநாயகி என்ற பெண்ணை வைத்து பாடச் சொல்லி 'ருக்மணி' கேரக்டரை மகாலிங்கத்திற்கு இணையாக நிறைவு செய்தார்கள். அந்தப்படம் 52 வாரம் ஓடியது. இந்திக்காரர்களையும் தமிழில் படம் எடுக்க வைத்த வெற்றிப்படம் இது என்றால் மிகையாகாது.

**அப்போதெல்லாம் 'கதாநாயகனாக' பெண்களே நடித்துள்ளார்களாமே?**

அது உண்மைதான். தமிழ்நாட்டில் பிரபலமான 'நந்தனார்' நாடகம் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதில் கிட்டப்பாவும், கே.பி.சுந்தராம்பாளும் நடித்திருப்பார்கள். இருவருக்கும் இடையே காதல் வேறு மலர்ந்தது. பிறகுதான் கிட்டப்பாவிற்கு திருமணம் ஆகிவிட்டது என்ற விடயம் கே.பி.சுந்தராம்பாளுக்குத் தெரிந்தது. ஆனாலும் தன் காதலை கைவிடவில்லை. திருமணம் செய்து கொள்ளாமலேயே 'கிட்டப்பா என் கணவர். ஆனால் இல்லற வாழ்க்கையில் அல்ல' என்று கடைசி வரை தன் மானசீகக் கணவராக ஏற்றுக் கொண்டார் சுந்தராம்பாள். 'நந்தனார்' நாடக கதையைக் கேட்ட இந்திக்காரர் ஆதர்ஷ் இராணி படமெடுக்க முன்வந்தார். அதற்கு யார் ஹீரோ என்ற கேள்வி வந்த போது 'சுந்தராம்பாள்' பெயரைச் சொன்னார்கள். அவரோ, 'என்னய்யா ஹீரோவுக்கு பெண் பெயரைச் சொல்கிறீர்கள்' என்று வியந்து போனார். அதற்கு அவர்களோ, 'பெண்தான் ஆம்புளை ரோலில் நடித்திருக்கிறார். இன்றைக்கு ஆம்புளையை வைத்து எடுத்தால் கூட ஓடாது' என்று கூறினார்கள். உடனே சுந்தராம்பாளை வைத்து படம் எடுக்க இராணி ஒப்புக்கொண்டார். சென்னைக்கு வந்து சுந்தராம்



எம்.கே.தியாகராஜ பாகவதர்

பாளை சந்திக்கிறார். அன்று பிலிம் சேம்பர்ஸ் முதல் தலைவராக இருந்த சத்யமூர்த்தி (பழம்பெரும் காங்கிரஸ்காரர். சென்னை பிலிம் சேம்பர்ஸை உருவாக்கிய முதல் பத்து பேரில் இவரும் ஒருவர்) பரிந்துரைக் கடிதம் ஒன்றையும் சுந்தராம்பாளுக்காக வாங்கி வந்தார். அந்த நேரத்தில் கிட்டப்பா இறந்து விட்டார். 'சுந்தராம்பாளை

கிட்டப்பா தொட்டதில்லை. ஆனால் கணவனை இழந்து விட்டோம்' என்று கருதி சுந்தராம்பாள் நடிப்பதை நிறுத்திக் கொண்டார். இந்த நேரத்தில் இராணி அவரை நந்தனாரில் நடிக்கக் கேட்டார். அவரோ, 'நான் விதவையாக இருக்கிறேன். நடிப்பதில்லை' என்று மறுத்து விட்டார். இராணி விடவில்லை. அந்தக் காலத்தில் ஹீரோயின் சம்பளம் படத்திற்கு பத்தாயிரம் ரூபாய்தான். தான் நடிப்பதை தட்டிக் கழிக்க 'லட்ச ரூபாய் தந்தால் நடிக்கிறேன்' என்று கூறி விருட்டென்று எழுந்து புறப்படத் தயாரானார் சுந்தராம்பாள். ஆனால் இராணியோ திகைத்து நிற்கவில்லை. 'அவ்வளவுதானம்மா. இந்தாங்க 50,000 ரூபாய் அட்வான்ஸ்' என்று சுந்தராம்பாளிடம் லட்ச ரூபாய் கொடுக்க 'வாக்குத் தவறக்கூடாது' என்பதற்காக நடிக்க சம்மதித்தார். அப்படி இந்திக்காரர் எடுத்து வெளிவந்த 'நந்தனார்' தமிழ்ப் படம் பெரும் வெற்றி பெற்றது. லட்சம் ரூபாய் சம்பளம் வாங்கிய முதல் நடிகை கே.பி.சுந்தராம்பாள்தான் என்ற பெயரும் நிலைத்தது!

**இப்போது போல் காதல் படங்கள் மட்டுமே வந்தனவா அல்லது சமுதாயச் சிந்தனைகள், முற்போக்குக் கருத்துகள் அடங்கிய படங்களும் வெளிவந்தனவா?**

அதற்கு சில உதாரணங்களைச் சொல்கிறேன். டி.பி.ராஜலெட்சுமிதான் ஆரம்ப கால ஹீரோ. எந்தப் படமாக இருந்தாலும் அவரைத்தான் புக் பண்ணுவார்கள். வெற்றிப்படமாக அது அமையும் என்ற நம்பிக்கை. பிறகு சுப்பையா பாகவதர் வந்தார். அவரும் கச்சேரி பண்ணுபவர்தான். அவருக்குப் பிறகு வந்தவர் எம்.கே.தியாகராஜ பாகவதர். அவரும் நாடக நடிகர். சுப்புலட்சுமி என்பவரும் நாடக நடிகை. இந்த இருவரையும் வைத்து கே.சுப்பிரமணியம் சினிமா எடுத்தார். அதுதான் 'பவளக்கொடி' படம். இவர் வழக்கறிஞர் என்றாலும், 'ஸ்டார்களை' உற்பத்தி பண்ணியவர் எம்.எஸ். சுப்புலட்சுமியை சினிமாவிற்கு அறிமுகப் படுத்தியவர். இவருக்குப் பிறகுதான் ஸ்ரீதர், பாலசந்தர், பாரதிராஜா எல்லாம் வருகிறார்கள். சுப்பிரமணியம் 'தியாக பூமி' என்ற ஒரு படத்தை எடுத்தார். அது கல்கியின் நாவல். அந்த நாவல் ஆனந்தவிகடன் பத்திரிகையில் தொடராக வெளிவந்தது. சுப்பிரமணியனும், கல்கியும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். 'நீங்கள் கதைத்தொடரை எழுத ஆரம்பியுங்கள். நான் பட சூட்டிங்கை எடுக்கிறேன். சூட்டிங் எடுக்கும் போது எடுக்கப்படும் ஸ்டில்கள் கதைக்குப் படமாக பிரசுரிப்போம்' என்பதுதான் அந்த ஒப்பந்தம். 'சினிமா பிக்ஷர்ஸ் உடன் கூடிய நாவல்' அந்த காலத்திலேயே பத்திரிகையில் வெளிவந்தது. அந்தப் படத்தின் கதையில் நாட்டுப்புறப் பெண் ஒருவர் வழக்கறிஞரை திருமணம் செய்து கொள்வாள். பிறகுதான் தெரிய வந்தது அந்த வழக்கறிஞருக்கு வெளிநாட்டில் ஒரு மனைவி இருக்கிறார் என்று. பிராமணப் பெண்ணான அவள் படித்து வக்கீலாகி, தன்னை ஏமாற்றிய கணவர் மீது வழக்குப் போடு




கே.பி.சுந்தராம்பாள்



எம்.ஜி.இராமச்சந்திரன்



சிவாஜி கணேசன்



டி.ஆர்.மகாலிங்கம்

> ரசிகர் மன்றங்களின் முன்னோடி பி.யூ.சின்னப்பா, தியாகராஜ பாகவதர் காலம் தான். இவர்கள் காலத்தில்தான் இரு ஹீரோக்கள் சமகாலத்தில் சினிமாவில் கலக்கிய காட்சிகளும் அரங்கேறின. இந்த இரட்டையருக்கு பிறகுதான் இரு நடிகர்களின் ஆதிக்கம் தமிழ் சினிமாவில் வந்தது

வார். அப்போது நீதிபதி 'உங்களுக்கு ஜீவனாம்சம் வழங்க உத்தரவிடுகிறேன்' என்று கூறுவார். ஆனால் அந்த ஜீவனாம்சமே வேண்டாம் என்று நீதிபதி முன்பு மறுப்பார் ஹீரோயின். பெண்ணுக்கு ஜீவனாம்சம் வேண்டாம் என்ற முற்போக்கு கருத்தைச் சொன்ன கதை அந்த 'தியாக பூமி.' இப்படி சமூகச் சிந்தனையுள்ள கருத்துகளுக்கு அப்போதெல்லாம் பஞ்சம் இருந்ததில்லை. காதல் படங்களும் இருக்கும். அது உண்மைச் சம்பவங்கள் போலிருக்கும்!

### முந்தைய தமிழ் சினிமா காலத்தில் ரசிகர் மன்றங்கள் தோன்றினவா?

தியாகராஜ பாகவதருக்குப் பிறகு பி.யூ.சின்னப்பா வந்தார். தமிழ்த் திரையுலகில் ரசிகர் மன்றங்கள் தொடங்கியது அப்போதுதான். இப்போது பார்த்தால் எல்லா நடிகர்களுக்குமே ரசிகர் மன்றங்கள் வந்துவிட்டன. ரசிகர் மன்றங்களின் முன்னோடி பி.யூ.சின்னப்பா மற்றும் தியாகராஜ பாகவதர் காலம்தான். இவர்கள் காலத்தில்தான் 'இரு ஹீரோக்கள்' சமகாலத்தில் சினிமாவில் கலக்கிய காட்சிகளும் அரங்கேறியது. பாகவதர் தொடர்ந்து 14 படங்கள்தான் நடித்தார். அதில் முக்கியமானது 'ஹரிதாஸ்'. பதினோராயிரம் அடியே வெளிவந்த அந்தப்படம் மூன்று தீபாவளிகளைப் பார்த்த படம். இந்த இரட்டையருக்குப் பிறகுதான் 'இரு நடிகர்கள்' ஆதிக்கம் தமிழ் சினிமாவில் வந்தது. 'சிவாஜி, எம்.ஜி.ஆர்', 'ரஜினி, கமல்' என்ற நடிகர்கள் பட்டாளம் வந்தது. அன்றெல்லாம் கதை கேட்டுத்தான் படத்தில் நடிக்க ஒப்புக் கொள்வார்கள். ஆனால் பிறகு வந்த காலங்களில் படம் கிடைத்தால் போதும் என்று குப்பைப் படங்களில் கூட நடிக்க நடிகர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். 1952இல் சிவாஜி கணேசன் திரையுலகத்திற்குள் நுழைந்தார். ஆனால் எடுத்த எடுப்பிலேயே 'ஹீரோவாக' நுழைந்தார். ஆனால் எம்.ஜி.ஆர் அப்படியில்லை. எஸ்.எஸ்.வாசனின் கதை வசனத்தில் எம்.கே. ராதா 'சதி லீலாவதி' என்ற படத்தை எடுத்தார். அதில் இன்ஸ்பெக்டர் ரோலில் எம்.ஜி.ஆர் பிரவேசித்தார். சிவாஜி கணேசன் டிராமா கம்பெனிகளில் 'கணேசன்' என்ற பெயரில் பிரபலமானவர். பெருமாள் முதலியார் என்று ஒரு விநியோகஸ்தர். அவர் கைராசிக்காரர். அவர் படம் எடுக்க விரும்பி கண்டுபிடித்தவர்தான் 'கணேசன்' என்ற சிவாஜி கணேசன்.


ஜெமினி கணேசன்

> ஸ்பெஷல் உணவு வகைகளை சிவாஜிக்கு அண்ணா கொடுத்து அவரை சினிமாவுக்கு பொருத்தமான ஆர்டிஸ்டாக மாற்றினார்.

### சிவாஜியின் 'என்ட்ரி' எப்படியிருந்தது? எந்தப் படம் மூலம் நுழைந்தார்?

'பராசக்தி' நாடகம் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதை சினிமாப் படமாக்க விரும்பினார் பெருமாள் முதலியார். சிவாஜியை வைத்து 2000 அடி படம் எடுக்கப்பட்டு விட்டது. ஆனால் படம் எடுக்க உதவி செய்த பைனான்ஸியருக்கு பிடிக்கவில்லை. ஏனென்றால் 'டிராமா சிவாஜி' 'சினிமா சிவாஜியாக' ஜொலிக்கவில்லை. ஆகவே அந்த பைனான்ஸியர், 'இந்தப் பையனை வைத்து எடுத்தால் பெரும் நஷ்டம் அடைவாய். படத்தை நிறுத்து. இதுக்காக நான் செலவு செய்த பணத்தை மெதுவாக நீ கொடு போதும்' என்று 'தடா' போட்டு விட்டார். உடனே பெருமாள் முதலியார் அறிஞர் அண்ணாவைச் சந்தித்தார். அவர் அந்த பைனான்ஸியரிடம் சென்று, 'நீங்கள் சொல்லும் குறைகளை நீக்குகிறோம். ஆனால் சிவாஜியை வைத்தே படத்தை எடுக்கிறோம்' என்று பெருமுயற்சி செய்து சமாதானப்படுத்தினார். ஸ்பெஷல் உணவு வகைகளை சிவாஜிக்கு அண்ணா கொடுத்து, அவரை சினிமாவிற்கு பொருத்தமான ஆர்டிஸ்டாக மாற்றினார். பிறகு பராசக்தி படத்தை எடுத்தார்கள். அதற்கு கதை வசனம் கலைஞர் கருணாநிதி. ஆனால், பராசக்தி நாடகத்தில் இருந்த வசனங்கள் ஏதும் படத்தில் இல்லை. எல்லாமே புது வசனங்கள். அந்த 'பராசக்தி' படத்தில் 'கடவுளை திட்டியிருக்கிறார்' கலைஞர் கருணாநிதி என்றெல்லாம் பிரசாரங்கள் நடந்தது. ஆனால், அப்படத்தில் சென்சார் போர்டு போட்ட 'கட்' ஒன்றே ஒன்றுதான். அதுவும், 'சிலைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு பேசுவார்'. அப்போது, 'பகவானா பேசுறே' என்று டயலாக் வரும். 'பகவான் பேசமாட்டார். அவர் கல்' என்று டயலாக் இருக்கும். அதில் 'கல்' மட்டும்தான் கட் ஆனது. அந்த 'பராசக்தி' 25 வாரங்கள் ஓடியது. எம்.ஜி.ஆர் 'இன்ஸ்பெக்டர் ரோலில்' தன் சினிமா வாழ்க்கையைத் தொடங்கினார் என்றால் சிவாஜியோ 'ஹீரோ' ரோலில் பிரவேசித்தார். எம்.ஜி.ஆர் 'ராஜகுமாரி' படத்தில்தான் (ஆறு படங்கள் கழித்து) கதாநாயகனாக வந்தார். ஸ்ரீதர் எப்போதும் புதுமுகங்களை அறிமுகப்படுத்தும் டைரக்டர். இப்போதைய முதல்வர் ஜெயலலிதாவையும் அறிமுகப்படுத்தியவர் அவர்தான். 'வெண்ணிற ஆடை' படத்தில் நடித்தார். ஸ்ரீ காந்த் ஹீரோ. ஜெயலலிதா ஹீரோயின். வெண்ணிற


ஆடை மூர்த்தி, வெண்ணிற ஆடை நிர்மலா என்று அந்தப் படத்தில் அனைவருமே புதுமுகங்கள்.

### 'குழந்தை நட்சத்திரங்கள்' ஹீரோ வாக உயர்ந்த கதை சொல்லுங்க ளேன்?

ஒருமுறை ஏ.வி.மெய்யப்ப செட்டி யார் வீட்டிற்கு கமலின் அண்ணன் ஒரு சின்னப்பையனைக் கூட்டி வந் தாராம். 'இவனுக்கு படிப்பு ஏற மாட் டேங்குது. சினிமாச் சான்ஸ் ஏதாவது இருந்தால் கொடுங்கள்' என்று கேட்டி ருக்கிறார். அப்போது செட்டியார், 'எனக்கு ஹீரோ, ஹீரோயின்கள்தான் வேண்டும். இது மாதிரி சின்னப் பையன்கள் தேவையில்லை. அது மாதிரி வாய்ப்பு வந்தால் சொல்லுகி றேன்' என்று கூறி வழியனுப்பி வைத் தார். பிறகு அவர் 'களத்தூர் கண் ணம்மா' படம் பற்றிய கதை டிஸ்கஸ் பண்ணும் போது, அதில் 'ஒரு பையன் வேண்டும். ஆறு வயது இரு க்க வேண்டும்' என்று சொன்னவுடன் செட்டியாருக்கு அந்த சின்னப்பை யன் ஞாபகம் வருகிறது. அவரை அழைத்து வரச் சொல்லி குழந்தை நட்சத்திரமாக நடிக்க வைத்தார். அவர்தான் கமல்! அதே போல் அடுத்து சிவாஜியின் 'பார்த்தால் பசி தீரும்' படத்தில் குழந்தை நட்சத்திர மாகவே கமல் டபுள் ரோல் செய்தி ருப்பார். பிறகு எம்.ஜி.ஆரின் 'ஆனந்த ஜோதி' படத்திலும் குழந் தைதான். 'சொல்லத்தான் நினைக்கி றேன்' படத்தில்தான் கமல் ஹீரோவா னார். இன்று ஸ்ரீதேவி, குட்டி பத்மினி, மீனா உள்ளிட்ட பல நடிகைகள் குழந்தை நட்சத்திரங்களாக இருந்து ஹீரோயின்களாக ஜொலித்தவர்கள் தான்.

### அண்டை மாநிலத்தில் உள்ள ரஜினி தமிழக சினிமாவில் கலக் கியது எப்படி?

தமிழக அரசின் 'பிலிம் இன்ஸ்ட்டி யூட்'டில் போட்டோகிராபி படித்தவர் களுக்கு சினிமாவில் சான்ஸ் கிடைக் கும். ஆனால் அங்கு படித்த டெக்னி ஷியன்கள் யாரும் டைரக்டராக வந்த தில்லை. அதை முறியடித்தவர் ஆபா வாணன். அவர் டைரக்ட் பண்ணிய 'ஊமை விழிகள்' மூலம்தான் பிலிம் இன்ஸ்ட்டியூட்டிற்கே முதன் முதலில் கௌரவம் கிடைத்தது. இதே மாதிரி மகேந்திரன் 'நடிப்புக் கலை' கற்றுக் கொடுக்க பிலிம் சேம்பர்ஸின் சார் பில் ஒரு இன்ஸ்ட்டியூட் ஆரம்பித் தார். முதன் முதலில் நடிப்பதற்கு


ரஜினி காந்த்

பயிற்சி கொடுக்கப்படும் என்று 'கால் பார்' பண்ணினார்கள். அப்போது 12 பேர் நடிப்புக் கலை கற்றுக் கொள்ள வந்தார்கள். அதில் ரஜினிகாந்தும் வந்தார். அவருக்கு டிராமா எக்ஸ்பீரி யன்ஸ் எதுவும் கிடையாது. அப் போது என் பையனை (டைமன்பாபு) கூட்டிக் கொண்டு போயிருந்தேன். என்னைப் பார்த்த சுந்தர்லால் நகந்தா, 'இந்தப் பையனை அந்தப் பயிற்சி அரங்கத்தில் உட்கார வை. ஒண்ணா வது உருப்படியா இருக்கட்டும்' என் றார். அப்போது நடிப்புப் பயிற்சிக்கு வந்திருந்தவர்களின் முகக்கலை அப் படியிருந்தது. பிறகு பிலிம்சேம்பர் ரிஸல்ட் வந்து அதற்காக விழா எடுத்த சமயம். பாலச்சந்தர் 'அபூர்வ ராகங்கள்' படமெடுத்தார். அதில் இரு ஹீரோக்கள். முதல் ஹீரோ விற்கு கமலை புக் பண்ணிவிட்டார். இரண்டாவது ஹீரோ பிலிம் இன்ஸ்ட் டியூட்டில் படித்தவர்களை எடுக்க வேண்டும் என்று முடிவு செய்தார். அப்போது ஒருவர் பாலச்சந்தரை சந் திக்கிறார். அலுவலகத்தில் பாலச்சந்த ருக்கு எதிரே தரையில் போய் உட் கார்ந்தார். அந்த இளைஞனை எழு ப்பி, நாற்காலியில் உட்கார வைத்து விட்டு, 'உன் பெயர்' என்று கேட்கி றார் பாலச்சந்தர். 'என் பெயர் சிவாஜி' என்கிறார். என்னடா இது? இப்பத்தான் சிவாஜியை விடுத்து வேறு ஒருவரை வைத்துப் படம் எடு க்கலாம் என்று நினைத்தால், வருகின் றவர் பெயரும் சிவாஜியாக இருக்கி றதே என்று நினைத்தார் பாலச்சந்தர். இருந்தாலும் 'நடித்துக் காட்டு' என் றார். உடனே, 'வீரபாண்டிய கட்ட பொம்மன், மனோகரா' போன்ற பட வசனங்களைப் பேசி நடித்துக் காட்டி னார். ஆனால் பாலச்சந்தரோ, 'எனக்கு உன் சொந்த நடிப்பு வேண் டும். பிறர் நடிப்பு அல்ல. சொந்தமாக நடிக்க முடியும் என்றால் இங்கே வா. இல்லையென்றால் வராதே' என்று சொல்லி ரஜினியை திருப்பி அனுப்பி னார். பிறகு தன் சொந்த ஸ்டைலில் பாலசந்தரிடம் நடித்துக் காட்டி, 'அபூர்வ ராகத்தில்' அப்பியர் ஆன


கமல் ஹாசன்

ரஜினிதான் இன்று தமிழ், மலை யாளம், கன்னடம், தெலுங்கு, இங்கி லீஷ், பெங்காலி ஆகிய மொழிகளில் நடிக்கும் கலைஞனாக உயர்ந்து நிற்கி றார்.

### நூற்றாண்டு விழா நடக்கும் இந்த சமயத்தில் உள்ள சினிமா விற்கும், ஆரம்ப கால சினிமா விற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது?

அன்று திறந்த வெளியில் ரிப்ளக் டர் வைத்து ஆர்டிஸ்டை ஃபோக்கஸ் பண்ணி சூட்டிங் நடக்கும். ஆனால் இன்று பிரமாண்டமான செட்டுகள், ஹைடெக் தொழில்நுட்பங்கள் என்று

சினிமாத்துறை இமயம் போல் வளர்ந்து நிற்கிறது. அன்று வருடத்திற்கு ஒரு படம் அல்லது இரு படம் எடுத்தாலே பெரிய விடயம். ஆனால், இப்போது சென்ற வருடம் மட்டுமே 162 படங்கள் (டப்பிங் படங்கள் நீங்கலாக) வெளிவந்து விட்டன. அடுத்த வருடம் 200 படங்களைத் தாண்டி விடும். அன்று கதாநாயகன், அல்லது கதாநாயகிக்கு பத்தாயிரம் ரூபாய் சம்பளம். ஆனால் இன்று கோடிக் கணக்கில் சம்பளம் போகி றது. இப்படி எண்ணற்ற மாற்றங்களைச் சொல்லலாம். அன்று ரசிகர்கள் தியேட்டருக்குப் போய் படம் பார்த்தார்கள். இன்று சி.டி., வி.சி.டி எல்லாம் வந்த பிறகு வீட்டிலேயே இருந்து படம் பார்ப்பதால் 'ரிப்பீட்டட் ஆடியன்ஸ்' இல்லாமல் போய் விட்டது. இதனால் வசூல் பாதிக்கப்பட்டு அதிக நாட்கள் ஓடும் படம் என்பது குறைந்து விட்டது. முன்பு தியேட்டர்கள் என்றால் 2000 இருக்கைகள் இருக்கும். இப்போது 200 இருக்கைகள் உள்ள தியேட்டர்கள் வந்து விட்டன. தமிழ்ப்படங்கள் இப்போது வெளிநாடுகளில் ஆர்வத்துடன் வாங்கி திரையிடப்படுவது புதிய பரிணாம வளர்ச்சி. அதுவும் அங்குள்ள தமிழர்கள்தான் வாங்குகிறார்கள் என்பது சிறப்பு. அந்த வெளிநாட்டுத் தமிழர்கள் தமிழின் மீதுள்ள ஆர்வத்தில், வாங்கிய படத்தில் நஷ்டம் வந்தால் கூட அது பற்றி கவலைப்படாதவர்கள். இப்போதெல்லாம் பட பூஜை போட்டவுடன் முதலில் வெளிநாட்டு ரைட்ஸ் வாங்குவதற்கு அங்குள்ள தமிழர்கள்தான் முதலில் வருகிறார்கள். அதையெல்லாம் விட 'காதல் கதைகளுக்கு' உள்ள முக்கியத்துவம் சமுதாயக் கருத்துகளுக்கு, முற்போக்குச் சிந்தனைகளுக்கு இந்தக் கால படங்களில் பஞ்சம் ஏற்பட்டு விட்டது.

**இந்திய சினிமா மற்றும் தமிழ் சினிமாவிற்கு இலங்கையுடன் ஏதாவது தொடர்பு இருக்கிறதா?**

சிங்களவர்கள் தமிழர்களை இலங்கையில் அடிமைப்படுத்துகிறார்கள் என்று விடுதலைப் புலிகள் போராடினார்கள். அவர்களது போராட்டம் 1980-களில்தான் வந்தது. சதிலீலாவதி படத்தில் பசிக் கொடுமையில் வாடும் ஹீரோ சம்பாதிக்க இலங்கைக்குப் போவார். அங்கு தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்வார். ஆனால் அவருக்கு போதிய சம்பளம் கொடுப்பதில்லை. அவருக்கு மட்டுமல்ல, வேலைக்குப்

> அன்று ரசிகர்கள் தியேட்டர்களுக்கு சென்று படம் பார்த்தார்கள். இன்று சிடி, வி.சி.டி. என்றெல்லாம் வந்த பிறகு வீட்டிலேயே இருந்து படம் பார்க்கிறார்கள். இதனால் வசூல் பாதிக்கப்பட்டு அதிக நாட்கள் ஓடும் படங்கள் குறைந்து விட்டன

போகும் தமிழர்களுக்கு அதுதான் நிலைமை. சதிலீலாவதி ஹீரோ சம்பளம் கிடைக்காமல் அவதிப்படும் போது ஒரு பாடல் வரும். பாலகதாஸ் எழுதிய அந்தப் பாடலில், 'அய்யய்யோ, தோயிலைத் தோட்டத்திலே நம்மவர் மாழுகின்றார் அய்யய்யோ.' என்று தமிழர்களுக்கு சம்பளம் கொடுக்காமல் சாகடிக்கிறார்கள் என்ற வரிகள் இடம்பெற்றுள்ளன. இது 1938இல் எழுதிய பாடல் என்பது குறிப்பிடத்தக்கது. அந்தத் தாக்கம்தான் பிறகு விடுதலைப் போராட்ட வடிவில் இலங்கையில் உருவெடுத்தது என்று கூட வைத்துக் கொள்ளலாம்.

'வசந்த மாளிகை' சிலோனில் 42 வாரம் ஓடியது. இது ஒரு புறமிருக்க, இலங்கையில் உள்ள தமிழன் சிங்களப்படம் எடுக்க ஆசைப்பட்டார். அவர்தான் எஸ்.எம்.நாயகம். அவர் சென்னையில் வந்து சிங்கள நடிகர்களை வைத்து எடுத்த படத்தின் பெயர், 'கடவுன பெருந்துக'. அது இலங்கையில் ரிலீஸான முதல் படம். அதே போல் இலங்கையிலேயே முதல் சிங்களப்படம் எடுத்ததும் தமிழன்தான். இதே எஸ்.எம்.நாயகம் தான்! நாயகத்திற்கு மெட்ராஸில் ஸ்டுடியோ ஆரம்பிக்க வேண்டும் என்று ஆசை. அது முடியாததால் பிறகு மதுரையில் போய் 'முருகன் நவகலா' என்ற பெயரில் ஸ்டுடியோ ஆரம்பித்தார். இரு படங்கள் எடுத்தார். ஒன்று 'குமரகுரு'. இன்னொன்று 'தாய் நாடு'! நஷ்டமடைந்ததால் பிறகு அந்த ஸ்டுடியோவை விற்று விட்டு போய் விட்டார் என்பது வேறு கதை. சமீபத்தில் கூட இலங்கையில் இருந்து ஒரு சிங்களவர் வந்து என்னைச் சந்தித்தார். சிங்களப் பட ஸ்டில்ஸ் எல்லாம் கேட்டார். 'சிங்களப் பட' ஹிஸ்டரி பற்றி புத்தகம் எழுதப் போகிறேன் என்றார். அவருக்கு ஸ்டில்ஸ் கொடுத்தேன். அவர் புறப்படும் போது, 'நான் அடுத்த சித்திரையில் வருகிறேன்' என்றார். நாம் கூட 'அடுத்த ஏப்ரிலில் வருகிறேன்' என்றுதான் சொல்லுவோம். ஆனால் ஒரு சிங்களவர் 'சித்திரையில்' வருகிறேன் என்று சொல்வதைக் கேட்டு நான் அசந்து போனேன். 'அய்யா இந்த சித்திரை என்ற சொல்லை உங்கள் வாயால் கேட்டதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்' என்று கூறி வழியனுப்பி வைத்தேன். ஆகவே தமிழர்களுக்கு மட்டுமல்ல, தமிழ் சினிமாவிற்கும் இலங்கைக்கும் கூட தொப்புள் கொடி உறவு இருக்கிறது. ■

(82ஆம் பக்கத்தொடர்ச்சி...)

பேச்சுவார்த்தையின் நீட்சியாகவே 1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலமாக கொண்டுவரப்பட்ட இந்திய நலன்சார்ந்த 13ஆவது திருத்தத்தை நாம் பார்க்கலாம்.

13ஆவது திருத்தம் தமிழர் தரப்புக்கு உடன்பாடாக இருந்திருக்கவில்லையென்பது 26 வருடங்கள் கடந்தும் தெளிவாக உணரக்கூடியதொன்று. தமிழரின் அடையாளம் வெறும் இனக்குழும அடையாளமா? அல்லது ஒரு தேசிய இனத்தின் வெளிப்பாடா என்ற அடிப்படையில் இது நோக்கப்பட வேண்டும். 13 ஆவது திருத்தத்தின் மூலமாக இடம்பெற்றிருப்பது அதிகாரப்பரவலாக்கமா? அன்றி அதிகாரப்பகிர்வா என்பதையும் முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும். இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இரு தேசிய இனங்களுக் கிடையிலான அதிகாரப் பகிர்வாக 13ஆவது திருத்தம் கொள்ளப்படலாமா? அல்லது எல்லா மாகாணங்களுக்குமான அதிகாரப்பரவலாக்கமாக கொள்ளப்படலாமா என்பது இங்கு அடிப்படையாக எழுகின்ற வினாவாகும்.

13ஆவது திருத்தம் மாகாணங்களுக்கிடையிலான அதிகாரங்களை எவ்வாறு அணுகுகின்றதென்பதை அறிய அத்திருத்தத்தின் உள்ளடக்கத்தையும் அட்டவணைகளையும் கொண்டு அறியலாம். வெறுமனே 1978 அரசியலமைப்பின் ஒன்பதாம் (9ஆம்) அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள இன்றும் பெரிதும் விவாதத்திற்குள்ளாகியுள்ள மாகாணசபை நிரலிலுள்ள பொலிஸ்காணி அதிகாரங்கள் ஒற்றையாட்சி அமைப்புக்குள் மக்களுக்கு இடையில் பரவலாக்கப்பட்டுள்ள அதிகாரங்களே. மாறாக ஈழத்தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்கிற அடிப்படையில் உள்வாங்கப்படும் எந்தவொரு தீர்வும் ஒற்றையாட்சி முறைக்குள் அதிகாரப்பகிர்வின் மூலமாக வழங்கப்படமுடியாதது. அதிகாரப் பகிர்வு என்பது இருவேறு தனி அலகுகளுக்கு இடையே அல்லது அரசுகளுக்கிடையே சமஷ்டி முறையில் மட்டுமே உள்வாங்கப்பட முடியும்.

ஈழத்தமிழர் தேசிய இனமாகக் கொள்ளப்படுகின்ற போது 13ஆவது திருத்தத்தைப் பற்றிப் பேசவே முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. இல ங்கை- இந்திய ஒப்பந்தத்தின் மூலம் வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடம் என்கிற அடிப்படையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைவு ஏற்றுக் கொள்ளப்பட்டபோதும், 13ஆவது திருத்தத்தில் இது பற்றி எதுவுமே பேசப்படவில்லை. வடகிழக்கு தமிழர் தாயகம் என்கிற கோட்பாட்டை முற்றாக நிராகரிக்கும் வகையில் சில வருடங்களுக்கு முன்னர் உயர் நீதி மன்ற தீர்ப்பின் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாக பிரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். ஆகவே அடிப்படையில் எந்த உத்தரவாதத்தையும் வழங்கியிராத 13 ஆவது திருத்தத்தின் அதிகாரக் குறைப்புப் பற்றி அல்லது அதன் முழுமையான அமுலாக் கம் பற்றி அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

இந்தியாவின் அனுசரணையுடன் 13ஆவது திருத்தத்தைக் காக்க முனைவது, வடக்கு - கிழக்கின் இணைப்பை உறுதிப்படுத்துவது என்ற வகையில் ஏற்றுக் கொண்டாலும், தமிழ்த்தேசிய த்தின் இருப்பை தக்க வைக்கும் அதிகாரப்பகிர்வு நடைமுறைபற்றி நம்மிடையே முதலில் தெளிவு வேண்டும். புலிகளின் தன்னாட்சி அதிகார சபை முன்வைப்பைத் தவிர தமிழ்த் தேசிய அரசியல் மூலம் நாம் எமது நிலைப்பாட்டை தெரிவிக்க முயற்சிக்கவில்லை என்பதும் ஒரு கசப்பான உண்மையாகும். நாம் தோற்றுவிட்டோம் என்று பலவீன கருத்தியலை முன்வைத்து கடந்த 6-7 தசாப்தங்களுக்கு மேலாக கேட்டுப் பெற முடியாததை அதே தரப்பிடம் கேட்டுப்பெற முயற்சிப்பதும் வேதனையே.

இன்றைய சூழலில் சர்வதேச மயமாக்கப்பட்டுள்ள ஈழத்தமிழரின் பிரச்சினையே எமது பலம். நம்மை தமிழ்த்தேசிய இனமாக ஏற்று எம்மை நாமே ஆளுகின்ற உணர்வைத் தருகின்ற வகையிலான ஒரு தீர்வு யோசனையை நாம் சர்வதேசத்திற்கு முன்வைக்க வேண்டும். நாம் இங்கு ஆரம்பத்தில் இருந்து சர்வதேசத்திற்கு பாடம் நடத்தவேண்டிய தேவையில்லை. எமது தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் எவரும் ஈழத்தமிழர் வேண்டிநிற்கும் தீர்வு இதுதான் என்றும் சொல்லி நிற்க நாதியற்றவர்கள். எமக்கான தீர்விற்காகவே நாம் அரசியல் வழியில் போராடி வந்திருக்கிறோம்.

தனித்து எவரும் 13ஆவது திருத்தம் தொடக்கம் அல்லது முடிவு என்று விவாதிக்கலாம். ஆனால், தமிழ்த் தேசியத்தின் இருப்பு என்பது அதற்கும் அப்பால் தமிழ்த்தேசிய கருத்துருவாக்கமாக உள்வாங்கப்பட்டிருக்கிறது. சர்வதேச அரசியல் அவதானிப்புகளின் ஊடாக தமிழர் தேசியத்தின் இறைமையை நிலைநாட்டத் தக்க வகையில் தமிழ்க்கட்சிகளும் சிவில் அமைப்புகளும் ஒன்றிணைந்த தமிழ்த்தேசிய அலை ஒன்றினை ஏற்படுத்தி நமது அதிகாரங்களை வலியுறுத்த வேண்டிய அவசர, அவசியத்தேவையை வரலாறு உணர்த்தியுள் ளது. விட்டுக்கொடுப்புகளைச் செய்ய இது ஒன்றும் எமது முதுசம் அல்ல. நம் வழிவந்தோர் காத்து நமக்களித்த பெரும் தேசம் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். ■

## கடைசிப் பக்கம்

# 13 ஆவது திருத்தம் தொடக்கமா? முடிவா?

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இந்தியாவினால் திணிக்கப்பட்ட ஒரு திருத்தமே 13 ஆவது திருத்தம் என்பது இன்று வெகுவாக உணரப்பட்டுள்ளது. சிங்கள மக்கள் 13 ஆவது திருத்தத்தின் மூலம் நாடு பிரிந்து போய்விடும் என்று அச்சப்படுவதும், தமிழ் மக்கள் இதுதொடக்கப் புள்ளியோ, முடிவுப் புள்ளியோ என்று அங்கலாய்ப்பதும் இத்திருத்தத்தின் உள்ளடக்கத்தைப் பற்றிய ஒரு தேடலை எமக்கு உணர்த்தியுள்ளது. இன்றைய நிலையில் 13இற்கு அப்பாலா? இப்பாலா? தமிழர்கள் வேண்டி நிற்பது தெளிவுபடுத்தவேண்டியுள்ளது.



சட்டத்தரணி
நட.காண்டீபன்

இலங்கைத் தீவிற்கு முதலில் வந்தவர்கள் யார் என்று அல்லது இலங்கைக்கு உரித்துடையவர்கள் யார்? என்று ஆராய்வதிலும்? பார்க்க இன்றைய நவீன அரசியல் கோட்பாடுகளுக்கு அமைய, ஈழத்தமிழர்கள் எத்தகைய அரசியல் உரிமைகளை, அதிகாரங்களைக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிவது ஆரோக்கியமானது. அந்த வகையில் ஈழத்தமிழர்கள் சாத்தியமான அரசியல் தீர்வை நோக்கி நகர்வதற்கான தடைகளைக் கண்டறிவதும் அவசியமாகும்.

காலனித்துவ ஆட்சிக்கு முன்பதாகவே (1505) வரலாற்றுக்கு முந்திய காலந்தொட்டு ஈழத்தமிழர் பூர்வீகக் குடிகளாக இருந்து, ஆட்சி அதிகாரங்களைக் கொண்டிருந்து, தனித்த ஒரு தேசிய இனமாக பாராதீனப்படுத்தப்பட்ட இறைமை உடையவர்களாக இருந்து வந்துள்ளார்கள். அந்நியர் வருகை யின் பின் இடம்பெற்ற ஆட்சி மாற்றங்களால் இழ ந்த இறைமையை மீண்டும் 1948 இல் இலங்கை சுதந்திரமடைந்த போது ஈழத்தமிழர்கள் அதன் பங்காளிகளாக இராது தொடர்ந்து போராடி, தனித்த அரசின் தொடர்ச்சியாக தம்மை அடையாளப்படுத்த முனைந்து வந்துள்ளார்கள்.

இலங்கை சுதந்திரமடைந்து மறு வருடமே 1949 இல் உருவாக்கப்பட்ட தமிழரசுக்கட்சியின் தோற்றம் தமிழரசின் நிலைத்த அரசியல் செல்நெறிகளை சுட்டி நிற்கிறது. அதன்பின்னரான தனிச் சிங்கள சட்ட எதிர்ப்புப் போராட்டம், பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், வட்டுக் கோட்டைத் தீர்மானம், திம்பு பேச்சுவார்த்தை, இலங்கை - இந்திய ஒப்பந்தம், ரணில் - பிரபா ஒப்பந்தம், புலிகளின் தன்னாட்சித் தீர்வு, நாடு கடந்த தமிழீழ அரசு என்று இற்றை வரையிலான ஈழத்தமிழரின் அரசியல் பாதையைக் காட்டி நிற்கின்றது. அவ்வப்போது சிங்களத் தலைமைகளும் தமிழ்த் தலைமைகளும் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் வாயிலாக சிங்கள-தமிழ்த் தலைமைகளிடமே ஆட்சியதிகாரங்களுக்கான வேட்கை ஊடறுத்து நிற்பதை நாம் காணலாம்.


விடுதலைப் புலிகள் ஏறக்குறைய மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழ்த்தலைமை வட்டுக் கோட்டை தீர்மானத்தின் மூலமாக கொடுத்த தனி அரசுக்கான ஏற்பாட்டினை முன்னிறுத்திப் போராடியுள்ளார்கள். இப்போராட்டத்தின் தொடர்ச்சியாக 2009-06-15 புலம் பெயர் ஈழத் தமிழர்கள் நாடுகடந்த அரசியல் கோட்பாட்டை முன்னெடுப்பதில் இறங்கியதை குறிப்பிட்டாகவேண்டும். இந்த வகையில் காலனித்துவ ஆட்சிக்கு முன்பதாக தமிழரின் இறைமை கொண்ட நிலைத்த அரசுகளின் இருப்பும், சுதந்திரத்திற்குப் பின்னரான ஈழத்தமிழரின் தனியரசுக்கான போராட்டங்களும் ஈழத்தமிழர்கள் காலனித்துவ ஆட்சியில் இழந்த இறைமையை மீட்பதற்கான தொடர் போராட்டங்களாகக் கருதலாம்.

குறிப்பாக ஈழத்தமிழர்கள் 1947 சோல்பரி அரசியலமைப்பு, 1972 அரசியலமைப்பு, 1978 அரசியலமைப்பு ஆகிய எந்தவொரு அரசியல் உருவாக்கத்திலும் பங்கெடுத்திருக்கவில்லை என்பதும், அந்த அரசியலமைப்புகளை தாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும், தமது அரசியல் வேட்கையை தமது தேர்தல் மூலம் அவ்வப்போது நிரூபித்தும் உள்ளார்கள். 1978 அரசியல் அமைப்பின் 13ஆவது திருத் தம், முதன் முதலாக இலங்கை இனப்பிரச்சினை க்கு வெளியார் தலையீடு மூலமாக ஏற்படுத்தப்பட்ட திருத்தமாகும். 1984-1985 இல் இடம்பெற்ற திம்பு

(81ஆம் பக்கம் பார்க்க...)



இஷ்டம்போல அள்ளி நொறுக்கிட
இனிய தருணங்களில் இன்றியமையாத டேவிட் தயாரிப்புகளை
இன்றே வாங்கி சுவைத்து மகிழுங்கள்
தனிச்சுவை என்பது இதுதானோ
மீண்டும் மீண்டும் உண்ணத்தோன்றும்
டேவிட் நிலக்கடலை சுவையின் சாரம்
GIVING YOU ONLY THE BEST SINCE 1962
DAVID GRAM STORES
214, Gas works Street, Colombo 11.
Tel: 0112434601, 0112335024
Fax: 2335061 Email: davidgramsl@gmail.com
STORES:
No. 16, Albion Place, Colombo 09.
Tel: 011 2696706, 011 2692718 Fax: 0115358024, 0112636303
BRANCHES:
40, Sri Sangaraja Mawatha, Colombo 12, 14, Front Street, Colombo 11, 338, Baseline Road, Colombo 9, 20, Basilika Road, Ragama, 2/b, James Peries Mawathe, Colombo 2, 157/1, Stanley thilakarathne Mawatha, Nugegoda, 33, St. Joseph Street, Colombo 14, 222, Oldcott Mawatha, Colombo 11, 15, Galle Road, Dehiwala, 463/A, 2nd Division, Maradana.




Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd, at No.185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.